# வரலாறு மற்றும் குடிமையியல்

## வகுப்பு ஏழு





# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பகுதி 4A

## குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

**பிரிவு 51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

அரசு தீர்மானம் எண்: கல்வி-2116/(ப்ர. எண்.43/16) எஸ்டி-4 நாள் 25-04-2016 இன்படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 29-04-2022 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் இப்பாடநூலை 2022-23 கல்வி ஆண்டில் இருந்து நடைமுறைப் படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுளளது.

# வரலாறு மற்றும் குடிமையியல்

## வகுப்பு ஏழு

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே-4

N5R5D5

உங்களது திறன்பேசியிலுள்ள DIKSHA APP மூலம் பாடநூலின் முதல் பக்கத்திலுள்ள விரைவுக் குறியீடு (Q. R. Code) வழியாக மின்னணுப் பாடநூல் மற்றும் கற்றல் - கற்பித்தலுக்கான பயனுள்ள காணொலி உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

முதல் பதிப்பு: 2022

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம் புனே-411 004

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக்கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்தல் கூடாது.

**வரலாறு பாடக் குழு**

முனைவர். சதானந்த் மோரே, தலைவர்
திருமிகு. மோகன் செட்டே, உறுப்பினர்
திருமிகு. பாண்டுரங் பல்கவடே, உறுப்பினர்
முனைவர். அபிராம் தீக்ஷத், உறுப்பினர்
திருமிகு. பாபுசாஹேப் சிந்தே, உறுப்பினர்
திருமிகு. பால்கிருஷ்ணா சொபடே, உறுப்பினர்
திருமிகு. பிரசாந்த் ஸரூட்கர், உறுப்பினர்
திருமிகு. மொகல் ஜாதவ், உறுப்பினர், செயலாளர்

**குடிமையியல் பாடக் குழு**

முனைவர். ஸ்ரீகாந்த் பரான்ஜ்யே, தலைவர்
பேராசிரியர். சாதனா குல்கர்னி, உறுப்பினர்
முனைவர். மோகன் காஷிகர், உறுப்பினர்
திருமிகு. வைஜ்நாத் காளே, உறுப்பினர்
திருமிகு. மொகல் ஜாதவ், உறுப்பினர், செயலாளர்

**வரலாறு மற்றும் குடிமையியல் ஆய்வுக் குழு**

திருமிகு. ராகுல் பிரபு
திருமிகு. சஞ்சய் வஜ்ரேகர்
திருமிகு. சுபாஷ் ராதோட்
திருமதி. சுனிதா தல்வி
முனைவர். சிவானி லிம்யே
திருமிகு. பாவுசாஹேப் உமாட்டே
முனைவர். நாக்நாத் எவலே
திருமிகு. சதானந்த் டோங்கரே
திருமிகு. ரவீந்திர பாட்டீல்
திருமிகு. விக்ரம் அட்ஸூல்
திருமதி. ரூபாலி கிர்கர்
முனைவர். மீனாட்சி உபத்யாய்
திருமதி. காஞ்சன் கேத்கர்
திருமதி. சிவகன்யா பட்வே
முனைவர். அணில் சிங்காரே
முனைவர். ராவ்சாஹேப் செல்கே
திருமிகு. மரிபா சந்தன்சிவே
திருமிகு. சந்தோஷ் சிந்தே
முனைவர். சதீஷ் சாப்ளே
திருமிகு. விஷால் குல்கர்னி
திருமிகு. சேகர் பாட்டீல்
திருமிகு. சஞ்சய் மேத்தா
திருமிகு. ராம்தாஸ் தாக்கர்
முனைவர். அஜித் ஆப்டே
முனைவர். மோகன் கட்ஸே
திருமதி. சிவகன்யா கதேர்கர்
திருமிகு. கௌதம் டாங்கே
முனைவர். வியங்கடேஷ் கராத்
திருமிகு. ரவீந்திர ஜிந்தே
முனைவர். பிரபாகர் லோண்டே

**அழைப்பாளர்கள்**

முனைவர். சோம்நாத் ரோடே
முனைவர். கணேஷ் ராவுத்

**அட்டைப்படம் மற்றும் அலங்கரிப்பு**

திருமிகு. தேவதத்த பிரகாஷ் பல்கவடே

**கோட்டைகளின் நிழற்படம்**

திருமிகு. பிரவின் போஸ்லே

**நிலப்படக் கலைஞர்**

திருமிகு. ரவிகிரண் ஜாதவ்

**அச்சுக் கோர்ப்பு**

குயின்டெக்ஸ், மும்பை.

**காகிதம்**

70 ஜி. எஸ். எம். கிரிம்வோவ்

**அச்சாணை**

N/PB/2022-23/ Qty. 1,000

**அச்சிட்டோர்:**

M/s. Sohail Enterprises, Thane

**ஒருங்கிணைப்பு**

திருமிகு. மொகல் ஜாதவ்
சிறப்பு அதிகாரி, வரலாறு மற்றும் குடிமையியல்
திருமதி. வர்ஷா சரோதே
பாட உதவியாளர், வரலாறு மற்றும் குடிமையியல்
பாடநூல் கழகம். புனே

**மொழியாக்கம்**

திருமதி. ஜுலியட் ராஜன் திரு. அமல் ராஜரீகம்

**ஆய்வு**

திருமதி. ஜோஸ்லின் திருமதி. கீதா கிறிஸ்டோபர்

**மொழியாக்க ஒருங்கிணைப்பு**

முனைவர். துலசி பாரத் பூசண்
சிறப்பு அதிகாரி. தெலுகு
பாடநூல் கழகம். புனே

**தயாரிப்பு**

திருமிகு. சச்சின் மேத்தா
முதன்மை தயாரிப்பு அதிகாரி
திருமிகு. ஷஷாங் கனித்தலே
தயாரிப்பு அதிகாரி

**வெளியிடுவோர்**

திருமிகு. விவேக் உத்தம் கோசாவி
கட்டுப்பாட்டு அதிகாரி
பாடநூலாக்கக் கழகம்
பிரபாதேவி, மும்பை - 25

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய,
பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன்
வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு
இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை,
வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை
எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

மாணவ நண்பர்களுக்கு,

வகுப்பு மூன்று முதல் ஐந்துவரை வரலாறு மற்றும் குடிமையியல் பாடத்தை நீங்கள் ‘சூழ்நிலையியல் பகுதி 1’ மற்றும் ‘சூழ்நிலையியல் பகுதி 2’-இல் கற்றுள்ளீர்கள். வகுப்பு ஆறு முதல் பாடத்திட்டத்தில் வரலாறு மற்றும் குடிமையியல் என்பது தனித்தனி பாடங்களாக உள்ளன. வகுப்பு ஆறு முதல் இவ்விரு பாடங்களும் ஒரே பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மாணவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பாடநூல் கழகமானது முதன்முறையாக தமிழ்வழி ஏழாம் வகுப்பு வரலாறு மற்றும் குடிமையியல் பாடநூலை உருவாக்கியுள்ளது. அதேவேளை, இதன் மூல (மராத்தி) வரலாறு மற்றும் குடிமையியல் பாடநூல் 2017 ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. ஏழாம் வகுப்பு பாடநூலை உங்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இப்பாடத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்; ஆர்வமூட்டுவதாக இருக்க வேண்டும்; உங்கள் முன்னோர்கள் செய்த பணிகளிலிருந்து உத்வேகம் பெற வேண்டும் என்ற நோக்கில் பாடநூலின் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடநூலைக் கற்கும்போது அறிவுடன் நீங்கள் மகிழ்ச்சியும் பெற வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம். அதற்காக, பாடநூலில் வண்ணமயமான படங்கள் மற்றும் நிலப்படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பாடநூலிலுள்ள ஒவ்வொரு பாடத்தையும் கவனமாகக் கற்க வேண்டும். அதில் உங்களுக்குப் புரியாத பகுதியை ஆசிரியர், பெற்றோர் ஆகியோரிடமிருந்து புரிந்து கொள்க. கொடுக்கப்பட்ட கட்டங்களிலுள்ள தகவல் உங்களது அறிவை மேலும் பெருக்கும். வரலாறு ஓர் ஆர்வமூட்டும் பாடம் மற்றும் அது உங்கள் தோழன் என்ற புரிதலுடன் பாடநூலைக் கற்கும்போது உங்களுக்கு அதன் இனிமை நிச்சயமாய்க் கிட்டும்.

வரலாற்றுப் பிரிவில், ‘இடைக்கால இந்திய வரலாறு’ கொடுக்கப்பட்டுள்ளது. இடைக்கால இந்தியாவின் உருவாக்கத்தில் மகாராஷ்டிராவின் இடம் மற்றும் பங்களிப்பை மையமாகக் கொண்டு பாடநூலின் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து உங்களுக்கு நீங்கள் இந்தியாவின் குடிமகனாக இருப்பது போலவே உங்கள் கடமை பற்றியும் விழிப்புணர்வுடன் இருப்பது எதிர்பாக்கப்படுகிறது.

குடிமையியல் பகுதியில் இந்திய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்தியாவின் அரசியலமைப்பு உருவாக்கத்தின் பின்னணி, அரசியலமைப்பின் நோக்கங்கள், அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் மற்றும் வழிகாட்டல் நெறிமுறைகள் ஆகியவை இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பு சட்டங்கள் மற்றும் விதிகளின் அடிப்படையில் நமது நாட்டின் நிர்வாகம் நடைபெறுகிறது என்பது எளிய மொழியில் கூறப்பட்டுள்ளது. உங்கள் கல்வி அதிகபட்சமாக செயலை மையப்படுத்தி இருக்க வேண்டும். இதற்காக, செயல் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் நாட்டின் நாளைய குடிமக்கள் மற்றும் வருங்கால இந்தியாவை உருவாக்குபவர்கள் என்ற விழிப்புணர்வுடன் அடுத்த வகுப்பினுள் நுழைவீர்கள்.

வரலாற்றுக் கல்வியிலிருந்து நமக்கு முன்னோர்களின் அரும்பணிகள் பற்றிய அறிவு கிடைக்கிறது. அது குடிமையியல் கல்வியுடன் சேர்ந்து, அதாவது, நாடு மற்றும் சமூக உருவாக்கத்தில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்ன என்பதையும் அறிகிறோம். அதற்காக, இது கூட்டுக் கல்வியின் செயல்திட்டமாக உள்ளது.



**திரு. விவேக் உத்தம் கோசாவி**
(இயக்குநர்)
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும்
பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே.

புனே
நாள்: 07 அக்டோபர் 2021
இந்திய சூரிய ஆண்டு: 15 அஷ்வின் 1943

# ஆசிரியர்களுக்கு

ஆறாம் வகுப்பிற்கான வரலாறு மற்றும் குடிமையியல் என்ற பாடத்திற்கான பாடநூலை நீங்கள் கற்பித்துள்ளீர்கள். இந்த ஏழாம் வகுப்பு பாடநூலில் இடைக்கால இந்திய வரலாறு வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றின் இந்த கட்டமைப்பின் தனிச்சிறப்பு யாதெனில், இது மகாராஷ்டிராவை மையமாகக் கொண்டுள்ளது. நமது மாநிலம் இந்திய குடியரசின் ஒரு பகுதியாக இருந்தாலும் வரலாற்றை புரிந்து கொள்ளும்போது மகாராஷ்டிராவின் கண்ணோட்டத்தில் அதாவது, இந்திய வரலாற்றில் மகாராஷ்டிராவின் இடம், பங்கு மற்றும் பங்களிப்பை முன்வைப்பதன் மூலம் புரிந்து கொண்டால், மாணவர்களின் தேசிய உணர்வு அதிகமாக முதிர்ச்சியடையும். அதில், நமது முன்னோர்கள் தேசத்திற்காக உண்மையில் என்ன செய்தார்கள் என்பது புரியும் மேலும் அதன் மூலம் நமது இன்றைய தேசிய பொறுப்பும் கடமையுணர்வும் வளரும்.

இச்சூழலில் பதினேழாம் நூற்றாண்டில் சிவசத்ரபதி சிவாஜி மகாராஜாவால் நிறுவப்பட்ட சுயராஜ்ஜியம் முக்கியமானதாகும். சுயராஜ்ஜிய உருவாக்கத்தின் மதிப்பீட்டை புரிந்து கொள்வதற்கு சிவாஜி மகாராஜாவின் எழுச்சிக்குமுன் இந்தியாவில் மற்றும் மகாராஷ்டிராவிலுள்ள நிலைமையை புரிந்து கொள்வதன் மூலம் இந்தியாவின் வரலாற்றை புரிந்து கொள்ளலாம். இக்கொள்கையோடு பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. சிவாஜி மகாராஜாவால் நிறுவப்பட்ட சுயராஜ்ஜியத்தை சிவாஜி மகாராஜாவின் மறைவிற்குப்பின் வடக்கிலிருந்து வந்த தாக்குதலை மகாராஷ்டிரா எவ்வாறு எதிர் கொண்டது மற்றும் சுயராஜ்ஜியத்தை எவ்வாறு பாதுகாத்தது என்பதும் விவாதிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல்களை முறியடித்தபின் மராத்தியர்கள் மகாராஷ்டிராவின் எல்லைகளை விரிவுபடுத்தி பெரும்பான்மையான இந்தியாவை கைப்பற்றினர். சுயராஜ்ஜியம் சாம்ராஜ்ஜியமான மாற்றம் அதன் அடுத்த பகுதியாகும் ஆங்கிலேயர் இந்தியாவை வென்றனர் மற்றும் அதன்மீது ஆட்சி செலுத்தினர் என்பதை அனைவரும் அறிவர். ஆனால், இந்த செயல்பாட்டில் ஆங்கிலேயர்களை தடுப்பதில் மகாராஷ்டிரா எவ்வாறு முன்னிலை வகித்தது என்பதை புரிந்து கொள்வதும் முக்கியமானதாகும். ஆங்கிலேயர் மராத்தியர்களுடன் போட்டியிட்டனர். மேலும், அவர்கள் மராத்தியர்களுடன் போர் புரிந்தே வென்றனர். இந்த விழிப்புணர்வு நமது வலிமை மற்றும் கடமை ஆகும். கற்றல் கற்பித்தல் செய்யும்போது இந்த உணர்வு மாணவர்களின் மனங்களில் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பங்களிப்பு பாடநூலின் பின் அட்டையில் படவடிவில் விளக்கப்பட்டுள்ளது. மேலும், மராத்திய அதிகாரத்தின் விரிவாக்கத்தைக் காட்டுவதற்காக முன் அட்டையில் இந்தியாவின் தோராய நிலப்படம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

குடிமையியல் பகுதியில் இந்தியாவின் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடத்தை ஒரே கல்வியாண்டில் கற்பிக்க சாத்தியமில்லை என்பதால் இரண்டு வகுப்புகளில் அது பிரிக்கப் பட்டுள்ளது. இவ்வகுப்பில் அரசியலமைப்பின் அவசியம், அரசியலமைப்பின் மதிப்புகள், நோக்கங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் மற்றும் வழிகாட்டல் நெறிமுறைகள் ஆகிய கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பிலுள்ள அரசு இயந்திரங்களின் தன்மை மற்றும் அதன் அடிப்படையிலான அரசியல் செயல்முறைகள் பற்றிய கல்வியை எட்டாம் வகுப்பில் கற்பிக்க வேண்டும். இதனடிப்படையில் வகுப்பு ஏழு மற்றும் எட்டாம் வகுப்பிலுள்ள குடிமையியல் பாடங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும். மாணவர்கள் மிக எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் அவை ஒழுங்குபடுத்தப்பட் டுள்ளன. உள்ளடக்கத்தின் அமைப்பு புதுமையான முறையில் செய்யப்பட்டுள்ளது. இது அறிவுபூர்வமான உருவாக்கம் அடிப்படையில் அமைந்துள்ளது. எனினும், அதையும் தாண்டி அரசியல் அமைப்பின் (செயல்முறையின்) மீதான அக்கறையின்மையைக் கடந்து மாணவர்களை சமூகத்தின் ஒரு பகுதியாக உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. உள்ளடக்கத்தின் அமைப்பு மிக எளிய மொழியில் தரப்பட்டுள்ளது. பாடநூல் வாசிப்புத்திறனை அதிகரிக்க இது உதவும்.

ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட பாடநூலை கற்பிக்கும்போது நாளிதழ்கள், தொலைக்காட்சிச் செய்திகள், வல்லுநர்களின் பகுப்பாய்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் மத்தியில் பரந்த பார்வையை வளர்க்க உதவி செய்ய வேண்டும். வரலாறு மற்றும் குடிமையியல் கல்வியின் கற்றல் மற்றும் கற்பித்தல் தற்போதைய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தினால் அது அதிக அர்த்தமுள்ளதாக இருக்கும். மேலும், மாணவர்களின் நற்பண்புகளை மனதில் ஆழ பதிய வைப்பதற்கு உதவியாக இருக்கும்.

# பொருளடக்கம்

## இடைக்கால இந்திய வரலாறு


| எண் | பாடம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | வரலாற்று மூலங்கள் ............... | 1 |
| 2. | சிவாஜிக்கு முந்தையக் கால இந்தியா ............................... | 5 |
| 3. | சமய ஒருங்கிணைப்பு ............. | 11 |
| 4. | சிவாஜிக்கு முந்தையக் கால மகாராஷ்டிரா ......................... | 14 |
| 5. | சுயராஜ்யத்தின் அடித்தளம்....... | 19 |
| 6. | மொகலாயருடனான போர்....... | 24 |
| 7. | சுயராஜ்ய ஆட்சி முறை .......... | 29 |
| 8. | மிகச்சிறந்த ஆட்சியாளர் .......... | 33 |
| 9. | மராத்தியர்களின் விடுதலைப் போர்................................... | 37 |
| 10. | மராத்தியர்களின் ஆட்சி விரிவாக்கம் .......................... | 44 |
| 11. | நாடு காத்த மராத்தியர்கள் ........ | 47 |
| 12. | சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சி பயணம்................................ | 53 |
| 13 | மகாராஷ்டிராவில் மக்களின் சமூக வாழ்க்கை ..................... | 57 |


**S.O.I. Note :** The following foot notes are applicable : (1) © Government of India, Copyright : 2017. (2) The responsibility for the correctness of internal details rests with the publisher. (3) The territorial waters of India extend into the sea to a distance of twelve nautical miles measured from the appropriate base line. (4) The administrative headquarters of Chandigarh, Haryana and Punjab are at Chandigarh. (5) The interstate boundaries amongst Arunachal Pradesh, Assam and Meghalaya shown on this map are as interpreted from the "North-Eastern Areas (Reorganisation) Act. 1971," but have yet to be verified. (6) The external boundaries and coastlines of India agree with the Record/Master Copy certified by Survey of India. (7) The state boundaries between Uttarakhand & Uttar Pradesh, Bihar & Jharkhand and Chattisgarh & Madhya Pradesh have not been verified by the Governments concerned. (8) The spellings of names in this map, have been taken from various sources.

# கற்றல் விளைவுகள்

| பரிந்துரைக்கப்பட்ட கற்பித்தல் செயல்முறைகள்: | கற்றல் விளைவுகள் |
|---|---|
| கற்பவர்களுக்கு ஜோடிகளாக / குழுக்களாக / தனியாக வாய்ப்புகள் வழங்கி பின்வருவனவற்றை ஊக்குவிக்க வேண்டும்.<br>• புத்தகங்கள் / உள்ளூர் சுற்றுப்புறத்தில் கிடைக்கக்கூடிய பல்வேறு வரலாற்று மூலங்களை அடையாளம் காணுதல். எடுத்துக்காட்டாக, கையெழுத்துப் பிரதிகள் / நிலப்படங்கள் / விளக்கப்படங்கள் / ஓவியம் / வரலாற்றுப் பொருட்கள் / திரைப்படங்கள் / வரலாற்று நாடகங்கள் / தொலைக்காட்சித் தொடர்கள், நாட்டுப்புறக்கலை நாடகங்கள் ஆகியவற்றை அறிதல் மற்றும் அக்காலக் கட்டத்தின் வரலாற்றை புரிந்துகொள்ள விளக்கமளித்தல்.<br>• அக்காலத்து வம்சங்கள் / ராஜ வம்சங்களின் எழுச்சியை அறிந்து கொள்ளல் மற்றும் அக்காலத்தின் முக்கிய நிகழ்வுகளைக் காலக்கோட்டின் உதவியால் கண்டறிதல்.<br>• கொடுக்கப்பட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட நிகழ்வு / ஆளுமைகளான பேரரசர் அக்பர், சத்ரபதி சிவாஜி மகாராஜ், பாஜிராவ் I, மகாராணி தாராபாய் போன்றோர்களின் முக்கிய நிகழ்வுகளை நடித்தல் / நாடகமாக்குதல். இடைக்காலத்தில் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை பிரதிபலித்தல் மற்றும் அதை தற்போதைய சமூகத்தோடு ஒப்பிடல்.<br>• வம்சங்கள் / ராஜ்ஜியங்கள் / நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் ஒரு காலத்தின் கட்டடக்கலை சிறப்புகள் பற்றிய செயல்திட்டம் தயாரித்தல். எடுத்துக்காட்டாக, போசலே, ஷிந்தே, ஹோல்கர் மீதான செயல்திட்டம் தயாரித்தல்.<br>• அபங்கங்கள், பஜனைகள், கீர்த்தனைகள், கவாலி போன்றவற்றின் மூலமாக திருத்தொண்டாகளின் போதனைகளை புரிந்து கொள்ளல். அருகிலுள்ள தர்கா / குருத்துவாரா / கோயில்களுக்கு வருகை தருவதன் மூலம் பக்தி இயக்கம் அல்லது சூஃபி (மத) மார்க்கம் தொடர்புடைய செய்திகளை சேகரித்தல் மற்றும் பல்வேறு மதங்களின் கொள்கைகளைப் பற்றி கலந்துரையாடுதல்.<br>• சிவாஜி மகாராஜாவின் காலத்திற்கு முந்தைய இந்தியா, சிவாஜி மகாராஜாவின் காலத்திற்கு முந்தைய மகாராஷ்டிரா, மராத்திய விடுதலைப் போர், பேஷ்வா காலம் மற்றும் மராத்திய சக்திகளின் விரிவாக்கம் பற்றிய தகவல்களைப் பெறுதல். | 07.73H.01. வரலாற்றின் பல்வேறு மூலங்களை அடையாளம் காணுதல் மற்றும் அக்கால வரலாற்றை மீண்டும் எழுதுவதற்கு அவற்றின் பயன்பாட்டை விளக்குதல்.<br>07.73H.02. வரலாற்றின் பல்வேறு காலங்களைப் படிக்க பயன்படும் மூலங்களின் எடுத்துக்காட்டுகளை வழங்குதல்.<br>07.73H.03. மராத்திய மொகலாய மோதலை விமர்சன ரீதியாக ஆராய்தல்.<br>07.73H.04. சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் முடிசூட்டலுக்கான காரணங்களை விளக்குதல்.<br>07.73H.05. இடைக்காலத்தில் ஏற்பட்ட ஓர் இடத்தின் முக்கிய வரலாற்று முன்னேற்றங்களை மற்றொரு இடத்துடன் தொடர்புபடுத்துதல்.<br>07.73H.06. இடைக்காலத்தில் நிலவிய சமூக அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை பகுப்பாய்தல்.<br>07.73H.07. இராணுவ கட்டுப்பாட்டுக்காக சிவாஜி மகாராஜா ஏற்றுக்கொண்ட நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் உத்திகளை பகுப்பாய்வு செய்தல்.<br>07.73H.08. கோயில்கள், சமாதி / கல்லறைகள் மற்றும் மசூதிகளின் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் பாணி மற்றும் தொழில் நுட்பத்தின் தனித்துவமான முன்னேற்றங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.<br>07.73H.09. பல்வேறு திருத்தொண்டர்களின் போதனைகளில் உள்ள ஒற்றுமைகளை அடையாளம் காணல்.<br>07.73H.10. தற்போதைய சமூக ஒழுங்கு பற்றி பக்தி இயக்கம் மற்றும் சூஃபி மார்க்கத்தின் கவிதை மற்றும் அபங்கங்களிலிருந்து அனுமானித்தல்<br>07.73H.11. பானிபட் போரின் காரணங்களை பகுப்பாய்தல்.<br>07.73H.12 அனைத்து இந்திய அளவில் மராத்திய சக்தி மேலாதிக்க சக்தியாக மாறியதை அக்காலத்து வரலாற்று நிகழ்வுகளுடன் விளக்குதல். |

# 1. வரலாற்று மூலங்கள்

பண்டையகால இந்திய வரலாற்றை நாம் சென்ற வருடம் கற்றோம். இவ்வருடம் நாம் இடைக்கால இந்திய வரலாற்றைப் பற்றி கற்க உள்ளோம். இந்திய வரலாற்றில் இடைக்காலம் என்பது கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு முதல் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் உள்ள காலமாகக் கருதப்படுகிறது. இப்பாடத்தில் நாம் இடைக்கால வரலாற்றின் மூலங்களைப் பற்றி பயில உள்ளோம்.

கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளின் கால வரிசையிலான அறிவியலுடன் கூடிய மற்றும் முறைப்படுத்தித் தரப்பட்ட தகவலே வரலாறு ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இதிகாசம் என்ற சொல்லின் பொருள் 'அவ்வாறு உருவானவை' அதாவது, 'அவ்வாறு நிகழ்ந்தவை' என்பதாகும்.

வரலாற்று நோக்கில் தனிநபர், சமூகம், இடம் மற்றும் காலம் ஆகிய நான்கு முக்கியக் காரணிகள் உள்ளன. வரலாறானது நம்பத்தகுந்த சான்றுகளின் அடிப்படையில் அவசியம் இருக்க வேண்டும். இச்சான்றுகள் வரலாற்று மூலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இம்மூலங்களை பொருள் மூலங்கள், எழுத்து மூலங்கள் மற்றும் வாய்மொழி மூலங்கள் என வகைப்படுத்தி நாம் அவற்றைப்பற்றி மேலும் கற்போம். அதுபோன்ற வரலாற்று மூலங்களை மதிப்பீடும் செய்வோம்.

எவ்வரலாற்று நிகழ்வினை நாம் பயில வேண்டுமோ அது தொடர்பான பல காரணிகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்காக வரலாற்று மூலங்களின் அடிப்படையை எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மூலங்கள் சரிபார்க்கப்பட்டு அவை நம்பத்தகுந்தனவா என்பதைக் கண்டறிய வேண்டும். இம்மூலங்களை கூரிய நோக்குடனும் நடுநிலையுடனும் பயன்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

**பொருள் மூலங்கள்:**




மேலுள்ள பொருட்கள் மற்றும் கட்டடங்கள் அல்லது அவற்றின் எச்சங்கள் ஆகியவற்றை வரலாற்றின் 'பொருள் மூலங்கள்' என்று கூறுகிறோம்.

பொருள் மூலங்களில் கோட்டைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. கோட்டைகளில் சில முக்கிய வகைகள் குறிப்பாக, மலைக் கோட்டைகள், வனக் கோட்டைகள், கடற் கோட்டைகள் மற்றும் சமவெளிகளில் அமைந்த கோட்டைகள் போன்றவைகளாகும். அதுபோலவே, நினைவுச் சின்னங்களில் சமாதிகள், கல்லறைகள், நினைவுத்தூண்கள், அரண்மனைகள், அமைச்சர் மாளிகைகள் அரசியின் அந்தப்புரங்கள் மற்றும் பொதுமக்களின் இல்லங்கள் போன்ற கட்டடங்கள் அடங்கும். இவற்றிலிருந்து நாம் அக்கால கட்டடத்தின் நுண்ணறிவைப் பெறுகிறோம். கட்டடக்கலையின் முன்னேற்றத்தைப் புரிந்து கொள்கிறோம். அக்காலகட்டத்தின் பொருளாதார நிலை, கலையின் தன்மை, கட்டடக்கலையின் பாணி மக்களின் வாழ்க்கைத்தரம் போன்றவற்றை அறிகிறோம்.

**உங்களால் கூற முடியுமா?**

நாணயங்கள் வரலாற்றை எவ்வாறு கூறுகின்றன?

**அறிந்து கொள்வோம்.**

பண்டைக் காலத்திலிருந்தே கவடி, தமடி, தேலா, பை, பைசா, அணா, ரூபாய் போன்ற நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. நாணயங்கள் அடிப்படையிலான சில உள்ளூர் மரபுமொழித் தொடர்கள் அல்லது பழமொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன. எ.கா:

* ஓர் உடைந்த செப்புக் காசுகூட கிடைக்காது.
* தோல் தேய உழைத்தும் சல்லிக் காசும் கிட்டவில்லை.
* ஒவ்வொரு நையா பைசாவுக்கும் கணக்கு வை.
* நூற்றுக்கு நூறு நாணயமான பேச்சு.



நினைவுத்தூண்

பல்வேறு ஆட்சியாளர்களால் தங்கம் வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நாணயங்கள் வரலாற்றின் முக்கிய மூலங்களாக உள்ளன. இந்நாணயங்களிலிருந்து நாம் ஆட்சியாளர்கள், அவர்களது காலம், ஆட்சிமுறை, சமயக் கருத்துகள் தனிப்பட்ட விவரங்கள் போன்ற தகவல்களைப் பெறுகிறோம். அதுபோலவே, அக்கால நிதி நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார நிலைகள் குறித்த தகவல்களையும் நாம் அறிகிறோம். மேலும், அக்கால உலோகத் தொழிற்கலையின் முன்னேற்றத்தைப் புரிந்து கொள்கிறோம். பேரரசர் அக்பரின் நாணயத்திலுள்ள இராம்-சீதா உருவம் அல்லது ஹைதர் அலியின் நாணயத்திலுள்ள சிவன்-பார்வதி உருவத்திலிருந்து அக்காலத்து சமய ஒருங்கிணைப்பைக் காண்கிறோம். பேஷ்வாக்களின் நாணயங்களில் அரேபிய அல்லது பெர்சியன் மொழி பயன்படுத்தப்பட்டது. இதிலிருந்து அக்கால மொழி பரிவர்த்தனைகளைப் புரிந்து கொள்கிறோம்.

கல்வெட்டு என்பது கல்லின்மீது அல்லது சுவற்றின்மீது செதுக்கப்பட்ட எழுத்துகள் ஆகும்.



பேஷ்வா கால நாணயம்



ஹைதர் அலியின் நாணயம்

எ.கா. தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில் காணப்படும் கல்வெட்டுகள். சாளுக்கிய, இராஷ்டிரகூட, சோழ மற்றும் யாதவ மன்னர்கள் காலத்தில் செதுக்கப்பட்ட பல கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டானது வரலாற்றின் ஒரு மிக முக்கியமான மற்றும் நம்பகமான மூலமாகக் கருதப்படுகிறது. இது அக்கால மொழி, எழுத்துகள், சமூக வாழ்க்கை போன்ற சிறப்பியல்புகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது. செப்புத் தகடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துகள், செப்புப் பட்டைகள் எனப்படுகின்றன. செப்புப் பட்டைகளிள்மீது அரசாணைகள், தீர்ப்புகள் போன்ற வகையிலான செய்திகள் பொறிக்கப்பட்டன.



**உங்களுக்குத் தெரியுமா?**

ஜைன கோவில்கள் புத்தக் கோயில்கள், கோயில்கள், ஆலயங்கள் மசூதிகள் தீக்கோயில்கள், தர்காக்கள், சமாதிஸ்தலங்கள், குருத்துவாராக்கள், நினைவிடங்கள், சிற்பங்கள், கிணறுகள், படிக்கிணறுகள், ஸ்தூபிகள், கிராமச் சுற்று சுவர்கள், வாயில்கள், ஆயுதங்கள், பானைகள், ஆபரணங்கள், ஆடைகள், நுட்பமான சித்திரத் தையல்வேலை, விளையாட்டுப் பொம்மைகள், கருவிகள், இசைக்கருவிகள், ஆகிய அனைத்தும் வரலாற்றின் பொருள் மூலங்களாகும்.

**எழுத்து மூலங்கள்:** இடைக்கால முக்கிய வரலாற்று நிகழ்வுகளை நாம் தேவநாகரி, அரேபிய, பெர்சிய, மோடி போன்ற எழுத்துகளின் எழுத்து நடைகளிலிருந்தும், பூர்ஜ பத்திரங்கள், சமய கையெழுத்துப் பிரதிகள், நூல்கள், ஆணைகள், வாழ்க்கை வரலாறுகள் ஓவியங்கள் போன்றவற்றிலிருந்தும் பயில்கிறோம். அதுபோலவே, உணவுப் பொருட்கள், மக்கள் வாழ்க்கை, உடைகள், நடத்தை விதிகள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றவை குறித்த செய்திகளையும் பெறுகிறோம்.

இவ்வனைத்து மூலங்களும் வரலாற்றின் எழுத்து மூலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.



இக்காலத்தில் வெளிநாட்டு பயணிகள் இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் தமது பயணக் குறிப்புகளை எழுதியுள்ளனர். அவர்களுள் அல்பெருனி, இபன் பதுதா, நிக்கொலஸ் மனுசி ஆகியோர் அடங்குவர். பாபரின் சுய சரிதை, கவி பரமானந்த் சமஸ்கிருத மொழியில் எழுதிய ‘ஸ்ரீசிவபாரத்’ என்னும் மாமன்னர் சிவாஜி வாழ்க்கை வரலாறு, அதுபோன்றே, பல்வேறு ஆட்சியாளர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் கடிதத் தொடர்புகள் ஆகியவற்றிலிருந்து அவர்களது கொள்கைகள், நிர்வாக அமைப்புகள் மற்றும் அரசியல் தொடர்புகள் ஆகியவற்றை புரிந்து கொள்ள முடிகிறது.

தவாரிக் அல்லது தாரிக் என்பதன் பொருள் நிகழ்வுகளின் வரிசைமுறை என்பதாகும். அல்பெருனி, ஜியாசுதின் பர்னி, மௌலானா அகமத், யாஹ்யா பின் அகமத், மிர்ஜா ஹைதர், பீம்சென் சக்ஸெனா ஆகியோர் எழுதியுள்ள தவாரிக்குகள் கிடைத்துள்ளன.

பக்கர் என்ற சொல் கபர் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். கபர் என்பதன் பொருள் ‘செய்தி’ என்பதாகும். பக்கர் என்பது மகாராஷ்டிராவில் உருவான வரலாற்றுக் கட்டுரைகளின் ஒரு வகையாகும். இவை சமகால அரசியல் நிகழ்வுகள், மொழியியல் பரிவர்த்தனைகள், கலாச்சார வாழ்க்கை, சமூக நிலைகள் போன்ற விஷயங்களை புரிந்து கொள்ள உதவுகின்றன. மராத்தியில் பல பக்கர் நிகழ்வுகள் நிகழ்ந்த பல ஆண்டுகளுக்குப்பின் எழுதப்பட்டதால் அவற்றில் பல செவிவழிச் செய்திச் சான்றுகள் நிறைந்து காணப்படுகின்றன. மகிகாவதியின் பக்கர், சபாசத் பக்கர், ஏக்யான்னவ் கல்மி பக்கர், சிட்னிசாயின் பக்கர், பாவுசாகேபாவின் பக்கர், கதர்யாவின் இலடாயி பக்கர் போன்றவை அவற்றுள் சிலவாகும். இராபர்ட் ஆர்ம், எம்.சி. ஸ்பிரெங்கல் மற்றும் கிரான்ட் டஃப் போன்ற சமகால மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்களின் நூல்களும் மகத்துவமிக்கவைகளாகும்.



### செய்து பார்ப்போம்.

- பொவாடாக்கள், ஆதிவாசிப் பாடல்கள் ஆகியவற்றை சேகரிக்க.
- பள்ளி கலாச்சார நிகழ்ச்சிகளில் அவற்றை வழங்குக.

**வாய்மொழி மூலங்கள்:** நாட்டுப்புற வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளை நாம் பாரம்பரியமாக தலைமுறை தலைமுறையாகக் கடந்துவரும் நாட்டுப்புற இலக்கியங்கள் வாயிலாகப் புரிந்து கொள்கிறோம். ஓவ்யாக்கள், நாட்டுப்புறப் பாடல்கள், பொவாடாக்கள் நாட்டுப்புறக் கதைகள், கட்டுக்கதைகள் மற்றும் வரலாற்று மாந்தர் கதைகள், புராணக் கதைகள் போன்ற வகை மூலங்கள் வரலாற்றின் ‘வாய்வழி மூலங்கள்’ எனப்படுகின்றன.




மேலுள்ள மூவகை மூலங்களின் அடிப்படையில் வரலாறு எழுதப்படுகிறது. ஒருமுறை எழுதப்பட்டுவிட்ட பின்னருங்கூட அதைப்பற்றிய ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இச்சோதனை வழியாக புதிய மூலங்கள் மற்றும் தகவல்கள் வெளிச்சத்திற்கு வருகின்றன. அதன்படி வரலாற்றை எழுத வேண்டும். பாட்டி - தாத்தா காலத்திலும், அம்மா-அப்பா காலத்திலும் நமது காலத்திலும் உள்ள வரலாற்று நூல்களில் சிறிதளவு வேறுபாடு காணப்படுகிறது.



### உங்களுக்குத் தெரியுமா?

**தானாஜி பற்றிய பொவாடா:** இப்பொவாடாவை இயற்றியவர் துளசிதாஸ் சாஹீர் ஆவார். இதில் சின்ஹகட்டின் செய்தி வருணிக்கப்பட்டுள்ளது தானாஜி, ஷேலார்மாமா, சிவாஜி மகாராஜா, வீரமாதா ஜீஜாபாய் ஆகியோரது அழகிய பண்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

முக்கிய பொவாடாவிலுள்ள சில பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

*मामा बोलाया तो लागला । ऐंशी वर्षींचा म्हातारा ।।*
*‘‘लगिन राहिले रायबाचे तो मजला सांगावी ।।*
*माझ्या तानाजी सुभेदारा । जे गेले सिंहगडाला ।।*
*त्याचे पाठिरे पाहिले । नाही पुढारे पाहिले ।।*
*ज्याने आंबारे खाईला । बाठा बुजरा लाविला ।।*
*त्याचे झाड होउनि आंबे बांधले ।*
*किल्ला हाती नाही आला ।।*
*सिंहगड किल्ल्याची वार्ता ।*
*काढू नको तानाजी सुभेदारा ।।*
*जे गेले सिंहगडाला । ते मरूनशानी गेले ।।*
*तुमचा सपाटा होईल । असे बोलू नको रे मामा ।।*
*आम्ही सूरमर्द क्षत्री । नाही भिणार मरणाला ।।’’*



### உங்கள் கருத்துகளை கூறுக:

வரலாற்று மூலங்களைப் பாதுகாப்பதற்கான தீர்வுகளைப் பரிந்துரைக்க.

**வரலாற்று மூலங்களை மதிப்பீடு செய்தல்:** இவ்வனைத்து வரலாற்று மூலங்களைப் பயன்படுத்துவதற்குமுன் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும். அவற்றின் நம்பகத்தன்மை ஆய்வு செய்யப்பட வேண்டும். அவற்றுள் உண்மையான மூலங்கள் எவை மற்றும் போலியானவை எவை என்பதைக் கண்டறிய வேண்டும். உள் தரநிலையை நோக்கி அவற்றின் தன்மையை தீர்மானிக்க இயலும். எழுத்தாளர்களின் நேர்மை, அவர்களது தனிப்பட்ட ஆர்வம், காலம் அரசியல் அழுத்தம் ஆகியவற்றையும் நாம் கற்க வேண்டியது அவசியமாகும். இத்தகவல்கள் செவிவழிச்செய்திச் சான்றாக உள்ளனவா அல்லது அவற்றைத் தாமே பார்த்துள்ளனரா என்பதும் மிக முக்கியமானதாகும். நூலாசிரியர்களின் மிகைப்படுத்துதல், எடுத்துக்காட்டு விளக்கம், மொழியலங்காரம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். பிற சமகாலத்து மூலங்களுடன் இத்தகவல் சரிபார்க்கப்பட வேண்டும். நமக்குக் கிடைத்த தகவல் ஒரு பக்கமானதாகவோ, முரணானதாகவோ, அல்லது மிகைப்படுத்தப் பட்டதாகவோ இருக்கலாம். எனவே, அவற்றை பயன்படுத்தும்போது கூரிய நோக்குடன் செயல்படுவது அவசியமானதாகும். எப்போதும் விமர்சன பகுப்பாய்வு செய்து அம்மூலங்களை மற்றவற்றிலிருந்து தேர்ந்தெடுத்து பயன்படுத்துவது அவசியமானதாகும். வரலாற்றை எழுதுவதில் எழுத்தாளர்களின் பாரபட்சமற்ற தன்மை, மற்றும் நடுவுநிலைமை ஆகியவை மிகவும் முக்கியமானதாகும்.



### பயிற்சி

1. **கீழுள்ள கட்டங்களில் மறைந்துள்ள வரலாற்று மூலங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| டு | வா | ழ் | க் | கை | வ | ர | லா | று | தா |
| ட் | க | கு | ழா | வ | ல் | யி | கோ | மி | ரி |
| வெ | கை | வி | ர | ளை | ணை | சா | ர | அ | க் |
| ல் | ட | பா | ப் | ற | பு | ப் | டு | ட் | நா |
| க | னை | ர் | க | க் | ப | கௌ | று | ண | கி |
| தை | க | க் | டு | ட் | க | ம் | ய | வி | ஓ |
| பொ | வா | டா | டை | ஆ | தெ | ம் | க | லோ | சு |

2. **விடை எழுதுக.**
   (1) நினைவுச் சின்னங்களில் உள்ளடங்குபவை எவை?
   (2) தவாரிக் என்றால் என்ன?
   (3) வரலாற்றை எழுதும் நூலாசிரியருக்கு என்னென்ன தன்மைகள் முக்கியமானதாகும்?

3. **குழுவில் பொருந்தாத சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.**
   (1) பொருள் மூலங்கள், எழுத்து மூலங்கள், எழுதப்படாத மூலங்கள், வாய்மொழி மூலங்கள்.
   (2) நினைவுச் சின்னங்கள், நாணயங்கள், குகைகள், கதைகள்.
   (3) பூர்ஜ பத்திரங்கள், கோயில்கள், நூல்கள், ஓவியங்கள்.
   (4) ஓவ்யாக்கள், தவாரிக்குகள், நாட்டுப்புறக் கதைகள், புராணக் கதைகள்.

4. **பின்வரும் கருத்துகளை விளக்குக**
   (1) பொருள் மூலங்கள்.
   (2) எழுத்து மூலங்கள்.
   (3) வாய்மொழி மூலங்கள்.

5. வரலாற்று மூலங்களை மதிப்பீடு செய்வது அவசியமானதா? உங்கள் கருத்தைக் கூறுக.

6. **உங்கள் கருத்தை எழுதுக.**
   (1) கல்வெட்டானது ஒரு நம்பகமான வரலாற்று மூலமாகக் கருதப்படுகிறது.
   (2) வாய்மொழி மூலங்களின் அடிப்படையில் மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் புரிந்து கொள்கிறோம்.

**செயல்**

அருகிலுள்ள ஏதேனும் ஓர் அருங் காட்சியகத்தைப் பார்வையிடு. நீங்கள் பயின்று கொண்டிருக்கும் காலகட்டத்தின் வரலாற்று மூலங்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து அவற்றை செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

# 2. சிவாஜிக்கு முந்தையக்கால இந்தியா

இப்பாடத்தில் நாம் சிவாஜிக்கு முற்பட்ட காலங்களில் ஆட்சி செய்த பல்வேறு அதிகார சக்திகளைப் பற்றி கற்க உள்ளோம். இக்காலத்தில் இந்தியாவில் பல்வேறு ஆளும் சக்திகள் இருந்தன.

எட்டாம் நூற்றாண்டில் 'பால்' என்பது ஒரு சிறந்த வம்சமாகத் திகழ்ந்தது. மத்திய இந்தியாவில் குர்ஜர் - பிரதிஹார் ஆட்சி ஆந்திரா, கலிங்கம், விதர்பா, மேற்கு காடேவாட், கன்னோசி மற்றும் குஜராத் வரை பரவியிருந்தது.

வடஇந்தியாவிலுள்ள இராஜபுத்திர வம்சங்களுள் காஹட்வால் மற்றும் பர்மார் வம்சங்கள் மிக முக்கியமானவைகளாகும். இராஜபுத்திரர்களுள் சௌகான் வம்சத்திலுள்ள பிருத்விராஜ் சௌகான் வீரமிக்க மன்னராக இருந்தார். தராயில் நடந்த முதல் போரில் பிருத்விராஜ் சௌகான் முகமது கோரியைத் தோற்கடித்தார். இருப்பினும் தராயில் நடந்த இரண்டாம் போரில் முகமது கோரி பிருத்விராஜ் சௌகானைத் தோற்கடித்தார்.

தமிழ்நாட்டில் சோழ வம்சத்து முதலாம் இராஜ ராஜன் மற்றும் முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் குறிப்பிடத்தக்க மன்னர்களாகத் திகழ்ந்தனர். சோழர்கள் தமது கடற்படை வலிமையால் மாலத்தீவு மற்றும் இலங்கையை வெற்றி கொண்டனர். கர்நாடகாவில் ஹொய்சாள வம்சத்தைச் சார்ந்த மன்னர் விஷ்ணுவர்த்தன் ஒட்டுமொத்த கர்நாடகாவையும் வென்றிருந்தார்.

மகாராஷ்டிராவில் இராஷ்டிரகூட வம்சத்தைத் சேர்ந்த மூன்றாம் கோவிந்த் ஆட்சிக் காலத்தில் இராஷ்டிரகூட ஆட்சி கன்னோசியிலிருந்து இராமேஸ்வரம்வரை பரவியிருந்தது. பின்னர் மூன்றாம் கிருஷ்ணர் அலகாபாத் வரையுள்ள பிரதேசங்களை வென்றார்.

சிலாஹார்களின் மூன்று வம்சங்கள் மேற்கு மகாராஷ்டிராவில் எழுந்தன. முதல் வம்சம் வட கொங்கணிலுள்ள தானே மற்றும் இராய்கட்டையும், இரண்டாவது வம்சம் தெற்கு கொங்கணையும், மூன்றாவது வம்சம் கோல்ஹாபூர், சத்தாரா, சாங்கலி மற்றும் பெல்காவ் மாவட்டத்தின் சில பகுதிகளையும் ஆட்சி செய்தன.

சிவாஜிக்கு முந்தைய காலத்தில் இறுதியாக புகழ்பெற்று விளங்கிய ஆட்சி யாதவர்களின் ஆட்சியாகும். யாதவ வம்சத்து ஐந்தாம் பில்லம்மின் தலைநகர் ஔரங்கபாத்திற்கு அருகிலுள்ள தேவகிரி ஆகும். அவர் தமது ஆட்சியை கிருஷ்ணா ஆற்றுக்கு அப்பாலும் விரிவுபடுத்தினார்.

யாதவர்களின் காலம் மராத்தி மொழி மற்றும் இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. இதே காலத்தில்தான் மகாராஷ்டிராவில் மகானுபாவ் பிரிவும் வார்கரி இயக்கமும் தோன்றின.

## வடமேற்கிலிருந்து ஆக்கிரமிப்புகள்

மகாராஷ்டிராவை இராஷ்டிர கூடர்கள் மற்றும் யாதவர்கள் போன்ற உள்ளூர் வம்சத்தினர் ஆட்சி செய்த போதிலுங்கூட வடமேற்கிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் அங்குள்ள உள்ளூர் ஆட்சிகளை வென்று, தமது ஆட்சியை நிறுவினர்.

இதற்கிடையில் மையக்கிழக்கில் அரேபிய ஆட்சி உருவாகி இருந்தது. அரேபிய ஆட்சியாளர்கள் தமது பேரரசை விரிவாக்க இந்தியா நோக்கி திரும்பினர். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் அரேபிய படைத்தளபதி முகமது-பின்-காசிம் சிந்து மாகாணத்தைத் தாக்கினார். அவர் அங்கிருந்த தாகீர் மன்னனின் எதிர்ப்பை உடைத்தெறிந்து சிந்து மாகாணத்தை வென்றார். இவ்வெற்றியின் மூலமாக அரேபியர்களுக்கு இந்தியாவுடனான அரசியல் தொடர்பு முதன் முதலாக ஏற்பட்டது. இதற்குப் பிந்தைய காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து துருக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் மொகலாயர்கள் இந்தியாவிற்கு வந்து தமது ஆட்சிகளை இங்கு நிறுவினர்.

கி.பி. பதினோறாம் நூற்றாண்டில் இந்தியா மீதான துருக்கியர்களின் ஆக்கிரமிப்பு தொடங்கியது. அவர்கள் தமது ஆட்சியை விரிவாக்க இந்தியாவின் வடமேற்கு எல்லைவரை வந்தனர். சுல்தான் கஜினி முகமது இந்தியாமீது பலமுறை படையெடுத்து வந்தார். அவர், மதுரா, பிருந்தாவனம், கன்னோசி மற்றும் சோம்நாத் ஆகிய இடங்களிலுள்ள வளமான கோயில்களைக் கொள்ளையடித்து அங்குள்ள பெருஞ் செல்வங்களைத் தம்முடன் எடுத்துச் சென்றார். பக்தியார் கல்ஜி என்பவர் உலகப் புகழ்பெற்ற நாலந்தா பல்கலைக் கழகத்தின் வளமான நூலகத்தை தீயிட்டுக் கொழுத்தினார்

## வடக்கில் சுல்தானின் ஆட்சி

கி.பி. 1175 மற்றும் 1178 இல் ஆப்கானிஸ்தானிலுள்ள கூர் என்னுமிடத்தின் சுல்தான் முகமது கோரி இந்தியாமீது படையெடுத்தார். இந்தியாவில் வென்ற

பிரதேசங்களை நிர்வகிக்க அவர் குதுபுத்தீன் ஐபக் என்பவரை நியமித்தார். கி.பி. 1206 இல் முகமது கோரியின் இறப்புக்குப்பின், ஐபக் தனது ஆதிக்கத்தின்கீழ் இந்தியாவில் உள்ள பிரதேசங்களை தன்னிச்சையாக ஆட்சி செய்யத் தொடங்கினார். தொடக்கத்தில் அடிமையாயிருந்த ஐபக் தில்லியின் ஆட்சியாளர் ஆனார். இவர் கி.பி. 1210 இல் இறந்தார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

குதுபுத்தீன் ஐபக்கிற்குப்பின் இல்டுமிஷ், ரஜியா, பல்பன், அலாவுதீன் கல்ஜி, முகமது துக்ளக், பிரோஸ் துக்ளக், இப்ராகிம் லோடி மற்றும் பிற சுல்தான்கள் இந்தியாவில் ஆட்சி செய்தனர்.

இப்ராகிம் லோடியே இறுதி சுல்தான் ஆவார். இவரது விசித்திர மனோநிலையால் பல எதிரிகள் உருவாயினர். பஞ்சாபின் ஆளுநரான தௌலத்கான் லோடி காபூலின் மொகலாய ஆட்சியாளரான பாபரை இப்ராகிம் லோடிக்கு எதிராகப் போரிட அழைத்தார். இப்போரில் பாபர் இப்ராகிம் லோடியைத் தோற்கடித்தார். சுல்தான் ஆட்சி இவ்வாறு முடிவுக்கு வந்தது.

### விஜயநகர அரசு

தில்லி சுல்தான் முகமது துக்ளக்கின் ஆட்சிக்காலத்தில் தில்லி மைய அரசுக்கு எதிராகத் தெற்கில் பல கலகங்கள் ஏற்பட்டன. இக்கலகங்களின் விளைவாக விஜய நகர் மற்றும் பாமினி ஆகிய இரு வல்லமைமிக்க அரசுகள் தோன்றின.

தென்னிந்தியாவிலுள்ள ஹரிஹர் மற்றும் புக்கா ஆகிய இரு சகோதரர்கள் தில்லி சுல்தானிய அரசின் படைத்தலைவர்ளாகப் பணியாற்றினர். அவர்கள் முகமது துக்ளக்கின் ஆட்சிக்காலத்தில் தெற்கில் ஏற்பட்ட அரசியல் நிலையின்மையைப் பயன்படுத்தி கி. பி. 1336 இல் தெற்கில் விஜய நகர ஆட்சியை, நிறுவினர். இன்றைய கர்நாடகாவிலுள்ள 'ஹம்பி' இவ்வரசின் தலைநகராக இருந்தது. ஹரிஹர் விஜயநகரின் முதல் அரசரானார்.

ஹரிஹருக்குப்பின் அவரது தம்பி புக்கா அரசரானார். புக்கா இராமேஸ்வரம் வரையுள்ள பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.

**கிருஷ்ணதேவராயர்:** கிருஷ்ணதேவராயர் கி.பி. 1509 இல் விஜயநகர அரியணையில் அமர்ந்தார். இவர் விஜயவாடா மற்றும் இராஜமகேந்திரி ஆகிய பிரதேசங்களை வென்று, அவற்றைத் தமது அரசுடன் இணைத்தார். பாமினி சுல்தான் முகமது ஷாவின் தலைமையில் ஒன்று சேர்ந்து வந்த சுல்தானியக் கூட்டுப் படைகளைத் தோற்கடித்தார்.


கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்காலத்தில் விஜயநகர அரசு கிழக்கே கட்டக்கிலிருந்து மேற்கே கோவா வரையிலும் வடக்கே இரெய்ச்சூர் தோவாப்பிலிருந்து தெற்கே இந்தியப் பெருங்கடல்வரை பரவியிருந்தது. கி.பி. 1530 இல் கிருஷ்ண தேவராயர் இறந்தார்.

கிருஷ்ணதேவராயர் ஒரு சிறந்த கல்விமான் ஆவார். இவர், தெலுங்கு மொழியில் 'அமுக்தமால்யதா' என்னும் அரசியல் தொடர்பான நூலை எழுதினார். இவரது காலத்தில்தான் விஜயநகரில் ஹஜார் இராமர் கோயிலும் விட்டல் கோயிலும் கட்டப்பட்டன.

கிருஷ்ணதேவராயரின் இறப்புக்குப்பின் விஜய நகர ஆட்சி வீழ்ச்சியுறத் தொடங்கியது கி.பி. 1565 இல் இன்றைய கர்நாடக மாநிலத்திலுள்ள தலைக்கோட்டை என்னுமிடத்தில் ஒருபக்கத்தில் அடில்ஷா, நிஜாம்ஷா, குதுப்ஷா பரித்ஷா ஆகியோரும் மறுபக்கத்தில் விஜயநகர மன்னர் இராமராயரும் போரிட்டனர். இப்போரில் விஜயநகர மன்னர் தோல்வியடைந்தார். இதனையடுத்து விஜயநகர ஆட்சி முடிவுக்கு வந்தது.

### பாமினி அரசு

முகமது துக்ளக்கின் ஆட்சியை எதிர்த்து தக்காணத்தில் படைத்தலைவர்கள் கிளர்ச்சி செய்தனர். இப்படைத் தலைவர்களின் தலைவரான ஹசன் கங்கு தில்லி சுல்தானியப் படையைத் தோற்கடித்தார். கி.பி. 1347 இல் புதிய அரசு உருவானது. இது பாமினி அரசு என்று அழைக்கப்பட்டது. ஹசன் கங்கு பாமினி அரசின் முதல் சுல்தான் ஆனார். இவர் கர்நாடக மாநிலத்திலுள்ள 'குல்பர்கா'வைத் தமது தலைநகராக அமைத்தார்.

**மகமூது கவான்:** இவர் பாமினி அரசின் முக்கிய வஜிராகவும் சிறந்த நிர்வாகியாகவும்

இருந்தார். இவர் பாமினி அரசைப் பொருளாதார பலம் பெறச் செய்தார். படைவீரர்களுக்கு பிரதேசங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக பணத்தை ஊதியமாகக் கொடுக்கத் தொடங்கினார். படையில் ஒழுக்கத்தைக் கொண்டு வந்தார். நிலவரி முறையில் சீர்திருத்தங்களைச் செய்தார். அரபி மற்றும் பாரசீகக் கல்வியைப் பயிற்றுவிக்க மதரசாக்களை அமைத்தார்.

மகமூது கவானுக்குப்பின் பாமினி படைத்தலைவர்களிடையே பிரிவினைவாதம் அதிகரித்தது. விஜயநகர் மற்றும் பாமினி ஆகியவற்றிற்கு இடையிலான மோதல் பாமினி அரசுக்கு பாதகமான விளைவை உருவாக்கியது. பல்வேறு மாகாண ஆளுநர்கள் அதிக மரபுவழித் தன்னுரிமையோடு செயல்படத் தொடங்கினர். பாமினி அரசு சிதைந்தது. இதிலிருந்து வராடின் இமாத்ஷா, பிதரின் பரித்ஷா, பிஜப்பூரின் அடில்ஷா, அகமத்நகரின் நிஜாம்ஷா மற்றும் கோல்கொண்டாவின் குதுப்ஷா என ஐந்து சிற்றரசுகளானது.

## மொகாலாய ஆட்சி

கி.பி. 1526 இல் தில்லியிலுள்ள சுல்தானிய ஆட்சி முடிவுக்கு வந்தது. அங்கு மொகலாய ஆட்சி நிறுவப்பட்டது.

**பாபர்:** மொகலாய ஆட்சியை நிறுவியவர் பாபர் ஆவார். இவர் மைய ஆசியாவிலுள்ள இன்றைய உஷ்பெக்கிஸ்தானில் உள்ள பர்கானா அரசின் மன்னராக இருந்தார். இவர் இந்தியாவிலுள்ள செல்வம் தொடர்பான விவரங்களை ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தார். ஆகவே, இவர் இந்தியாமீது படையெடுக்கத் திட்டமிட்டார்.

தில்லியில் அவ்வேளை இப்ராகிம் லோடி என்ற சுல்தான் ஆட்சி செய்து கொண்டு இருந்தார். சுல்தானிய அரசின் கீழுள்ள பஞ்சாப் பிரதேசத்தின் தலைமை அதிகாரியாக தௌலத்கான் லோடி இருந்தார். இப்ராகிம் லோடிக்கும் தௌலத்கான் லோடிக்கும் இடையிலான உறவில் மோதல் உருவானது. தௌலத்கான் இந்தியாமீது படையெடுத்துவர பாபருக்கு அழைப்பு விடுத்தார். இவ்வாய்ப்பின் மூலம் பாபர் இந்தியாமீது படையெடுத்தார். பாபரின் தாக்குதலைத் தடுப்பதற்காக இப்ராகிம் லோடி படையுடன் புறப்பட்டார். கி. பி. 1526 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள் பானிபட் என்ற இடத்தில் இப்ராகிம் லோடிக்கும் பாபருக்குமிடையே போர் நடந்தது. இப்போரில் பாபர் இந்தியாவில் முதன்முதலாக பீரங்கிப் படையைத் திறம்பட பயன்படுத்தினார். அவர் இப்ராகிம் லோடியின் படையைத் தோற்கடித்தார். இது 'முதலாம் பானிபட் போர்' ஆகும்.

இப்போருக்குப்பின்னர், மேவாரின் இராணாசங்கா இராஜபுத்திர அரசர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தார். பாபருக்கும் இராணாசங்காவிற்கும் காணுவா என்ற இடத்தில் போர் நடந்தது. இப்போரில் பாபரின் பீரங்கிப் படையும் சேமப்படையும் ஆற்றல் வாய்ந்த பணியை செய்தன. இராணாசங்காவின் படை தோல்வியடைந்தது. கி. பி 1530 இல் பாபர் இறந்தார்.



### உங்களுக்குத் தெரியுமா?

பாபருக்குப்பின் ஹுமாயூன் (கி.பி. 1530 முதல் கி.பி. 1539 வரை மேலும் கி.பி. 1555 முதல் 1556 வரை) அரியணைக்கு வந்தார். ஹுமாயூனின் ஆட்சிக் காலத்தில் அவரை செர்ஷா தோல்வியடையச் செய்து தில்லி அரியணையில் 'சூர்' வம்சத்தை நிறுவினார். ஹுமாயூனுக்குப்பின் அக்பர் (கி.பி. 1556 முதல் 1605 வரை) அரியணைக்கு வந்தார். கி.பி. 1556 இல் அக்பருக்கும் ஹெமுவிற்குமிடையே பானிபட்டில் போர் நடந்தது. இது இரண்டாம் பானிபட் போர் ஆகும். ஒட்டுமொத்த இந்தியாவையும் தமது ஒரே குடையின் கீழ் கொண்டுவருவதே அக்பரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. அக்பருக்குப்பின் ஜஹாங்கீர் (கி.பி. 1605 முதல் கி.பி. 1628 வரை) பேரரசரானார். அவரது ஆட்சிக்காலத்தில் அவரது மனைவி நூர்ஜகான் நிர்வாகத்தில் ஆற்றல்மிக்க பங்காற்றினார். ஜஹாங்கீருக்குப்பின் ஷாஜகான் (கி.பி. 1628 முதல் கி.பி. 1658 வரை) பேரரசராகத் தொடர்ந்தார், ஷாஜகானுக்குப்பின் ஔரங்கசீப் (கி.பி. 1658 முதல் கி.பி. 1707 வரை) நீண்ட காலம் பேரரசராக இருந்தார். இவரது மரணத்திற்குப்பின் மொகலாயப் பேரரசு நலிவுற்றது.

அக்பர் மொகலாய வம்ச மன்னர்களுள் மிக வலிமை வாய்ந்த மன்னர் ஆவார். அவர் இந்தியாவைத் தமது ஒரேகுடையின்கீழ் கொண்டுவர முயற்சி மேற்கொண்டபோது அவருக்கு எதிர்ப்பு தோன்றியது. மகாராணா பிரதாப், சாந்த்பிபீ, இராணி துர்க்காவதி ஆகியோர் அக்பரை எதிர்த்து செய்த போர் குறிப்பிடத்தக்கதாகும்.



மகாராணா பிரதாப்

**மகாராணா பிரதாப்:** உதயசிங்கின் இறப்புக்குப்பின் மகாராணா பிரதாப் மேவாரின் அரியணைக்கு வந்தார். மேவாரை நிலைத்திருக்கச் செய்ய அவர் தொடர்ந்து போரிட்டார். இவர் தமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இறுதிவரை அக்பருடன் போரிட்டார். வீரம், துணிவு, சுயமரியாதை, தியாகம் போன்ற பண்புகளால் இவர் வரலாற்றில் நீங்கா இடம்பெற்றார்.

**சாந்த்பிபீ:** கி.பி. 1595 இல் மொகலாயர்கள் நிஜாம்ஷா அரசின் தலைநகரமான அகமத்நகரைத் தாக்கினர். மொகலாயப்படை அகமத்நகர் கோட்டையை முற்றுகையிட்டது. ஹுசேன் நிஜாம்ஷாவின் வலிமை வாய்ந்த மகளான சாந்த்பிபீ மிகத் தைரியமுடன் கோட்டையைத் தற்காத்தார். இதேவேளை நிஜாம்ஷாவின் படைத்தலைவர்களுக்கு மத்தியில் பிளவு ஏற்பட்டது. இதன் விளைவாக சாந்த்பிபீ கொலை செய்யப்பட்டார். பின்னர் மொகலாயர்கள் அகமத்நகர் கோட்டையைக் கைப்பற்றினர். இருப்பினும் நிஜாம்ஷாவின் மொத்த அரசையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் அவர்களால் கொண்டுவர முடியவில்லை.



சாந்த்பிபீ

**இராணி துர்க்காவதி:** விதர்பாவின் கிழக்குப் பகுதி, அதற்கு வடக்கிலுள்ள மத்திய பிரதேசத்தின் பகுதி, இன்றைய சத்தீஸ்கரின் மேற்குப் பகுதி, ஆந்திர பிரதேசத்தின் வடக்குப் பகுதி மற்றும் ஒடிசாவின் மேற்குப் பகுதி ஆகியவற்றைத் தோராயமாக கோண்ட்வனா உள்ளடக்கியிருந்தது.



இராணி துர்க்காவதி

சந்தேல் இராஜபுத்திர வம்சத்தில் பிறந்த துர்க்காவதி திருமணத்திற்குப்பின் கோண்ட்வனாவின் அரசியானார். அவர் சிறந்த முறையில் அரசாட்சி செய்தார். இடைக்கால வரலாற்றில் கோண்ட்வனாவின் இராணி துர்க்காவதி மொகலாயருக்கு எதிராக செய்த போர் முக்கியமானதாகும். கணவரின் இறப்புக்குப் பின்னர் துர்க்காவதி அக்பருக்கு எதிரான போரில் உயிரைக் கொடுத்த போதிலும் சரணடையவில்லை. அக்பர் ஓர் அறிவார்ந்த மற்றும் விழிப்பான ஆட்சியாளராய் இருந்தார். அவரது மதக்கொள்கை தாராளமானதும் சகிப்புத்தன்மை உடையதுமாகும். (எ.கா.) அனைத்து மக்களையும் ஒரே மாதிரி நடத்தினார். அனைத்து மதங்களின் முக்கியமான கொள்கைகளை இணைத்து 'தீன்-இ-இலாஹி' என்ற மதத்தை அக்பர் நிறுவினார். இருப்பினும், 'தீன்-இ-இலாஹியை ஏற்கும்படி யாரையும் கட்டாயப்படுத்தவில்லை.



ஔரங்கசீப்

**ஔரங்கசீப்:** ஷாஜஹான் பாதுஷாவின் மகன்களுக்கிடையேயான அதிகாரப் போட்டியில் ஔரங்கசீப் வெற்றி பெற்று தந்தைக்குப்பின் கி.பி. 1658-இல் பேரரசரானார். ஷாஜஹானின் மூத்த மகனான தாரா சுகோஹ் சமய சகிப்புத்தன்மைக்குப் புகழ் பெற்றவர் ஆவார். அவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட சமஸ்கிருத உபநிடதங்களை பாரசீக (பார்ஸி) மொழியில் மொழிபெயர்த்தார். அச்சமயம் மொகலாயப் பேரரசு வடக்கே காஷ்மீரிலிருந்து தெற்கே அகமத்நகர் வரையிலும் மேற்கே காபூலிலிருந்து கிழக்கே பெங்கால் வரையிலும் பரவியிருந்தது.

ஔரங்கசீப் தமது ஆட்சியில் கிழக்கில் அசாமையும் தெற்கில் பிஜப்பூரின் அடில்ஷா மற்றும் கோல்கொண்டாவின் குதுப்ஷாவையும் அழித்ததன் மூலம் அவர்களது பிரதேசங்களையும் தம் பேரரசுடன் இணைத்தார்.

**ஆகோமியர்களுடனான போர்:** கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஷான் சமூக மக்கள் பிரம்மபுத்திரா ஆற்று வடிநிலத்தில் குடியேறினர். அவர்கள் அங்கு தமது அரசை நிறுவினர். உள்ளூர் மக்கள் இவர்களை ஆகோமியர் என்று அழைத்தனர்.

ஔரங்கசீப்பின் காலத்தில் ஆகோமியர் மொகலாயர்களுடன் நீண்டகாலப் போரில் ஈடுபட்டனர். மொகலாயர்கள் ஆகோமியர் பிரதேசங்களில் தாக்குதல் நடத்தினர்; கதாதர்சிங்கின் தலைமையின்கீழ் ஆகோமியர் ஒன்று சேர்ந்தனர். இலாச்சித் பட்ஃபூக்கன் என்ற தளபதி மொகலாயருக்கு எதிராக தீவிரப் போர்

புரிந்தார். ஆகோமியர் மொகலாயருக்கு எதிரான போரில் கொரில்லா போர் தந்திரத்தைக் கையாண்டனர். மொகலாயர்களுக்கு அசாமில் தமது ஆட்சியை வலுப்படுத்த இயலாமல் போயிற்று.



குருகோவிந்த் சிங்

**சீக்கியர்களுடனான போர்:** சீக்கியர்களின் ஒன்பதாவது குருவான குரு தேக்பகதூர் ஔரங்கசீப்பின் சமய சகிப் -பின்மைக் கொள்கைக்கு எதிராக கடுமையான, எதிர்ப்பைக் காட்டினார். ஔரங்கசீப் அவரை சிறையிலடைத்து கி.பி. 1675 இல், அவரது தலையைத் துண்டித்தார். அவருக்குப்பின் குருகோவிந்த்சிங் சீக்கியர்களின் குருவானார்.

குருகோவிந்த்சிங் தம்மைப் பின்பற்றுவோரை ஒன்றாகச் சேர்த்து அவர்களிடத்தில் போரிடும் மனப்பான்மையை ஊக்குவித்தார். போரிடும் சீக்கிய இளைஞர்களின் ஒரு படையை அமைத்தார். இதற்கு 'கல்சா தள்' என்று பெயர். ஆனந்த்பூர் அவர்களது தலைமையகமாக இருந்தது. ஔரங்கசீப் சீக்கியர்களுக்கு எதிராக படையை அனுப்பினார். அவரது படை ஆனந்த்பூரைத் தாக்கியது. அச்சமயம் சீக்கியர்கள் மிக வலிமையாகப் போரிட்ட போதிலும் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. இதற்குப்பின்பு குருகோவிந்த்சிங் தெற்கே வந்தார். கி.பி. 1708 இல் நான்டெட்டில் அவர்மீது தாக்குதல் நடந்தது. அதற்குப்பின் விரைவிலேயே அவரது மரணம் ஏற்பட்டது.

**இராஜபுத்திரர்களுடனான போர்:** அக்பர் தமது நட்பிணக்கக் கொள்கையின் மூலம் இராஜபுத்திர்களின் ஒத்துழைப்பைப் பெற்றிருந்தார். ஔரங்கசீப்பால் இராஜபுத்திரர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியவில்லை. மார்வாரின் இராணா ஜஸ்வந்த்சிங்கின் இறப்புக்குப்பின் அவரது அரசை ஔரங்கசீப் மொகலாயப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். துர்க்காதாஸ் இராத்தோட் ஜஸ்வந்த்சிங்கின் சிறுவயது மகன் அஜித்சிங்கை மார்வாரின் அரியணையில் அமர்த்தினார். துர்க்காதாஸ் இராத்தோட் மொகலாயர்க்கு எதிராக பெரும்போர் புரிந்தார். துர்க்காதாஸின் எதிர்ப்பை உடைக்க ஔரங்கசீப் இளவரசர் அக்பரை மார்வாருக்கு அனுப்பினார். இளவரசர் அக்பரே இராஜபுத்திரர்களிடம் சென்று அவர்களுடன் இணைந்து ஔரங்கசீப்பிற்கு எதிராக கிளர்ச்சிப் பிரகடனம் செய்தார். இக்கிளர்ச்சிக்கு மகாராஷ்டிராவிலுள்ள மராத்தியர்-களின் உதவி பெறுவதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. துர்க்காதாஸ் இராத்தோட் மார்வார் அரசு நிலைத்திருக்க மொகலாயர்களுக்கு எதிராக தொடர்ந்து போராடினார்.

**மராத்தியர்களுடனான போர்:** மகாராஷ்டிராவில் மாமன்னர் சிவாஜியின் தலைமையின்கீழ் சுயராஜ்ஜியம் நிறுவப்பட்டது. சுயராஜ்ஜியத்தை நிறுவும் மாமன்னர் சிவாஜியின் முயற்சியில் பிற பகைவர்களுடன் மட்டுமல்லாமல் மொகலாயர்களுடனும் அவர் போரிட வேண்டியிருந்தது. அவரது இறப்புக்குப்பின் ஒட்டுமொத்த தென்னிந்தியாவையும் வெற்றி கொள்ளும் நோக்கோடு ஔரங்கசீப் தக்காணத்திற்கு வந்தார். இருப்பினும் மராத்தியர்கள் ஔரங்கசீப்பிற்கு எதிராக தீவிரப் போர் புரிந்து தமது சுதந்திரத்தை பாதுகாத்துக் கொண்டனர். இவ்வனைத்துப் போர்களைப் பற்றி நாம் பின்னர் அறிவோம்.



## பயிற்சி

1. **பெயர்களைக் கூறுக:**
   (1) கோண்ட்வனாவின் அரசி -
   (2) உதயசிங்கின் மகன் -
   (3) மொகலாய ஆட்சியை நிறுவியவர் -
   (4) பாமினி அரசின் முதல் சுல்தான் -
   (5) குருகோவிந்த்சிங் அமைத்த படை -

2. **குழுவில் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
   (1) சுல்தான் முகமது, குதுபுத்தீன் ஐபக், முகமது கோரி, பாபர்.
   (2) அக்பர், ஹுமாயுன், செர்ஷா ஔரங்கசீப்

3. **குறுகிய விடையளிக்கவும்.**
   (1) விஜய நகர மற்றும் பாமினி அரசுகள் ஏன் தோன்றின?
   (2) மகமூது கவான் என்னென்ன சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்?
   (3) மொகலாயர்களால் அசாமில் தமது ஆட்சியை வலுப்படுத்த இயலாமல் போனதேன்?

4. **உங்களது சொந்த வாக்கியங்களில் சுருக்கமான தகவல் தருக.**
   (1) கிருஷ்ணதேவராயர்
   (2) சாந்த்பீபீ
   (3) இராணி துர்க்காவதி

5. **காரணங்களை எழுதுக:**

(1) பாமினி ஆட்சி ஐந்து சிறறரசுகளானது.
(2) இராணா சங்காவின் படை தோல்வியடைந்தது
(3) இராணா பிரதாப் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்.
(4) ஔரங்கசீப் குருதேக்பகதூரை சிறையிலடைத்தார்.
(5) இராஜ புத்திரர்கள் மொகலாயர்களுக்கு எதிராக போர் புரிந்தனர்.

6. **காலக் கோட்டை நிறைவு செய்க..**

| கி.பி. 1336 | கி.பி. ....... | கி.பி. 1509 | கி.பி. ....... |
|---|---|---|---|
| விஜயநகர அரசு நிறுவப்படல் | பாமினி அரசு நிறுவப்படல் | .................. | மொகலாய ஆட்சி நிறுவப்படல் |

7. இணையதள துணைகொண்டு உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு பிரமுகரின் தகவலைப் பெற்று கீழுள்ள கட்டத்தினுள் எழுதுக.

இவரை நான் அறிவேன்.

______________________

______________________

______________________

______________________

**செயல்பாடு**

பாடத்தில் வரும் பிரமுகர்களின் அதிகப்படியான தகவல்களை குறிப்பு நூல்கள், இணையதளம் செய்தித்தாள்கள் போன்றவற்றின் துணையால் பெறுக. செயல்பாட்டுக் குறிப்பேட்டில் சித்திரத் தகவல்களின் ஒட்டுப்படங்களை தயார்செய்து வரலாற்று வகுப்பறையில் காட்சிப் படுத்துக.



தேவகிரிக் கோட்டை

# 3. சமய ஒருங்கிணைப்பு

இந்தியாவின் சமூக வாழ்வில் மொழி மற்றும் சமய வேறுபாடுகள் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவ்வம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்திய அரசியலமைப்புச்சட்டம் மதச்சார்பின்மையைக் கொண்டுள்ளது. இடைக்கால இந்திய வரலாற்றின் சமூக வாழ்வில் இதன் அடிப்படையிலேயே சமய ஒருங்கிணைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் பக்தி இயக்கம், சீக்கியம் மற்றும் சூஃபி பிரிவு ஆகியவை குறிப்பிடத்தக்க இடங்களைப் பெறுகின்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான வெவ்வேறு சிந்தனைகள் தோன்றின. அவர்கள் வெவ்வேறு பிரிவுகள் மற்றும் சமயத்தினரிடையே இறை பக்தியோடு நல்லிணக்கத்தையும் வலியுறுத்தினர். இப்பாடத்தில் இதைப்பற்றி நாம் தெரிந்து கொள்வோம்.

இந்திய சமய வாழ்வின் தொடக்கத்தில் சடங்குகளும், மரபுகளும் பெருமளவில் வலியுறுத்தப்பட்டன. இடைக்காலத்தில் இவ்விரண்டும் பக்தி வழிபாட்டிற்கு வழிவகுத்தன. பக்தி வழிபாடு சமயக்குருக்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் தந்தது மட்டுமின்றி சமய ஒருங்கிணைப்புகளுக்கும் முன்னுரிமை வழங்கியது. இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் அங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப பக்தி வழிபாடு மாறுபட்ட முறைகளில் காணப்பட்டன. பக்தி இயக்கம் சமஸ்கிருதத்திற்குப் பதிலாக பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களின் மொழிகளிலேயே வழங்கப்பட்டது. இது வட்டார மொழிகள் வளர்ச்சியடைவதற்குப் பெரிதும் உதவியது.

**பக்தி இயக்கம்:** தென்னிந்தியாவில்தான் பக்தி இயக்கம் தோன்றியதாக நம்பப்படுகிறது. நாயன்மார்கள், ஆழ்வார்களின் பக்தி இயக்கங்கள் தென்னிந்தியாவில்தான் தோன்றின. சிவன் மீது பக்தியுடையவர்கள் நாயன்மார்கள் எனப்பட்டனர். விஷ்ணுவின்மீது பக்தியுடையவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். சிவனும் விஷ்ணுவும் ஒன்றே எனக் கருதி அவர்களை இணைக்கும் விதமாக முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பாதி சிவனும், பாதி விஷ்ணுவும் என்பதைக் காட்டும் விதமாக 'ஹரிஹர்' என்ற உருவச்சிலைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. சமூகத்தின் அனைத்து வகை மக்களும் இவ்வியக்கங்களில் சேர்ந்தனர். கடவுளிடத்தில் அன்பு, மனித நேயம், அனைத்து உயிர்களிடத்தும் பரிவு, இரக்கம் போன்ற சிறப்பம்சங்களை இவை கற்பித்தன. தென்னிந்தியாவில் இராமானுஜரும் பிற ஆச்சாரியர்களும் பக்தி இயக்கத்தின் அடிப்படையை வலுப்படுத்தினர். கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர், கடவுள் வேறுபாடு பார்ப்பதில்லை, என அவர்கள் மக்களுக்குக் கூறினர். இராமானுஜர் கற்பித்த கொள்கைகள் வட இந்தியாவிலும் கூட ஒரு பெரும் செயல்விளைவை ஏற்படுத்தின.

வட இந்தியாவில் திருத்தொண்டரான இராமானந்தர் பக்தியின் முக்கியத்துவத்தை கூறினார். பக்தி இயக்கத்தில் மிக நன்றாக அறியப்பட்டவர் திருத்தொண்டர் கபீர் ஆவார். சமய யாத்திரைகள், நோன்புகள், உருவ வழிபாடுகள் ஆகியவற்றிற்கு கபீர் முக்கியத்துவம் அளிக்கவில்லை. வாய்மையே கடவுள் என எண்ணினார். மாந்தர் அனைவரும் சமமே என்று அவர் போதித்தார். சாதி, இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் எந்த வேறுபாட்டையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்து முஸ்லீம்களிடையே ஒற்றுமையைக் கொண்டு வர அவர் விரும்பினார். இந்து மற்றும் முஸ்லீம் சமயங்களில் தீவிர பற்றுடையவர்களைக் திருத்தொண்டர் கபீர் கடுமையாக விமர்சித்தார்.



வங்காளத்தில் சைத்தன்ய மகாபிரபு என்பவர் கிருஷ்ண பக்தியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவருடைய அறிவுரைகளின் விளைவாக சாதி, மத எல்லைகளைக் கடந்து மக்கள் பக்தி இயக்கத்தில் இணைந்தனர். சைத்தன்ய மகாபிரபுவின் செல்வாக்கைப் பயன்படுத்தி சங்கரதேவ் என்பவர் அசாமில் கிருஷ்ண பக்தி இயக்கத்தைப் பரப்பினார். குஜராத்தில் நரசிமேத்தா என்பவர் புகழ்பெற்ற வைணவத் திருத்தொண்டர் ஆவார். இவர் ஆர்வமிக்க கிருஷ்ண பக்தரும் ஆவார். இவர் சமத்துவத்தை எடுத்துரைத்தார். குஜராத்தி மொழியின் முதல் கவிஞராக இவர் அறியப்படுகிறார்.

பெண் திருத்தொண்டர் மீராபாய் என்பவர் கிருஷ்ணபக்தியின் சிறப்பினை வலியுறுத்தினார். இவர் மேவாரின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் அரச குடும்பத்தின் இன்ப நலன்கள் அனைத்தையும் துறந்து கிருஷ்ணனின் மீது ஆழ்ந்த பக்தியுடையவராய் விளங்கினார். இராஜஸ்தானி, குஜராத்தி ஆகிய மொழிகளில் பக்திப் பாடல்களை இவர் இயற்றினார். பக்தி, சகிப்புத்தன்மை, மனித நேயம் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளை அவரது பாடல்கள் எடுத்துரைக்கின்றன. திருத்தொண்டர் சேனா மிகவும் செல்வாக்குடையவர் ஆவார். திருத்தொண்டர் ரோஹிதாஸ் ஒரு பெருந்தொண்டர் ஆவார். இவர் சமத்துவத்தையும் மனிதநேயத்தையும் வலியுறுத்தினார். ஹிந்தி

இலக்கியத்தில் மாபெரும் கவிஞரான சூர்தாசர், 'சூர்சாகர்' என்ற கவிதை நூலை எழுதியுள்ளார். அவரது காவியத்தின் பொருள் கிருஷ்ணபக்தி என்பதேயாகும். முகமதிய திருத்தொண்டர் ரஸ்கான் எழுதிய கிருஷ்ணபக்திப் பாடல்கள் மிகவும் இனிமையானவை. துளசிதாசர் எழுதிய 'இராமசரித மானஸா' என்ற நூல் இராமரிடம் காட்டும் பக்தியை மிக அழகாக எடுத்துரைக்கிறது.

கர்நாடகாவில் மகாத்மா பசவேஷ்வர், லிங்காயத் சித்தாந்தத்தைப் பரப்பினார். இவர் சாதி முறைகளை எதிர்த்தார். செய்யும் தொழிலே தெய்வம் என்பதை வலியுறுத்தினார். 'காயகாவே கைலாஸ்' என்ற அவரது வாக்கு யாவரும் அறிந்த ஒன்றாகும். அதன் பொருள் என்னவென்றால் செய்யும் தொழிலே தெய்வம் என்பதாகும். இவருடைய இயக்கத்தில் பெண்கள் பங்குபெறுவதை ஊக்கப்படுத்தினார். 'அனுபவமண்டபம்' என்னும் அரங்கத்தில் நடைபெற்ற சமய கலந்துரையாடலில் எல்லா சமயத்தைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் பங்குபெறத் தொடங்கினர். அவர் மக்களுடைய மொழி அதாவது கன்னடத்தில் வச்சனாஇலக்கியம் மூலம் போதித்து வந்தார். அவருடைய பணி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. அவரது தொண்டர்கள் அவரது போதனைகளை மராத்தியிலும் மொழிபெயர்த்தனர். அவற்றுள் மன்மத் சுவாமி இயற்றிய 'பரமரகசியம்' என்ற நூல் மக்களிடையே பெரும் பிரபலமானது. கர்நாடகாவில் தோன்றிய பெருந்தொண்டர்கள் பம்ப் மற்றும் புரந்தரதாசர் ஆவர். அவர்கள் கன்னட மொழியில் பல பக்தி கீதங்களை இயற்றினர்.



மகாத்மா பசவேஷ்வர்

**மகானுபாவ் பந்த்:** 13-ஆம் நூற்றாண்டில் சக்கரதர் சுவாமி மகாராஷ்டிராவில் 'மகானுபாவ் பந்த்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இது கிருஷ்ணபக்தியை பரப்பும் அமைப்பாகும். ஸ்ரீ கோவிந்த் பிரபு, சக்கரதர் சுவாமியின் குரு ஆவார். எல்லா சமய மற்றும் இனத்தைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் சக்கரதர் சுவாமியுடைய சீடர்களாவர். சமத்துவத்தை இவர் ஆதரித்தார். இவர் மகாராஷ்டிராவின் எல்லா பகுதிகளுக்கும் சென்று மராத்தி மொழியில் போதனை செய்தார். இவர் சமஸ்கிருதத்திற்குப் பதிலாக மராத்தி மொழியை பயன்படுத்தினார். இதன் மூலம் மராத்தி மொழி முன்னேற்றம் அடைந்தது. மராத்தி மொழியில் பல நூல்கள் இயற்றப்பட்டன.



சக்கரதர் சுவாமி

மகாராஷ்டிராவின் விதர்பா மற்றும் மராத்வாடா பகுதிகளில் இவ்வமைப்பின் போதனைகள் பரவின. விதர்பாவின் ரித்திப்பூர் இவ்வியக்கத்தைச் சார்ந்த மக்களுக்கு ஒரு முக்கிய இடமாகும். இவ்வியக்கம் தொலைதூரப் பகுதிகளான பஞ்சாப் மற்றும் ஆஃப்கானிஸ்தான் வரையிலும் பரவியது.

**உங்களுக்குத் தெரியுமா?**

'மகானுபாவ் பந்த்' இயக்கத்தை கடைபிடிப்பவர்களின் படைப்புகளாவன: சக்கரதர் சுவாமியின் வர்ணனைகள் கொண்ட மாயிம்பட் இயற்றிய 'லீலாசரித்திரா', மராத்தி மொழியின் முதல் கவிதாயினி மகதாம்பா இயற்றிய 'தவளே', கேஷோபாஸ் இயற்றிய 'சூத்ரபாட் மற்றும் திரிஷ்டாந்தபாட்', தாமோதர பண்டித்தினுடைய 'வச்சாஹரன்', பாஸ்கர்பட் போரிக்கருடைய 'சிஷுபாலவதா', நரேந்தர் இயற்றிய 'ருக்மணி சுயம்வரா'.

**உங்களுக்குத் தெரியுமா?**

திருத்தொண்டர் ஏக்நாத் எழுதியுள்ள இந்து - முஸ்லீம்களுக்கிடையேயான உரையாடல் மத நல்லிணக்கத்திற்கான நோக்கில் மிகச் சிறந்ததாகும். திருத்தொண்டர் ஷேக் முகமது அவர்களின் 'शेख महंमद अविंध । त्याचे हृदयी गोविंद ।।' ஒரு சிறந்த மத நல்லிணக்கத்திற்கான சான்றாகும்.

**குருநானக்:** சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தவரும் அதன் முதல் குருவும் ஆனவர் குருநானக் ஆவார். மத நல்லிணக்கத்திற்கான ஒரு பெரும் முயற்சி என இவருடைய பணிகளைக் கொள்தல் வேண்டும். இவர் இந்து, முஸ்லீம் ஆகிய இரு மதத்தைசார்ந்த புண்ணிய தலங்களுக்குச் சென்றார். இவர் மெக்காவுக்கும் சென்றிருந்தார். எல்லா இடங்களிலும் பக்தி உணர்வு பொதுவானதே என்பதை இவர் உணர்ந்து கொண்டார். மனிதர் யாவரையும் சமமாக நடத்த வேண்டும் என்று இவர் கூறினார். இவருடைய அறிவுரைகள் இந்து, முஸ்லீம் ஒற்றுமையை அடைவதற்குரிய நோக்கில் எழுந்தவையாகும்.

வாழ்க்கையில் நன்னடத்தையை இவர் வலியுறுத்தினார்.

குருநானக்கின் கொள்கைகளின்பால் ஏராளமானோர் ஈர்க்கப்பட்டனர். நாளுக்கு நாள் அவரைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை பெருகியது. குருநானக்கைப் பின்பற்றுவோர் 'சீக்கியர்கள்' என அழைக்கப்பெறுகின்றனர்.


குருநானக்

'ஆதிகிரந்தம்' என்னும் நூல் 'குருகிரந்த சாகிப்' எனவும் அழைக்கப்படுகிறது. இது சீக்கியர்களின் புனித நூல் ஆகும். இந்த ஆதிகிரந்தத்தில் திருத்தொண்டர்கள் நாம்தேவ், குருநானக், கபீர் ஆகியோர் இயற்றிய தொகுப்புகளும் அடங்கியுள்ளன. குருநானக்கைத் தொடர்ந்து சீக்கியர்களின் ஒன்பது குருக்கள் வந்தனர். இவர்களின் பத்தாவது குரு குருகோவிந்த் சிங் ஆவார்.

**சூஃபி பிரிவு:** இது இஸ்லாமியத்தின் ஒரு பிரிவு ஆகும். கடவுள் அன்பு நிறைந்தவர். அன்பும் பக்தியும் மட்டுமே அவரை அடையும் வழி என்று சூஃபி பிரிவுத் தொண்டர்கள் நம்பினர். அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல், எளிய வாழ்க்கை மேற்கொள்ளல், கடவுளைக் குறித்து ஆழ்ந்த சிந்தனை செய்தல் என்பவையே அவர்களுடைய முக்கியக் கொள்கைகள் ஆகும். இந்தியாவுக்கு வந்த சூஃபி தொண்டர்களுள் காஜா மொய்னுதீன் சிஸ்தி மற்றும் ஷேக் நிஜாமுதீன் அவாலியா என்பவர்கள் மிகப் புகழ்வாய்ந்தவர்கள். சூஃபி தொண்டர்களின் அறிவுரைகள் இந்து-முஸ்லீம் ஆகிய இரு சமூகமும் ஒன்றுபட்டு நெருங்கிவர பெரிதும் உதவியது. சூஃபி பாடல்கள் இந்திய இசைக்கு பெரும் பங்களிப்பை வழங்கியது.

பொது மக்களும் பின்பற்றுவதற்கு ஏற்றதாக பக்திவழி மிக எளிமையானதாக இருந்தது. பக்தி இயக்கத்தின் கதவுகள் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் திறந்து இருந்தன. திருத் தொண்டர்கள் மக்களின் மொழியிலேயே தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தினர். எளிய மக்களும் இக்கொள்கைகளால் ஈர்க்கப்பட்டனர். இந்தியப் பண்பாட்டை உருவாக்குவதில் பக்தி இயக்கம் மாபெரும் பங்களிப்பை நல்கியது.

## பயிற்சி

**1. தொடர்புடைய சொல்லை எழுதுக.**

(1) மகாத்மா பசவேஷ்வர் : கர்நாடகா,
மீராபாய் : ..................

(2) இராமானந்தா : வட இந்தியா,
சைத்தன்ய மகா பிரபு : ..................

(3) சக்கரதர் சுவாமி : ..................,
சங்கரதேவ் : ..................

**2. கீழ்க்கண்ட அட்டவணையை நிரப்புக.**

| | தோற்றுவித்தவர் | நூல் |
|---|---|---|
| (1) பக்தி இயக்கம் | .................. | ............... |
| (2) மகானுபாவ் பந்த் | .................. | ............... |
| (3) சீக்கிய மதம் | .................. | ............... |

**3. உன்னுடைய சொந்த சொற்களில் விவரித்து எழுதுக.**

(1) திருத்தொண்டர் கபீர் பக்தி இயக்கத்தில் மிகவும் புகழ்வாய்ந்த திருத்தொண்டர் ஆவார்.

(2) மகாத்மா பசவேஷ்வரின் பணிகளால் சமூகத்தில் ஏற்பட்ட விளைவுகள்.

**4. கீழ்க்கண்ட கட்டத்திற்குள் காணும் திருத் தொண்டர்களின் பெயர்களை கண்டுபிடி.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ | கு | ரு | கோ | வி | ந் | த் | சி | ங் |
| கு | மா | த | ப | ச | வே | ஷ் | வ | ர் |
| ரு | க | பீ | ர் | ஞ | ய் | பா | ரா | மீ |
| நா | சூ | ர் | தா | ச | ர் | நீ | ம | ன் |
| ன | ச | ப | த் | ந் | ன | மா | ரா | இ |
| க் | ம | ன் | ம | த் | சு | வா | மி | ண் |

**செயல்**

பாரம்பரியமிக்க சூஃபி இசைப் பாடல் ஒன்றைத் தேர்வு செய்து பள்ளி கலாச்சார நிகழ்ச்சியில் வழங்குக.

# 4. சிவாஜிக்கு முந்தையக்கால மகாராஷ்டிரா

கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகாராஷ்டிராவின் பெரும்பாலான பகுதிகள் அகமதுநகர் நிஜாம்ஷா, பிஜப்பூர் அடில்ஷா ஆகியோரின் ஆளுகையின் கீழ் இருந்தன. மொகலாயர்கள் காந்தேஷ் பகுதிக்குள் நுழைந்திருந்தனர். அவர்களுடைய நோக்கம் தெற்கில் தங்கள் அதிகாரத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பதேயாகும். கொங்கணத்தில் கடலோரப் பகுதியில் ஆப்பிரிக்காவிலிருந்து வந்த சித்திகள் என்ற இன மக்கள் குடியிருந்தனர். ஐரோப்பாவிலிருந்து வந்த பிரிட்டீஷ்காரர்கள், போர்த்துக்கீசியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்களிடையே கடும்போட்டிகளும் முரண்பாடுகளும் இக்காலத்தில் நிலவி வந்தன. வாணிபத்திற்காக சந்தைகளைப் பிடிக்கும் போட்டி அவர்களிடையே கடுமையாக இருந்தது. மேற்கு கடலோரத்திலுள்ள கோவா மற்றும் வசாய் பகுதிகளில் போர்த்துக்கீசியர்கள் ஏற்கனவே தங்கள் ஆட்சியை நிறுவியிருந்தனர். பிரிட்டீஷ்காரர்களும், டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தங்களது தொழிற்சாலைகளை நிறுவி வாணிப நிறுவனங்களின் மூலமாக உள்ளே நுழைய முயன்றனர். இவ்வாட்சியாளர்கள் ஒருவரையொருவர் சார்ந்து, தம்மைப் பாதுகாத்துக்கொள்வதோடு இயன்ற அளவு ஆதிக்கம் செலுத்தவும் முற்பட்டனர். இந்நிலை மகாராஷ்டிராவில் நிலையின்மையையும், பாதுகாப்பின்மையையும் உருவாக்கியது. ஐரோப்பாவிலிருந்து வந்திருந்த இவ்வெவ்வேறு இனத்தவர்கள் தங்களது தலைமையின் அடிப்படையில் 'டோப்கர்' என்றழைக்கப்பட்டனர்.

சிவாஜிக்கு முந்தையக் காலத்தில் இருந்த குடியேற்றங்களின் தன்மை, மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே செயல்பட்ட அதிகாரிகள் மற்றும் அறிஞர்கள் கைவினைஞர்கள் ஆகியவை பற்றி அறிவதற்கு முன் அக்காலத்திய கிராமங்கள் (மௌஜா), கஸ்பா மற்றும் பர்கானா ஆகியன வற்றின் புவியியல் அமைவிடம் பற்றிய அறிவைப் பெறுவது அவசியம் ஆகும். பர்கானா பல கிராமங்களைக் கொண்டிருந்தது. பர்கானாவின் தலைமையிடம் 'கஸ்பா' எனப்பட்டது. 'கஸ்பா'வை விட சிறிய கிராமம் 'மௌஜா' எனப்பட்டது. நாம் இப்போது கிராமம், கஸ்பா மற்றும் பர்கானா பற்றி சிறிய அளவில் தெரிந்து கொள்வோம்.

**சிற்றூர் (மௌஜா):** பெரும்பான்மையான மக்கள் சிற்றூர்களில் வாழ்ந்தனர். சிற்றூர் மௌஜா எனவும் அழைக்கப்பட்டது. சிற்றூரின் தலைவர் பாட்டீல் ஆவார். இவர் பெரும்பான்மையான நிலத்தை பயிர்த்தொழிலின்கீழ் கொண்டுவர முயன்றார். சிற்றூரில் ஏதேனும் பூசல் ஏற்பட்டால் பாட்டீல் என்பவர் அமைதியான முறையில் அதனைத் தீர்த்து வைத்தார். இந்த பணிக்கு குல்கர்னி என்பவர் உதவினார். திரட்டப்பட்ட நிலவருவாய் பற்றிய பதிவேடுகளைக் குல்கர்னி பாதுகாத்து வைத்திருந்தார். சிற்றூர்களில் பல்வேறு கைவினைஞர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் தொழிலைப் பொறுத்தவரையில் மரபுவழி உரிமையுடையவர்களாய் இருந்தனர். குத்தகைக்காரர்கள் தங்களின் வேளாண் விளைபொருள்களில் ஒரு பங்கை சிற்றூர் சமூகத்திற்காகத் தொண்டு புரியும் கைவினைஞர்களுக்குக் கொடுத்தனர். இப்பங்கு 'பலுதா' என அழைக்கப்பட்டது. குத்தகைக் காரர்களால் நிலம் பயிர் செய்யப்பட்டது.

**கஸ்பா:** கஸ்பா என்பது ஒரு பேரூராகும். இது பொதுவாக பர்கானாவின் தலைமையிடமாக இருந்தது. இந்தாபூர் பர்கானாவின் தலைமையிடம் இந்தாபூர் கஸ்பா, வாயி பர்கானாவின் தலைமையிடம் வாயி கஸ்பா ஆகும். வேளாண்மையே முக்கியத் தொழிலாகும். கஸ்பாவில் தச்சர், கொல்லர் போன்ற திறமை வாய்ந்த கைவினைஞர்கள் இருந்தனர். கஸ்பாவிற்கு அருகில் சந்தை இருந்தது. சேட்டே என்பவரும் மகாஜன் என்பவரும் சந்தையின் வதன்தார்களாவர். ஒவ்வொரு ஊரிலும் ஒரு சந்தை இருக்க வேண்டிய தேவையில்லை. சந்தையைக் கூட்டும் பணி சேட்டேயையும் மகாஜனையும் சார்ந்ததாகும். அதற்காக அரசிடமிருந்து கொஞ்சம் நிலத்தையும் சிற்றூர் மக்களிடமிருந்து சில உரிமைகளையும் அவர்கள் பெற்றிருந்தனர். சந்தையின் கணக்குகளை வைத்திருக்கும் பணியை மகாஜன் மேற்கொண்டார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

வீரமாதா ஜீஜாபாய் அவர்களின் ஆணைப்படி புனேக்கு அருகிலுள்ள 'பாஷான்' என்னுமிடத்தில் ஒரு நகரச்சந்தை உருவாக்கப்பட்டது. இது 'ஜீஜாப்பூர்' என அழைக்கப்பட்டது. ஔரங்காபாத்திலுள்ள மால்புரா, கேல்புரா, பரஸ்புரா, விதாபுரா என்னுமிடங்களில் முறையே மாலோஜி, கேலோஜி, பரஸோஜி மற்றும் விதோஜி ஆகிய நகரச்சந்தைகள் உள்ளன. 'சிவாப்பூரை' ஒட்டியுள்ள 'கேத்', மாமன்னர் சிவாஜி பெயரால் உருவாக்கப்பட்ட நகரச்சந்தையாகும்.

**கற்போம்.**

'புத்ருக்' மற்றும் 'குர்த்' என்பன இரண்டு கிராமங்களை வெவ்வேறாகக் காண்பிப்பதற்கு பயன்படுத்தப்படும் இரு சொற்களாகும். 'புத்ருக்' என்பது முதலில் தோன்றியதாகும். 'குர்த்' புதிதாகத் தோன்றியதாகும். (எ.கா) வடகாவ் புத்ருக் மற்றும் வடகாவ் குர்த் என்பதாகும்.

**பர்கானா:** பல சிற்றூர்கள் சேர்ந்தது ஒரு பர்கானா ஆகும். ஆனால் அனைத்து பர்கானாக்களிலும் உள்ள சிற்றூர்களின் எண்ணிக்கை சமமாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டு; புனே பர்கானா. இது ஒரு பெரிய பர்கானா ஆகும். இதில் 290 சிற்றூர்கள் அடங்கியிருந்தன. சாக்கன் பர்கானாவில் 64 சிற்றூர்கள் இருந்தன. சிர்வல் பர்கானா சிறியதாகும். இதில் 40 சிற்றூர்கள் மட்டுமே அடங்கியிருந்தன. பர்கானாவின் வத்தன்தார் அலுவலர்கள் தேஷ்முக்கும் தேஷ்பாண்டேயும் ஆவர். ஒரு பர்கானாவிலுள்ள பாட்டீல்களின் தலைவர் தேஷ்முக் ஆவார். பர்கானா அளவில் தேஷ்முக்கும் சிற்றூர் அளவில் பாட்டீலும் பணிகளை மேற்கொண்டனர். பர்கானாவிலுள்ள அனைத்து குல்கர்னிகளின் தலைவர் தேஷ்பாண்டே ஆவார். பர்கானா அளவில் தேஷ்பாண்டேயும் சிற்றூர் அளவில் குல்கர்னியும் பணிபுரிந்தனர். வத்தன்தார் அலுவலர்கள் அரசுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தினர்.

எதிரிகளின் படையெடுப்பு அல்லது வறட்சி ஏற்படுமாயின், அவ்வேளையில் மக்களின் குறைகளை வத்தன்தார்கள் அரசுக்கு எடுத்துரைப்பர். சில நேரங்களில் இவ்வலுவலர்கள் தங்கள் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவர். சில வேளைகளில் மக்களிடமிருந்து, கட்ட வேண்டிய பணத்தை விட அதிகமான பணத்தை திரட்டுவர் அல்லது திரட்டிய பணத்தை உரிய நேரத்தில் அரசுக்குச் செலுத்த மாட்டார்கள். இத்தகைய வேளைகளில் மக்கள் அல்லல்படுவர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

'வதன்' என்பது ஓர் அரேபியச் சொல் ஆகும். மகாராஷ்டிராவில் இது தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தப்பட்டு வரும் வரிவிலக்கு பெற்ற நிலம் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

**பஞ்சகாலத்தில் பெருந்துயர்:** வேளாண்மை மழையைச் சார்ந்தே இருந்தது. மழை இல்லையென்றால் பயிர்கள் இல்லை. உணவு தானியங்களின் விலை ஏறியது. மக்களுக்கு உணவு தானியத்தையும் பிற பொருள்களையும் வாங்குவது கடினமாயிற்று. கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்கவில்லை. தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. சிற்றூர்களில் வாழ்வது மக்களுக்குக் கடினமாக இருந்தது. இதனால் மக்கள் சிற்றூர்களை விட்டு வெளியேற நேர்ந்தது. இவ்வாறு பஞ்சம் மக்களுக்கு ஒரு பெருந்துயராக இருந்தது.

கி.பி. 1630 இல் மகாராஷ்டிராவில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. இப்பஞ்சத்தினால் மக்கள் கடும் துன்பத்திற்குள்ளாயினர். ஒரு சிறு ரொட்டித் துண்டுக்காக மக்கள் தங்களையே விற்கவும் முன்வந்தனர். ஆனால் அவர்களை யாரும் வாங்குவாரில்லை. பஞ்சத்தின் கொடுமை இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது. உணவுத் தானியங்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவியது. பல குடும்பங்கள் அழிவுக்குள்ளாயின. கால்நடைகள் இறந்தன. வேளாண்மை பாழ்பட்டது. இப்பஞ்சம் தொழில்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அனைத்து பொருளாதார பரிமாற்றங்களும் முடங்கிப் போயின. வாழ்வைத் தேடி மக்கள் தொலைதூரப் பகுதிகளுக்கு அலைந்து திரிய வேண்டியதாயிற்று. பேரழிவுக்கு உள்ளாகிய மக்களின் வாழ்க்கையை மீண்டும் இயல்புக்கு கொண்டு வருவது மாபெரும் சிக்கலாக இருந்தது.

**வார்கரி இயக்கத்தின் பணி:** மூட நம்பிக்கைகளாலும் சமயச்சடங்குகளாலும் மக்களின் சமூக வாழ்க்கை பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது. மக்கள் ஊழ்வினையை நம்பி செயலற்றவர்களாய் இருந்தனர். அனைத்து முயற்சிகளையும் இழந்திருந்தனர். பொதுமக்களின் நிலை இரங்கத்தக்கதாய் இருந்தது. இத்தகைய சூழலில் மகாராஷ்டிராவின் திருத்தொண்டர்கள் மக்களுக்கு உணர்ச்சியூட்ட முயற்சிகள் மேற்கொண்டனர்.

மகாராஷ்டிராவில் திருத்தொண்டர் ஞானேஷ்வர், திருத்தொண்டர் நாம்தேவ் ஆகியோரால் தொடங்கப்பட்ட திருத்தொண்டர் மரபு, சமூகத்தின் வெவ்வேறு நிலைகளிலிருந்து வந்த திருத் தொண்டர்களால் முன்நடத்திச் செல்லப்பட்டன. எடுத்துக்காட்டாக, திருத்தொண்டர்கள் சொக்கமேளா, கோரோபா, சேனா, சாவதா, நரஹரி, சேக் முகமது முதலியோரும் பெண் திருத்தொண்டர்களான முக்தாபாய், ஜனாபாய், கான்கோபாத்ரா, பஹினாபாய் சியூர்கர் மற்றும் திருத்தொண்டர் சாக்கோபாயின் மனைவி சோய்ராபாய் அவரது சகோதரி நிர்மலாபாய் போன்றோர்களும் அவற்றுள் அடங்குவர். திருத்தொண்டர் இயக்கத்தின் மைய இடமாக பந்தர்பூர் இருந்தது.

இவர்களின் வழிபாட்டுத் தெய்வம் விட்டல் ஆகும். சந்திரபாகா ஆற்றின் கரையில் உள்ள பந்தர்பூரில் திருத்தொண்டர்களும் சமய யாத்திரை (வார்கரி) மேற்கொண்டோரும் தங்களின் பக்திப் பெருக்கில் திளைத்தனர். எடுத்துக்காட்டாக, கீர்த்தனைகள், பஜனைகள் மற்றும் சமபந்தி மூலம் மக்களிடையே சமத்துவம் பரப்பப்பட்டது.


திருத்தொண்டர் நாம்தேவ்

**திருத்தொண்டர் நாம்தேவ்:** இவர் வார்கரி இயக்கத்தின் மிகச்சிறந்த திருத்தொண்டர் ஆவார். இவர் ஒரு திறமையான அமைப்பாளர். மிகச்சிறந்த கீர்த்தனைகளையும் இவர் இயற்றியுள்ளார். எல்லா சமயத்தைச் சார்ந்த ஆண், பெண் ஆகியோரிடையே கீர்த்தனைகள் மூலம் சமத்துவ உணர்வைத் தட்டியெழுப்பினார். அவருடைய உறுதிமொழியாவது, **'नाचू कीर्तनाचे रंगी । ज्ञानदीप लावू जगी ।।'** திருத்தொண்டர் நாம்தேவின் 'அபங்கா' தொகுப்புகள் புகழ்பெற்றவையாகும். இவருடைய போதனையால் பல திருத்தொண்டர்கள் மற்றும் சாதாரண மக்களும் ஈர்க்கப்பட்டனர். இவர் பஞ்சாப்பிற்கு சென்று தனது கருத்துகளைப் பரப்பினார். இவருடைய தொகுப்புகள் சீக்கியர்களின் புனித நூலாகிய 'குரு கிரந்த சாகிப்'பில் இடம் பெற்றுள்ளது. பாகவத தர்மத்தின் செய்திகள் எல்லா ஊர்களிலும் சென்றடையும் பணியை இவர் மேற்கொண்டார். திருத்தொண்டர் சொக்கமேளாவிற்கு பந்தர்பூரில் ஒரு நினைவிடத்தைக் கட்டினார். இவருடைய பணி மறக்க இயலாதது.

**திருத்தொண்டர் ஞானேஷ்வர்:** இவர் வார்கரி இயக்கத்தின் மிகச்சிறந்த திருத்தொண்டர் ஆவார். சமஸ்கிருதத்தில் உள்ள பகவத்கீதையின் பொருளை விளக்கும் 'பாவார்த்த தீபிகா' அல்லது 'ஞானேஷ்வரி' என்னும் நூலையும் 'அம்ருதானுபவ' என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். இவர் தனது செயல்கள் மற்றும் தொகுப்புகள் மூலமாக பக்தி இயக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பாமர மக்களும் பின்பற்றும்படியான வழிமுறைகளையும், நெறிமுறைகளையும் காண்பித்தார். வார்கரி இயக்கத்திற்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்தார். அவருடைய வாழ்க்கை மிகவும் துயரம் மிகுந்ததாக இருந்தாலும் அவர் எந்த சூழ்நிலையிலும் மன அமைதியை இழந்ததோ அல்லது


திருத்தொண்டர் ஞானேஷ்வர்

மனக்கசப்பை வெளிப்படுத்தியதோ இல்லை. ஞானேஷ்வரியிலுள்ள அவரது பசாயதான் மனதிற்கு இதமளிக்கிறது. அவருடைய சகோதரர்கள் திருத்தொண்டர் நிவிருத்திநாத், திருத்தொண்டர் சோபன்தேவ் மற்றும் சகோதரி முக்தாபாய் ஆகியோரது கவிதைகளும் நன்கு பெயர் பெற்றவை.

**திருத்தொண்டர் ஏக்நாத்:** இவர் மகாராஷ்டிராவில் பக்தி இயக்கத்தை ஏற்படுத்திய பெரும் திருத்தொண்டர் ஆவார். திருத்தொண்டர் ஏக்நாத் அவர்களின் படைப்புகள் ஏராளமானவை. அவை பலவகைப்பட்டவை ஆகும். அவற்றுள் அபங்கா, கவுலானா, பாரூட் ஆகிய இலக்கிய வகைகள் அடங்கும். இவர் ஓர் எளிய முறையில் விளக்கமாக பாகவத தர்மத்தை எடுத்துரைத்தார். பாவார்த்த இராமாயணம் என்னும் நூலில் இராமனின் வாழ்க்கையையும் அருஞ்செயல்களையும் கூறுகையில் மக்களின் வாழ்க்கையையும் படமாகச் சித்தரித்திருக்கிறார். இவருடைய அபங்கங்கள் கனிந்த பக்தியைக் காட்டுகின்றன. இவருடைய பாரூட்களும், கவுலானாக்களும் நாட்டுப்புறக் கூத்து மரபுக்கு ஏற்றம் அளித்தன. 'பரமார்த்தா' என்னும் மேலான மெய்ப்பொருளை அடைவதற்கு உலகப் பொருள்களைத் துறக்க வேண்டிய தேவையில்லை என்பதை இவர் தாமே நடத்திய கூத்தின் மூலம் விரித்துரைத்தார். உண்மையிலேயே இவர் மக்களின் ஆசிரியராக இருந்தார். நமது மராத்திய மொழி சமஸ்கிருதத்திற்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததில்லை எனவே, **'संस्कृत वाणी देवे केली । तरी प्राकृत काय चोरापासुनि झाली ?'**- என்று சமஸ்கிருத அறிஞர்களிடம் ஆணித்தரமாக வினவினார். பிற சமயத்தை விமர்சனம் செய்பவர்களை மிகவும் வெறுத்தார்.


திருத்தொண்டர் ஏக்நாத்

**திருத்தொண்டர் துக்காராம்:** இவர் புனேக்கு அருகிலுள்ள தெகு என்ற ஊரைச் சார்ந்தவர். திருத்தொண்டர் துக்காராமின் அபங்கா என்னும் பாக்கள் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டுவதோடு தெளிந்த நடையில் கவிதையின் உச்சத்தை எட்டியுள்ளன. துக்காராமின் 'அபங்கவாணி' என்பது மராத்தி மொழியின் ஒரு


திருத்தொண்டர் துக்காராம்

விலைமதிப்பற்ற கருவூலமாகும். ‘கவலைக்கும் அவலநிலைக்கும் ஆளானவர்கள் மீது அன்பு செலுத்துவதன் மூலம் கடவுளைக் காண்க’ என்று அவர் கீழ்க்கண்ட வரிகள் மூலம் நம்மிடம் கூறுகிறார். **‘जे का रंजले गांजले। त्यांसी म्हणे जो आपुले । तोचि साधु ओळखावा। देव तेथेचि जाणावा ॥’** இதனடிப்படையில் தன்னிடமிருந்த கடன் பத்திரங்கள் எல்லாம் இந்திரயானி ஆற்றில் எறிந்துவிட்டு பல ஏழைக் குடும்பங்களை கடன் தொல்லையிலிருந்து விடுதலை செய்தார். மூடப் பழக்கவழக்கங்களையும் ஏமாற்றுபவர்களையும் கடுமையாகச் சாடினார். பக்தி, நேர்மையுடன் இணைந்து செயலாற்ற வலியுறுத்தினார். அவருடைய போதனைகளை, **‘जोडोनिया धन उत्तम व्यवहारे । उदास विचारे वेच करी ॥’** இவ்வாறு விவரிக்கலாம். சில கர்வம் பிடித்த மனிதர்கள் இவருடைய சமூக விழிப்புணர்வை எதிர்த்ததோடு இவருடைய அபங்கங்களையும் இந்திரயானி ஆற்றில் வீசினர். திருத்தொண்டர் துக்காராம் அவற்றை தைரியத்தோடு எதிர்கொண்டார்.

இவருடைய சீடர்கள் வெவ்வேறு சாதி, சமயத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். நௌஜி மாளி, கௌனர்சேத் வாணி, சந்தாஜி ஜக்நாதே, சிவ்பா காசர், பாஹிணாபாய் சியூர்கர் மற்றும் மகாதஜிபன் குல்கர்ணி ஆகியோர் இவருடைய சீடர்கள் சிலரின் பெயர்களாகும். கங்காராம்பன் மாவல் மற்றும் சந்தாஜி ஜக்நாதே ஆகிய இருவரும் திருத்தொண்டர் துக்காராமுடைய அபங்கங்களை எழுதி முடித்தது ஒரு பெரும் செயலாகும்.

**திருத்தொண்டர்களின் பணி:**

திருத்தொண்டர்கள் மக்களிடையே சமத்துவத்தைப் போதித்தனர். மக்களிடையே மனிதநேயத்தைக் கற்பித்தனர். மக்கள் ஒற்றுமையுடனும் அன்புடனும் நல்லிணக்கத்தோடும் வாழவேண்டும் என்று போதித்தனர். இவர்களுடைய பணிகள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அந்நிய படையெடுப்புகள், பஞ்சம் போன்ற சூழ்நிலைகள், இயற்கைப் பேரிடர்களின்போது அவற்றை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது பற்றி இவர்கள் போதித்தனர். இவர்களுடைய போதனைகள் மக்களுக்கு பெரும் ஆதரவாக இருந்தன. இவர்களுடைய பணிகள் மராத்திய மக்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தின.

சமூகத்தில் சமயங்கள் மற்றும் நெறிமுறைகளில் ஒரு சீரழிந்த நிலை காணப்பட்டது. அவ்வாறான சூழ்நிலையில் திருத்தொண்டர்கள் சமூகத்தைப் பாதுகாக்க முன்வந்தனர். அவர்கள் சமயத்தின் உண்மையான பொருளைப் போதித்தனர். மக்களோடு வாழ்ந்து, அவர்களுடைய இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்து பக்தி நெறியைக் காட்டினர். சில கர்வம் பிடித்தவர்களும், சமயப்பற்று மிக்கவர்களும் இவர்களை எதிர்த்தனர். ஆனால் திருத்தொண்டர்கள் இவ்வெதிர்ப்பைத் தாங்குவதை தமது கடமையாகக் கொண்டனர். உண்மையான திருத்தொண்டர்களின் அடையாளம் என்னவென்பதை கீழ்க்காணும் சொற்கள் வாயிலாக விளக்கினர். **‘तुका म्हणे तोचि संत । सोशी जगाचे आघात ॥’**

அறிஞர்களின் கடின மொழியிலிருந்த சமய இலக்கியங்களை திருத்தொண்டர்கள் பாமர மக்களும் புரிந்து கொள்வதற்கு வழி செய்தனர். அன்றாட எளிய மொழியில் அவர்கள் இறைவனை வணங்கினர். கடவுளின் முன் அனைவரும் சமம் என்பதை எடுத்துரைத்தனர். சாதி, இனம் ஆகியவற்றை விட்டொழித்து அனைவரும் ‘இறைவனின் குழந்தைகளே’ என எண்ணுதல் வேண்டும் என்ற கருத்தை மக்களிடையே உரைத்தனர். திருத்தொண்டர்களின் சிறப்பு யாதெனில் கடமையிலிருந்து தவறாமை என்பதேயாகும். திருத்தொண்டர்கள் தங்கள் கடமையில் கடவுளைக் கண்டனர். **‘कांदा मुळा भाजी । अवघी विठाई माझी ॥’** எனத் திருத்தொடண்டர் சாவதா மகராஜ் கூறினார். இறைவழிபாடு, போதனை, பாடல்கள் எழுதும் வேளையிலும் திருத்தொண்டர்கள் தங்கள் கடமையைச் செய்தனர். சமூகத்தின் நீதிநெறியை முன்னேற்றமடையச் செய்தனர்.



**உரையாடுவோமா?**

‘பந்தர்பூர் வாரி’ பற்றிய தகவல்களைச் சேகரித்து கீழ்க்கண்ட பொருள் பற்றி உரையாடுக.

- வார்கரிகள் எம்மாதத்தில் ‘வாரி’ செய்வர்?
- வாரி எவ்வாறு திட்டமிடப்படுகிறது?

**இராம்தாஸ் சுவாமி:** மராத்வாடாவில் ஜாம்ப் பகுதியில் தோன்றியவர் இராம்தாஸ் சுவாமி. திருத்தொண்டர் இராம்தாஸ் சுவாமி உடல் வலிமையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு விளக்கினார். மக்களிடம் ஒற்றுமையை வலியுறுத்தினார். **‘मराठा तितुका मेळवावा । महाराष्ट्र धर्म**

वाढवावा ।' என்ற இராம்தாஸ் சுவாமியின் செய்தி மிகவும் புகழ்பெற்றது ஆகும். இவருடைய நூல்களாகிய தஸ்போத், கருனாஷ்டகா, மனாசே ஷ்லோக் மூலமாக மக்களிடையே அனுபவக் கல்வியை வழங்கினார். இவர் மக்களின் இயக்கம் மற்றும் மக்களமைப்பின் முக்கியத்துவங்களை வலியுறுத்தினார். 'சமர்த் சம்பிரதயா'வை தோற்றுவித்தார். சபால் சம்பிரதயாவின் மையமாகும். இவர் இராமன் மற்றும் அனுமானின் வழிபாட்டைப் பரப்பினார். இவருடைய கொள்கைகளைப் பரப்புவதற்காக பல இடங்களுக்கும் இவர் பயணம் செய்தார்.



இராம்தாஸ் சுவாமி

**அந்நிய ஆட்சியின்போது நாட்டு விடுதலைக்கான உணர்வு:** மாமன்னர் சிவாஜிக்கு முன் மகாராஷ்டிராவில் இருந்த அரசியல், சமூக, பண்பாடு மற்றும் சூழ்நிலையில் இருந்த நிலை இதுவே ஆகும். அந்நேரம் மகாராஷ்டிரா, அடில்ஷா மற்றும் வேறு சில ஆட்சியாளர்களின் கீழ் இருந்தது. இது சுதந்திரம் அற்றதாக இருந்தது. இச்சூழ்நிலையில் சில சிந்தனையாளர்களும், அறிஞர்களும் சுதந்திரக் கனவைக் கொண்டிருந்தனர். அவர்களிடையே 'ஷஹாஜி மகாராஜ்' அவர்களுடைய சுயராஜ்யப்போக்கு முதன்மையாக இருந்தது.



## பயிற்சி

### 1. அட்டவணையை நிரப்புக.

| | கிராமம்/ மௌஜா | கஸ்பா | பர்கானா |
|---|---|---|---|
| பொருள் | ------ | ----- | ------ |
| அதிகாரிகள் | ------ | ----- | ------ |
| எடுத்துக்-காட்டு | ------ | ----- | ------ |

### 2. பொருள் எழுதுக.

(1) புத்ருக் -
(2) பலுதா -
(3) வதன் -

### 3. கண்டுபிடித்து எழுதுக.

(1) கொங்கண கடற்கரையை ஒட்டி குடியேறிய ஆப்பிரிக்க மக்கள் -
(2) 'அம்ருத்தனுபவ்' நூலின் ஆசிரியர் -
(3) திருத்தொண்டர் துக்காராமின் ஊர் -
(4) 'பாரூட்'களை இயற்றியவர் -
(5) உடல் வலிமையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவர் -
(6) பெண் திருத்தொண்டர்கள் -

### 4. கீழ்க்கண்ட திருத்தொண்டர்கள் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

(1) திருத்தொண்டர் நாம்தேவ்
(2) திருத்தொண்டர் ஞானேஷ்வர்
(3) திருத்தொண்டர் ஏக்நாத்
(4) திருத்தொண்டர் துக்காராம்.

5. மக்களுக்கு பஞ்சம் ஒரு பேரிடராக இருந்ததேன்?

### செயல்கள்

(1) வார்கரி பாத யாத்திரைக்கு நீ எவ்வாறு உதவுவாய் என்று திட்டமிடுக.
(2) திருத்தொண்டர்களைப்போல வேடமணிந்து அவர்களின் இசைப் பாடல்களை வழங்குக.



# 5. சுயராஜ்யத்தின் அடித்தளம்

17-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் ஒரு சகாப்தத்தை உருவாக்கும் வீரராக மாமன்னர் சிவாஜி மகாராஷ்டிராவில் தோன்றினார். அவர், அப்போது ஆட்சி செய்துவந்த அந்நிய ஆட்சியை முறியடித்து சுயராஜ்யத்தை ஏற்படுத்தினார். சிவாஜி மாமன்னர் சக ஆண்டு 1551-இல் பால்குண மாதத்தின் தேய்பிறை மூன்றாம் நாள், அதாவது கி.பி 1630 பிப்ரவரி 19 ஆம் நாள் புனே மாவட்டத்தில் ஜுன்னாருக்கு அருகிலுள்ள சிவனேரிக்கோட்டையில் பிறந்தார். இப்பாடத்தில் அவர் சுயராஜ்யத்தை எவ்வாறு தோற்றுவித்தார் என்பது பற்றி படிப்போம்.

**ஷஹாஜிராஜே:**



**ஷஹாஜிராஜே**

சிவாஜியின் தந்தை ஷஹாஜிராஜே தெற்கில் ஒரு புகழ்பெற்ற படைத்தலைவராகத் திகழ்ந்தார். மொகலாயர்கள் நிஜாம்ஷாவை வெல்ல போர் நடவடிக்கையில் இறங்கினர். இப்போர் நடவடிக்கையில் மொகலாயருடன் பிஜப்பூர் அடில்ஷாவும் இணைந்து கொண்டார். மொகலாயர்களை தெற்கில் நுழையவிடக்கூடாது என்பதே ஷஹாஜிராஜேயின் எண்ணமாக இருந்தது. எனவே, மொகலாயர்களை முக்கிய எதிரியாகக் கொண்டு நிஜாம்ஷாவைப் பாதுகாப்பதற்காக முயற்சி செய்தார். ஆனால், மொகலாயர்கள் மற்றும் அடில்ஷாவுடைய ஒருமித்த தாக்குதலுக்கு இவரால் ஈடுகொடுக்க முடியவில்லை. கி.பி. 1636-ஆம் ஆண்டு நிஜாம்ஷாவின் அரசு தோற்கடிக்கப்பட்டு முடிவுக்கு வந்தது.

நிஜாம்ஷாவின் தோல்விக்குப்பின் ஷஹாஜிராஜே பிஜப்பூர் அடில்ஷாவின் படைத்தளபதியானார். பீமா மற்றும் நீரா ஆறுகளுக்கிடையிலுள்ள புனே, சுபே, இந்தாப்பூர் மற்றும் சாக்கண் ஆகிய பர்கானாக்களை உள்ளடக்கிய பகுதி ஒரு ஜாகீராக ஷஹாஜிராஜேக்கு வழங்கப்பட்டிருந்தது. அடில்ஷாவினாலும் இது தொடர்ந்ததோடு கர்நாடகாவிலுள்ள பெங்களூருவும் அதை அடுத்துள்ள சில பகுதிகளும் ஜாகீராக ஷஹாஜிராஜேக்கு மேலும் வழங்கப்பட்டன.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஜஹாகீர் - ஜஹாகீர் என்பது ஒரு பகுதியின் வருவாயை அனுபவிக்கும் உரிமையாகும். ஆட்சியாளர்களின் படைத் தளபதியாகப் பணிபுரிபவர்கள் சம்பளத்திற்குப் பதிலாக அப்பகுதியின் வரிவசூலிக்கும் உரிமையைக் கொண்டிருந்தனர். இதுவே ‘ஜஹாகீர்’ என்பதாகும்.

ஷஹாஜிராஜே வீரமும், தைரியமுமிக்க, அறிவுக் கூர்மையான அரசியல் அறிஞர் ஆவார். மிகச்சிறந்த வில்வித்தையாளர். வாள், ஈட்டி, பட்டை ஆகியவற்றை சுழற்றுவதிலும் வல்லவர். தனது மக்களை அவர் மிகவும் நேசித்தார். மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளை வென்றார். தென்னிந்தியாவில் ஒரு மாபெரும் வீரராகத் திகழ்ந்தார். சிவாஜியும் ஜீஜாமாதாவும் பெங்களூருவில் இருந்தபோது சிவாஜி, மாமன்னர் ஆவதற்குத் தேவையான கல்வியை வழங்க வேண்டிய ஏற்பாடுகளை செய்தார். அந்நிய ஆட்சியை விரட்டியடித்து, தானே சுயராஜ்யம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஆர்வங் கொண்டார். எனவே, இவர் சுயராஜ்யத் தீர்க்கதரிசி என்றழைக்கப்படுகின்றார். சிவாஜி மற்றும் ஜீஜாமாதாவை மிகுந்த நம்பிக்கையும், கடமையுணர்வும் மிக்கவர்களுடன் பெங்களூருவிலிருந்து புனேவுக்கு அனுப்பி வைத்தார்.

**வீரமாதா ஜீஜாபாய்:** புல்தானா மாவட்டத்திலுள்ள சிந்துகேத்ராஜாவின் மாபெரும் படைத்தலைவர் லக்குஜிராஜே ஜாதவின் மகளே ஜீஜாபாய் ஆவார். இவர் சிறுவயதிலேயே சிறந்த கல்வியுடன் இராணுவப் பயிற்சியும் பெற்றிருந்தார். மாமன்னர் ஷஹாஜியின் சுயராஜ்யக் கனவை நிறைவேற்றுவதற்கான ஊக்கத்தையும் உதவியையும் அவருக்கு அளித்தார். அவர் ஒரு தகுதிவாய்ந்த அரசியல் தொலைநோக்குப் பார்வை மிக்கவர். சுயராஜ்யம் அமைக்கும் பணியில் சிவாஜிக்கு அவர் தொடர்ந்து வழிகாட்டியாக இருந்தார். மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பெரும் வழிமுறைகளை அவர் மேற்கொண்டார். சிவாஜிக்கு மிகச்சிறந்த கல்வியை வழங்குவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். உண்மை,



வீரமாதா ஜீஜாபாய்

நேர்மை, அடக்கம், துணிவு, அஞ்சாமை, கண்காணிப்பு ஆகிய பண்புகளை அவரிடம் ஏற்படுத்தினார். ஆயுதங்களை பயன்படுத்தும் முறை மற்றும் சுயராஜ்யத்தை வெல்லும் ஆர்வத்தையும் சிவாஜியிடம் வீரமாதா ஜீஜாபாய் பெருமுயற்சி மேற்கொண்டார் ஊக்குவித்தார்.

**சிவாஜியின் கூட்டாளிகள்:** சுயராஜ்யம் நிறுவும் பணியை மாமன்னர் சிவாஜி மாவல் பகுதியில் தொடங்கினார். மாவல் நிலப்பகுதி முழுமையும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் கொண்ட எளிதில் அடையமுடியாத ஒரு பகுதியாகும். மாவலின் இத்தகைய புவியியல் கூறுகளை சுயராஜ்யம் நிறுவும் நோக்கத்திற்காக மிகத் திறமையுடன் மாமன்னர் பயன்படுத்திக் கொண்டார். இவர் மக்களின் மனங்களில் நம்பிக்கை உணர்வையும் நேயத்தையும் உருவாக்கினார். சுயராஜ்யத்தை நிறுவும் இவருடைய பணியில் கூட்டாளிகள் பலரும் இவருடன் சேர்ந்து கொண்டனர். யேசாஜி கங்க், பாஜி பாசல்கர், பாபுஜி முத்கல், நரேகர் தேஷ்பாண்டேயின் சகோதரர்கள், காவ்ஜி கோண்டல்கர், ஜீவா மகாலா, தானாஜி மாலுசரே, கனோஜி ஜேதே, பாஜி பிரபு தேஷ்பாண்டே மற்றும் தாதாஜி நரஸ்பிரபு தேஷ்பாண்டே ஆகியோர் அவர்களுள் அடங்குவர். இக்கூட்டாளிகளின் வலிமையைத் துணையாகக் கொண்டு மாமன்னர் சிவாஜி சுயராஜ்யம் அமைக்கும் செயலை மேற்கொண்டார்.



**நினைவில் கொள்வோம்**

பாரா மாவல்: (1) பவண் மாவல் (2) ஹிர்டஸ் மாவல் (3) குஞ்சண் மாவல் (4) பௌட் கோரே (5) முத்தே கோரே (6) முஸே கோரே (7) கானந்த் கோரே (8) வேல்வன்ட் கோரே (9) ரோஹித் கோரே (10) அந்தர் மாவல் (11) நாணே மாவல் (12) கோர்பாரஸே மாவல்

மாமன்னர் சிவாஜியின் புனே ஜாகீரில் சயாத்ரி பகுதியிலுள்ள மாவல் பள்ளத்தாக்கு 'பாரா மாவல்' என்றழைக்கப்படுகிறது.



**செய்து பார்க்க.**

மாமன்னர் சிவாஜியின் கூட்டாளிகளான ஜீவா மகாலா, தானாஜி மாலுசரே மற்றும் பாஜிபிரபு தேஷ்பாண்டே இவர்களைப் பற்றிய ஏராளமான தகவல்களை சேகரிக்க.



அரச முத்திரை

**அரச முத்திரை (இராஜமுத்திரை):** சுயராஜ்யம் நிறுவுவதில் மாமன்சர் சிவாஜியின் நோக்கமானது அக்காலத்திய அவருடைய அரச முத்திரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்முத்திரையில் பின்வரும் சமஸ்கிருத வரிகள் பொறிக்கப்பட்டிருந்தன.

*प्रतिपच्चंद्रलेखेव वर्धिष्णुर्विश्ववंदिता ।।*

*शाहसूनोः शिवस्यैषा मुद्रा भद्राय राजते ।।*

**பொருள்:** "வளர்பிறைபோல் எப்போதும் வளரும் ஷஹாஜியின் மைந்தன் சிவாஜியின் அரசு எப்பொழுதும் மக்கள் நலனையே நாடும்" - இவ்வாறு அரச முத்திரையின் மூலமாக மாமன்னர் சிவாஜி மக்களுக்கு உறுதி அளித்திருந்தார்.

இம்முத்திரையின் மேல் பொறிக்கப்பட்டுள்ள சொற்களின் பொருள் பலவகையிலும் மிகச்சிறப்பு வாய்ந்தவை. மாமன்னர் சிவாஜி தன் தந்தைக்கு காட்டிய நன்றியறிதல், 'சுயராஜ்யம்' தொடர்ந்து விரிவடையும் என்ற அவரது நம்பிக்கை, முத்திரையின் மேல் அவர் கொண்டிருந்த மதிப்பு

மக்கள் நலனில் அவர் கொண்டிருந்த அக்கறை மற்றும் அவரது நாட்டை சுதந்திரமாகவும் உறுதியுடனும் ஆளுதல் ஆகியன தெரிவிக்கப்பட்டிருந்தன. முத்திரையின்மேல் பொறிக்கப்பட்டிருந்த சிறு குறிப்பு சுயராஜ்யத்தின் முழுப் பொருளையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

**கற்போம்.**

- நம் நாட்டின் அலுவலக முத்திரையை உற்றுநோக்குக.
- அலுவலக முத்திரையில் நீ அறிந்த சிறப்பம்சங்கள் யாவை?
- அலுவலக முத்திரை எந்த இடங்களில் எல்லாம் பயன்படுத்தப்படுகிறது?

**சுயராஜ்யம் அமைக்கும் பணி:** சிவாஜி மன்னரின் ஜாகீருக்குள் அடங்கியிருந்த கோட்டைகள் அவருடைய கட்டுப்பாட்டில் இல்லை. அவை அடில்ஷாவின் கட்டுப்பாட்டில் இருந்தன. அக்காலத்தில் கோட்டைகள் தனிச்சிறப்பு உடையவையாக விளங்கின. கோட்டையானது உறுதியான பிடிப்புக்குள் இருந்தால் மட்டுமே அதைச் சுற்றியுள்ள பகுதியையும் கட்டுப்படுத்த முடியும். 'கோட்டைகள் யாரிடமோ நிலத்தின் ஆட்சியும் அவரிடமே.' ஆகவே மாமன்னர் சிவாஜி தம் சொந்த ஜாகீரில் உள்ள கோட்டைகளைக் கைப்பற்றத் தீர்மானித்தார். முரம்பதேவ், தோரணா, கொண்டானா மற்றும் புரந்தர் என்னும் கோட்டைகளை இவர் கைப்பற்றி சுயராஜ்யத்துக்கு அடித்தளம் இட்டார். இவர் முரம்பதேவ் கோட்டையை சீரமைத்து அதற்கு 'இராஜ்கட்' என்று மறுபெயர் சூட்டினார். தொடக்கத்தில் சுயராஜ்யத்தின் முதல் தலைநகரமாக இராஜ்கட் இருந்தது.



இராஜ்கட் கோட்டை - பாலிவாயில்

ஜாவலியின் மோரேக்கள், முதோலியின் கோர்படேக்கள், சாவந்த் வாடியின் சாவந்துகள் போன்ற பிற படைத்தலைவர்களும் அடில்ஷாவிடம் இருந்தனர். இவர்கள் சுயராஜ்யம் அமைக்கும் செயலை எதிர்த்தனர். சுயராஜ்யம் அமைக்கும் செயலுக்காக, இவர்களையும், இதே கருத்துடைய பிற படைத்தலைவர்களையும் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவது தேவையாயிற்று.

**ஜாவலியைக் கைப்பற்றுதல்:** சத்தாரா மாவட்டத்திலுள்ள ஜாவலியின் சந்திரராவ் மோரே என்பவர் அடில்ஷா அரசின் வலிமைமிக்க படைத்தலைவர் ஆவார். சுயராஜ்யம் அமைப்பதை இவர் எதிர்த்தார். கி.பி. 1656 இல் மாமன்னர் சிவாஜி ஜாவலியைத் தாக்கி அப்பகுதியைக் கைப்பற்றினார். அங்கு தன் ஆட்சியை நிறுவினார். பின்னர் ராய்க்கட்டையும் கைப்பற்றினார். ஜாவலியின் அளப்பரிய செல்வம் மாமன்னர் சிவாஜியின் கைகளில் வீழ்ந்தது. ஜாவலியில் கிடைத்த வெற்றி கொங்கணத்தில் அவருடைய நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலாய் இருந்தது. ஜாவலியில் பிரதாப்கட் கோட்டையைக் கட்டினார். இவ்வாறு ஜாவலியின் வெற்றி அவருடைய வலிமையை அனைத்து வழிகளிலும் பெருக்கியது.

சிவாஜி மகாராஜா அதன்பின் கொங்கணக் கரையிலுள்ள கல்யாண், பீவண்டி ஆகியவற்றைக் கைப்பற்றினார். அவருடைய பார்வை மேற்குக் கரையோரம் இருந்த சித்திகள், போர்த்துக்கீசியர் மற்றும் ஆங்கிலேய அரசுகளின் மீது திரும்பியது. இவ்வரசுகளோடு போரிடுவதற்கு வலிமையான கடற்படை தேவை என்பதை சிவாஜி உணர்ந்தார். எனவே, கப்பல் படையைக் கட்டுவதில் தம் கவனத்தை செலுத்தினார்.

**அப்சல்கானின் தோல்வி:** மாமன்னர் சிவாஜி தமது ஜாகீரிலும் அதைச் சுற்றியுள்ள அடில்ஷாவின் ஆட்சிப் பகுதியிலும் உள்ள கோட்டைகளைக் கைப்பற்றத் தொடங்கினார். ஜாவலியில் மோரேக்களின் எதிர்ப்பை இவர் முறியடித்தார். சுயராஜ்யம் அமைக்கும் பணியானது கொங்கணக் கடலோரப் பகுதியில் மாபெரும் எழுச்சியை உருவாக்கியது. இவ்வனைத்தும் அடில்ஷா அரசுக்கு ஓர் அறைகூவலாய் அமைந்தது. அவ்வேளையில் அடில்ஷா அரசின் ஆட்சிப் பணிகளை 'படி சாகிபா' என்னும் பெண்மணி கவனித்துக் கொண்டிருந்தார். அவர் மாமன்னர் சிவாஜியை அடக்க அடில்ஷா அரசின் வலிமையும் செயலறிவும் மிக்க அப்சல்கான் என்னும் படைத்தலைவரை அனுப்பினார்.

அப்சல்கான் பிஜப்பூரிலிருந்து 'வாயி' என்னுமிடத்திற்கு வந்தார். அப்சல்கானுக்கு 'வாயி' நிலப்பகுதி பற்றி நன்கு தெரியும். வாயிக்கு அருகிலுள்ள பிரதாப்கட்டின் அடிவாரத்தில் 1659

ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாள் மாமன்னர் சிவாஜியும் அப்சல்கானும் சந்தித்தனர். அச்சந்திப்பின்போது அப்சல்கான் நயவஞ்சகமாக சிவாஜியை அழிக்க நினைத்தார். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு சிவாஜி, அப்சல்கானைக் கொன்றார். அடில்ஷாவின் படையை விரட்டியடித்தார்.

அப்சல்கானின் இறப்புக்குப் பின், இப்போரில் காயமுற்ற வீரர்களுக்கு சிவாஜி இழப்பீடு வழங்கினார். வீரப்போர் புரிந்த வீரர்களுக்கு அவர் ஊக்கத்தொகை வழங்கினார். அப்சல்கானின் படையிலிருந்து சிவாஜியின் கையில் விழுந்த வீரர்களும் அதிகாரிகளும் நன்முறையில் நடத்தப்பட்டனர்.

**சித்தி ஜவ்கரின் படையெடுப்பு:** மாமன்னர் சிவாஜி அடில்ஷாவின் திறன்மிக்க படைத்தலைவரான அப்சல்கானை அழித்தார். அதன்பின் அவர் அடில்ஷாவின் பன்ஹாலா, வசந்த்கட், கேள்ணா கோட்டைகளை வெற்றி கொண்டார். கேள்ணா கோட்டைக்கு மாமன்னர் சிவாஜி 'விசால்கட்' என்று மறுபெயர் சூட்டினார்.

மாமன்னர் சிவாஜி அடில்ஷாவுக்கு மாபெரும் அறைகூவலாக இருந்தார். எனவே, கர்னூல் பகுதியின் படைத்தலைவரான சித்தி ஜவ்கரை, அடில்ஷா கி.பி. 1660 இல் சிவாஜிக்கு எதிராகப் போரிடும்படி அனுப்பினார். அடில்ஷா, சித்தி ஜவ்கருக்கு 'சலாபத்கான்' என்னும் பட்டத்தை அளித்தார். இவருக்கு உதவியாக ருஸ்தம்-இ-ஜமான், பாஜி கோர்படே மற்றும் அப்சல்கானின் மகனாகிய ஃபசல்கான் ஆகியோரும் இருந்தனர். இச்சூழ்நிலையின்போது மாமன்னர் சிவாஜி பன்ஹாலா கோட்டைக்குள் இருந்தார். சித்தியின் படைவீரர்கள் சிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் பன்ஹாலா கோட்டையை முற்றுகை இட்டிருந்தனர். முற்றுகையிலிருந்து கோட்டையை விட்டு வெளியேறுவது சிவாஜிக்குக் கடினமாகிவிட்டது. நேத்தோஜி பால்கர் வெளியிலிருந்து சித்தியின் படைமீது போரிட்டு முற்றுகையை உடைக்க முயற்சி செய்தார். ஆனால் அவரிடம் மிகக் குறைந்த அளவு படைவீரர்களே இருந்ததால், அவரால் வெற்றிபெற முடியவில்லை. முற்றுகையைக் கைவிடும் எந்த அடையாளமும் சித்தியிடம் இல்லை. அதனால் மாமன்னர் சிவாஜி சித்தியோடு பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். இது பன்ஹாலா முற்றுகையில் சிறிது தொய்வு ஏற்பட வழிவகுத்தது.

இச்சூழலை சிவாஜி தனக்கு வாய்ப்பாக எடுத்துக் கொண்டார். இவ்வேளையில் சிவா காசித் என்ற ஓர் இளைஞன் முன்வந்தான். அவன் தோற்றத்தில் மாமன்னர் சிவாஜியைப் போலவே இருந்தான். மாமன்னர் சிவாஜியைப் போல் ஆடையணிந்து சிவா காசித் பல்லக்கில் ஏறி வந்தான். இப்பல்லக்கு 'ராஜதிண்டி' என்ற வாயில் வழியாக வெளியேறியது. இது ஒரு கடினமான சூழ்நிலை ஆகும். சிவாகாசித் சுயராஜ்யத்திற்காக இவ்வேளையில் தன்னைத்தானே தியாகம் செய்து கொண்டான். இதற்கிடையே மாமன்னர் சிவாஜி மற்றொரு வாயில் வழியாக தப்பிச் சென்றார். அவருடன் பாஜிபிரபு தேஷ்பாண்டே, பண்டல் தேஷ்முக் மற்றும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் உடனிருந்தனர்.

மாமன்னர் சிவாஜி பன்ஹால்கட் முற்றுகையிலிருந்து தப்பி விசால்கட் நோக்கி விரைந்தார். இச்செய்தி சித்தி ஜவ்கருக்கு தெரிய வந்தது. சித்தியின் படை மாமன்னர் சிவாஜியை பின் தொடர்ந்தது. மாமன்னர் சிவாஜி சித்தி ஜவ்கரின் படையை விசால்கட் அடிவாரத்திலேயே தடுத்து நிறுத்தும் பொறுப்பினை பாஜிபிரபு தேஷ்பாண்டேயிடம் ஒப்படைத்தார். பாஜிபிரபு கஜாப்பூர் அருகிலுள்ள கோட் கணவாயில் சித்தியின் படைகளைத் தடுத்து நிறுத்தினார். இவர் மிகவும் வீரத்துடன் போரிட்டார். இப்போரில் பாஜிபிரபு தேஷ்பாண்டே வீரமரணம் அடைந்தார். பாஜிபிரபுவின் படையானது, மாமன்னர் சிவாஜியை சித்தி-ஜவ்கரின் படை நெருங்காதவாறு பார்த்துக் கொண்டதால் மாமன்னர் சிவாஜி விசால்கட்டை மிக எளிதில் சென்றடைய முடிந்தது. விசால்கட்டுக்குச் செல்லும்போது வழியில் தன்னை எதிர்த்த அடில்ஷாவின் படைத்தலைவர்களான பால்வனின் தால்வியையும், சிருங்காப்பூரின் சுர்வேயையும் மாமன்னர் சிவாஜி ஒடுக்கினார். பின்னர் விசால்கட்டுக்கு மாமன்னர் சிவாஜி பாதுகாப்பாகச் சென்றடைந்தார்.

மாமன்னர் சிவாஜி பன்ஹாலா கோட்டையில் சிக்கியிருந்தபோது தில்லி அரியணையில் அமர்ந்திருந்த ஔரங்கசீப், முகலாயப் படைத்தலைவர் செயிஷ்டகானை தக்காணத்திற்கு அனுப்பி வைத்தார். அவர் புனே மாகாணத்தின் மீது படையெடுத்தார். அதேவேளையில் மாமன்னர் சிவாஜியுடனான அடில்ஷாவின் போர் நடந்து கொண்டிருந்தது. மொகலாயரும் சுயராஜ்யத்தின் மீது படையெடுத்தனர். ஒரே நேரத்தில் இரு பகைவர்களோடு போரிடுவது மதிநுட்பமான செயல் அல்ல என்பதை மாமன்னர் சிவாஜி உணர்ந்தார். ஆகையால் பாதுகாப்பாக விசால்கட் சென்றடைந்தபின் அவர் அடில்ஷாவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி மாமன்னர் சிவாஜி பன்ஹாலா கோட்டையை அடில்ஷாவுக்கு திரும்பக் கொடுக்க வேண்டியதாயிற்று. இதோடு சிவாஜி மகாராஜாவின் சுயராஜ்ய அடித்தளத்தின் ஒரு கட்டம் முடிவடைந்தது.

## பயிற்சி

1. **குழுவில் சேராததைக் கண்டுபிடி.**
   (1) புனே, சுபே, சாக்கண், பெங்களூரு.
   (2) பால்தானின் ஜாதவ்கள், ஜாவலியின் மோரேக்கள், முதோலியின் கோர்படேக்கள், சாவந்த்வாடியின் சாவந்துகள்.
   (3) தோர்ணா, முரம்ப்தேவ், சின்ஹாகட், சிந்துதுர்க்.
2. **உன்னுடைய வாக்கியத்தில் விவரித்து எழுதுக.**
   (1) மாமன்னர் சிவாஜிக்குத் தேவையான கல்வியை வழங்க வீரமாதா ஜீஜாபாய் பெருமுயற்சி மேற்கொண்டார்.
   (2) சுயராஜ்யம் நிறுவும் பணியை மாமன்னர் சிவாஜி மாவல் பகுதியில் தொடங்கினார்.
3. சிவாஜியின் கூட்டாளிகள் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் பற்றி எழுதுக.
4. **கண்டுபிடித்து எழுதுக.**
   (1) மாமன்னர் ஷஹாஜிராஜே ஏன் 'சுயராஜ்யத் தீர்க்கத்தரிசி' என்றழைக்கப்படுகிறார்?
   (2) மாமன்னர் சிவாஜி கப்பல்படையைக் கட்டுவதில் ஏன் தம் கவனத்தைச் செலுத்தினார்?
   (3) மாமன்னர் சிவாஜி அடில்ஷாவுடன் ஏன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்?
   (4) பன்ஹாலாக் கோட்டையிலிருந்து மாமன்னர் சிவாஜி எவ்வாறு தப்பினார்?

**செயல்கள்**

(1) நீ பார்த்த ஒரு கோட்டையைப் பற்றி விவரி. அதை வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகப் பேண ஆலோசனை கூறுக.
(2) வயலின் 7/12 என்பதன் பொருளை கண்டுபிடித்து, அதை பாடத்திலுள்ள சொற்களுடன் தொடர்பு படுத்துக.



பன்ஹாலாக் கோட்டை - மூன்று வாயில்கள்

# 6. மொகலாயருடனான போர்

மாமன்னர் சிவாஜி இதுவரையிலும் அடில்ஷாவோடு வெற்றியுடன் போராடி வந்தார். ஆனால் சுயராஜ்ஜியத்தை விரிவாக்கும் பொருட்டு மொகலாயருடனான மோதல், தவிர்க்க முடியாததாயிருந்தது. மொகலாயர்கள் சுயராஜ்ஜியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தனர். இதனையும் மாமன்னர் வெற்றிகொண்டார். மொகலாயரிடமிருந்து தனது கோட்டைகளையும் ஆட்சிப் பகுதிகளையும் அவர் மீட்டார். அவர் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டார். அவர் தெற்கில் தமது போர் நடவடிக்கையை மேற்கொண்டார். இவ்வனைத்து நிகழ்வுகளையும் இப்பாடத்தில் கற்போம்.

**செயிஷ்டகானின் படையெடுப்பு:** கி.பி. 1660 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், செயிஷ்டகான் அகமத்நகரை விட்டு புனே மாகாணத்திற்குள் நுழைந்தார். அவர் தனது படையின் சிறிய பிரிவுகளை அருகிலுள்ள இடங்களுக்கு அனுப்பியதன் மூலம் சுயராஜ்ஜிய பகுதிகளைச் சூறையாடினார். அவர் சாக்கணில் முகாமிட்டிருந்தார். சாக்கண் கோட்டையின் தலைவரான பிரங்கோஜி நர்சாலா செயிஷ்டகானின் படைகளைக் கடுமையாக எதிர்த்தார். இறுதியில் மொகலாயர் சாக்கண் கோட்டையைக் கைப்பற்றினார்.

மாமன்னர் சிவாஜி சிறுவயதில் வாழ்ந்துவந்த இடமான புனேயிலுள்ள லால்மஹாலில் செயிஷ்டகான் முகாம் அமைத்துத் தங்கியிருந்தார். புனேயைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அவர் தனது படைகளை அனுப்பினார். இப்படைகள் மக்களைக் கொள்ளையடித்தன. இரண்டு ஆண்டுகள் கடந்திருந்தபோதும் புனேயை விட்டு நீங்கும் எண்ணம் அவருக்கு இல்லை. இது மக்களின் ஒழுங்குணர்வில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது. இச்சூழ்நிலையில் மாமன்னர் சிவாஜி ஒரு துணிச்சலான திட்டத்தைத் தீட்டினார்.

மாமன்னர் சிவாஜி தனது தலைமையின்கீழ் திறமையான படைவீரர்களைக் கொண்டு ரகசியமாக லால்மஹாலைத் தாக்க எண்ணினார். எனவே கி.பி. 1663 ஏப்ரல் 5 ஆம் நாள் இரவில் மாமன்னர் சிவாஜி திறமையான படைகள் மூலம் லால்மஹாலைத் தாக்கினார். இத்தாக்குதலில் செயிஷ்டகான் தன் கைவிரல்களை இழந்தார். இதனால் ஏற்பட்ட பெரும் மானக்கேட்டால் அவர் வருந்தினார். புனேயே விட்டு ஔரங்கபாத்துக்கு தன் முகாமை மாற்றினார். இந்நிகழ்வால் இவர் ஔரங்கசீப்பின் வெறுப்புக்கு ஆளானார். ஔரங்கசீப் இவரை வங்காள மாகாணத்துக்கு இடமாற்றம் செய்தார். செயிஷ்டகானின் மீதான இவ்வெற்றித் தாக்குதல் மக்களிடையே ஒரு செயல் விளைவை ஏற்படுத்தியேதாடு மாமன்னரின் திறமையில் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையை மென்மேலும் வலுப்பெறச் செய்தது.



**உங்களால் கூற முடியுமா?**

சூரத் செல்ல விரும்பினால், நீ எவ்வழியாகச் செல்வாய் என்பதனை வரைபட உதவியுடன் காண்பிக்க.

- மாமன்னர் சிவாஜி சூரத்தை எவ்வாறு சென்றடைந்திருப்பார் என்பதனைச் சிந்திக்க.

**சூரத் போர் நடவடிக்கை:** மூன்று ஆண்டு காலமாக சுயராஜ்யப் பகுதிகளைச் செயிஷ்டகான் சூறையாடியிருந்தார். இவ்விழப்பை ஈடுகட்டுவது மிகத் தேவையாய் இருந்தது. இதற்காக மாமன்னர் சிவாஜி மொகலாயருக்கு ஒரு பாடம் கற்பிக்கும் நோக்கில் ஒரு திட்டத்தை வகுத்தார். மொகலாயரின் கட்டுப்பாட்டிலிருந்த சூரத் ஒரு பெரிய வணிக மையம் மற்றும் துறைமுகமாகும். ஆங்கிலேயர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர் ஆகியோர் தங்கள் தொழிற்சாலைகளை அங்கு வைத்திருந்தனர். இந்நகரம் பேரரசருக்கு அதிகப்படியான வருவாயை ஈட்டித்தந்தது இது செல்வச் செழிப்புள்ள நகரமாகும். எனவே, மாமன்னர் சூரத்தைத் தாக்கத் திட்டம் தீட்டினார். சூரத்தின் இனாயத்கான் என்ற சுபேதாரால் எவ்வித எதிர்ப்பையும் காட்ட முடியவில்லை. சூரத்திலிருந்து மிகப்பெரும் செல்வம் கிடைத்தது. அவரின் சூரத் போர் நடவடிக்கை முழு வெற்றியைத் தந்தது. இப்போர் நடவடிக்கை பேரரசர் ஔரங்கசீப்பின் தன்மானத்துக்கு அதிர்ச்சியூட்டும் பேரிடியாக அமைந்தது.

**ஜெய்சிங்கின் படையெடுப்பு:** மாமன்னர் சிவாஜியின் அதிகரித்துவரும் நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் ஔரங்கசீப் பட்டறிவும் துணிவும் மிக்க மொகலாயப் படைத்தலைவரான மிர்சாராஜா ஜெய்சிங்கை அனுப்பினார். ஜெய்சிங் புனேவுக்கு வந்தார். மாமன்னர் சிவாஜிக்கு எதிராக ஜெய்சிங் அனைத்து ஆற்றல்களையும் ஒருங்கு திரட்டத் தொடங்கினார். மாமன்னருக்கு

எதிரான ஒரு கடற்போர் நடவடிக்கையைத் தொடங்க வேண்டுமென்று கோவா மற்றும் வசாயின் போர்த்துக்கீசியருக்கும் வெங்குர்லாவின் டச்சுக்காரர்களுக்கும் சூரத்தின் ஆங்கிலேயருக்கும் சஞ்சிராவின் சித்தியருக்கும் ஜெய்சிங் அறிவித்தார்.

மாமன்னரிடம் உள்ள கோட்டைகளைக் கைப்பற்ற ஜெய்சிங் திட்டம் தீட்டினார். மொகலாயப் படைகள் சுயராஜ்யத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. அவை சுயராஜ்ஜிய பகுதிகளைச் சூறையாடின. மொகலாயர்களைத் தடுக்க மாமன்னர் பெரும் முயற்சி செய்தார். ஜெய்சிங்கும் திலோர்கானும் புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டனர். புரந்தர் கோட்டையை மொகலாயர் முற்றுகையிட்டபோது பெரும் துணிவோடு முரார்பாஜி தேஷ்பாண்டே போராடினார். அவர் வீரச்சாவைத் தழுவினார். மொகலாயருடனான இப்போரில் தானும் தனது குடிகளும் சந்தித்த பேரிழப்புகளைக் கருத்தில் கொண்ட மாமன்னர் சிவாஜி ஜெய்சிங்குடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்வதற்கான பேச்சைத் தொடங்கினார். அவர் ஜெய்சிங்கைத் தனியாக சந்தித்தார். கி.பி. 1665 ஜூன் திங்களில் ஜெய்சிங்குக்கும் மாமன்னருக்கும் இடையே ஓர் உடன்படிக்கை கையெழுத்தானது. இது 'புரந்தர்' உடன்படிக்கை என அழைக்கப்படுகிறது. இவ்வுடன்படிக்கையிலுள்ள கூற்றுப்படி, மாமன்னர் மொகலாயருக்கு இருபத்து மூன்று கோட்டைகளையும் ஆண்டுக்கு நான்கு இலட்சம் 'ஹோன்' வருவாய் ஈட்டும் கோட்டையைச்



**தகவல் சேகரி.**

மாமன்னர் சிவாஜி ஆக்ரா வீட்டுச் சிறையில் இருந்து தப்பியது எவ்வாறு என்ற விவரங்களைச் சேகரி.

சுற்றியுள்ள பகுதிகளையும் கொடுத்தார். அத்தோடு அடில்ஷாவை எதிர்த்து மொகலாயருக்கு உதவி செய்வதாகவும் அவர் உறுதியளித்தார். இவ்வுடன்படிக்கை ஔரங்கசீப்பால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**ஆக்ரா வருகையும், தப்பித்தலும்:** புரந்தர் உடன்படிக்கைக்குப் பின் அடில்ஷாவுக்கு எதிராக ஜெய்சிங் போர் நடவடிக்கையில் இறங்கினார். ஜெய்சிங்குக்கு மாமன்னர் சிவாஜி உதவி புரிந்தார். ஆயினும் ஜெய்சிங்கின் போர்நடவடிக்கை வெற்றிபெறவில்லை. தக்காண அரசியலிலிருந்து சிவாஜி மாமன்னரை குறிப்பிட்ட சில காலத்திற்காவது விலக்கி வைக்க வேண்டுமென்று ஜெய்சிங்கும் ஔரங்கசீப்பும் நினைத்தனர். இதன அடிப்படையில் ஆக்ராவுக்குச் சென்று பேரரசர் ஔரங்கசீப்பை சந்திக்குமாறு ஜெய்சிங் சிவாஜியைக் கேட்டுக் கொண்டார். மாமன்னர் சிவாஜியின் பாதுகாப்புக்கு இவர் பொறுப்புறுதி அளித்தார். சிவாஜி ஆக்ராவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவருடன் இளவரசர் சம்பாஜியும் அவருக்காக தங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்காத நம்பிக்கைக்குரிய சிலரும் சென்றிருந்தனர்.

மாமன்னர் சிவாஜி ஆக்ராவை அடைந்தார். ஔரங்கசீப் தம் அரசவையில் சிவாஜிக்குரிய மதிப்பைக் கொடுக்கவில்லை. மாமன்னர் தன் சீற்றத்தை வெளிப்படுத்தினார். பிறகு பேரரசர் அவரை வீட்டுச்சிறையில் வைத்தார். ஆக்ராவில் தங்கியிருந்தபோது வீட்டுக்காவலிலிருந்து தப்புவதற்கு மாமன்னர் ஒரு திட்டம் தீட்டினார். அதன்படி, வெகுதிறமையாக அவர் ஆக்ராவிலிருந்து தப்பி சிலநாட்களில் பாதுகாப்பாக மகாராஷ்டிரா வந்தடைந்தார். ஆக்ராவில் இருந்து திரும்பி வரும்போது சம்பாஜி ராஜேவை மதுராவில் விட்டுவிட்டு வந்தார். பின்னர் இளவரசர் சம்பாஜி ராய்கட்டிற்கு பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டார். மாமன்னர் சுயராஜ்ஜியத்தை விட்டுச் சென்றிருந்த வேளையில் ஆட்சிப் பொறுப்பை வீரமாதா ஜீஜாபாய் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் கவனித்துக் கொண்டனர்.

**மொகலாயருக்கு எதிரான தாக்குதல்:** மாமன்னர் ஆக்ராவிலிருந்து திரும்பியதும் உடனடியாக மொகலாயருடன் எந்தப் போரையும் நடத்த விரும்பவில்லை. எனினும் புரந்தர் உடன்படிக்கையின்படி மொகலாயருக்கு வழங்கப்பட்ட கோட்டைகளை மீண்டும் கைப்பற்றவே மாமன்னர் நினைத்தார். இதற்காக அவர் விரிந்த துணிவான திட்டத்தை வகுத்தார். கோட்டைகளைப் பிடிக்க ஒரு புறத்தில் உரிய படைக்கலன்களைக் கொண்ட ஒரு சிறப்புப் படையை அனுப்புவதும் மறுபுறம் தக்காணத்தில் மொகலாயரின் ஆட்சிப் பகுதிகளைத் தாக்குவதன் மூலம் மொகலாயர்களை நிலைகுலைய வைப்பதும் அவருடைய போர் நுண்திறமாய் இருந்தது. அதன்படி மொகலாயரின் ஆட்சிப்பகுதிகளான அகமதுநகரையும் ஜுன்னாரையும் மாமன்னர் தாக்கினார். பின்பு சின்ஹாகட், புரந்தர், லோககட், மாகுலி, கர்னாலா மற்றும் ரோஹிடா போன்ற பல கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாக மீண்டும் கைப்பற்றினார்.

பிறகு மாமன்னர் இரண்டாம் முறையாக சூரத்தை தாக்கினார். சூரத்திலிருந்து திரும்பும்போது நாசிக் மாவட்டத்திலுள்ள வாணி-திண்டோரி என்னுமிடத்தில் மொகலாயருடன்

இவர் போரிட்டார். இப்போரில் மொகலாயப் படைத்தலைவர் தாவூத்கானை மாமன்னர் தோற்கடித்தார். அதன் பிறகு சிவாஜியின் படைத்தலைவர் மோரோபந்த் பிங்களே நாசிக்குக்கு அருகிலுள்ள திரியம்பக்கட் கோட்டையைப் பிடித்தார்.

இவ்வாறு மொகலாயர்களுக்கு எதிராக மாமன்னர் சிவாஜி மேற்கொண்ட தாக்குதல்களில் வெற்றி கண்டார். தானாஜி மாலுசரே, மோரோபந்த் பிங்களே, பிரதாப்ராவ் குஜர் முதலிய படைத்தலைவர்கள் இத்தாக்குதல்களில் பெரும்பங்கு வகித்தனர். சம காலத்திய வரலாற்றுப் பதிவாளரான கிருஷ்ணாஜி ஆனந்த் சபாசத் இப்படையெடுப்பை ''அவர் நான்கு மாதங்களில் இருபத்தேழு கோட்டைகளுக்கும் அதிகமாக பிடித்தார்; தமக்கு மாபெரும் புகழை ஈட்டிக்கொண்டார்'' என்று விரித்துரைக்கின்றார்.

**முடிசூட்டுதல்:** முப்பது ஆண்டு காலம் நடைபெற்றுவந்த ஓய்வற்ற கடும் போராட்டத்தினால் மராத்திய சுயராஜ்யம் உருவாயிற்று. சுயராஜ்யத்தின் இறையாண்மைக்கும் தன்னுரிமைக்கும் பொது மக்களின் ஏற்பிசைவைப் பெறுவது இப்போது தேவையானது என்று மாமன்னர் சிவாஜி உணர்ந்தார். இதற்கு முறையான முடிசூட்டுதல் இன்றியமையாதது ஆகும். கி.பி. 1674 ஜூன் 6 ஆம் நாள் 'காகப்பட்' என்னும் கற்றறிந்த பண்டிதரால் ராய்கட்டில் வைத்து மாமன்னர் சிவாஜி முடிசூட்டிக் கொண்டார்.

சுயராஜ்யத்தின் அரியணையில் மாமன்னர் ஏறினார். இப்போது அவர் சுயராஜ்யத்தின் சத்திரபதி ஆனார். இறையாண்மையின் ஓர் அடையாளமாக (முடிசூட்டுவிழா சகாப்தம்) இராஜ்யாபிஷேக சகா' தொடங்கப்பட்டது. மாமன்னர் ஒரு புதிய ஊழியைத் தோற்றுவித்தவர் ஆவார். முடிசூட்டு விழா நிகழ்வின்போது 'ஸ்ரீராஜா சிவ சத்ரபதி' என பொறிக்கப்பட்ட 'ஹோான்' என்ற தங்க நாணயமும், 'சிவராய்' என்ற செம்பு நாணயமும் சிறப்பு நாணயங்களாக அச்சிட்டு வெளியிடப்பட்டன. அதன் பிறகு அரசின் அனைத்துக் கடிதத் தொடர்புகளும் (இராஜபத்ர) 'சத்திரிய குலாவந்தன்ஸா ஸ்ரீ ராஜா சிவசத்ரபதி' என்னும் தொடரைக் கொண்டிருந்தது. பாரசீகச் சொற்களுக்கு நேரான சமஸ்கிருதச் சொற்களைக் காட்டுகின்ற ஓர் அகராதி உருவாக்கப்பட்டது. இது 'இராஜ்ய-விவகார்கோஷ' எனப்பட்டது.



மாமன்னர் சத்ரபதி சிவாஜி



ராய்கட் கோட்டை

**நினைவு கூர்வோமா?**

புதிய நாள்காட்டியை ஏற்படுத்திய இந்திய மன்னன் யார்?

**நினைவில் கொள்க -**

இராஜ்யவிவகார்கோஷிலுள்ள சில இணையானச் சொற்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

उदा., किताब – पदवी, फर्मान – राजपत्र, जामीन – प्रतिभूती, हाली – सांप्रत, माजी – पूर्व, फिलहाल – तत्काळ, वाहवा – उत्तम, वकूब – प्रज्ञा, बेवकूफ – मूढ, दस्तपोशी – हस्तस्पर्श, मुलाखत – दर्शन, कदमपोशी – पादस्पर्श, झूट – मिथ्या, कौलनामा – अभय, फतेह – विजय, फिर्याद – अन्यायवार्ता, शिलेदार – स्वतूरगी.

மாமன்னர் சிவாஜியின் முடிசூட்டுவிழா இடைக்கால இந்திய வரலாற்றின் ஒரு புரட்சி மிகுந்த நிகழ்ச்சியாகும். இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை விளக்குகையில், 'மராட்டிய மன்னர் ஒருவர் இத்தகைய மாபெரும் சத்திரபதியாக உருவாவது எளிய செயல் அல்ல' என்று சபாசத் என்ற சமகாலத்திய வரலாற்றுப் பதிவாளர் எழுதியுள்ளார்.

அதன்பின் குறுகிய காலத்தில் மாமன்னர் சிவாஜியின் இரண்டாம் முடிசூட்டுவிழா நிஷ்சல்பூரி கோஸாவியின் வழிகாட்டுதலின் கீழ் தாந்த்ரிக் முறையில் 1674 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் நடைபெற்றது. இந்தியாவில் அச்சமயம் வேதிக் மற்றும் தாந்த்ரிக் என்ற இரண்டு சமய மரபுகள் வழக்கத்தில் இருந்தன. அவற்றிற்கு மதிப்பளிக்கும் பொருட்டு மாமன்னர் இரண்டு முறை முடிசூட்டிக் கொண்டார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

மாமன்னர் சிவாஜியின் முடிசூட்டுவிழா நடைபெறும்போது இளவரசர் சாம்பாஜிக்கு 17 வயது. அவர் 'புத்பூஷணம்' என்ற நூலில் முடிசூட்டு விழாவை விவரித்துள்ளார். அது இவருடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில் ஆனது ஆகும்.

மாமன்னர் சிவாஜியின் முடிசூட்டு விழாவின்போது வெகு தொலைவில் இருந்து பேரறிஞர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களுக்கு அளவிடாமலும் எண்ணாமலும் ஏராளமாக பொன்னும் துணிமணிகளும், யானைகளும், குதிரைகளும் வழங்கிக் கௌரவித்தார்.

இவ்வாறு, மாமன்னர் சிவாஜி தனது புகழை திக்கெட்டும் பரப்பினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

மாமன்னர் சிவாஜியின் முடிசூட்டு விழாவுக்காக மிகவும் விலையுயர்ந்த அழகிய அரியணை ஒன்று செய்யப்பட்டது. அரியணையின் எட்டுத் திசைகளிலும் இரத்தினங்கள் பதித்த தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வரியணை முப்பத்தி இரண்டு **'मण'** 'மண்' எடை கொண்ட தங்கத்தில் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டு அழகு படுத்தப்பட்டிருந்தது.

- **'मण'** மண் என்ற அலகு பற்றி கணித ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**தெற்கத்திய போர் நடவடிக்கை:** முடிசூட்டி 3 ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 1677 அக்டோபரில் சத்ரபதி சிவாஜி தெற்கத்திய போர் நடவடிக்கையை மேற்கொண்டார். இவர் கோல்கொண்டாவுக்குச் சென்றார். குதுப்ஷாவின் அழைப்பை ஏற்று அவரைச் சந்தித்தார். அவருடன் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டார். பிறகு மாமன்னர் கர்நாடகாவிலுள்ள பெங்களூரையும், ஹோஸ்-

கோட்டையையும் வென்றதோடு செஞ்சி, வேலூர் போன்ற சில கோட்டைகளையும் அடில்ஷா ஆட்சியின் சில பகுதிகளையும் கைப்பற்றினார். அவருடைய படை அங்குள்ள குடிமக்களுக்கு எந்தவொரு தொந்தரவும் தரவில்லை. கைப்பற்றிய இப்பகுதிகளை கவனித்துக் கொள்ள ரகுநாத் நாராயண் அனுமந்தே என்னும் தலைமை அதிகாரியைப் பணி அமர்த்தம் செய்தார்.

தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூரில் அப்போது மாமன்னர் சிவாஜியின் மாற்றாந்தாயின் மகனும் தம்பியுமான வியங்கோஜி ஆண்டுகொண்டிருந்தார். சுயராஜ்ய செயல்பாடுகளில் வியங்கோஜியின் பங்களிப்பைப் பெற மாமன்னர் சிவாஜி முயன்றார். வியங்கோஜிக்குப் பிறகு தஞ்சாவூரை ஆண்ட மன்னர்கள் கல்வியையும், கலையையும் ஊக்குவித்தனர். அங்குள்ள சரஸ்வதி மஹால் நூலகம் உலகப் புகழ் பெற்றது.

தெற்கத்தியப் படையெடுப்பு மூலம் மாமன்னர் சிவாஜி தமிழகத்திலுள்ள செஞ்சிக் கோட்டையை தனது சுயராஜ்யத்துடன் இணைத்தார். பிற்காலத்தில் இது ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டது. மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் சுயராஜ்யத்திற்கு அழிவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மகாராஷ்டிராவில் முகாமிட்டிருந்தபோது அப்போதைய மாமன்னர் இராஜாராம் பாதுகாப்பு கருதி மகாராஷ்டிராவை விட்டுச் செல்ல வேண்டியதிருந்தது. அவ்வேளையில், தெற்கிலுள்ள செஞ்சிக் கோட்டையில் தஞ்சமடைந்து அங்கிருந்து கொண்டே சுயராஜ்யத்தின் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்.

வெற்றிகரமான தெற்கத்தியப் படையெடுப்பிற்குப் பின் 1680 ஏப்ரல் 3-ஆம் நாள் மாமன்னர் சிவாஜி ராய்கட் கோட்டையில் காலமானார். 50-ஆம் அகவையிலேயே மாமன்னரின் இறப்பு சுயராஜ்யத்திற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியது. மாபெரும் ஆண்டுமானம் (சகாப்தம்) முடிவுக்கு வந்தது.



**மாமன்னர் சிவாஜியின் சமாதி - ராய்கட்**



## பயிற்சி

1. **கீழ்க்கண்ட நிகழ்வுகளை கால வரிசைப்படி எழுதுக.**
   (1) மாமன்னர் சிவாஜியின் தெற்கத்தியப் படையெடுப்பு.
   (2) லால் மஹால் முற்றுகை.
   (3) ஆக்ராவிலிருந்து தப்பித்தல்.
   (4) முடிசூட்டுவிழா.
   (5) புரந்தர் உடன்படிக்கை.
   (6) செயிஷ்டகானின் படையெடுப்பு.

2. **பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடி.**
   (1) சமஸ்கிருதச் சொற்களடங்கிய அகராதி -
   (2) திரிம்பக் கோட்டையை வெற்றி கொண்டார் -
   (3) வாணி - டிண்டோரி என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்ட படைத்தளபதி -
   (4) ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் தொழிற்சாலைகளைக் கொண்டிருந்த இடம் -

3. **உன்னுடைய சொற்றொடரில் விவரித்து எழுதுக.**
   (1) மாமன்னர் சிவாஜியின் முடிசூட்டுவிழா.
   (2) ஆக்ராவிலிருந்து தப்பித்தல்.
   (3) மாமன்னர் சிவாஜியின் தெற்கத்தியப் படையெடுப்பு
   (4) மாமன்னர் சிவாஜியின் முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள்.

4. **காரணம் கூறுக.**
   (1) மாமன்னர் சிவாஜி புரந்தர் உடன்படிக்கைக்கு சம்மதித்தார்.
   (2) மாமன்னர் சிவாஜி மொகலாயர்களைத் தீவிரமாக எதிர்த்தார்.

### செயல்கள்

(1) சுதந்திரதின விழா, குடியரசுதின விழாவிற்கான சிறப்பு ஏற்பாடுகளை நீ எவ்வாறு செய்வாய்?ஆசிரியர் உதவியுடன் பட்டியல் தயார் செய்.
(2) உனது அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தைச் சுற்றிப்பார்த்து, அதைப்பற்றி எழுதுக.

# 7. சுயராஜ்ய ஆட்சிமுறை

மாமன்னர் சிவாஜி சுயராஜ்யத்தை நிறுவினார். அவர் தானே முடிசூட்டிக்கொண்டார். முடி சூடிய பின்பு மாமன்னர் 'தக்ஷின் திக்விஜய்' எனப்படும் தெற்கத்திய படையெடுப்பை வெற்றிகரமாக நடத்தினார். சுயராஜ்யத்தின் எல்லை விரிவடைந்தது. சுயராஜ்யத்தில் மகாராஷ்டிராவின் நாசிக், புனே, சத்தாரா, சாங்கிலி, கோலாப்பூர், சிந்துதுர்க், இரத்தினகிரி, ராய்கட் மற்றும் தானே ஆகிய மாவட்டங்கள் அடங்கியிருந்தன. அவற்றோடு கர்நாடகா ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளும் அடங்கியிருந்தன. சுயராஜ்யத்தின் செயல்பாடுகளில் சீரான மேலாண்மையை உறுதி செய்யவும் மக்கள் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும் ஒரு திறமையான ஆட்சிமுறையை மாமன்னர் சிவாஜி அமைத்தார். இது தொடர்பான தகவல்களை நாம் பெறுவோம்.

**அஷ்டப்பிரதான் மண்டல் (எண் பேராயம்):** மாமன்னர் சிவாஜி தம் முடிசூட்டு விழாவின்போது எட்டு அமைச்சர்களைக் கொண்ட ஓர் அமைச்சரவையை உருவாக்கினார். ஆட்சிப்பணி வசதிக்காக எட்டுத் துறைகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு துறைக்கும் தலைவராக ஒரு அமைச்சர் அமர்த்தப்பட்டார். இவ்வாறு எட்டு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை அஷ்டப்பிரதான் மண்டல் (எண் பேராயம்) என அழைக்கப்பட்டது. ஒருவரை அமைச்சராக அமர்த்தவோ அல்லது அவரை அப்பொறுப்பிலிருந்து நீக்கவோ மாமன்னருக்கு அதிகாரம் இருந்தது. தங்கள் துறைகளின் செயலாட்சியைப் பற்றி மறுமொழி கூற வேண்டிய கடமை அமைச்சர்களுக்கு இருந்தது.

மாமன்னர் சிவாஜி, தகுதி மற்றும் திறமைகள் அடிப்படையில் அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து அஷ்டப்பிரதான் என்ற அமைச்சரவையை ஏற்படுத்தினார். அவர்களுக்கு ஜாகீர்களோ, வதன்களோ, அன்பளிப்புகளோ வழங்கப்படவில்லை. மாறாக, அவர்களுக்கு போதுமான சம்பளம் வழங்கப்பட்டது.

**வேளாண்சார்கொள்கை:** வேளாண்மையே கிராமங்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது. இதன் முக்கியத்துவத்தை மாமன்னர் நன்கு அறிவார். எனவே உழவர்களின் நலவாழ்வில் மாமன்னர் அக்கறை காட்டினார். நிலவரித் திட்டம் அமைக்கும் பொறுப்பைச் செயல்திறனும் பட்டறிவும் மிக்க அதிகாரியான அண்ணாஜி தத்தோவை நம்பி மன்னர் ஒப்படைத்தார். குறித்த தொகையை விட அதிகமாக நிலவரி திரட்டக் கூடாது என்று இவர் அதிகாரிகளை எச்சரித்தார். தரிசு நிலங்களை விளை நிலமாக்குவதற்கு உழவர்களை ஊக்கப்படுத்தினார். மட்டுமீறிய மழை அல்லது வறட்சியினால் பயிர்கள் அழிவுற்றாலோ அல்லது எதிரிகளின் படை சிற்றூர் பகுதிகளைப் பாழ்படுத்தினாலோ நிலவரி மற்றும் பிற வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டன. உழவர்களுக்கு காளைகள், கலப்பைகள், விதைப்பதற்கு ஏற்ற நல்ல விதைகள் ஆகியவற்றை அளிக்குமாறு அதிகாரிகளை மன்னர் அறிவுறுத்தினார்.

**மாமன்னர் சிவாஜியின் அஷ்டப்பிரதான் மண்டல் (எண் பேராயம்)**

| எண் | அமைச்சரின் பெயர் | பதவி | அமைச்சரின் பணி |
|---|---|---|---|
| 1. | மோரோ திரிம்பக் பிங்களே | பிரதான் | ஆட்சிப்பணிகளை நடத்துதல் மற்றும் வெற்றிபெற்ற பகுதிகளுக்குக் தகுந்த நிர்வாக ஏற்பாடு செய்தல் |
| 2. | இராமச்சந்திர நீலகண்ட முஜும்தார் | அமத்யா | அரசின் இருப்புக் கணக்குகளை நிர்வகித்தல் |
| 3. | அண்ணாஜி தத்தோ | சச்சீவ் | அரசின் ஆணைகளைத் தயார் செய்யும் பணி |
| 4. | தத்தாஜி திரிம்பக் வாக்னீஸ் | மந்திரி | நாட்டின் செய்தித் தொடர்புகளை கவனித்தல் |
| 5. | கம்பீர்ராவ் மொகித்தே | சேனாபதி | படை அமைப்பையும் நாட்டின் பாதுகாப்பையும் மேற்பார்வையிடுதல் |
| 6. | இராமச்சந்திர திரிம்பக் தபீர் | சுமந்த் | வெளிநாட்டு உறவுகளைக் கவனித்தல் |
| 7 | நிராஜி ராவ்ஜி | நியாயதீஷ் (நீதிபதி) | நீதி வழங்குதல் |
| 8. | மோரேஷ்வர் பண்டித்ராவ் | பண்டித்ராவ் | சமய நடவடிக்கைகளைக் கவனித்தல் |

**சிற்றூர் பொருளாதாரம்:** ஊரகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு வேளாண்மையாகும். வேளாண்மைக்கு உதவிபுரியும் பல தொழில்கள் சிற்றூர்களில் வளர்ச்சி பெற்றன. சிற்றூர்களிலுள்ள கைவினைஞர்கள் பொருள்களை உருவாக்கி உள்ளூர் மக்களின் தேவைகளை நிறைவு செய்தனர். இவ்வாறு ஒரு சிற்றூரானது தன்னிறைவுப் பகுதியாக விளங்கியது. உழவர்கள் தங்கள் விளைபொருளிலிருந்து குறிப்பிட்ட ஒரு பங்கை கைவினைஞர்களுக்குக் கொடுத்தனர். இப்பங்கு ‘பலுதா’ என அழைக்கப்பட்டது.

**வணிகம் மற்றும் தொழில்:** வணிகத்தின் வளர்ச்சியின்றி எந்த ஒரு நாடும் வளம் பெறாது என்பதை மாமன்னர் அறிந்திருந்தார். வணிகர்கள் புத்தம்புது பொருள்களையும் தேவையான சில பொருள்களையும் நாட்டிற்குள் கொண்டு வருவர். பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கும். வணிகச் செழிப்பு செல்வத்தைப் பெருக்கும். வணிகர்களைப் பற்றி மாமன்னர் கொண்டிருந்த இந்நோக்கமானது, ‘ஆக்ஞாபத்ரா’வில் பொருத்தமுறக் காணப்படுகிறது. ஆக்ஞாபத்ராவில் வணிகர்களைப் பற்றி ஒரு வர்ணணை பின்வருமாறு உள்ளது. ‘‘வணிகர்கள் அரசின் அணிகலன்களாகவும் மன்னரின் பெருமைக்குரியவர்களாகவும் இருக்கின்றனர்.’’

தொழில்களைப் பாதுகாப்பது மன்னரின் கொள்கையாக இருந்தது. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு உப்பளத் தொழிலாகும். கொங்கணப் பகுதியில் உப்பளத் தொழிலை இவர் பாதுகாத்தார். அவ்வேளையில் வணிகர்கள் போர்த்துக்கீசியப் பகுதியிலிருந்து உப்பைக் கொண்டு வந்து சுயராஜ்ஜிய பகுதியில் விற்றனர். அது கொங்கணப் பகுதியின் உள்ளூர் வணிகத்தைப் பாதித்தது. எனவே, போர்த்துக்கீசிய ஆட்சிப் பகுதியிலிருந்து சுயராஜ்ஜியத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் மீது அதிக வரி விதித்தார். இதன் விளைவாக போர்த்துக்கீசியப் பகுதியிலிருந்து இறக்குமதியான உப்பின் விலை அதிகரிப்பதோடு அதன் இறக்குமதியும் குறையும் என்பதே இவ்வரிவிதிப்பின் நோக்கமாகும்.

**போர்ப்படை அமைப்பு:** மாமன்னர் சிவாஜியின் போர்ப்படையில் இரண்டு முதன்மைப் பிரிவுகள் இருந்தன. அவை காலாட்படை, குதிரைப்படை என்பதாகும். காலாட்படையில் ஹவல்தார், ஜும்லேதார் என்ற அதிகாரிகள் இருந்தனர். காலாட்படையின் தலைவர் ‘சர்னோபத்’ என அழைக்கப்பட்டார். காலாட்படையின் உயர் அதிகாரி இவரே.

குதிரைப்படையில் ‘சிலேதார், ‘பார்கீர்’ என்னும் பெயர்களில் இரண்டு வகைக் குதிரை வீரர்கள் இருந்தனர். சிலேதாரிடம் சொந்தமாகக் குதிரைகளும் படைக்கலன்களும் இருந்தன. குதிரைகளும் படைக்கலன்களும் பார்கீருக்கு அரசால் வழங்கப்பட்டன. குதிரைப்படையில் பார்கீர் எனப்படுவோர் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். காலாட்படை அதிகாரிகளைப் போன்றே குதிரைப்படை அதிகாரிகளின் தகுதி வரிசையும் இருந்தது. குதிரைப்படையின் உயர் அதிகாரி ‘சர்னோபத்’ ஆவார். நேதாஜி பால்கர், பிராப்ராவ் குஜர், கம்பீர்ராவ் மோகித்தே ஆகியோர் புகழ்பெற்ற ‘சர்னோபத்’தாக இருந்தனர்.



**கற்போம்.**

இந்தியப் படைபிரிவுகள் பற்றிய தகவல்களைத் சேகரிக்க.

- முப்படைகளின் பெயர்களைத் தெரிவிக்க.
- ஒவ்வொரு படையினுடைய தலைமைப் பதவி யாது?
- முப்படைகளின் தலைவர் யார்?

**உளவுத்துறை:** பகைவர்களிடமிருந்து சுயராஜ்ஜியத்தைப் பாதுகாப்பது தேவையானதாகும். இதற்காக, பகைவர்களின் நடமாட்டங்கள் பற்றிய தெரிசெய்திகளை உடனுக்குடன் பெறுவதும் அவற்றை மாமன்னரிடம் ஒப்படைப்பதும் உளவுத்துறையின் பணியாக இருந்தது. அவர்களின் உளவுத்துறை மிகவும் திறமையானது பகிர்ஜி நாயக் என்பவர் உளவுத்துளறயின் தலைவராக இருந்தார் இப்பணியில் அளவுகடந்த திறன் படைத்தவர். சூரத்தை தாக்குவதற்கு முன்பாக அதைப் பற்றிய மிகத் துல்லியமான முழு விவரங்களையும் சேகரித்தார்.

**கோட்டைகள்:** இடைக்கால வரலாற்றில் கோட்டைகள் பெரும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. தமக்கு உடைமையாக ஒரு கோட்டை இருந்தால் அதைச் சுற்றியுள்ள இடங்களின் மீது ஒரு கண் வைக்க முடியும். அயல்நாட்டினர் படையெடுத்து வரும்போது கோட்டைக்குள் மக்களைத் தங்கவைத்துப் பாதுகாக்க முடிந்தது. உணவுத் தானியங்கள், போர்த்தளவாடங்கள், வெடிமருந்துகள், கோட்டைக் காவல் படை ஆகியவற்றைக் கோட்டைக்குள் திரட்டி வைக்க முடிந்தது. சுயராஜ்ஜியத்தை நிறுவுவதில் கோட்டைகளின் முக்கியத்துவம் பற்றி ‘ஆக்ஞாபத்ரா’வில், ‘‘அண்மைக் காலங்களில் உயர்வாய்க் கருதப்படுவதும் வீறார்ந்த சிறப்புடையதுமான கோட்டைகளால் மட்டுமே இவ்வரசு உருவாக்கப்பட்டது’’ - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுயராஜ்ஜியத்தில் ஏறத்தாழ 300 கோட்டைகள் இருந்தன. இக்கோட்டைகளைக் கட்டவும் அவற்றைப் பழுது பார்க்கவும் மாமன்னர் ஒரு கணிசமானப் பணத்தைச் செலவு செய்தார். பிரதாப்கட், பவன்கட் மற்றும் ராஜ்கட் போன்ற மலைக் கோட்டைகளை இவர் கட்டினார். ஒவ்வொரு கோட்டையிலும் ஒரு ‘கில்லேதார்’, ஒரு ‘கார்கானிஸ்’ மற்றும் ஒரு ‘சப்னீஸ்’ ஆகியோர் இருந்தனர். தானியக் களஞ்சியங்களைக் கண்காணிக்கவும் கோட்டையிலுள்ள போர்த் தளவாடங்களைப் பேணவும் கார்கானிஸ் என்ற ஒரு அதிகாரி இருந்தார்.

### உங்களுக்குத் தெரியுமா?

மாமன்னர் சம்பாஜி இயற்றிய ‘புத்பூஷண்’ என்ற நூலில் மாமன்னர் சிவாஜியால் கட்டப்பட்ட கோட்டைகளைப் பற்றிய வர்ணனைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. அது கீழ்க்கண்டவாறு.

‘கர்நாடகாவிலிருந்து பாகலாண் வரைக்கும் எதிரிகள் ஊடுருவ முடியாதவாறு மாமன்னர் சிவாஜி சயாத்ரி மலைத்தொடரிலுள்ள பீடபூமியின் உச்சியில் பல கோட்டைகளைக் கட்டினார். அதன் முக்கிய நோக்கமானது இப்புவியைக் காக்க வேண்டுமென்பதே. வெற்றிகரமான அவரின் தலைமையின் கீழ் கிருஷ்ணா நதியின் கரைகளிலிருந்து கடல் வரை நாற்புறத்திலும் கோட்டைகளைக் கட்டினார். அவர் வென்ற மற்றும் எல்லா மன்னர்களையும் விட மாமன்னர் சிவாஜி ராய்ரிக் கோட்டையில் முன்னணியில் இருந்தார்.’

**கடற்கோட்டைகள்:** கடற்படையோடு கடற் கோட்டைகளின் முக்கியத்துவத்தையும் மாமன்னர் உணர்ந்தார். அவர் கட்டிய கடற்கோட்டைகளுள் ஒன்று மால்வனிலுள்ள சிந்து துர்க்கத்தின் கடற்கோட்டையாகும். இது ஒரு மிகச்சிறந்த கடற் கோட்டையாகும். கோட்டையின் கட்டுமானத்திற்கு வலுவூட்ட அதன் அடித்தளத்தில் ஐந்து கண்டி எடை அளவு கொண்ட காரீயத்தை ஊற்றினர். சித்திகளின் ஆற்றலைத் தடுப்பதற்காக ராஜாபுரியின் முன்னால் பத்மதுர்க்கம் எனப்படும் கடற்கோட்டைக் கட்டப்பட்டது. பத்மதுர்க்கம் என்னும் கோட்டையைக் கட்டும்போது அதைப்பற்றி மன்னர் ஒரு கடிதத்தில், சித்திகளுடைய ராஜாபுரியின் மேன்மையை மறைக்கவே மற்றொரு ராஜாபுரியை தாம் அமைத்ததாகக் கூறியுள்ளார்.



பத்மதுர்க் கோட்டை

**கடற்படை:** இந்தியாவின் மேற்கு கடலோரத்தில் இருந்த பகைவர்களான கோவாவின் போர்த்துக்கீசியர், ஜஞ்சீராவின் சித்திகள், சூரத் மற்றும் ராஜாபுரியின் ஆங்கிலேய வணிகர் ஆகியோர் சுயராஜ்ஜியத்தை விரிவுபடுத்தும் பணியில் தடைகளை உருவாக்கினர். அவர்களின் நடவடிக்கைகளை அடக்கி மேற்கு கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டியது தேவையாயிற்று. அதற்காக மாமன்னர் ஒரு கடற்படையை அமைத்தார். இக்கடற்படை வைத்திருக்கும் ஒருவர் கடலையும் ஆள முடியும் என அவர் உணர்ந்தார். இத்தகைய முன்னோக்குத் திறன் மாமன்னரிடம் இருந்தது.

கடற்படையில் வெவ்வேறு வகையைச் சேர்ந்த நானூறு கப்பல்கள் இருந்தன. அவற்றுள் குராப், கல்பத் மற்றும் பால் போன்ற போர்க்கப்பல்களும் அடங்கும். கல்யாண்-பீவண்டி கடற்கழியிலும், விஜயதுர்க்கம் மற்றும் மால்வன் ஆகிய இடங்களிலும் கப்பல்கள் கட்டப்பட்டன. மாய்னாக் பண்டாரி மற்றும் தௌலத்கான் ஆகியோர் முதன்மை கடற்படைத் தலைவர்களாவர்.



**குராப்**



**கல்பத்**

### செய்தறிக.

இந்திய கடற்படைப் போர்க்கப்பல்கள் பற்றிய தகவல்களைக் கண்டறிக. கப்பல்களின் படங்களைச் சேகரிக்க.

**மக்கள் நலனில் அக்கறை:** எதிரிகளை வென்று அங்கே ஆட்சியை நிறுவுவதை மட்டுமே கொண்ட குறுகிய நோக்கம் மாமன்னர் சிவாஜிக்கு ஒருபோதும் இருந்ததே இல்லை. அவருடைய முக்கிய நோக்கமானது, மக்களை சுதந்திரமாக வாழவிட வேண்டும் என்பதேயாகும். மக்கள் உண்மையிலேயே சுதந்திரத்தின் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமெனில் சிறந்த நிர்வாகம், மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருத்தல் மற்றும் வெற்றி பெற்ற பகுதிகளைப் பாதுகாத்தல் வேண்டும் என்று அவர் கருதினார். மாமன்னர் சிவாஜி சிறந்த மன்னர் மட்டுமல்ல சிறந்த நிர்வாகியும், மக்கள் நலனில் அக்கறை கொண்டவரும் ஆவார். அவருடைய நாட்டு நிர்வாகத்திலிருந்தே நாம் இதைத் தெரிந்து கொள்ளலாம்.



## பயிற்சி

1. **உன்னால் கூற முடியுமா?**
   (1) எட்டுத் துறைகளைக் கொண்ட அமைப்பு -
   (2) பாகிர்ஜி நாயக் எந்தத் துறையின் தலைவர் -
   (3) மால்வன் அருகில் மாமன்னர் சிவாஜி கட்டிய கடற்கோட்டை -
   (4) கோட்டையில் போர்த்தளவாடங்களைப் பாதுகாப்பவர் -
2. **உன்னுடைய சொற்றொடரில் விவரித்து எழுதுக.**
   (1) மாமன்னர் சிவாஜியின் வேளாண் கொள்கை.
   (2) மாமன்னர் சிவாஜி மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஆட்சியாளர்.
3. **காரணம் கூறுக.**
   (1) மாமன்னர் சிவாஜி அஷ்டப்பிரதான் மண்டல் அமைத்தார்.
   (2) மாமன்னர் சிவாஜி ஒரு கடற்படையை உருவாக்கினார்.
4. **அட்டவணையை நிறைவு செய்க.**




**செயல்கள்**

(1) உனது அருகில் வசிக்கும் இந்திய இராணுவத்தில் பணியாற்றிய ஒருவரிடம் நேர்காணல் செய்க.
(2) உனது ஊரிலுள்ள சந்தைக்குச் சென்று சுற்றுப்புறத்தில் பயிரிடப்படும் பொருட்கள் மற்றும் வெளியிலிருந்து விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ள பொருட்களைப் பட்டியலிடுக.



சிந்துதுர்க் கோட்டை

# 8. மிகச் சிறந்த ஆட்சியாளர்

சுயராஜ்ஜியத்தை நிறுவுவதற்கு முன்னர் மகாராஷ்டிராவில் அடில்ஷா, சித்தி, போர்த்துக்கீசியர் மற்றும் மொகலாயர் ஆகிய சக்திகளின் ஆதிக்கம் இருந்தது. இந்த சக்திகளை எதிர்த்து மாமன்னர் சிவாஜி போர் புரிந்தார். அவர் அனைத்துவகை பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொண்டார். அவர் ஒரு சுதந்திரமான மற்றும் ஒப்புயர்வற்ற சுயராஜ்ஜியத்தை நிறுவினார். அவர் இந்த சுயராஜ்ஜியத்தின் நிர்வாகத்திற்காக ஓர் அமைப்பை ஏற்படுத்தினார். அவர் சுயராஜ்ஜியத்தை நல்ல ராஜ்யமாக்கினார். மாமன்னர் தமது திறமையால் புதிய உலகை உருவாக்கினார். சுயராஜ்ஜியத்தை நிறுவுவதற்கான போரில் மாமன்னர் தாமே பல பேராபத்துகளை சந்தித்தார். அப்சல்கானுடன் சந்தித்த சமயம், பன்ஹாலா முற்றுகை, செயிஷ்டகான் மீதான திடீர் தாக்குதல், ஆக்ராவிலிருந்து தப்பிச் செல்லல் போன்ற அனைத்து தருணங்களும் பேராபத்துகளை உடையவை. இவ்வனைத்து தருணங்களிலும் வெற்றிகரமாக முறியடித்தார். இவற்றிலிருந்து பாதுகாப்பாக வெளிவந்தார்.



**இதுபற்றி சிந்திக்கவும்**

விசுவாசமும் அர்ப்பணிப்பும் மிக்க கூட்டாளிகள் இருந்தபடியால் மாமன்னர் சிவாஜியால் சுயராஜ்ஜியத்தை நிறுவ முடிந்தது.

நட்பின் மகத்துவத்தைக் கூறும் பல்வேறு மொழிகளின் பழமொழிகளை, மரபுத் தொடர்களை கண்டுபிடிக்க. எ.கா. A Friend in need is a friend indeed

**அமைப்பியல் திறன்:** சுயராஜ்ஜிய பணி செய்ய மாமன்னர் தம்மைச் சுற்றியுள்ள மக்களைத் தூண்டினார். அவரிடம் அசாதாரணமாக அமைப்பியல் திறன் இருந்தது. இத்திறமையின் வலிமையுடன் அவர் தம்மைச் சுற்றி வீரமான மற்றும் விசுவாசமான மக்களை ஒருங்கிணைத்தார். சிவாஜியின் இக்கூட்டாளிகள் சுயராஜ்ஜியப் பணியில் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் தமது கடமையை நிறைவேற்றினர். அப்சல்கானை சந்தித்ததுபோல, மிகவும் ஆபத்தான கணத்தில் படா செய்யதைக் கொன்ற ஜீவாமஹாலா, பன்ஹாலா முற்றுகையின்போது மாமன்னர் சிவாஜியின் வேடமணிந்து சென்ற சிவா காசித், மாமன்னர் விசால்கட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவரைத் துரத்திச் சென்ற எதிரிகளின் முன்னேற்றத்தை வழியில் தடுத்து நிறுத்திய பாஜிபிரபு தேஷ்பாண்டே, புரந்தர் கோட்டையைப் பாதுகாத்த முரார்பாஜி தேஷ்பாண்டே, சின்ஹாகட் வெற்றிக்காக போர்களத்தில் வீழ்ந்த தானாஜி மாலுசரே, மாமன்னர் ஆக்ராவிலிருந்து தப்பிச் சென்றபோது பேராபத்திற்கு உள்ளான ஹிரோஜி, பஃர்ஜந்த் மற்றும் மதாரி மெஹெதர் போன்ற பல உதாரணங்கள் சுயராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பும் பணியில் காணப்படுகின்றன. மாமன்னர் தமது கூட்டாளிகளிடம் அதிக கவனம் செலுத்தினார். உதாரணமாக, சுயராஜ்ஜியத்தை நிறுவும் பணியில் கான்ஹோஜி ஜெதெ தொடக்கத்திலிருந்தே மாமன்னருடன் சேர்ந்திருந்தார். முதுமைக் காலத்தில் அவர் நோய்வாய்ப்பட்டார். அவ்வேளையில் மாமன்னர் அவரிடம் எக்காரணத்தைக் கொண்டும் மருத்துவ சிகிச்சையை புறக்கணிக்கக் கூடாது என்று கூறினார்.

**குடிமக்கள் மீதான அக்கறை:** சுயராஜ்ஜியத்தை நிறுவும் பணியின்போது மாமன்னர் பகைவர்களுடன் தொடர்ந்து போரிட வேண்டியிருந்தது. அவரது குடிமக்கள் எதிரிகளின் படையெடுப்பினால் துன்புற்றனர். அத்தகைய வேளைகளில் மாமன்னர் குடிமக்களைப் பாதுகாக்க பெருங்கவனம் செலுத்தினார். செயிஷ்டகான் படையெடுத்த வேளையில், ரொஹிடா பள்ளத்தாக்கின் தேஷ்முக்குகளுக்கு குடிமக்கள் தொடர்பான தமது கடமைகளை நிறைவேற்ற எச்சரிக்கை விடுத்தார். கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள குடிமக்களை கணவாய்க்குக் கீழுள்ள பாதுகாப்பான இடத்திற்கு கூட்டிச் செல்லுமாறு அவர் தேஷ்முக்குகளிடம் கூறினார். இப்பணியில் ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது என்று அவர் எச்சரித்தார். மேலும் அவர் தேஷ்முக்குகளுக்குப் பின்வருமாறு கடுமையான எச்சரிக்கை விடுத்தார். 'குடிமக்களிடம் இவ்வாறு கவனம் செலுத்தாதபோது மொகலாயப் படை வந்தால், மக்களைக் கைது செய்தால், அப்போது அந்த குற்றம் உங்கள் தலையில் விழும்'. உங்களது படைவீரர்களிடமிருந்து குடிமக்களுக்கு தொந்தரவு ஏற்படக்கூடாது. மாமன்னர் இத்தகைய கவனம் கொண்டிருந்தார்.

**போர்படை தொடர்பான கொள்கை:** மாமன்னரின் போர்ப்படையில் கடுமையான ஒழுக்கம் இருந்தது. படை வீரர்களுக்கு வேளாவேளை ஊதியம் வழங்கப்பட்டது. இவ்விஷயத்தை அவர் குறிப்பாகப் பார்த்துக் கொண்டார். படைவீரர்களுக்கு ஊதியத்தை பணமாக வழங்க ஏற்பாடு செய்தார்.

இடைக்காலத்தில் இந்தியாவிலுள்ள பல்வேறு இடங்களிலுள்ள ஆட்சிகளிலும் மற்றும் வேறு இடங்களிலும் படைவீரர்களுக்கு பணத்தை ஊதியமாக கொடுப்பதற்குப் பதிலாக ஜாகீர்களை கொடுக்கும் வழக்கம் இருந்தது. மாமன்னர் இம்முறையை இரத்து செய்தார். அவர்களது போர் நடவடிக்கைகள் எதிரிகளின் பிரதேசங்களில் நடக்கும்போது படைவீரர்களுக்கு மதிப்புள்ள எவையேனும் கிடைத்தால் அவையனைத்தையும் அரசிடம் பாதுகாப்பாக ஒப்படைப்பது தொடர்பாக படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. போர்நடவடிக்கையில் படைவீரர்கள் தமது வீரதீர செயல்களுக்காக கௌரவிக்கப்பட்டனர். போரில் மரணமடைந்த வீரர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அவர் கவனித்துக் கொண்டார். காயமடைந்த வீரர்களையும் கவனித்துக் கொண்டார். போரில் தாமாகவே சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட எதிரிப் படைவீரர்களை அவர் நல்லபடியாக நடத்தினார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

பயிர்களை விதைக்கும், வளர்க்கும் மற்றும் அறுவடை செய்யும் காலங்களில் போர் வெடிக்கும்போது விவசாயிகளின் துயரத்திற்கு எல்லையே இல்லை. படையின் இயக்கம் விதைக்கும் பணிக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் வீரர்கள் வளர்ந்து நிற்கும் பயிர்களை வெட்டி எடுத்துச் செல்வர் அல்லது அவற்றை அழிப்பர். விவசாயிகளின் வீடுகளைக் கொள்ளையடிப்பர். தமது படைவீரர்களை இத்தகைய செயல்களிலிருந்து தடுக்க வேண்டும் என மாமன்னர் அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருந்தார். இது தொடர்பாக கி.பி. 1674இல் சத்ரபதி சிவாஜி மகாராஜா தமது இராணுவ அதிகாரிகளுக்கு தம் எண்ணத்தை எழுதிய கடிதம் மிக மதிப்புமிக்கதாகும். மாமன்னர் படைவீரர்களின் ஒழுக்கம் தொடர்பாக எவ்வளவு நுட்பமாக சிந்தித்திருந்தார் என்பதை இதிலிருந்து கற்பனை செய்திட முடியும்.

''பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்த குடிமக்களுக்கு அவர்களது தானியங்கள், கால்நடைத் தீவனம், புல், காய்கறிகள் போன்றவற்றை கொள்ளையடிப்பதன் மூலம், தொல்லை, தொந்தரவு செய்திருந்தால் அம்மக்கள் தமது வீடுகளை விட்டுவிட்டு வேறெங்காவது இடம் பெயர்வர். அவர்களில் பலர் சாகும்வரை பட்டினி கிடக்க வேண்டியிருக்கும். அதாவது அவர்களுக்கு மொகலாயர்களை விட நீங்கள் மிகக் கொடுமையானவர்களென்று இருக்கும். அங்கு இத்தகைய ஒரு கோபம் இருக்கும்.''

**சகிப்புத்தன்மைக் கொள்கை:** மாமன்னர் எந்த ஆட்சியாளர்களோடு போரிட வேண்டியிருந்ததோ அவர்களுள் அடில்ஷா, மொகலாயர் மற்றும் சித்தி ஆகிய ஆட்சியாளர்கள் இஸ்லாமியர்கள் ஆவர். ஆயினும், அவர்களோடு போர் புரிந்தபோது மாமன்னர் சுயராஜ்ஜியத்திலுள்ள இஸ்லாமியர்களைத் தமது குடிமக்களாகவேக் கருதினார். அப்சல்கானுடனான சந்திப்பின்போது மாமன்னரின் படையிலுள்ள சித்தி இப்ராகிம் ஒரு நம்பிக்கைக்குரிய பணியாளராக இருந்தார். சித்தி ஹிலால் என்பவர் மாமன்னர் படையில் படைத்தலைவராக இருந்தார். கடற்படையில் தௌலத்கான் என்பவர் மிக முக்கிய அதிகாரியாக இருந்தார்.

மாமன்னரின் சமயக் கொள்கை சகிப்புத்-தன்மையுடையதாகும். அவர் எதிரிகளிடமிருந்து ஏதேனுமொரு பிரதேசத்தை வெற்றி கொண்டால் அங்குள்ள இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் தொடக்கத்திலிருந்து பெற்ற வசதிகளை அதே வழியில் தொடரச் செய்தார். அவரது சமய சகிப்புத்தன்மைக் கொள்கையைப் பற்றி சமகாலத்து வரலாற்று ஆசிரியர் காஃபிகான் எழுதுகிறார்: 'சிவாஜி தமது படைவீரர்களுக்கு இப்படி ஒரு கடுமையான சட்டத்தை இயற்றியிருந்தார். அதுயாதெனில், படையெடுப்பின் போது மசூதிகளுக்கு தீங்கிழைக்கக் கூடாது. திருக்குரானின் எந்தவொரு பிரதி கையில் கிடைத்தாலும் அதற்கு மிக்க மரியாதை செய்து இஸ்லாமிய பக்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.'

**சுதந்திர உணர்வூட்டல்:** சுயராஜ்ஜியத்தை நிறுவ மாமன்னர் சிவாஜி செய்த முயற்சிகள் தனி மதிப்புடையவையாகும். இது சுதந்திரத்தின் மதிப்பாகும். வேறு எந்த அதிகாரத்தின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளாத, தமது சுதந்திர மற்றும் இறையாண்மையை நிலைத்திருக்க வைப்பதே அவரது நோக்கமாக இருந்தது. அந்நிய சக்திகளுக்கு எதிராகப் போரிடும்போது மாமன்னர் மற்றவர்களிடமும் சுதந்திர உணர்வை ஊட்டினார். மொகலாயர்களிடம் பணியாற்றிய சத்ரசால் மாமன்னரைப் பார்க்க வந்தபோது அவரிடம் பந்தல்கண்டில் ஒரு சுதந்திர அரசை உருவாக்குமாறு மாமன்னர் தூண்டினார்.

**மாமன்னர் பணியின் மேன்மை:** மாமன்னர் பல எதிரிகளுடன் போரிட்டு போரிட்டு சுயராஜ்ஜியத்தை நிறுவினார். இச்செயல் அவர் ஒரு புதுயுகத்தின் முன்னோடி என்பதை நிரூபிக்கிறது. ஆனால், இச்செயல் தவிர, அவரது ஆளுமையில் பிற பல உயர்பண்புகள் சேர்ந்து காணப்படுகின்றன.

மாமன்னர் மிகவும் புத்திசாலியாக இருந்தார். அவர் பல கலைகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார். அவருக்கு பல மொழிகள் மற்றும் எழுத்துகள் தெரிந்திருந்தது. சுயராஜ்ஜியத்தை நிறுவுவதற்கான

அவரது பெற்றோரின் போதனைகள் மற்றும் அறநெறிக் கதைகள் அவரது மனதில் ஆழமாகப் பதிந்து இருந்தன. அவருடைய ஆளுமையில் பண்புநலன், மற்றும் திறன், நல்லொழுக்கம் மற்றும் வீரம் ஆகியவை ஒருங்கிணைந்து இருந்தன. அவரிடம் தலைமைப் பண்பு, நிர்வாகம், முன்னறிவு, அரசியல் இராஜ தந்திரம், திறமிக்க சிவில் மற்றும் இராணுவ நிர்வாகம் பற்றிய கொள்கை, உண்மை மற்றும் நீதி ஆகியவற்றில் நம்பிக்கை, அனைவரையும் சமமாக நடத்தும் பண்பு, எதிர்கால விஷயங்களின் வரைவை முன்கூட்டியே காட்சிப்படுத்தி திட்டமிடல், திட்டமிட்ட செயல் திட்டங்களை நிறைவேற்றும் திறன், அழிவுகளில் நிலை குலையாமல் மேலே உயருதல், எப்போதும் கவனமாயும் விழிப்புடனும் இருத்தல் போன்ற எண்ணிலடங்காக் குணங்கள் அவரிடம் இருந்தன.

பெண்கள் விஷயத்தில் முறையற்ற நடத்தை உள்ளவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார். குடிமக்களில் விவசாயிகள், கலைஞர்கள், படைவீரர்கள், வியாபாரிகள் போன்ற அனைத்து பிரிவினர்கள் மீது அக்கறை செலுத்தினார். தனது சொந்த மதத்து மக்களிடம் உள்ளவாறு பிறமதத்து மக்களிடமும் பாகுபாடு காட்டாமல் மரியாதை காத்தார். பிற மதத்திற்கு சென்ற நபர்களைத் திரும்பவும் சொந்த மதத்திற்கு கொண்டு வருவதற்கு அக்காலத்தில் எதிர்ப்பு இருந்தது. எனினும், அவர் அக்காலத்தில் அத்தகைய நபர்களைத் திரும்பவும் சொந்த மதத்திற்கு கொண்டு வந்தார். சில நேரங்களில் அவர்களுடன் சொந்த உறவுகளையும் சேர்த்தார். கடற்பயணத்திற்கு மத அடிப்படையில் எதிர்ப்பு இருந்த போதிலும், அக்காலத்திலேயே அவர் ‘சிந்து துர்க்’ போன்ற கடற்கோட்டைகளைக் கட்டினார். மேலும், கடற்படையை உருவாக்கினார். கடலிலிருந்து வரும் வெளிநாட்டுப் படையெடுப்பைக் கண்டறிந்து பின்னர் தீர்வு காண அவற்றைத் தயார்படுத்தியிருந்தார் என்பதே இதன் பொருளாகும். அவர் முடி சூட்டல் மூலமாக சுயராஜ்ஜியத்தின் அதிகாரப்பூர்வமான அரசர் ஆனார். அவர் ஒரு முடிசூட்டலுக்குப்பின் சமயநோக்கின் பல்வேறு வகையிலான இரண்டாவது முடிசூட்டலையும் செய்து கொண்டார். அவரது இவ்வனைத்து செயல்களும் சமயப்பரப்பில் அவரது புரட்சிகரமான அம்சங்களைக் காட்டுகின்றன.

சுயராஜ்ஜியத்திற்கு அபாயகரமான சங்கடங்கள் வரும்போதெல்லாம் அவர் தனது கூட்டாளிகளுடனோ அல்லது கூட்டாளிகளின்றியோ அச்சங்கடங்களை எதிர் கொண்டார். இதனால் அவரது கூட்டாளிகளும் சுயராஜ்ஜியத்திற்காக தமது உயிரைத் தியாகம் செய்ய தயாராய் இருந்தனர். நிச்சயமாக அத்தகைய பெருஞ் சங்கடங்களில் தைரியமாகவும் அச்சமின்றியும் எதிர்கொண்ட அளவோடு அவரது மேன்மை நின்றுவிடவில்லை. அவர் தம் சுயராஜ்ஜியத்திற்கு அறநெறி மற்றும் தகுதியின் அடிப்படை வேண்டும் என்று விரும்பினார். அதனால்தான் முக்கிய விஷயங்களுடன் சேர்த்து சின்னச் சின்ன விஷயங்கள் தொடர்பானவற்றைப் பற்றியும் கூட அவர் ஆணை பிறப்பித்ததாக தெரிய வருகிறது. படைவீரர்கள் விவசாயிகளின் வயல்களிலிருந்து காய்கறிகளையும் கூட கட்டாயப்படுத்தி வாங்கக் கூடாது என்ற பொருளிலான ஆணை இந்நோக்கில் ஓர் எடுத்துக்காட்டாகும். அவரால் செயல்படுத்தப்பட்ட மரங்களை வெட்டுதல் மீதான கட்டுப்பாடுகளும் குறிப்பிடத்தக்கவைகளாக உள்ளன.



**சிந்திக்க**

மரம் வளர்க்க வேண்டியது ஏன் அவசியமாகும்?

கோட்டையிலுள்ள குப்பைகளை இங்கும் அங்குமாக எங்கும் வீசக்கூடாது அவற்றை பின் முற்றத்தில் எரித்து அவற்றின் சாம்பலில் காய்கறித் தாவரங்களை வளர்க்க வேண்டும் என்பதாக அவரது ஆணை இருந்தது. அவர் சுயராஜ்ஜியத்தைக் கட்டி எழுப்புகையில் நுட்பமான விஷயங்களில் எவ்வளவு கவனம் செலுத்தி இருந்தார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. அவர் வெறும் மாவீரர் மட்டுமன்று: அவர் ஒரு புதிய, சுதந்திர, அறநெறி மற்றும் நாகரிகமான சமூகத்தை உருவாக்கிய சிற்பியும் ஆவார். அவரது மேன்மை முழுமையானது.



**உங்களால் கூற முடியுமா?**

- உங்களது சுற்றுப்புறத்திலுள்ள குப்பைகள் எவ்வாறு மேலாண்மை செய்யப்படுகின்றன?
- குப்பைகளை மேலாண்மை செய்யும் இயந்திரங்களின் பெயர்களைக் கூறுக.

நமது தேசிய இயக்கத்தில் மாமன்னர் ஒரு பெரும் உத்வேகத்தின் ஆதாரமாக இருந்தார். மகாத்மா ஜோதிராவ் பூலே தனது சமத்துவத்தற்கான போராட்டத்தில் பொவாடாக்களின் வாயிலாக மாமன்னரின் மேன்மையை விளக்குகிறார்.

லோக்மான்ய திலகர் சிவாஜி பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வழியாக தேசிய எழுச்சியை ஏற்படுத்தினார். மாமன்னர் சிவாஜியின்



### உங்களுக்குத் தெரியுமா?

மகாத்மா ஜோதிராவ் புலே தமது சத்ரபதி சிவாஜி மகாராஜாவின்மேல் கி.பி. 1869 இல் ஒரு பொவாடா இயற்றினார். அதன் ஒரு பகுதி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

*।। शिवाचा गजर जयनामाचा झेंडा रोविला ।।*
*।। क्षेत्र्याचा मेळा मावळ्याचा शिकार खेळला ।।*
*माते पायीं ठेवी डोई गर्व नाहीं काडीचा ।*
*आशिर्वाद घेई आईचा ।।*
*आलाबला घेई आवडता होतो जिजीचा ।*
*पवाडा गातो शिवाजीचा ।।*
*कुळवाडी – भूषण पवाडा गातो भोसल्याचा ।*
*छत्रपती शिवाजीचा ।।३।।*

மேன்மையைக் கூறும் நூலை லாலா லஜபதிராய் எழுதியுள்ளார். தமிழ் மகாகவி சுப்பிரமணிய பாரதியார், சிவாஜி தமது கூட்டாளிகளுக்கு உள்நோக்குடன் கூறியது போன்ற கற்பனைச் சூழலில் அமைந்த பாட்டை இயற்றியுள்ளார். உலககவி இரவீந்திரநாத் தாகூர் மாமன்னர் சிவாஜியின்மேல் ஒரு நீண்ட பாட்டை எழுதியுள்ளார். தாகூர் மாமன்னரின் சுயராஜ்ஜியத்தை நிறுவும் முயற்சியை, உயர்ந்த இலட்சியத்தை உண்மைப்படுத்துவதற்கான முயற்சியாகக் காண்கிறார். சர் ஜதுநாத் சர்க்கார் தனது ‘சிவாஜியும் அவரது காலமும்’ என்ற நூலில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் சாதனைகளைப் புகழ்ந்துள்ளார். மாமன்னர் சிவாஜி மகாராஷ்டிராவிற்கு மட்டுமின்றி இந்திய தேசம் முழுவதற்கும் சொந்தமானவராக இருந்தார் என்று பண்டித் ஜவஹர்லால் நேரு கூறியுள்ளார். அவர் தமது தேசத்தின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். மேலும் மனித நல்லொழுக்கத்திற்கு அவர் வெளிப்படையான அடையாளமாக இருந்தார். இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளில் மாமன்னரின் உத்வேகம் மற்றும் உயர்ந்த இலட்சியத்தைக் கூறும் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மாமன்னர் சிவாஜியின் இந்த சுயராஜ்ஜிய சாதனை, மேலும் அதை நல்ல ராஜ்ஜியமாக மாற்றிய உத்வேகம் வருங்கால தலைமுறைக்கும் கூட உயர்ந்த இலட்சியமாக இருக்கும். மாமன்னர் சிவாஜி ஒரு சிறந்த தேசிய மாமனிதர் ஆவார்.



## பயிற்சி

1. **பாடத்திலிருந்து கண்டுபிடித்து எழுதவும்.**
   (1) மாமன்னர் சிவாஜியின் வாழ்க்கையில் ஆபத்தான தருணங்கள் யாவை?
   (2) மாமன்னர் சிவாஜி ஆக்ராவிலிருந்து தப்பிச் செல்லும் வேளையில் தமது உயிரைத் தரவும் தயாரானவர்கள் யாவர்?
   (3) ரொஹிடா பள்ளத்தாக்கு தேஷ்முக்குகளுக்கு மாமன்னர் சிவாஜி என்ன எச்சரிக்கை விடுத்தார்?
   (4) மாமன்னர் சிவாஜியின் எந்த உத்வேகம் வருங்காலத் தலைமுறைக்கு உயர்ந்த இலட்சியமாய் இருக்கும்?

2. **சொந்த சொற்றொடர்களில் விவரித்து எழுதுக.**
   (1) குடிமக்களுக்கு நட்டம் ஏற்படக்கூடாது என்பதற்காக சிவாஜி மகாராஜா படைவீரர்களுக்கு விடுத்த எச்சரிக்கை யாது?
   (2) மாமன்னர் சிவாஜி சமயக் கொள்கையில் சகிப்புத்தன்மையுடையவர் என்பது எவ்விஷயங்களின் வாயிலாக தெரிய வருகிறது?
   (3) மாமன்னர் சிவாஜியின் போர்ப்படை தொடர்பான கொள்கைகளை விளக்குக.

3. **ஒரே சொற்றொடரில் எழுதுக.**
   (1) சுயராஜ்ஜிய கடற்படையிலுள்ள ஒரு முக்கிய அதிகாரி
   (2) மாமன்னர் சிவஜியின்மேல் ஒரு பாட்டு இயற்றிய தமிழ்க்கவி
   (3) பந்தல்கண்டில் சுதந்திர அரசை உருவாக்கியவர்.
   (4) பொவாடா மூலமாக மாமன்னர் சிவாஜியின் மேன்மையைக் கூறியவர்.

**செயல்பாடுகள்**

(1) கடினமான வேளையில் நண்பருக்குச் செய்த உதவியை வகுப்பில் கதையாகக் கூறுக.
(2) தனிநபர் பெயர்களிலிருந்து உருவான ஊர்கள், நகரங்கள் ஆகியவற்றின் பட்டியல் தயார் செய்க.

# 9. மராத்தியர்களின் விடுதலைப் போர்

சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் மறைவுக்குப் பின் மராத்தியர்கள் சத்ரபதி சம்பாஜி மகாராஜா, சத்ரபதி இராஜாராம் மகாராஜா மற்றும் மகாராணி தாராபாய் ஆகியோரின் தலைமையின் கீழ் சுயராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காக மொகலாயருடன் கடுமையாக போரிட்டனர். இருபத்து ஏழு ஆண்டுகளாக நீடித்த இந்த போர் 'மராத்தியர்களின் விடுதலைப்போர்' என்றழைக்கப்படுகிறது. கி. பி. 1682 இல் பேரரசர் ஔரங்கசீப் தெற்கிலுள்ள தக்காணத்தின் மீது படையெடுத்து வந்தார். அப்பொழுதும் கூட மொகலாயர்களுடனான அப்போரில் பல இன்னல்களை எதிர்கொண்டு மராத்தியர்கள் வெற்றி பெற்றனர். இந்த விடுதலைப் போரானது இந்தியாவின் வரலாற்றில் புகழ்பெற்ற மற்றும் மெய்சிலிர்க்க வைக்கும் ஒளிமயமான காலகட்டம் ஆகும். இப்பாடத்தில் நாம் அந்த விடுதலைப்போர் பற்றி கற்க உள்ளோம்.

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள 'மராத்தியர்' என்ற பதம் 'மராத்தி மொழி பேசுகிறவர்' அல்லது 'மகாராஷ்டிர மக்கள்' என்ற பொருள் உடையது ஆகும்.



**செய்து பார்**

நான் சம்பாஜி மகாராஜே பேசுகிறேன்... நாடகபாத்திரமேற்று நடித்துக் காட்டவும்.



**சத்ரபதி சம்பாஜி மகாராஜா**

**சத்ரபதி சம்பாஜி மகாராஜா:** சம்பாஜி மகாராஜா என்பவர் சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் மூத்த புதல்வன் ஆவார். அவர் 1657 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாள் புரந்தர் கோட்டையில் பிறந்தார். சிவாஜி மகாராஜாவிற்குப் பின் அவர் சத்ரபதி ஆனார். அவ்வேளையில் மராத்தியர்களின் மொகலாயருக்கு எதிரான போராட்டம் தொடங்கியது. இந்த சூழ்நிலையில் பேரரசர் ஔரங்கசீப்பின் மகன் இளவரசர் அக்பர் தனது தந்தைக்கு எதிராக கிளர்ச்சி செய்தார். அக்கிளர்ச்சியை பேரரசர் ஒடுக்கினார். ஆனால் அக்பர் தக்காணத்திலுள்ள சம்பாஜி மகாராஜாவிடம் அடைக்கலம் நாடி வந்தார். அக்பரை அடக்குவதற்காக பேரரசர் தாமே தக்காணத்தின் மீது கி. பி. 1682இல் படையெடுத்து வந்தார். அவருடன் ஒரு மாபெரும் படையும் ஆற்றல் மிக்க பீரங்கி படையும் இருந்தது. அவர் ஜன்ஜிராவின் சித்திகளிடம் மராத்தியர்களுக்கு எதிராக படையெடுப்பை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். போர்த்துக்கீசியர்களையும் தம் பக்கம் இழுத்துக்கொண்டார். இதனால் சம்பாஜி மகாராஜாவுக்கு ஒரே நேரத்தில் பல எதிரிகளை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

சம்பாஜி மகாராஜாவின் ஆட்சிக்காலம் ஆனது சிவாஜி மகராராஜாவிற்கு பின் நடந்த மராத்தியர்களின் சுதந்திரப்போரின் முதல் அத்தியாயம் ஆகும். சிவாஜி மகாராஜா அவருடைய ஆட்சிக்காலத்தின்போதே சம்பாஜி மகாராஜாவிற்கு அரசு நிர்வாகம் மற்றும் போர் நடவடிக்கைகளில் மிகச் சிறந்த கல்வியைக் கொடுத்திருந்தார். அவர் தமது பதினான்காம் வயது முதற்கொண்டே நாட்டின் நிர்வாகம் மற்றும் படைகளை தலைமையேற்று வழிநடத்திச் செல்வதில் அக்கறை செலுத்தினார். இளவரசராக இருக்கும்போதே அவர் மொகலாயர் மற்றும் அடில்ஷாவின் பல்வேறு ஆட்சிப் பகுதிகளின் மீதான தாக்குதல்களை தலைமையேற்று நடத்தினார். அக்காலத்திலேயே பிரெஞ்சு யாத்ரிகர் அம்பே கரே என்பவர் சம்பாஜி மகாராஜாவின் போர்த் திறமைகளை வர்ணிக்கும் போது, 'இந்த இளவரசர் இளைஞனாக இருந்தாலும் தைரியசாலி மற்றும் தன்னுடைய தந்தையின் புகழுக்கு ஒப்பாயிருக்கிற சமயோசித மனதிடம் உள்ளவர்....' என்று கூறியுள்ளார்.

சம்பாஜி மகாராஜா சத்ரபதி ஆனபோது மராத்தியர்களின் மொகலாயர்களுடனான போர் தீவிரமடைந்திருந்தது. காபூலிலிருந்து, கன்னியாகுமரி வரையான ஆட்சிப் பகுதிகள் அனைத்தையும் கைப்பற்றி முழு நிறைவான ஒருங்கிணைக்கப்பட்ட மொகலாய பேரரசை நிறுவுவது ஔரங்கசீப்பின் ஆசையாக இருந்தது. அவருடைய மிகப் பெரிய படைபலம் மற்றும் பொருளாதார பலத்தால் மராத்தியர்களின் அரசை முற்றிலும் தரைமட்டமாக்கிவிட வேண்டும் என்பதே அவரது கனவாக இருந்தது. ஆனால் சம்பாஜி மகாராஜா தமது வீரத்தாலும் போர்த் திறமைகளாலும் ஔரங்கசீப்பின் அந்த கனவை தூள் தூளாக்கினார்.

அவரது படைப்பிரிவுகள் தனித்தனியாக பிரிந்து பல்வேறு முகலாய ஆட்சிப்பகுதிகளில் தாக்குதல் நடத்தின. நாசிக் அருகிலுள்ள மராத்தியர்களினுடைய இராம்சேஜ் கோட்டையை பேரரசின் படையால் நீண்டகாலமாக முயன்றும் கூட கைப்பற்ற முடியவில்லை. இவ்விதமாய் சம்பாஜி மகாராஜாவின் வீரத்திற்கு முன் ஔரங்கசீப் மண்டியிட வேண்டியதாயிற்று. இதன் காரணமாய் ஒரு கட்டத்தில் மிகுந்த வெறுப்பு மற்றும் கோபம் அடைந்து தனது தலைமீதிருந்த தலைபாகையை தரைமீது வீசியெறிந்தார். மேலும், ‘சம்பாஜியை வென்று அடக்கும்வரை நான் மீண்டும் தலைபாகையை அணிய மாட்டேன்’ என்று சபதம் எடுத்துக் கொண்டார். சம்பாஜி மகாராஜா. அந்த அளவுக்கு ஔரங்கசீப்பை உதவியற்ற நிலையில் விரக்தி அடைய வைத்தார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

மராத்தியர்களினுடைய கோட்டைகளைக் கைப்பற்றினால் அவர்களின் ஆட்சி முடிவுக்கு வந்துவிடும் என்ற எண்ணத்துடன் ஔரங்கசீப் ஆரம்பத்தில் நாசிக் அருகிலுள்ள இராம்சேஜ் கோட்டையை முற்றுகை இட்டார். ஔரங்கசீப் படைவீரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. மராத்திய படை வீரர்களின் எண்ணிக்கை மிகமிக குறைவாக இருந்தது. ஆனாலும் அவர்கள் விடா முயற்சியுடன் தொடர்ந்து எதிர்த்து போரிட்டனர். அந்த முற்றுகை அடுத்த ஐந்து வருடங்களுக்கு நீடித்தது. குறைந்த எண்ணிக்கையிலான மராத்திய படைவீரர்கள் மேற்கொண்ட இந்த வீரமிக்க செயல் ஈடு இணையற்றது. மராத்தியர்களின் விடா முயற்சியுடன் கூடிய எதிர்தாக்குதலில் இருந்து மராத்தியர்களுடன் போரிடுவது மிகவும் கடினமானது என்பதனை ஔரங்கசீப் புரிந்து கொண்டார்.

**சித்திகளுக்கு எதிரான படையெடுப்பு:** ஜஞ்ஜிராவின் சித்தி மராத்திய மக்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார். மராத்திய ஆட்சிப் பகுதிகளின் மீது திடீர் தாக்குதல், கொள்ளை அடித்தல் மற்றும் பல அட்டூழியங்கள் செய்து கொண்டிருந்தார். ‘வீட்டில் எலி எப்படியோ அப்படியே நாட்டில் சித்தி’ என்று அவரை சபாசதன் வர்ணித்துள்ளார். கிறிஸ்தவ ஆண்டு 1682இல் சம்பாஜி மகாராஜா அவருக்கு எதிராக படையெடுத்தார். அவரது படையானது சித்தியின் ஆட்சிப்பகுதியான தண்டாராஜ்புரி என்ற கோட்டையை முற்றுகையிட்டது மேலும் ஜஞ்ஜிராவின் மீதும் பீரங்கிப்படை கொண்டு வெடிகுண்டு தாக்குதல் நடத்தியது. ஆனால் அந்த நேரத்தில்தானே மொகலாயர்களின் படையானது சுயராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்தது. இதனால் ஜஞ்ஜிரா முற்றுகையை பாதியில் கைவிட்டு சம்பாஜி மகாராஜா பின்வாங்க வேண்டியதாயிற்று.

**போர்த்துக்கீசியர்களுக்கு எதிரான படையெடுப்பு:** கோவாவின் போர்த்துக்கீசியர்கள் சம்பாஜி மகாராஜாவுக்கு எதிராக மொகலாயருடன் கைகோர்த்துக் கொண்டனர். எனவே போர்த்துக் கீசியர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று சம்பாஜி மகாராஜா தீர்மானித்தார். கி.பி. 1683இல் அவர் போர்த்துக்கீசியர்களின் ரேவ்தாண்டா துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்தினார். எதிர்தாக்குதலாக போர்த்துக்கீசியர்கள் கோவாவின் எல்லைமீது இருந்த மராத்தியர்களின் ஃபோண்டா கோட்டையை முற்றுகையிட்டனர். மராத்தியர்கள் இம்முற்றுகையை தகர்த்தெறிந்தனர். மேலும், கோவா மீது தாக்குதல் நடத்தினர். இச்சண்டையில் யெசாஜி கங்க் என்பவர் தனது பராக்கிரமத்தை நிரூபித்துக் காட்டினார். இப்போரில் போர்த்துக்கீசிய ஆளுநர் படுகாயமடைந்தார். எனவே, அவர் பின்வாங்கத் தொடங்கினார். சம்பாஜி மகாராஜா அவரை பின்தொடர்ந்து சென்றார். இதனால் போர்த்துக்கீசியர்கள் பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டனர். இவ்வேளையில் மொகலாயர்கள் தென் கொங்கணத்தின் மீது ஆக்கிரமிப்பு செய்த தகவல் சம்பாஜி மகாராஜாவுக்கு தெரிய வந்தது. எனவே கைகூடி வந்த கோவாவின் வெற்றியை கைவிட்டு மொகலாயர்களின் தாக்குதலுக்கு எதிர்தாக்குதல் செய்வதற்காக அவர் திரும்பி வர வேண்டியதாயிற்று.

**அடில்ஷா மற்றும் குதுப்ஷா ஆட்சிகளின் முடிவு:** ஔரங்கசீப்பால் மராத்தியர்களுக்கு எதிரான படையெடுப்பில் வெற்றிபெற முடியவில்லை. ஆகையால் இப்படையெடுப்பை அவர் தள்ளி வைத்தார். அதற்குபின் அவர் தனது கவனத்தை அடில்ஷா மற்றும் குதுப்ஷா அரசுகளின் மீது திருப்பினார். ஔரங்கசீப் அவர்களின் அரசுகளை வென்று கைப்பற்றினார்.

அந்த இரண்டு அரசுகளினுடைய பொருள் செல்வம் மற்றும் படைபலம் மொகலாயர்களின் கைவசம் வந்ததால் ஔரங்கசீப்பின் நிலை மேலும் வலுவடைந்தது. அதற்கு பின்பு மராத்தியர்களை தோற்கடிப்பதற்காக தனது வலிமை அனைத்தையும் ஒன்றுதிரட்டினார். அவர்களின் ஆட்சிப் பகுதிகளின்மீது நாற்புறங்களில் இருந்தும் தாக்குதல் நடத்தினார். மொகலாய படையை எதிர்த்து தாக்குதல் நடத்தும்போது மராத்தியர்களின் படைத்தளபதி ஹம்பீர்ராவ் மோஹிதே கொல்லப்பட்டார். இதன் விளைவாக சம்பாஜி மகாராஜாவின் படைபலம் நலிவடைந்தது.

**சம்பாஜி மகாராஜாவின் ஆட்சிமுறை:** சம்பாஜி மகாராஜா பல்வேறு போர் முனைகளில் போரில் ஈடுபட்டிருந்தாலும் தமது ஆட்சிப்பகுதியின் அரசு நிர்வாகத்தில் கவனம் செலுத்தாமல் இருந்தது

இல்லை. அவர் சிவாஜி காலத்திலிருந்த உடனடி நீதி மற்றும் வரி வசூல் முறையை அப்படியே கடைபிடித்தார். சுயராஜ்யத்தை எதிர்த்து கலகம் செய்வோர் மற்றும் குடிமக்களுக்கு தொல்லை தரும் நிலக்கிழார்கள்மீது அவர் கடுமையான நடவடிக்கை எடுத்தார். அவர்களை கடுமையாக தண்டித்தார். மகாராணி யெசூபாயிடம் அரசு நிர்வாகத்தின் பொறுப்பை ஒப்படைத்து இருந்தார். அவருக்கென்று தனி முத்திரை செய்து கொடுத்திருந்தார். சிவாஜி மகாராஜாவினுடைய மக்கள் நலக் கொள்கைகளை அவர் தமது ஆட்சியிலும் மேலும் தொடர்ந்து கடைபிடித்தார்.

சம்பாஜி மகாராஜாவுக்கு சமஸ்கிருதம் உட்பட பல மொழிகளில் புலமை இருந்தது. அவர் ஒரு புத்தகபிரியர் ஆவார். ஆட்சித்துறை தொடர்பான பண்டைக்கால இந்திய புத்தகங்களை கற்று அவற்றின் முக்கிய மைய கருத்துகளை 'புத்பூஷண்' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

சம்பாஜி மகாராஜா 'புத்பூஷண்' என்ற நூலை சமஸ்கிருத மொழியில் எழுதியுள்ளார். அதில் இரண்டாவது அத்தியாயத்தில் அரசியல் பற்றிய கருத்துப் பரிமாற்றம் தரப்பட்டுள்ளது. அதில் அரசரின் தகுதிகள், தலைமை அதிகாரி, இளவரசர்கள் ஆகியோரின் கல்வி மற்றும் பணி, அரசரின் ஆலோசகர்கள், கோட்டை மற்றும் கோட்டைக்கு தேவையான பொருள்கள், படைப்பிரிவு, அரசரின் கடமைகள், வேவு பார்த்தல் முதலியவற்றைப் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**சம்பாஜி மகாராஜாவின் இறப்பு:** ஔரங்கசீப் சம்பாஜி மகாராஜாவை தோற்கடிப்பதற்காக கடுமையாக முயற்சிகள் செய்து கொண்டிருந்தார். கோல்ஹாபூர் மாகாணத்தின் பொறுப்பு அதிகாரியாக முகர்ரப்கான் என்பவரை நியமித்திருந்தார். கொங்கணத்திலுள்ள சங்கமேஷ்வர் என்ற இடத்தில் சம்பாஜி மகாராஜா இருப்பதாக செய்தி முகர்ரப்கானுக்கு தெரியவந்தது. உடனே அவர் அங்கே திடீர் தாக்குதல் நடத்தி சம்பாஜி மகாராஜாவை கைது செய்தார். பேரரசருக்கு முன்பாக கொண்டுவந்த பின்பும் அவர் பேரரசரை மிகத் தைரியமாக எதிர்கொண்டார். பேரரசரின் ஆணைக்கிணங்க 1689ம் ஆண்டு மார்ச் 11 ஆம் நாள் அன்று மிகவும் கொடிய முறையில் கொல்லப்பட்டார். மராத்தியர்களின் மகாராஜாவான சம்பாஜி மகாராஜா தனது இறப்பை மிகுந்த துணிவுடனும் மன உறுதியுடனும் எதிர் கொண்டார். அவருடைய தியாகத்தால் மராத்தியர்கள் ஊக்கம் பெற்று மொகலாயர்களுடனான போராட்டத்தை மேலும் கடுமையாக்கினர்.



சத்ரபதி இராஜாராம் மகாராஜ்

**சத்ரபதி இராஜாராம் மகாராஜா:** சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் இரண்டாவது மகன் இராஜாராம் மகாராஜா ஆவார். அவர் 1670 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் இராய்கட்டில் பிறந்தார். சம்பாஜி மகாராஜாவின் மறைவுக்குப் பின் அவர் சத்ரபதி ஆனார். அந்நேரத்தில் மராத்தியர்களின் அரசை வெற்றி கொள்ளும் தனது கனவு நிறைவேறப் போகிறது என்று ஔரங்கசீப்பிற்கு தோன்றியது. எனவே அவர் இராய்கட்டை முற்றுகை இடுவதற்காக சுல்ஃபிகார்கானை அனுப்பினார். அவ்வேளையில் இராஜாராம் மகாராஜா மற்றும் அவரது மனைவி மகாராணி தாராபாய், சம்பாஜி மகாராஜாவின் மனைவி யெசூபாய் மற்றும் மகன் ஷாகு ஆகியோர் இராய்கட்டில்தான் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பது ஆபத்தானது என்று எண்ணிய மகாராணி யெசூபாய் இப்பிரச்சனையை தைரியமாய் சமாளித்தார். எச்சூழ்நிலையிலும் மொகலாயர்களிடம் சரணடையக் கூடாது என்னும் மிக முக்கியமான அரசியல் தீர்மானத்தை அவர் இராய்கட்டில் வைத்து எடுத்தார். அதன்படி இராஜாராம் மகாராஜா இராய்கட் முற்றுகையிலிருந்து வெளியேறி தேவைப்பட்டால் மிகத் தொலைவிலுள்ள செஞ்சிக்கு செல்ல வேண்டும், மேலும் அரசி யெசூபாய் தலைமையின் கீழ் இராய்கட்டைப் பாதுகாக்கும் போர் தொடர்ந்து நடைபெற வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. மகாராணி யெசூபாய் தனது மகனை சத்ரபதி ஆக்காமல் இராஜாராம் மகாராஜாவை சத்ரபதி ஆக்கியது சுயராஜ்யத்தின் மீது அவருக்கிருந்த பற்று மற்றும் தன்னலமற்ற பண்புக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். அவர் தனது மற்றும் தன் மகனின் உயிரைப்பற்றி கவலைப்படாமல் மராத்திய சத்ரபதிக்கு பாதுகாப்பு தந்தார்.



**வாருங்கள்! கண்டுபிடிப்போம்!**

இந்திய தேசப்படத்தில் செஞ்சி என்ற இடத்தை கண்டுபிடிக்கவும்.

**இராஜாராம் மகாராஜா செஞ்சிக்கு செல்லல்:** 1689 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் நாள் இராஜாராம் மகாராஜா தனது நெருங்கிய கூட்டாளிகள் சிலருடன் இராய்கட் முற்றுகையிலிருந்து தப்பினார். அவர் தெற்கிலுள்ள செஞ்சிக்கு செல்ல தீர்மானித்தார். செஞ்சிக் கோட்டையை யாரும் எளிதில் வெல்ல முடியாது. அக்கோட்டையை வெற்றி கொள்வது மொகலாயருக்கு எளிதில்லை. ப்ரலாத், நிரோஜி, கண்டோ பல்லாள், ரூபாஜி போஸ்லே முதலிய நம்பிக்கையானவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு இராஜாராம் மகாராஜா செஞ்சியை அடைந்தார்.

**மராத்தியர்களின் நடவடிக்கைகள்:** வலுமிக்க மொகலாயரை எதிர்த்து நெடுநாட்களாக போரிடுவது கடினமாக இருந்தது. மொகலாயர்கள் 1689 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இராய்கட்டை கைப்பற்றினர். மேலும் மகாராணி யெசூபாய் மற்றும் ஷாகு ஆகியோரை சிறையில் அடைத்தனர். செஞ்சிக்கு செல்லும்போது இராஜாராம் மகாராஜா மொகலாயருக்கு எதிரான போராட்டத்தின் பொறுப்பை இராம்சந்திரபன்த் அமாத்யா, சங்கராஜி நாராயண் சச்சிவ், சந்தாஜி கோர்படே மற்றும் தானாஜி ஜாதவ் ஆகியவரிடம் ஒப்படைத்திருந்தார்.

மராத்தியர்களின் பார்வையில் நிலைமை மிகவும் சிக்கலாய் இருந்தது. ஔரங்கசீப் மராத்திய படைத்தலைவர்களுக்கு மரபுரிமையாய்ப் பெறத்தக்க சொத்துகள் மற்றும் நில மானியம் வழங்கி தன்னுடைய பக்கம் இழுத்துக் கொண்டார். அதனை முறியடிக்க இராஜாராம் மகாராஜாவும் அதே உத்தியை பயன்படுத்தினார். மொகலாய ஆட்சிப்பகுதியை வெற்றி கொண்டால் அந்த ஆட்சிப் பகுதியின் நிலமானியம் அந்த ஆட்சிப் பகுதியை வெற்றி கொண்ட படைத்தலைவருக்கு வழங்கப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டது. சத்ரபதியினுடைய இந்த உறுதிமொழிக்கு பின்னர் பல திறமைமிக்க மராத்திய படைத்தலைவர்கள் முன் வந்தனர். அவர்கள் மொகலாய ஆட்சிப் பகுதியை ஊக்கத்துடன் படையெடுத்து தாக்கத் தொடங்கினர். மொகலாய படைத்தலைவர்களை தோற்கடித்தனர். இத்தகைய வீரமிக்க நடவடிக்கைகளில் சந்தாஜி மற்றும் தானாஜி முன்னணியில் இருந்தனர். அவர்களின் எதிர்பாராத தாக்குதல் மற்றும் மறைவிலிருந்து தாக்கி ஓடும் சாமர்த்தியம் போன்ற போர்த்தந்திரங்களால் மொகலாயருக்கு அவர்களுடைய மிகப் பெரிய அளவிலான போர்த்தளவாடங்கள் மற்றும் வலுவான பீரங்கிப் படைகளை பயன்படுத்துவது கடினமானது. மிகுதியான கோட்டைகள், ஆட்சிப்பகுதி மற்றும் நிதி கைவசம் இல்லாதிருந்தும் மராத்தியர்கள் மொகலாயரை முற்றிலும் கலங்கி தவிக்க விட்டனர். ஒரு தருணத்தில் சந்தாஜி கோர்ப்படே மற்றும் விட்டோஜி சவ்ஹான் என்பவர்கள் பேரரசரின் பாசறைமீது திடீரென தாக்குதல் நடத்தி அவருடைய கூடாரத்தின் மீதிருந்த தங்க முகட்டை வெட்டி எடுத்து வந்து விட்டனர்.



**உங்களுக்குத் தெரியமா?**

தானாஜியிடம் மொகலாய படை வீரர்களுக்கு எவ்வளவு பயம் இருந்தது எனில், குதிரை தண்ணீர் குடிக்கும்போது அச்சத்தால் துள்ளிக் குதித்தது எனில் அவர்கள், ‘ஏன், உனக்கு நீரில் தனாஜி தெரிகிறாரா என்ன?’ என்று குதிரையிடம் வினவினர்.

**செஞ்சி முற்றுகை:** இராய்கட்டை கைப்பற்றிய பின்பு, பேரரசர் சுல்பிகர்கானை தெற்கிலுள்ள செஞ்சியின் மீது போர் நடவடிக்கை எடுக்க அனுப்பினார். அவர் செஞ்சியை முற்றுகை இட்டார். மராத்தியர் செஞ்சியின் கோட்டையை கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் கடுமையாய் போரிட்டு பாதுகாத்தனர். சந்தாஜி மற்றும் தனாஜி ஆகியோர் முற்றுகையில் ஈடுபட்டிருந்த மொகலாய படைமீது வெளிப்புறத்திலிருந்து மிக கடுமையான தாக்குதல் நடத்தினர். இறுதியில் இராஜாராம் மகாராஜா முற்றுகையிலிருந்து தப்பித்து மகாராஷ்டிராவிற்கு திரும்பினார். அதன் பிறகு சுல்பிகர்கான் செஞ்சிக் கோட்டையை கைப்பற்றினார்.

இராஜாராம் மகாராஜா திரும்பி வந்ததினால் மராத்தியர்களின் பலம் மிகவும் அதிகரித்தது. அவர்கள் மொகலாயர்களின் ஆட்சியின் கீழிருந்த கான்தேஷ், வர்ஹாட், பாக்லாண் ஆகிய பகுதிகளின் மீது தாக்குதல் நடத்தினர். இராஜாராம் மகாராஜா தமது அறிவாற்றல் மற்றும் அரசு நிர்வாகத் திறமையால் சந்தாஜி மற்றும் தனாஜி போன்ற நூற்றுக்கணக்கான மராத்திய வீரர்களை உருவாக்கினார். அவர்களிடம் சுயராஜ்யத்தை காக்கும் உள்ளுணர்வை தூண்டுகிற மகத்தான செயலை செய்தார். ஆனால் இவை அனைத்தும் நடைபெற்று கொண்டிருக்கும்போது 1700 ஆம் ஆண்டு மார்ச் இரண்டாம் நாளில் இராஜாராம் மகாராஜா குறுகிய காலத்தில் நோயால் சின்ஹாகட்டில் மரணமடைந்தார்.

இராஜாராம் மகாராஜா பிறர் எண்ணங்களை உணர்கின்ற மற்றும் பிறர் மனதுக்கு பிடித்தமான பண்புகளை பெற்றிருந்தார். மராத்திய மாநிலத்தில் உள்ள அனைத்து திறமைமிக்க மனிதர்களையும் அவர் ஒன்றாக கூடச்செய்தார். அவர்களை ஒன்றிணைத்து அவர்களிடையே புதிய உற்சாகத்தை ஏற்படுத்தினார். சம்பாஜி மகாராஜாவின் மறைவுக்கு பின்னர் 11 ஆண்டுகளாக அவர் ஔரங்கசீப்பை மிகுந்த தைரியத்துடனும் தீவிர உறுதியுடனும் எதிர்த்து போரிட்டார். மிகவும் கடினமான நேரத்திலும் சுயராஜ்யத்தை பாதுகாப்பது என்பதே இராஜாராம் மகாராஜாவின் மிகப்பெரிய சாதனை ஆக இருந்தது.

ரியாசதகார் கோ. ச. சர்தேசாயி என்பவர் சத்ரபதி ராஜாராம் அவர்களை வர்ணிக்கும்போது ‘உறுதியான அறிவுக்கூர்மையுடையவர்’ என்கிற

பெயருரிச் சொல்லை அடைமொழியாகப் பயன்படுத்தியுள்ளார். அவர் தந்துள்ள இக்குறிப்பு முற்றிலும் உண்மையாகவே தெரிகிறது.

### செய்து பார்.

- உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்த பெண்களின் பேட்டி காணவும்.

**மகாராணி தாராபாய்:** சத்ரபதி ராஜாராம் மகாராஜாவின் மறைவிற்கு பின்னர் ஔரங்கசீப்பிற்கு நாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று தோன்றியது. ஆனால் நிலைமை தலைகீழாக இருந்தது. ஔரங்கசீப் ஒவ்வொரு சண்டையிலும் வெற்றி பெற்றார். ஆனால் அவரால் போரை மட்டும் வெற்றி கொள்ள முடியவில்லை. முற்றிலும் பாதகமான சூழ்நிலையிலும் சுயராஜ்யத்தின் போரை தலைமையேற்று நடத்திச் செல்ல இராஜாராம் மகாராஜாவின் திறன்மிக்க அரசியான மகாராணி தாராபாய் முன் வந்தார்.



**மகாராணி தாராபாய்**

மொகலாய வரலாற்று ஆசிரியர் காஃபிகான் என்பவர் மகாராணி தாராபாயை வர்ணிக்கும்போது பின்வருமாறு கூறியுள்ளார். 'அவர் (தாராபாய்) கூர்மதியுடையவர் மற்றும் அறிவை நன்கு பயன்படுத்தும் ஆற்றல் மிக்கவர். படை நிர்வாகம் மற்றும் அரசு நிர்வாகம் முதலிய காரியங்களில் அவரது செயல்பாடு கணவரின் ஆட்சியின்போதே பெரும் புகழ் பெற்றிருந்தது.'

சத்ரபதி ராஜாராம் மகாராஜாவின் மறைவுக்குப்பின் மகாராணி தாராபாய் தம் படைத்தலைவர்களின் உதவியுடன் முற்றிலும் பாதகமான சூழ்நிலையிலும் விடுதலைப் போரை துணிவுடன் தொடர்ந்தார். ஔரங்கசீப் சத்தாரா, பன்ஹாலா ஆகிய மராத்திய நிலப்பகுதிகளை வென்றாலும், மராத்தியர்கள் மத்திய பிரதேசம், குஜராத் ஆகிய மொகலாயர்களின் ஆட்சிப் பகுதிகள் வரை தீவிரமாக தாக்கினர். தாராபாய் போரிடும் பகுதிகளை மேலும் விரிவுபடுத்தினார். கிருஷ்ணாஜி சாவந்த், கண்டேராவ் தாபாடே, தானாஜி ஜாதவ், நேமாஜி ஷிந்தே ஆகிய படைத்தலைவர்கள் மகாராஷ்டிராவிற்கு வெளியே மொகலாயர்களுக்கு எதிராக போரிடத் தொடங்கினர். போரின் முடிவு மாறுகிறதற்கான ஓர் அடையாளமாக இருந்தது.

மகாராணி தாராபாய் 7 ஆண்டுகள் போரிட்டார். மராத்திய ஆட்சிப்பகுதியை பாதுகாத்தார். அனைத்து நிர்வாக வேலைகளையும் தனியாளாய் பொறுப்பேற்று நடத்தி படைகளை சுயராஜ்ய பணியில் இணைத்து செயல்பட ஊக்குவித்தார். சிரோன்ஞ், மன்ந்சௌர், மாள்வா ஆகிய இடங்கள்வரை மராத்திய படைத்தலைவர்கள் மொகலாயரை எதிர்த்து போரிட்டனர். காஃபிகான், "இராஜாராமின் மனைவி தாராபாய் என்பவர் வியக்கத்தக்க வகையில் பெரிய காரியங்களை சாதித்தார், அது அவருடைய படையை தலைமையேற்று செல்லுதல் மற்றும் போர் நடவடிக்கைகளை நிர்வாகித்தல் போன்ற

### உங்களுக்குத் தெரியுமா?

மகாராணி தாராபாய் மறைந்திருந்து தாக்கி ஓடும் போர் முறையை மிகத் திறமையாய் பயன்படுத்தினார். ஔரங்கசீப்பின் படையின் முன்னால் மராத்தியர்களின் படைபலம் மிகவும் குறைவாய் இருந்தது. ஔரங்கசீப் கோட்டையை கைப்பற்றுவதற்காக கோட்டையை முற்றுகை இடுவார். முடிந்த வரையில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலம் மராத்தியர் கோட்டையை பாதுகாக்க வேண்டும். ஆனால் மழைக்காலம் நெருங்க கோட்டையின் பொறுப்பு அதிகாரி நம்பிக்கை துரோகி ஆனதுபோல நடித்து ஔரங்கசீப்பிடம் இருந்து இலஞ்சம் வாங்கி கோட்டையை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். கோட்டையின் பொறுப்பு அதிகாரி இலஞ்சமாக பெற்ற தொகையை மராத்திய கருவூலத்தில் சேமிக்க வேண்டும். ஔரங்கசீப் கோட்டைக்குள் செல்வம், உணவு தானியம், போர்த்தளவாடங்களை நிரப்பிய உடனேயே தாராபாய் அக்கோட்டையை மீண்டும் கைப்பற்ற வேண்டும். தாராபாயினுடைய இந்த போர் தந்திரம் 'பாதுகாப்பான சேமிப்பு பெட்டக முறை' (Safe Deposit locker System) என்று வர்ணிக்கப்படுகிறது.

தனியியல்புகளுக்கு முதல்தரமான சான்று ஆயிற்று. அதன் காரணமாய் மராத்தியர்களின் தாக்குதல்கள் மற்றும் அவற்றின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்தது'' என்று பதிவு செய்துள்ளார்.



### உங்களுக்குத் தெரியுமா?

தாராபாயின் செயல்திறத்தை வர்ணனை செய்யும்போது 'சிவபாரத்' எழுதிய பரமானந்தாவின் மகன் கவிஞர் தேவதத்தா,

*ताराबाई रामराणी । भद्रकाली कोपली ।*
*दिल्ली झाली दीनवाणी । दिल्लीशाचे गेले पाणी ।*
*रामराणी भद्रकाली । रणरंगी क्रुद्ध झाली ।*
*प्रयत्नाची वेळ आली । मुगल हो सांभाळा ।।*

என்று கூறியுள்ளார்.

இவ்விதத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவினுடைய வீரத்தின் பாரம்பரியத்தை மகாராணி தாராபாய் மேற்கொண்டு பேணிக் காத்தார்.

மராத்தியர்களின் கடுமையான போர் நடவடிக்கைகளால் ஔரங்கசீப் சோர்வுற்றார். தொடர்ந்து 25 ஆண்டுகளாக மொகலாய - மராத்திய போர் நடந்தது. மராத்தியர்களை அடக்குதல் என்பது மொகலாயர்களால் முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் பேரரசர் ஔரங்கசீப் கி.பி. 1707 இல் அகமத்நகரில் மரணம் அடைந்தார். அவருடைய இறப்பிற்கு பின்பே மராத்தியர்களின் விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.

மராத்தியரின் இந்த விடுதலைப்போர் என்பது மொகலாயரின் வல்லதிகாரப் பேராவலுக்கும் மராத்தியரின் விடுதலை நாட்டத்துக்கும் இடையோன ஒரு போராகும். இதில் மராத்தியருக்கு வெற்றி கிடைத்தது. ஔரங்கசீப்பின் மறைவிற்குப்பின் அரசியல் களத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதில் மராத்திய தலைவர்கள் ஈடுபட்டனர். தில்லியின் ஆட்சிபீடத்தை அவர்கள் கட்டுபாட்டுக்குள் வைத்து அவர்கள் கிட்டத்தட்ட இந்தியாவின் எல்லா பகுதிகளின் செயல்பாடுகளையும் கவனித்தனர் மற்றும் பாதுகாத்தனர். இதனால் பதினெட்டாம் நூற்றாண்டு ஆனது மராத்தியர்களின் நூற்றாண்டு என்று அழைக்கப்படுகிறது. அந்த நூற்றாண்டில் மராத்தியர்களின் சாதனைகளின் வரலாற்றை நாம் அடுத்த பாடத்தில் கற்க உள்ளோம்.

## போன்சலேக்களின் குடும்ப மரபுவழி

மாலோஜிராஜே
↓
ஷஹாஜிராஜே
(கி.பி. 1594 இலிருந்து 1664)
↓

- சம்பாஜி
- சத்ரபதி சிவாஜி மகாராஜா (கி.பி. 1630 முதல் 1680)
  - சத்ரபதி சம்பாஜி மகாராஜா (கி.பி. 1657 முதல் 1689)
    - ↓ சத்ரபதி ஷாகு மகாராஜா (கி.பி. 1682 முதல் 1749)
      - ↓ சத்ரபதி ராம்ராஜா (தத்து எடுக்கப்பட்டவர் கி.பி. 1750 முதல் 1777)
  - சத்ரபதி ராஜாராம் மகாராஜா (கி.பி. 1670 முதல் 1700)
    - சத்ரபதி சிவாஜி (தாராபாயின் மகன்)
      - ↓ ராம்ராஜா (சத்தாரா அரசால் தத்து எடுக்கப்பட்டவர்
    - சத்ரபதி சம்பாஜி (ராஜஸ்பாயின் மகன்)
- வியங்கோஜி

## பயிற்சி

1. **சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்.**

(1) இவருடைய வீரத்தால் ஔரங்கசீப்பிற்கு விரக்தி ஏற்பட்டது.

(அ) ஷாஹஜாதா அக்பர்
(ஆ) சத்ரபதி சம்பாஜி மகாராஜா
(இ) சத்ரபதி ராஜாராம் மகாராஜா

(2) பேரரசரின் கூடாரத்தின் மேலுள்ள தங்க முகட்டை வெட்டியவர்கள்.

(அ) சந்தாஜி மற்றும் தானாஜி
(ஆ) சந்தாஜி கோர்படே மற்றும் விட்டோஜி சவ்ஹான்
(இ) கண்டோ பல்லாள் மற்றும் ரூபாஷி போஸ்லே

(3) கோவா போரில் வீரத்துடன் போரிட்டவர்.

(அ) யேஸாஜி கங்க்
(ஆ) நேமாஜி ஷிந்தே
(இ) ப்ரல்ஹாத் நிலாஜி

2. பாடத்தில் தேடி கண்டுபிடித்து விடை எழுதவும்.

((1) சம்பாஜி மகாராஜா ஜன்ஜிரா முற்றுகையை பாதியில் விட்டுவிட்டு பின்வாங்கியது ஏன்?

(2) சம்பாஜி மகாராஜா போர்த்துக்கீசியர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என ஏன் முடிவெடுத்தார்?

(3) ராஜாராம் மகாராஜா செஞ்சிக்கு செல்லும்போது சுயராஜ்யத்தை பாதுகாக்கும் பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தார்?

(4) மகாராணி தாராபாயினுடைய வீரத்தை வர்ணனை செய்யும்போது தேவதத்தா என்ற கவிஞர் எவ்வாறு கூறியுள்ளார்?

3. காரணங்களை எழுதுக.

(1) ஔரங்கசீப் தனது படையெடுப்பை அடில்ஷா மற்றும் குதுப்ஷா ஆட்சிகளின் பக்கம் திருப்பினார்.

(2) சம்பாஜி மகாராஜாவின் மறைவுக்குப் பின்னர் மொகலாயருக்கு எதிரான போரை மராத்தியர்கள் கடுமையாக்கினர்.

(3) மகாராணி யெசூபாயின் தலைமையின் கீழ் ராய்கட்டை பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**செயல்திட்டம்.**

இந்திய நிலவரைபடத்தில் கோவா, பிஜப்பூர், கோல்கோண்டா, செஞ்சி, அகமதாபாத், அகமத்நகர் ஆகிய இடங்களைக் குறிக்கவும்.



செஞ்சிக் கோட்டை

# 10. மராத்தியர்களின் ஆட்சி விரிவாக்கம்

மராத்திய விடுதலைப் போரின் தொடக்கத்தில் மொகலாயர்கள் வலிந்து தாக்குபவர்களாகவும் மராத்தியர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்பவர்களாகவும் இருந்தனர். இச்சூழ்நிலை விடுதலைப் போரின் முடிவில் தலைகீழாக மாறியது. மராத்தியர்களுக்கு எதிராக மொகலாயர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் மராத்தியர்கள் மொகலாயர்களை அடக்கி, பெரும்பாலும் இந்தியா முழுமையும் நிலவியிருக்குமாறு மராத்திய ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்தினர். இதைப்பற்றி நாம் இப்பாடத்தில் கற்க உள்ளோம்.

**ஷாகு மகாராஜாவின் விடுதலை:** பேரரசர் ஔரங்கசீப்பின் இறப்புக்குப் பின் அவருடைய மைந்தர்களுக்கிடையே தில்லி அரியணைக்கான உரிமைப் போர் நிகழ்ந்தது. இளவரசர் ஆஜம்ஷா என்பவர் தெற்கில் இருந்தார். இவர் உடனடியாக பேரரசின் அரியணையைக் கைப்பற்ற தில்லி நோக்கி விரைந்தார். இளவரசர் ஷாகு இவரிடம் சிறைப்பட்டு இருந்தார். ஷாகு மகாராஜாவை சிறையிலிருந்து விடுவித்தால் மகாராணி தாராபாய்க்கும் ஷாகு மகாராஜாவிற்கும் இடையே சத்ரபதியின் அரியாசனத்திற்காக சண்டை ஏற்படும் இதனால் மராத்தியர்களின் வலிமை குன்றிவிடும் என்று ஆஜம்ஷா எண்ணினார். எனவே அவர் ஷாகு மகாராஜாவை விடுதலை செய்தார்.

**ஷாகு மகாராஜாவின் முடிசூட்டு விழா:** சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட உடன் ஷாகு மகாராஜா மகாராஷ்டிராவை நோக்கி விரைந்தார். அவருடன் சில மராத்தியப் படைத்தலைவர்கள் வந்து சேர்ந்து கொண்டனர். ஆனால் மகாராணி தாராபாய் ஷாகு மகாராஜாவின் சத்ரபதி அரியணைக்கான உரிமைக் கோரலை ஏற்றுக் கொள்ளவில்லை. புனே மாவட்டத்திலுள்ள பீமா ஆற்றின் கரையில் கேட் என்னுமிடத்தில் ஷாகு மகாராஜா மற்றும் மகாராணி தாராபாய் ஆகியோரின் படைகளுக்கிடையே போர் நடந்தது. அப்போரில் ஷாகு மகாராஜா வெற்றி பெற்றார். அவர் சத்தாராவைக் கைப்பற்றினார். அவர் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டார்.



ஷாகு மகாராஜா

சத்தாரா மராத்திய பேரரசின் தலைநகர் ஆனது.

சில காலத்திற்கு ஷாகு மகாராஜா மற்றும் மகாராணி தாராபாய் ஆகியோருக்கு இடையேயான பகை தொடர்ந்தது. கி.பி. 1710 இல் மகாராணி தாராபாய் பன்ஹாலாவில் தனது இளம் வயது மகன் சிவாஜி (II)-ஐ சத்ரபதியாக பறைசாற்றினார். அதிலிருந்து மராத்திய ஆட்சிப்பகுதியில் சத்தாராவுக்கு அருகில் கோலாப்பூரிலும் சுயேச்சையான பேரரசு ஒன்று தோன்றியது.

ஷாகு மகாராஜாவின் வாழ்க்கையின் ஆரம்ப பகுதி மொகலாயர்களின் முகாம்களிலேயே கழிந்ததால் அவர் மொகலாய அரசியல் கலையை அருகிலிருந்து கண்கூடாய் பார்த்தார். எனவே, அவர் மொகலாயர்களின் அரசியல் நுணுக்கங்களை முக்கியமாக வட இந்திய அரசியலில் உள்ள நுட்பங்களை நன்றாய் தெரிந்து கொண்டிருந்தார். மொகலாயர்களின் பலம் மற்றும் பலகீனம் பற்றியும் கூட அவர் நன்றாக தெரிந்து வைத்திருந்தார். இது தவிர மொகலாய அரசவையில் செல்வாக்குள்ள மனிதர்களின் அறிமுகமும் அவருக்கு கிடைத்தது. மாறிக்கொண்டிருந்த சூழ்நிலையில் இந்த எல்லா காரியங்களும் மராத்தியர்களின் அரசியலில் புதிய திசையை தீர்மானிக்க அவருக்கு உதவின.

மராத்திய அதிகாரத்தை அழிக்கும் ஆரம்பகால ஔரங்கசீப்பின் கொள்கையை அவருடைய வாரிசுகள் இப்போது கைவிட்டனர். எனவே இப்போது மொகலாய அதிகாரத்துடன் போரிடுவதற்கு பதிலாக அதனுடைய பாதுகாவலர் என முன் சென்று அதன் வழியாக தங்களது பேரரசை விரிவாக்க வேண்டும், என்ற புதிய அரசியல் கொள்கையை மராத்தியர்கள் தேர்ந்தெடுத்து பின்பற்றினர். புதிய தேவாலயத்தை கட்டுவதால் எவ்வளவு புண்ணியம் கிடைக்குமோ அதே அளவு புண்ணியம் பழைய தேவாலயத்தை செப்பனிடும்போதும் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இக்கொள்கையின் அடிப்படையாகும்.

மொகலாய அரசுக்கு வட மேற்கிலிருந்து ஏற்படக் கூடிய ஈரானிய மற்றும் ஆப்கானிய படையெடுப்புகள் பற்றிய பயம் இருந்தது அதுபோன்று அக்கம் பக்கத்திலுள்ள பத்தான், இராஜபுத்திரர், ஜாட், ரோகிலாக்கள் போன்ற உள்நாட்டு ஆட்சியாளர்களினாலும் ஆபத்து இருந்தது. இது தவிர அரசவைக்குள் நடைபெறுகின்ற உள்ளான போட்டிகள் மற்றும் சண்டைகளினாலும் மொகலாய அரசு மேலும் பலவீனமானது. இதனால் தில்லி அரசவையில் மராத்தியர்களின் உதவி தேவைப்பட்டது.

**பாலாஜி விஷ்வநாத்:** ஷாகு மகாராஜா மொகலாயர்களின் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டவுடன், பாலாஜி விஷ்வநாத் பட் என்பவரை 'பேஷ்வா' (தலைமை அமைச்சர்) ஆக்கினார். இவர் கொங்கணத்திலுள்ள ஸ்ரீவர்த்தன் என்னும் ஊரைச் சார்ந்தவர். அவர் ஆற்றல் வாய்ந்தவர் மற்றும் அனுபவம் உள்ளவர். ஷாகு மகாராஜாவே மராத்திய சாம்ராஜ்யத்தின் உண்மையான வாரிசு ஆவார், என்று எடுத்துக் கூறி பல மராத்திய படைத் தலைவர்களை அவர் ஷாகு மகாராஜாவின் பக்கம் திருப்பினார்.

கானோஜி ஆங்கரே என்பவர் மராத்திய கடற்படையின் தலைவராக இருந்தார். அவர் மகாராணி தாராபாயின் விசுவாசியாய் இருந்து அவரை ஆதரித்தார். அவர் ஷாகு மகாராஜாவின் ஆட்சிப் பகுதியில் தாக்குதல் நடத்தினார். இதனால் ஷாகு மகாராஜாவுக்கு ஓர் இக்கட்டான சூழ்நிலை உருவானது. இந்த சூழ்நிலையில் அவர் பாலாஜியை கானோஜி ஆங்கரேவுக்கு எதிராக அனுப்பினார். பாலாஜி போரை தவிர்த்ததோடு தனது இராஜதந்திரத்தால் கானோஜியை ஷாகு மகாராஜா பக்கம் இழுப்பதில் வெற்றி கண்டார்.

**நான்கில் ஒன்று (சௌத்தாயி) - பத்தில் ஒன்று (சர்தேஷ்முகி) உரிமை:** ஷாகு மகாராஜாவின் இருக்கையை மகாராஷ்டிராவில் வலுப்படுத்திய பின்பு பாலாஜி தமது பார்வையை வடக்கிலுள்ள அரசியலை நோக்கித் திருப்பினார். பேரரசர் ஔரங்கசீப்பின் மறைவிற்குப் பின்னர் தில்லி அரசவையில் சச்சரவுகளும் குழப்பங்களும் உருவாகி இருந்தன. அங்கே சையது சகோதரர்கள் அப்துல்லா (ஹசன்) மற்றும் ஹுசைன் அலி ஆகியோரின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. அவர்களின் உதவியோடு பாலாஜி கி.பி. 1711இல் மொகலாய பேரரசரிடமிருந்து தக்காணத்தின் மொகலாய ஆட்சிப் பகுதியிலிருந்து சில இடங்களின் சௌத்தாயி மற்றும் சில இடங்களின் சர்தேஷ்முகி வசூல் செய்யும் உரிமையை பெற்றார். சௌத்தாயி என்றால் வருவாயில் நான்கில் ஒரு பகுதி எனில் சர்தேஷ்முகி என்பது பத்தில் ஒரு பகுதி என்பதாகும்.



முதலாம் பாஜிராவ்

**முதலாம் பாஜிராவ்:** ஷாகு மகாராஜா பாலாஜி விஷ்வநாத்தினுடைய மரணத்திற்கு பின்னர் அவருடைய மகன் பாஜிராவ் (முதலாம்) என்பவரை கி.பி. 1720 இல் பேஷ்வா பதவியில் அமர்த்தினார். பேஷ்வா பதவியேற்று இருபது ஆண்டு காலப் பகுதியில் அவர் மராத்திய சாம்ராஜ்யத்தை விரிவாக்கினார்.

**பால்கேட்டில் நிஜாமின் தோல்வி:** மொகலாய பேரரசர் ஃபர்ருக்சியார் என்பவர் நிஜாம்-உல்-முல்க் என்பவரை தக்காணத்தின் சுபேதார் என அமர்த்தினார். கி.பி. 1713இல் நிஜாம் ஹைதராபாத்தில் தனது தனித்த இருப்புநிலையை விரிவாக்க முயற்சி செய்தார். பேரரசர் மராத்தியர்களுக்கு தென் பகுதியிலுள்ள மொகலாய ஆட்சிப் பகுதியின் சௌத்தாயி-சர்தேஷ்முகி வரி வசூலிக்கும் அதிகாரத்தை வழங்கியிருந்தார். இதனை நிஜாம் எதிர்த்தார். அவர் புனே பர்கானாவின் சில பகுதிகளைக் கைப்பற்றினார். பாஜிராவ் நிஜாமை அடக்கி வைக்க தீர்மானித்தார். அவர் நிஜாமை ஔரங்கபாத் அருகில் பால்கேட் என்ற இடத்தில் தோற்கடித்தார். அப்பொழுது அவர் மராத்தியர்களின் சௌத்தாயி-சர்தேஷ்முகி வரி வசூலிக்கும் உரிமையை ஒத்துக்கொண்டார்.

மொகலாய அரசு வலுவிழந்ததினால் வட இந்தியாவில் மராத்திய சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்த அதிக வாய்ப்பு உள்ளது என்பதனை பாஜிராவ் உணர்ந்தார். ஷாகு மகாராஜா பாஜிராவின் இக்கொள்கையை ஆதரித்தார்.

**மாள்வா:** தற்போது மத்திய பிரதேசத்திலுள்ள மாள்வா என்ற பகுதி மொகலாயர்களின் ஆட்சிப்பகுதியாக இருந்தது. பாஜிராவ் தனது சகோதரன் சிம்மாஜி ஆப்பாவின் தலைமையின் கீழ் மல்ஹார்ராவ் ஹோல்கர், ராணோஜி ஷிந்தே மற்றும் உதாஜி பவார் ஆகியோரை மாள்வாவிற்கு அனுப்பினார். அங்கே அவர்கள் தங்களின் பதவிகளை வலுப்படுத்தினர்.

**புந்தேல்கண்ட்:** புந்தேல்கண்ட் என்பது தற்போதைய மத்திய பிரதேசம் மற்றும் உத்திரபிரதேசம் ஆகியவற்றில் உள்ள ஜாஷி, பன்னா, சாகர் போன்ற நகரங்களைச் சுற்றியுள்ள சில பகுதிகள் ஆகும்.

புந்தேல்கண்டில் சத்ரசால் அரசர் தனது சொந்த பேரரசை நிறுவியிருந்தார். அலகபாத்தின் மொகலாய சுபேதார் முகமத்கான் பங்கஷ் என்பவர் புந்தேல்கண்டைத் தாக்கினார். அவர் சத்ரசாலைத் தோற்கடித்து, சிறைப்படுத்தினார். அப்போது சத்ரசால் பாஜிராவின் உதவி வேண்டி முறையிட்டார்.

பாஜிராவ் பெரும் படையுடன் புந்தேல்கண்ட் சென்றார். அவர் பங்கஷைத் தோற்கடித்தார். சத்ரசால் பாஜிராவை மிகவும் பாராட்டினார். இவ்வாறு மாள்வா மற்றும் புந்தேல்கண்ட் ஆகிய இடங்களில் மராத்தியர்கள் தங்களின் மேலாதிக்கத்தை நிலைநாட்டினார்.

### உங்களுக்குத் தெரியுமா?

சத்ரசால் உதவி வேண்டி பாஜிராவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர், 'जो गत आह गजेंद्रकी वह गत आयी है आज. बाजी जान बुंदेलकी, बाजी राखो लाज.' ('முதலையிடம் கால் மாட்டிக் கொண்ட யானையின் நிலையைப் போல் என் சூழ்நிலை இருக்கிறது. நான் இப்போது மிகுந்த நெருக்கடியில் இருக்கிறேன். இப்போது என்னை உங்கள் ஒருவரால்தான் காப்பாற்ற முடியும்') என்று எழுதியிருந்தார்.

பாஜிராவ் பேரரசரிடம் மாள்வாவின் சுபேதார் பொறுப்பைக் கோரினார். பேரரசர் இந்த கோரிக்கையை நிராகரித்துவிட்டார். எனவே பாஜிராவ் கி.பி. 1737 இல் மார்ச் மாதத்தில் தில்லி மீது படையெடுக்கும் எண்ணத்துடன் தில்லியின் எல்லையில் கடுமையாக தாக்குதல் நடத்தினார்.

**போபால் போர்:** பாஜிராவின் தில்லி படையெடுப்பால் பேரரசர் அமைதி இழந்தார். அவர் நிஜாமை தில்லியை பாதுகாப்பதற்காக அழைப்பு விடுத்தார். பெரும் படையுடன் நிஜாம் பாஜிராவிற்கு எதிராக கிளம்பி சென்றார். பாஜிராவ் அவரை போபால் என்ற இடத்தில் தோற்கடித்தார். நிஜாம் மராத்தியர்களுக்கு மாள்வாவின் சுபேதார் உரிமையை பேரரசரிடமிருந்து பெற்றுத் தர ஒத்துக் கொண்டார்.

**போர்த்துக்கீசியரின் தோல்வி:** கொங்கணக் கடற்கரையிலுள்ள வசாய், தானே பகுதிகள் போர்த்துக்கீசியரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. போர்த்துக்கீசிய ஆட்சியாளர்கள் குடிமக்களைக் கொடுமைப்படுத்தினர். அவர்களை ஒடுக்குவதற்காக பாஜிராவ் தனது சகோதரர் சிம்மாஜி ஆப்பாவை அனுப்பினார். அவர் தானே மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று கைப்பற்றினார். அதன் பின்னர் கி.பி. 1739இல் அவர் வசாய் கோட்டையை முற்றுகையிட்டார். அக்கோட்டை மிகவும் வலுவானது. போர்த்துக்கீசியரிடம் ஆற்றல் மிக்க பீரங்கிப் படை இருந்தது. இருப்பினும் சிம்மாஜி ஆப்பா விடாமுயற்சியோடு முற்றுகையை நீடித்து போர்த்துக்கீசியரை சரணடையச் செய்தார். இதனால் வசாய் கோட்டை மற்றும் போர்த்துக்கீசியரின் பெரும்பான்மையான ஆட்சிப் பகுதிகளும் மராத்தியர்களின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

**பாஜிராவின் இறப்பு:** ஈரானின் பேரரசர் நாதிர்ஷா இந்தியாவின் மீது படையெடுத்தார். அப்போது பாஜிராவ் ஷாகு மகாராஜாவின் ஆணையின்படி மொகலாய அரசுக்கு பாதுகாப்பளிக்க பெரும்படையுடன் வடக்கு நோக்கிச் சென்றார். அவர் பர்கான்பூர் வந்தடைந்த நேரத்தில் நதிர்ஷா டில்லியிலிருந்து பெரும் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு ஈரானுக்குத் திரும்பி சென்றுவிட்டார். 1740 ஆம் ஆண்டு ஏப்ரலில் நர்மதா ஆற்றங்கரையிலுள்ள ராவேர்கேடி என்ற இடத்தில் பாஜிராவ் மரணம் அடைந்தார்.

பாஜிராவ் மிகச் சிறந்த படைத்தலைவர் ஆவார். அவரது பெரும் வீரத்தால் அவர் வட இந்தியாவில் மராத்தியர்களின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தினார். அவர் மராத்தியர்களின் ஆட்சிக்கு முழு இந்தியா மட்டத்தில் ஒரு எதிர்க்க முடியாத ஆட்சி என்னும் உயர்நிலையைப் பெற்றுத் தந்தார். அவருடைய காலத்தில் ஷின்தே, ஹோல்கர், பவார், கெய்க்வாட் குடும்பத்தினர் முக்கியத்துவம் பெற்றிருந்தனர்.

## பயிற்சி

1. **பொருள் எழுதுக.**
   (1) சௌத்தாயி -
   (2) சர்தேஷ்முகி -

2. **ஒரு வார்த்தையில் விடையளிக்கவும்.**
   (1) பாலாஜி கொங்கணத்திலுள்ள இந்த ஊரைச் சார்ந்தவர்.....
   (2) புந்தேல்கண்ட் இவரது பேரரசு ஆகும்.....
   (3) பாஜிராவ் இறந்த இடம்.....
   (4) போர்த்துக்கீசியரை தோற்கடித்தவர்.....

3. **குறிப்பு எழுதவும்.**
   (1) காங்னோஜி ஆங்கரே
   (2) பால்கேட் போர்
   (3) பாலாஜி விஷ்வநாத்
   (4) முதலாவது பாஜிராவ்

4. **காரணங்கள் தரவும்.**
   (1) மராத்திய ஆட்சியில் இரண்டு சுயேச்சையான பேரரசுகள் உருவாயின.
   (2) ஆஜம்ஷா சத்ரபதி ஷாகு மகாராஜாவை சிறையிலிருந்து விடுவித்தார்.
   (3) தில்லி அரசவையில் மராத்தியர்களின் உதவி தேவைப்பட்டது.

**செயல் திட்டம்:**

மகாராணி தாராபாயின் வாழ்க்கை வரலாற்றை சேகரித்து அவரது வாழ்க்கையில் உனக்குப் பிடித்த ஒரு நிகழ்வை வகுப்பறையில் நடித்துக் காட்டவும்.

# 11. நாடு காத்த மராத்தியர்கள்

பாஜிராவிற்குப்பின் அவரது மகன் பாலாஜி பாஜிராவ் என்ற நானாசாஹேப்பை ஷாகு மகாராஜா, பேஷ்வாவாக நியமித்தார். நாதிர்ஷாவின் படையெடுப்புக்குப்பின் தில்லியில் நிலையற்ற தன்மை ஏற்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையில் வடக்கில் மராத்தியர்களின் ஆட்சியை நிலைப்படுத்த நானாசாஹேப் முயற்சி செய்தார். அதே நேரம் அகமத்ஷா அப்தாலி பானிப்பட்டில் மராத்தியர்களுக்கு எதிராக அறைகூவல் எழுப்பினார். இவ்வனைத்து நிகழ்வுகள் பற்றிய தகவல்களை நாம் இப்பாடத்தில் பயில உள்ளோம்.

**வடக்கிலுள்ள சூழ்நிலை:** அயோத்தியா மாகாணத்தின் வடமேற்கைச் சேர்ந்த இமயமலையின் அடிவாரத்தில் வரும் பிரதேசம் பதினெட்டாம் நூற்றாண்டில் ரோஹில்கண்ட் என்ற பெயரில் அறியப்பட்டது. ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த பட்டாணியர்கள் ரோஹில்லாக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் கங்கை - யமுனை ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதியில் களமிறங்கி அழிவுகளை ஏற்படுத்தினர். அவர்களை அடக்க அயோத்திய நவாப் மராத்தியர்களுக்கு அழைப்பு விடுத்தார். மராத்தியர்கள் அவர்களை அடக்கினர்.

**ஆப்கானியர்களுடன் போர்:** ஆப்கானிஸ்தானின் பேரரசரான அகமத்ஷா அப்தாலி இந்தியாவிலுள்ள செல்வங்களால் கவரப்பட்டார். கி.பி. 1752 இல் அவர் பஞ்சாப் மீது படையெடுத்தார். இதே காலத்தில் மொகலாயப் பிரதேசத்தில் குழப்பம் ஏற்பட்டிருந்தது. இதனால் மொகலாயர்களுக்கு அப்தாலி படையெடுப்பின் அச்சம் ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் மொகலாயர்கள் தமது பாதுகாப்பிற்காக மராத்தியர்களின் உதவியைப் பெறுவது அவசியமானது என்று கருதினர். பேரரசர் மராத்தியர்களின் வலிமை மற்றும் நேர்மையில் உறுதியாக இருந்தார். தில்லியை பாதுகாக்க மராத்தியர்களைப் போன்ற வேறு வலிமையான சக்தி இல்லை. ஆகவே, பாதுஷா கி.பி. 1752 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மராத்தியர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்தார். இவ்வுடன்டிக்கையின்படி, ரோஹில்லாக்கள், ஜாட்டுகள், இராஜபுத்திரர்கள், ஆப்கானியர்கள் போன்ற எதிரிகளிடமிருந்து மொகலாய அரசைக் காப்பற்ற மராத்தியர்கள் ஒப்புக் கொண்டனர். இதற்கு மாறாக, அவர்களுக்கு ரொக்கப் பணம் கிடைத்தது. இது தவிர, பஞ்சாப், முல்தான், இராஜபுதானம், சிந்து, ரோஹில்கண்ட் ஆகிய பகுதிகளிலிருந்து ''சௌத்தாய்'' வசூலிக்கும் உரிமையும் அவர்களுக்கு கிடைத்தது. அது போன்றே அஜ்மீல் மற்றும் ஆக்ரா ஆகிய மாகாணங்களின் சுபேதார் கொடையாகக் கிடைத்தது.

இவ்வுடன்படிக்கையின்படி, சத்ரபதியின் சார்பாக ஷிந்தே - ஹோல்கார் படையை தில்லியின் பாதுகாப்பிற்காக பேஷ்வா அனுப்பினார். மராத்தியர்கள் டெல்லி நோக்கி அணிவகுத்துச் சென்றனர். இச்செய்தி கிடைத்தவுடன் அப்தாலி தாய்நாட்டிற்கு திரும்பிச் சென்றார். மராத்தியர்கள் படிப்படியே தில்லிக்குச் சென்றனர். மராத்தியர்களால் அப்தாலியின் நெருக்கடி நீங்கியது. ஆகவே, பேரரசர் மொகலாயர்களின் சுபாக்களில் சௌத்தாய் உரிமையை அவர்களுக்கு வழங்கினார். இச்சுபாக்களில் காபூல், கந்தஹார் மற்றும் பெஷாவர் ஆகியவை அடங்கும். இச்சுபாக்கள் தொடக்கத்தில் மொகலாயப் பேரரசின் பகுதிகளாக இருந்தன. இப்போது அவை அப்தாலியின் ஆப்கானிஸ்தானத்தில் இருந்தன. உடன்படிக்கையின்படி இச்சுபாக்களை அப்தாலியிடமிருந்து வென்று திரும்பவும் மொகலாய அரசுடன் இணைக்க வேண்டும் என்பதே மராத்தியர்களின் கடமையாகும். மாறாக குறைந்தபட்சம் பஞ்சாப் வரையுள்ள பிரதேசங்களை ஆப்கானின் ஆளுகையின்கீழ் கொண்டுவர அப்தாலி விரும்பினார். ஆகவே, மராத்தியர் மற்றும் அப்தாலி ஆகியோர்களுக்கு இடையில் ஒரு போர் உடனடியாக நிகழக் கூடியதாகவும் தவிர்க்க முடியாததாகவும் இருந்தது.

நானாசாஹேப் பேஷ்வாவின் சகோதரரான இரகுநாத்ராவ் ஜயாப்பா ஷிந்தே மற்றும் மல்ஹார்ராவ் ஹோல்கர் ஆகியோர் சேர்ந்து வட இந்தியாவிலுள்ள அப்தாலியிடம் போரிட படையெடுப்பை மேற்கொண்டனர்.



**பேஷ்வா நானாசாஹேப்**

வடக்கிலிருந்த உள்ளூர் ஆட்சியாளர்கள் தெற்கிலிருந்து வந்த மாராத்தியர்களை தமது கண்ணோட்டத்தில் போட்டியாளர்களாகத் தீர்மானித்தனர். மராத்தியர்களின் பரந்த கண்ணோட்டத்தை உணராமல் அவர்களுக்கு உதவி செய்யாமல் அங்கிருந்த உள்ளூர் ஆட்சியாளர்கள் நடுநிலை வகித்தனர். தில்லி அரசவையில் மராத்தியர்களின்

மேலாதிக்கம் மற்றும் தலையீடு இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சூரஜ்மல் ஜாட் மற்றும் இராணி கிஷோரி ஆகியோர் மட்டும் பானிபட் போரில் காயமுற்ற மராத்தியர்களுக்கு உதவி புரிந்தனர்.

அதே முறையில் வடக்கில் சில வைதீக உட்பிரிவினர்கள் மராத்தியர்களை பிற மதங்களைச் சார்ந்தவர்களாகப் பார்த்தனர். அவர்களும் மராத்தியர்களின் பரந்த கண்ணோட்டத்தை புரிந்து கொள்ளாமல் அவர்களது வலிமையை குறைக்கும் பொருட்டு இந்தியாமீது படையெடுத்து வருமாறு அப்தாலியை வற்புறுத்தினர். அப்தாலி மராத்தியர்களைத் தோற்கடித்து அவர்களை நர்மதா ஆற்றுக்கு அப்பால் விரட்டியடிப்பார் என அவர்கள் எதிர்பார்த்தனர்.

**அட்டக் மீது மராத்தியர்களின் கொடி பறத்தல்:** நஜீப்கான் ரோஹில்லாக்களின் படைத் தலைவராக இருந்தார். வட இந்தியாவில் மராத்தியர்களின் மேலாதிக்கத்தை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நஜீப்கானின் வற்புறுத்தலின் பேரில் அப்தாலி இந்தியா மீது திரும்பவும் படையெடுத்தார். இது அவரது இந்தியா மீதான ஐந்தாவது படையெடுப்பாகும். அவர் தில்லியை கைப்பற்றினார். கொள்ளையடித்து பெரும் பொருளுடன் அவர் ஆப்கானிஸ்தானம் திரும்பினார். இரகுநாத் ராவும் மல்ஹார் ராவும் திரும்பவும் வடக்கு நோக்கிச் சென்றனர். அவர்கள் தில்லியைக் கைப்பற்றினர். இதற்குப் பின்பு, அப்தாலியின் அதிகாரிகளை வெளியே துரத்தி பஞ்சாபை வெற்றி கொண்டனர். கி.பி. 1758 இல் மராத்தியர்கள் அப்தாலியின் படைவீரர்களை அட்டக் வரை துரத்திச் சென்றனர். அட்டக் மீது மராத்தியர்களின் கொடி ஏறியது. அட்டக் தற்போது பாகிஸ்தானில் உள்ளது. மராத்தியர்கள் அட்டகிலிருந்து பேஷாவர் வரை படையெடுப்பு மேற்கொண்டனர். ஆயினும், அவர்கள் தமது ஆளுகைக்குக் கீழ் புதிதாய் வந்த இப்பிரதேசங்களைக் கவனிக்க முறையான ஏற்பாடுகளை செய்யவில்லை.

**தத்தாஜியின் வீரம்:** பஞ்சாப்மீது பிடியை இறுக்கவும் நஜீப்கானைத் தண்டிக்கவும் தத்தாஜி ஷிந்தே மற்றும் ஜனகோஜி ஷிந்தே ஆகியோரை பேஷ்வா, வடக்கே அனுப்பினார். நஜீப்கான் தத்தாஜியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் போதே அப்தாலியின் உதவியை வேண்டினார். இச்செய்தி கிடைத்ததும் அப்தாலி திரும்பவும் இந்தியாமீது படையெடுத்தார். தத்தாஜியும் அப்தாலியும் யமுனைக் கரையில் அமைந்த புராடிகாட் என்னுமிடத்தில் எதிர்கொண்டனர். வலுவான போர் நடந்தது. தத்தாஜி அசாதாரண வீரத்தைக் காட்டினார். இருப்பினும் இப்போரில் தத்தாஜி வீரமரணம் அடைந்தார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

தத்தாஜி பெரும் வீரத்துடன் போரிட்டார், ஆனால் இறுதியில் அவர் போர்க்களத்தில் காயமுற்று விழுந்தார். நஜீப்கான் ரோஹில்லாவின் ஆலோசகர் குதுப்ஷா அவரது யானையிலிருந்து இறங்கி, காயமுற்ற தத்தாஜி அருகே வந்தார். அவர் தத்தாஜியிடம், ‘ஏன் பட்டேல் ஜி! நீங்கள் இன்னும்கூட எங்களுடன் போரிடுவீர்களா?’ என்று வினவினார். தத்தாஜி காயமுற்ற நிலையில் விழுந்து இருந்தார். ஆயினும் குதுப்ஷாவின் இம்மொழி கேட்டு அவர் கர்வத்துடன், ‘ஆமாம்! பிழைத்தால் இன்னும்கூட போரிடுவோம்!’ என்று பதிலுரைத்தார்.

**சதாசிவ்ராவ் பாவு:** அப்தாலியைத் தண்டிக்க நானாசாஹேப் தமது அண்ணன் மகன் சதாசிவ்ராவ் பாவுவையும் மூத்த மகன் விஷ்வாஷ்ராவையும் வடக்கே அனுப்பினார். சதாசிவ்ராவ்பாவு சிம்மாஜி ஆப்பாவின் மகனாவார். அவரிடம் ஒரு பெரும்படையும் வலிமையான பீரங்கிப்படையும் இருந்தது. இப்ராகிம்கான் கார்தி என்பவர் அவரது பீரங்கிப்படையின் தலைவராக இருந்தார். இப்பீரங்கிப் படையின் வலிமையால் அவர் கி.பி. 1760 இல் லாத்தூர் ஜில்லாவிலுள்ள உத்கீர் போரில் நிஜாமைத் தோற்கடித்தார்.



சதாசிவ்ராவ்பாவு




**பானிபட் போர்:** வடக்கில் நடந்த இப்போர் நடவடிக்கையில் சதாசிவ்ராவ்பாவு தில்லியை வெற்றி கொண்டார். இதற்குப்பின் மராத்தியப் படையும் அப்தாலியின் படையும் பானிப்பட்டில் நேருக்கு நேர் சந்தித்தன. கி.பி. 1761 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் நாள் மராத்தியர்கள் அப்தாலி படையைத் தாக்கி போரைத் தொடங்கினர். இது மூன்றாம் பானிபட் போராகும். போரில் விஷ்வாஷ்ராவ் மீது குண்டு பாய்ந்ததால். அவர் மரணமடைந்தார். இது சதாசிவ்ராவ்பாவுற்கு தெரிந்ததும் அவர் கடுங்கோபம் கொண்டு எதிரிகளைத் தாக்கினார். போரில் நம்பிக்கையிழந்த நிலையில் அவர் தலைமறைவானார். தமது தலைவர் இல்லாமல் போனதைப் பார்த்த மராத்திய வீரர்கள் தைரியம் இழந்தனர். அதே நேரம் அப்தாலியின் நெருக்கடிகால தனிப்படைப் பிரிவின் புது வலிமைவாய்ந்த வீரர்கள் மராத்தியர்களைத் தாக்கினர். மராத்தியர்கள் தோல்வி அடைந்தனர். மகாராஷ்டிராவில் ஒரு முழு இளைய தலைமுறை அழிந்து போனது. பல துணிவுள்ள படைத்தலைவர்கள் போர்க்களத்தில் வீழ்ந்தனர்.

## உங்களுக்குத் தெரியுமா?

பானிபட் போரில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். ஒரு கடிதத்தில் இது கவிதை நடையில் பின்வருமாறு விளக்கப்பட்டு உள்ளது.

‘‘दोन मोत्ये गळाली. सत्तावीस मोहोरा हरवल्या ! आणि रूपये, खुर्दा किती गेल्या याची गणतीच नाही.’’

அந்நிய நாட்டைச் சேர்ந்த அப்தாலிக்கு இங்கு ஆட்சி செய்ய தார்மீக உரிமை கிடையாது. இப்பரந்த எண்ணத்துடன் மராத்தியர்கள் அப்தாலியுடன் போரிட்டனர். நாம் அனைவரும் சொந்த நாட்டில் இருப்பவர்கள். அப்தாலியோ வெளிநாட்டு எதிரியாவார். இத்தகைய கருத்துடன் கடிதம் எழுதி சதாசிவ்ராவ்பாவு வடக்கில் ஆட்சி செய்தவர்களுக்கு மராத்தியர்களின் பரந்த மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய நோக்கத்தை தெரியப்படுத்தினார். ஆயினும் அவருக்கு சாதகமான பதிலைக் கொடுக்காமல் அவர்கள் நடுநிலை வகித்தனர். இயற்கையாகவே இந்தியாவைக் காப்பாற்றும் பொறுப்பு தனியாக மராத்தியர்களிடம் விழுந்தது. இந்தியா என்பது ஒரு தேசமாக இருக்க வேண்டும். மேலும் அதன் மன்னனின் மதம் எதுவாக இருந்தாலும் அனைவரும் அவனுக்கு ஆதரவு நல்க வேண்டும் என்ற விழிப்புணர்வை வரலாற்றில் முதன் முதலாக மராத்தியர்களே உணர்த்தினர் என்று கூறலாம்.

**பேஷ்வா மாதவ்ராவ்:** நானாசாஹேப் பேஷ்வாவின் இறப்புக்குப்பின், அவரது மகன் மாதவ்ராவ் பேஷ்வாவானார். மாதவ்ராவ் தமது ஆட்சியில் நிஜாமையும் ஹைதர் அலியையும் நெருங்க விடாமல் தொலைவில் வைத்திருந்தார். அவர் வடக்கில் மராத்தியர்களின் மேலாதிக்க நிலையைத் திரும்பவும் நிறுவினார்.


**பேஷ்வா மாதவ்ராவ்**

பானிபட் போரில் மராத்தியர்கள் தோல்வியடைந்தனர். இதை பார்த்த நிஜாம் தனது மராத்தியர் எதிர்ப்பு நடவடிக்கையை திரும்பவும் தொடங்கினார். அவர் மராத்திய ஆட்சிப் பகுதிக்குள் படையெடுத்தார். ஆயினும், மாதவ்ராவ் பைத்தானுக்கு அருகிலுள்ள இராட்சஸபுவன் என்னுமிடத்தில் நிஜாமைத் தோற்கடித்தார்.

ஹைதர் அலி மைசூரின் சுல்தானாக இருந்தார். பானிப்பட்டில் மராத்தியர்களின் தோல்வியை அனுகூலமாகக் கொண்டு அவர் கர்நாடகாவில் மராத்தியர் ஆட்சிப் பகுதியைத் தாக்கினார். ஆயினும் மராத்தியர்கள் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு அருகிலுள்ள மோத்தி தலாவ் என்னுமிடத்தில் நடந்த போரில் ஹைதர் அலியைத் தோற்கடித்தனர். அப்போது அவர் துங்கபத்ரா ஆற்றுக்கு வடக்கிலுள்ள பிரதேசங்களை விட்டுக்கொடுக்க சம்மதித்தார்.

பேஷ்வா மாதவ்ராவ் கி.பி. 1772 இல் இறந்தார். மராத்திய வரலாற்றில் ஒரு நேர்மையான கடினமாக உழைக்கக் கூடிய, உறுதியான நோக்கமுடைய, பொதுமக்கள் நலனில் ஆர்வமுடைய ஆட்சியாளர் என்று அவர் குறிப்பிடப்படுகிறார். திறமையான இப்பேஷ்வாவின் இறப்பினால் மராத்தியர்களின் அரசுக்கு பேரிழப்பு ஏற்பட்டது.

## உங்களுக்குத் தெரியுமா?

பேஷ்வா மாதவ்ராவ் விவசாயிகளின் நலனில் தனிக்கவனம் செலுத்தினார். புனேயில் பல கிணறுகளைத் தோண்டி நீர் விநியோகத்தைப் பெருக்கினார். நானா பட்நவிஸ் போன்ற நிர்வாகிகள் மற்றும் இராம் சாஸ்திரி போன்ற சிறந்த நீதிபதிகள் இவரது ஆட்சிக் காலத்தில் உருவாயினர். குடிமக்களுக்கு நீதி கிடைப்பதற்காக நீதித் துறையில் சீர்திருத்தங்களைச் செய்தார். பீரங்கி மற்றும் வெடிப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கினார். நாணயங்களை அச்சடிக்க அச்சுசாலையை நிறுவினார்.

பேஷ்வா மாதவ்ராவிற்குப்பின் அரியணைக்கு வந்த நராயண்ராவ் மற்றும் சவாயி மாதவ்ராவ் ஆகிய இரு பேஷ்வாக்களும் குறுகிய காலமே வாழ்ந்தனர். தவிரவும், அவர்களது காலத்தில் பேஷ்வா பதவிக்காக குடும்பச் சண்டைகள் வியாபித்திருந்தன. ஒரு நேரத்தில் அட்டக் மீது கொடி நாட்டிய இரகுநாத்ராவ் தனது அதிகார பேராசையை திருப்தி செய்ய ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தார். இதனால் மராத்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே போர் மூண்டது.

கி.பி. 1782 இல் ஹைதர் அலி இறந்தார். அவருக்குப்பின் அவரது மகன் திப்பு மைசூரின் சுல்தான் ஆனார். அவர் திறமையான மாவீரராகவும், கல்விமானாகவும், கவிஞராகவும் இருந்தார். இவர் தனது திறமையால் அரசின் வலிமையைப் பெருக்கினார். இவர் பிரெஞ்சுக் காரர்களுடன் விவேகமாகத் தொடர்பினை ஏற்படுத்தி, ஆங்கில மேலாதிக்கத்திற்கு கலக்கத்தை தொடங்கி வைத்தார். கி.பி. 1799 இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒரு போரில் மரணமடைந்தார்.

**மராத்தியர் மேலாதிக்கம் திரும்பவும் நிறுவப்படல்:** பானிபட் வீழ்ச்சியால் வட இந்தியாவில் மராத்தியர்களின் கௌரவம் பெரும் பின்னடைவை அடைந்தது. மாதவ்ராவ் வடக்கில் தமது ஆட்சியைத் திரும்பவும் நிறுவுவதற்காக மகாதஜி ஷிந்தே, துக்கோஜி ஹோல்கர், இராம்சந்த்ர கானடே மற்றும் விசாஜிபந்த் பினிவாலே போன்ற படைத்தலைவர்களை அங்கு அனுப்பினார். மராத்தியப்படை ஜாட்டுகள், ரோஹில்லாக்கள் மற்றும் இராஜபுத்திரர்களைத் தோற்கடித்தது. பேரரசர் ஷா ஆலமை தமது சொந்த பாதுகாப்பின் கீழ் தில்லி அரியணையில் மராத்தியர்கள் அமரச் செய்தனர். வடக்கில் மராத்தியர்களின் ஆட்சி திரும்பவும் நிறுவப்பட்டது.

பானிபட் போரில் மராத்தியர்களுக்கு ஒரு பேரிழப்பு ஏற்பட்டது. அப்தாலியின் படைக்கும் இழப்பு ஏற்பட்டது. பானிபட் வெற்றிக்குபின் பொருளாதார இலாபம் மிகுதியாகக் கிடைக்காததால் அவரோ அல்லது அவரது வழித்தோன்றல்களோ இந்தியா மீது திரும்பவும் படையெடுக்கத் தைரியம் இல்லாமல் இருந்தனர். மாறாக, வடக்கிலுள்ள அராஜகத்தைக் கட்டுப்படுத்தும் திறனை மராத்தியர்கள் மட்டுமே கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் கருத்தில் கொண்டு மராத்தியர்கள் தங்களது பேரரசைக் காப்பாற்ற வேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளிப்படுத்தினர். நட்புறவை ஏற்படுத்த தூதுவனை அவர்கள் புனே அரசவைக்கு அனுப்பினர். மராத்தியர்கள் பானிபட் பெருந் தோல்வியைக் கடந்து வடக்கில் அரசாட்சியைத் திரும்பவும் வெற்றிகரமாக நிலைநாட்டிய விஷயம் முக்கியமானதாகும். இவையனைத்திலும் மல்ஹார்ராவ் ஹோல்கர், அகில்யாபாய் ஹோல்கர் மற்றும் மகாதஜி ஷிந்தே ஆகியோரின் பெரும்பங்கு உள்ளது.

## பேஷ்வாக்களின் குடும்ப மரபு வழி



## பயிற்சி

2. **யார் இவர்கள்?**
   (1) ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்தவர்கள் ..................
   (2) இமயமலையின் அடிவாரத்தில் குடியேறியவர்கள் ..................
   (3) நானாசாஹேப் பேஷ்வாவின் சகோதரர் ..................
   (4) மதுரா ஜாட்டுகளின் தலைவர் ..................
   (5) பைத்தானுக்கு அருகிலுள்ள இராட்சஸ புவனில் நிஜாமைத் தோற்கடித்தவர் ..................

2. **குறுகிய விடையளிக்கவும்.**
   (1) அட்டக் மீது மராத்தியர்களின் கொடி ஏறுதல்.
   (2) ஆப்கானியர்களுடனான போர்.
   (3) பானிபட் போரின் பின்விளைவுகள்.

3. **நிகழ்வுகளை கால வரிசைப்படி ஒழுங்குபடுத்துக.**
   (1) இராட்சஸபுவன் போர்.
   (2) திப்பு சுல்தானின் மரணம்.
   (3) மாதவ்ராவ் பேஷ்வாவின் இறப்பு.
   (4) பானிபட் போர்.
   (5) புராடிகாட் போர்.

4. **கீழுள்ள கட்டங்களிலிருந்து பாடத்தில் இடம் பெற்ற நபர்களின் பெயர்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப் | நா | தி | ர் | ஷா | மை | தி | ஜி |
| வா | தே | னா | வா | கு | ப் | லா | இ |
| ந | ந் | ர் | சா | பு | பா | தூ | ர |
| ஜீ | ஷி | ஹா | சு | ஹே | ர் | ஜி | கு |
| ப் | ஜி | ல் | ஜ | யா | ப் | பா | நா |
| கா | தா | ம | அ | ப் | தா | லி | த் |
| ன் | த் | ஜி | கோ | க் | ன | ஜ | ரா |
| அ | த | நா | ரா | ய | ண் | ரா | வ் |

### செயல்பாடு

இணையதளத்தின் துணை கொண்டு பானிபட் போர் குறித்த தகவல்களைப் பெற்று வகுப்பில் அறிமுகப்படுத்துக.



சவாயீ மாதவ்ராவ் பேஷ்வாவின் அரசவை

# 12. சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சி பயணம்

மராத்திய ஆட்சியின் தோற்றம் மற்றும் விரிவாக்கம் பற்றி இதுவரை கற்றோம். சுயராஜ்யத்தின் அடித்தளத்திலிருந்து அது பேரரசாக (சாம்ராஜ்ஜியமாக) உருவாகும் வரையான வளர்ச்சி நிலைகள் பற்றி நாம் கற்றறிந்துள்ளோம். மராத்திய அரசை வட இந்தியாவின் பகுதிகளில் விரிவாக்கம் செய்வதற்காக தங்களது போற்றத்தக்க பங்களிப்பைத் தந்த மராத்திய படைத்தலைவர்களின் குடும்பங்களைப் பற்றி விரிவாக இப்பாடத்தில் மதிப்பாய்வு செய்ய உள்ளோம்.

**இந்தூரின் ஹோல்கர்:** மல்ஹார்ராவ் என்பவர் இந்தூரில் ஹோல்கர்களின் அரசை நிறுவியவர் ஆவார். அவர் நீண்ட காலமாக மராத்திய அரசுக்காக பணியாற்றினார். இவர் மறைந்திருந்து தாக்குதல் செய்யும் போர் முறையில் மிகவும் திறமை பெற்றவர். முதலாம் பாஜிராவ் மற்றும் நானாசாஹேப் பேஷ்வா ஆகியோரது காலத்தில் நடைபெற்ற வட இந்தியப் போரின் போது மல்ஹார்ராவ் தனது வீரத்தை மெய்ப்பித்தார். மாளவத்தில் மற்றும் இராஜபுதனத்தில் மராத்தியர்களின் மேலாதிக்கத்தை நிறுவுவதில் இவர் முதன்மையான கருவியாக இருந்தார். பானிப்பட் போருக்கு பின்பு வட இந்தியாவில் மராத்தியர்களின் செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்துவதில் மாதவ்ராவ் பேஷ்வாவிற்கு இவர் மிகவும் உதவியாக இருந்தார்.



மல்ஹார்ராவ் ஹோல்கர்

புகழ்பெற்ற அஹில்யாபாய், மல்ஹார்ராவின் மகன் கண்டேராவ்வின் மனைவி ஆவார். கண்டேராவ் கும்பேரி சண்டையில் மரணம் அடைந்தார். சில நாட்களுக்கு பின் மல்ஹார்ராவும் கூட காலமானார். அதற்கு பின்பு இந்தூரின் ஆட்சிப் பொறுப்பு அஹில்யாபாயின் கைகளில் வந்தது. அவர் திறமைமிக்க, கூர்மதியுள்ள மிகச் சிறந்த நிர்வாகி ஆவார். அவர் புதிய சட்டங்களை இயற்றி வேளாண்மை வரி, வருமான வரிவசூலிப்பு போன்ற காரியங்களை ஒழுங்குமுறைப்படுத்தினார். பெருமளவு நிலத்தை வேளாண்மையின் கீழ் கொண்டுவருதல், உழவர்களுக்கு கிணறுகள் தோண்டி கொடுத்தல், வியாபாரம் - தொழில் துறையை ஊக்குவித்தல், குளம் - அணைகள் அமைத்தல் போன்றவற்றிற்காக அவர் கடும் முயற்சி செய்தார். இந்தியாவின் நான்கு திசைகளிலும் காணப்படும் முக்கிய புனிதஸ்தலங்களில் அவர் கோவில்கள், கணவாய், சத்திரம், நீர்ப்பந்தல் ஆகியவற்றை அமைத்தார். நாட்டின் பண்பாடு, கலாச்சார ஒற்றுமைக்கான அவரின் இம்முயற்சி முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அவர் நேரடியாக விசாரணை நடத்தி தீர்ப்பளித்தார். அவர் ஈகைப் பண்புள்ளவர் மற்றும் புத்தக ஆர்வலர் ஆவார். இவர் இருபத்தெட்டு ஆண்டுகளாகத் திறம்பட ஆட்சி செய்ததோடு வடக்கில் மராத்தியரின் செல்வாக்கை உயர்த்தினார். நாட்டில் அமைதி சட்ட ஒழுங்கையும் நிலைநிறுத்தி மக்களை மகிழ்ச்சியாக வாழ வைத்தார். மராத்திய அரசாட்சி வீழ்ச்சியுறும் காலத்தில் யஷ்வந்தராவ் ஹோல்கர் அரசாட்சியை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.



அஹில்யாபாய் ஹோல்கர்

**நாக்பூரின் போஸ்லேக்கள்:** நாக்பூரைச் சேர்ந்த போஸ்லேக்களின் வம்சாவழியில் பரஸோஜி போஸ்லே என்பவருக்கு ஷாகு மகாராஜாவின் காலத்தில் வர்ஹாட் மற்றும் ஹோண்ட்வன் ஆகிய பகுதிகளின் தனி உரிமை பத்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. நாக்பூரின் போஸ்லேக்களுள் இரகுஜி என்பவர் மிகவும் திறமையும் வீரமும் மிக்கவர். இவர் தெற்கிலுள்ள திருச்சிராப்பள்ளி மற்றும் ஆற்காடு ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளை மராத்திய ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்தார். வங்காளம், பீஹார், ஒடீஷா ஆகிய பகுதிகளில் சௌத்தாயி வசூலிக்கும் அதிகாரத்தை ஷாகு மகாராஜா இவருக்கு கொடுத்திருந்தார். அவர் அந்த பகுதிகளை மராத்திய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தார். கி.பி. 1751 இல் நாக்பூரின் போஸ்லேக்கள் ஒடீஷா ஆட்சிப்பகுதியை



இரகுஜி போஸ்லே

அலிவர்திகானிடமிருந்து கைப்பற்றினர். கி.பி. 1803 வரை ஒடிஷாவில் மராத்தியர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.



### உங்களுக்குத் தெரியுமா?

**மராத்திய அகழி** - கொல்கத்தாவில் இருந்த ஆங்கிலேயர் நாக்பூரைச் சேர்ந்த போஸ்லேக்களைக் கண்டு அஞ்சினர். மராத்தியர்களால் ஏற்படும் திடீர் தாக்குதல்களிலிருந்து கொல்கத்தா நகரை பாதுகாப்பதற்காக அவர்கள் நகரை சுற்றிலும் ஒரு ஆழமான குழி தோண்டினர். அது மராத்திய அகழி என்ற பெயரில் பிரசித்தி பெற்றது.

**குவாலியரின் ஷிந்தேக்கள்:** முதலாம் பாஜிராவ் ராணோஜி ஷிந்தேயின் திறமைகளை சரியாக மதிப்பிட்டு அவரை வடக்கில் படைத் தலைவராக நியமித்தார். ராணோஜியின் இறப்புக்குப்பின் அவரது மைந்தர்களாகிய ஜயாப்பா, தத்தாஜி மற்றும் மஹாதஜி ஆகியோர் தங்களது வீரத்தை மெய்ப்பித்து வட இந்தியாவில் மராத்திய ஆட்சியை வலுப்படுத்தினார்.



மஹாதஜி ஷிந்தே

மாதவ்ராவ் பேஷ்வா ஷிந்தே வம்சாவழியின் தலைவர் பட்டத்தை மஹாதஜிக்கு வழங்கினார். மஹாதஜி வீரம் மிக்கவர் மற்றும் அறிவுக் கூர்மைமிக்க அரசியல் வல்லுநராகவும் விளங்கினார். பானிப்பட் போரின் தோல்விக்குப்பின் வட இந்தியாவில் மராத்தியர் மேலாதிக்கம் மற்றும் நன்மதிப்பையும் மீண்டும் நிலைநாட்டுவதில் முக்கிய கருவியாக விளங்கினார். வட இந்திய சமவெளிப் பகுதியில் மராத்தியர்களின் மறைந்திருந்து தாக்கும் போர் முறையானது போரிடுவதற்கு ஏற்றதல்ல என்பதனை அவர் கண்டுணர்ந்தார். அவர் டி பாயீன் என்ற ஃப்ரெஞ்சு போர்ப்படை வல்லுநரின் வழிக்காட்டுதலின் கீழ் தனது படைகளுக்குப் பயிற்சி அளித்தார். மேலும் பீரங்கிப் படையை நவீனப்படுத்தினார். பயிற்சிபெற்ற இப்படை பலத்துடன் அவர் ரோஹில்லாக்கள், ஜாட், இராஜபுத்திரர்கள், புன்தேலேக்கள் ஆகியோரை அடக்கினார்.

பானிப்பட் போரின் காரணமாக மராத்தியர்களின் பலம் குறைந்து விட்டது என்று எண்ணிய ஆங்கிலேயர் தில்லி அரசியலில் பங்கெடுக்கத் தொடங்கினர். அவர்கள் வங்காள மாநிலத்தின் படைத்துறை சாரா அதிகாரத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டனர். அவர்கள் தில்லியின் பேரரசரை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்பினர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் மஹாதஜி ஷிந்தே ஆங்கிலேயரை தோற்கடித்து பேரரசரை மீண்டும் அரியணையில் அமர்த்தினார். இவ் வீரமிக்க செயல்பாட்டினால் மகிழ்ச்சி அடைந்த பேரரசர் அவருக்கு 'வக்கீல்-இ-முத்லக்' (பேரரசரின் முதன்மை பிரதிநிதி) என்ற பட்டத்தை அளித்து பெருமைபடுத்தினார். இதனுடைய பொருள் யாதெனில் அவருக்கு பொதுத்துறை மற்றும் படைத்துறை உரிமைகள் அனைத்தின் மீதும் பிரதிநிதியின் முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டது. அவர் இந்த பதவியை இளைய பேஷ்வா சவாயி மாதவ்ராவ் சார்பில் ஏற்றுக்கொண்டார். இந்த பதவியினால் தில்லியின் அரசாட்சி மராத்தியரின் முழு கட்டுப்பாட்டுக்குள் வந்தது. சரிந்து விழும் பேரரசை திரும்ப கட்டி எழுப்புவது எளிதான செயல் அல்ல. மிக இக்கட்டான சூழ்நிலையை வென்று மஹாதஜி மிக்க உறுதியுடன் கி.பி. 1784 முதல் கி.பி. 1794 வரை தில்லியின் அரசியல் செயல்பாடுகளை மேலாண்மை செய்தார்.

பானிப்பட் போரின் பொறுப்பாளிகளாக காணப்படும் நஜீப்கானின் வாரிசுகள் இன்னும் ரோஹில்கண்டில் மராத்தியர்களுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். நஜீப்பின் பேரன் குலாம் காதிர் செங்கோட்டையை கைப்பற்றி அவர்களின் செல்வத்திற்காக பேரரசரையும் அவரது அரசியையும் கொடுமைபடுத்தினார். பேரரசரின் கண்களை பிடுங்கி அரச கருவூலத்தை கொள்ளையடித்தார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மஹாதஜி காதிரை தோற்கடித்தார். அவர் கொள்ளையடித்த செல்வத்தை கைப்பற்றி அதனை பேரரசரிடம் திரும்ப ஒப்படைத்தார். பேரரசரை தில்லி அரியணையில் மீண்டும் அமர்த்தினார். இவ்வாறு மஹாதஜி பானிப்பட் போரில் இழந்த மராத்தியர்களின் செல்வாக்கை மீண்டும் பெற்றுத் தந்தார். அவர் தில்லியின் பேரரசரை மராத்தியர்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இந்தியாவின் அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டார்.

பேஷ்வாக்களின் குடும்ப பகைமையின் ஒரு விளைவாக இரகுநாத்ராவ் ஆங்கிலேயரிடம் தஞ்சம் அடைந்தார். ஆங்கிலேயரின் உதவியுடன் பேஷ்வா பதவியை அடையும் ஆவல் அவருக்கு இருந்தது. மராத்திய அரசியலில் இரண்டகஞ் செய்பவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். இதனால் மராத்தியர் மற்றும் ஆங்கிலேயருக்கு இடையே தவிர்க்க முடியாத சண்டைக்கு வழி வகுத்தது. அதுமட்டுமல்ல இதிலிருந்து ஒரு காரியம் தெளிவானது அதாவது இந்தியாவில் யார் ஆட்சி செய்வது என்பதின் கடைசி முடிவு மராத்தியர் மற்றும் ஆங்கிலேயர் என்கிற இவ்விரு பெரும் அரசுகளுக்கிடையேயான சண்டை மூலமாகவே தீர்மானிக்கப்படுதலாகும்.

மும்பையிலிருந்து ஆங்கிலேயர் போர்ஹாட் வழியாக மராத்தியர்கள் மீது படையெடுத்து வந்தனர். மஹாதஜி ஷிந்தேயின் தலைமையின் கீழ் மராத்திய படையினர் ஒன்று திரண்டனர். ஒளிந்திருந்து தாக்கும் போர் முறையை பயன்படுத்தி மராத்தியர் ஆங்கிலேயருக்கு உணவு தானிய விநியோகம் கிடைக்க விடாமல் தடை செய்தனர். இரு படைகளும் வட்காவ் (தற்போதைய புனே-மும்பை நெடுஞ்சாலையில் உள்ளது) என்ற இடத்தில் சண்டையிட்டனர். இப்போரில் ஆங்கிலேயர் தோல்வி அடைந்தனர். மேலும் அதன் காரணமாக ஆங்கிலேயர் இரகுநாத்ராவை மராத்தியர்களின் கட்டுப்பாட்டில் விட்டு கொடுக்க வேண்டியதாயிற்று.

தில்லி கி.பி. 1803 வரை மராத்தியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. ஆங்கிலேயர் மராத்தியர்களுடன் போரிட்டு இந்தியாவை வென்றதை கவனிக்கும்போது மஹாதஜியின் சாதனைகளின் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். தில்லியின் அலுவல்களைச் சீர்படுத்திய பின்னர் மஹாதஜி புனேக்கு வந்தார். புனேவுக்கு அருகிலுள்ள வான்வடி என்ற இடத்தில் அவர் காலமானார். அங்கே அவருக்கு நினைவாக கம்பீரமான நினைவிடம் எழுப்பப்பட்டுள்ளது.



ஷிந்தே நினைவிடம், வான்வடி, புனே

ஷிந்தேக்கள், ஹோல்கர்கள் மற்றும் போஸ்லேக்கள் போலவே வேறு சில முக்கிய படைத்தலைவர்களும் மராத்திய அரசுக்காக குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர்.

சிவாஜி மகாராஜாவால் தோற்றுவிக்கப்பட்ட கடற்படையானது கானோஜி ஆங்கரே மற்றும் அவரது மகன் துலாஜி ஆங்கரே ஆகியோரால் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இந்த வலுவான கடற்படையால் அவர்கள் போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர், சித்திகள் ஆகியோரின் கடல் ஆதிக்கத்தை அடக்கினர். மராத்திய அரசின் கடற்பகுதிகளை இவர்கள் பாதுகாத்தனர்.

படைத்தலைவர் கண்டேராவ் தாபாடே மற்றும் அவரது மகன் த்ரிம்பக்ராவ் ஆகியோர் குஜராத்தில் மராத்திய அரசுக்கு அடித்தளமிட்டனர். கண்டேராவ்வின் மறைவுக்குப்பின் அவரது மனைவி உமாபாய் அகமதாபாத்திலுள்ள மொகலாயப் படைத்தலைவரைத் தோற்கடித்தார். அங்குள்ள கோட்டையையும் கைப்பற்றினார். பின்னர் கெய்க்வாட்கள் குஜராத்திலுள்ள வடோதராவைத் தங்களது அரசின் மையமாக்கினர். மத்தியப் பிரதேசத்தின் தார் மற்றும் தேவாஸ் பகுதிகளின் பவார்கள், ஷிந்தேக்கள் மற்றும் ஹோல்கர்கள் வடக்கில் மராத்திய அரசை விரிவுபடுத்துவதில் மதிப்புமிக்க உதவிபுரிந்தனர்.

மாதவ்ராவ் பேஷ்வாவின் மறைவுக்குப் பிறகு மராத்திய அரசியலில் குழப்பம் நிலவியது. இதனை நானா பட்நவீஸ் மற்றும் மஹாதஜி ஷிந்தே ஆகியோர் ஒழுங்குப்படுத்தினர். மஹாதஜி வட இந்தியாவில் மராத்தியர்களின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதில் தீவிரமாய் இருக்கையில் நானாபட்நவீஸ் தெற்கில் அரசு காரியங்களை நிர்வகித்தார். இப்பணியில் பட்வர்தன், ஹரிபந்த் பட்கே, இராஸ்தே முதலிய படைத் தலைவர்கள் அவருக்கு உதவி செய்தனர். இதனால் தெற்கில் மராத்திய அரசின் மேலாதிக்கம் நிலை நிறுத்தப்பட்டது. இந்தூரின் ஹோல்கர், நாக்பூரின் போஸ்லே, குவாலியரின் ஷிந்தே, வடோதராவின் கெய்க்வாட் ஆகியோரின் வீரம், தலைமைத்துவம் மற்றும் செயல்திறமை முதலிய பண்புகள் மராத்தியர்களின் அரசுக்கு பெரும் புகழை ஈட்டித்தந்தது. இவர்கள் மராத்திய அரசின் இறுதிக்கட்டத்தின் தூண்களாக இருந்தனர்.



நானா பட்நவீஸ்

வடக்கு மற்றும் தெற்கு இந்தியாவில் மராத்திய அரசின் செல்வாக்கை நிலை நிறுத்துவதில் மராத்திய படைத்தலைவர்கள் வெற்றி கண்டனர். மஹாதஜி, ஷிந்தே, நானாபட்நவீஸ் ஆகியோரின் மறைவுக்குப் பின் மராத்திய அரசு வீழ்ச்சியுறத் தொடங்கியது. இந்த காலகட்டத்தில் இரகுநாத்ராவ்வின் மகன் இரண்டாம் பாஜிராவ் பேஷ்வாவாக இருந்தார். அவரிடம் தலைமைத்துவ பண்பு இல்லை. மாறாக பல குறைபாடுகள் இருந்தன. அவரால் மராத்திய படைத்தலைவர்களை ஒன்றிணைக்க முடியவில்லை. மராத்திய படைத்தலைவர்களில் காணப்பட்ட கருத்து வேறுபாட்டால் மராத்திய அரசு மேலும் நலிவுற்றது. இதுபோன்ற பல காரணங்களால் இரண்டாம்

பாஜிராவ்வின் காலத்தில் மராத்தியர்களின் செல்வாக்கு வடக்கிலும் மற்றும் தெற்கிலும் வலுவிழந்தது. மராத்தியர்களின் இடத்தை ஆங்கிலேயர் பிடித்துக் கொண்டனர்.

ஆங்கிலேயர் கி.பி. 1817 இல் புனேயை கைப்பற்றி அங்கே 'யூனியன் ஜாக்' என்கிற அவர்களின் தேசியக் கொடியை பறக்க விட்டனர். கி.பி. 1818 இல் சோலாப்பூர் மாவட்டத்திலுள்ள ஆஷ்டியில் நடந்த போரில் ஆங்கிலேயர் மராத்தியரைத் தோற்கடித்தனர். மேலும் இதனால் மராத்திய ஆட்சி முடிவுக்கு வந்தது. இந்த நிகழ்வு இந்திய வரலாற்றில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை நிகழ்த்தியது. இந்நிகழ்வுக்குப் பின்னர் ஆங்கிலேயர் இந்தியாவின் பெரும் பகுதியை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இந்தியாவின் மேலை நாட்டு உலகுடனான தொடர்பு அதிகரித்தது. அதனோடு கூட இந்திய சமுதாய அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல பழைய காரியங்கள் தேவையற்றதாயின. மேலும் அவை ஒதுக்கிவைக்கப்பட்டன. இது ஒரு பெரிய நிலைமாற்றத்தை கொண்டு வந்தது. இந்திய வரலாற்றின் இடைக்காலம் முடிவுற்றது. நவீனகாலத்தின் தொடக்கம் ஏற்பட்டது.



## பயிற்சி

1. **ஒரே வார்த்தையில் விடையளிக்கவும்.**
   (1) இந்தூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பெண்மணி.
   (2) நாக்பூரின் போஸ்லே குடும்ப வம்சாவழியில் மிகவும் திறமை வாய்ந்தவர்.
   (3) தில்லி அரியணையில் பேரரசரை மீண்டும் அமர்த்தியவர்.
   (4) தெற்கில் அரசு காரியங்களை நிர்வகித்தவர்.

2. **கால வரிசைப்படி எழுதவும்.**
   (1) ஆஷ்டி போர்
   (2) ஒடீஷாவின் மீது மராத்தியர்களின் மேலாதிக்கம்.
   (3) ஆங்கிலேயர் புனேயில் 'யூனியன் ஜாக்' கொடியை பறக்கவிடுதல்.

3. **சுருக்கமாக விடையளிக்கவும்**
   (1) அஹில்யாபாய் ஹோல்கர் ஆற்றிய பணிகள்.
   (2) மஹாதஜி ஷிந்தேயின் வீரம்.
   (3) குஜராத்தில் மராத்திய ஆட்சி.

4. **மராத்திய ஆட்சி முடிவுக்கு வந்ததற்கான காரண காரியங்களைக் குறித்து விவாதிக்கவும்.**

### செயல்திட்டம்:

மராத்திய ஆட்சியை விரிவுபடுத்துவதற்காக உழைத்த குடும்பத்தினரின் மரபு வழிப்பட்டியலை விளக்கப் படமாக உருவாக்கவும். அதனை பள்ளி கண்காட்சியில் பார்வைப்படுத்தவும்.



ஷனிவார் மாளிகை, புனே.

# 13. மகாராஷ்டிராவில் மக்களின் சமூக வாழ்க்கை

சத்ரபதி சிவாஜி மகாராஜா உருவாக்கிய இந்தவி சுயராஜ்யம் என்பது குடிமக்களின் அரசு ஆகும். குடிமக்களின் வாழ்க்கை நலம் பெற வேண்டும், மக்களுக்கு அநீதி விளைவிக்காமல் மகாராஷ்டிராவின் அறத்தை பாதுகாக்க வேண்டும் என்பது அவரது சிறப்பான நோக்கமாக இருந்தது. சிவாஜி மகாராஜாவிற்கு பின்னர் வந்த காலகட்டத்திலும் மராத்திய ஆட்சி, இந்தியா முழுமைக்கும் விரிவடைந்தது. மராத்தியர்களின் ஆட்சி சுமார் 150 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது.

மராத்திய அரசின் செயல்பாடுகளைப் பற்றிய தகவல்களை நாம் சென்ற பாடத்தில் கற்றோம். இப்பாடத்தில் நாம் அக்காலத்தின் சமுதாய நிலை மற்றும் சமூகவாழ்க்கை என்பது பற்றிய தகவல்களை கற்க உள்ளோம்.

**சமுதாய நிலை:** விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் என்பன வருமானத்திற்கான கிராம மட்டத்தில் காணப்பட்ட முக்கிய ஆதாரங்களாக இருந்தன. கிராமத்தின் தலைவர் (பாட்டீல்) கிராம பாதுகாப்புக்கு பொறுப்பு எனில் கிராம கணக்கர் (குல்கர்ணி) வருவாய் இனங்களை முறையாக கையாளுதலுக்கு பொறுப்பாக இருந்தார். கிராமத்தலைவரின் பணிக்காக அவருக்கு நிலம் மானியமாக கொடுக்கப்பட்டது. அவருக்கு இப்பணிக்காக கிராம வருவாயில் ஒரு பகுதியும் கிடைத்தது. கிராம பணியாளர்கள் கிராம மக்களுக்காக செய்த பணிகளுக்கு பண்டமாற்றாக பொருள்கள், தானியங்கள் போன்றவை தரப்பட்டன. கிராம எல்லைக்குள் உள்ள தொழில்களில் கருமை மற்றும் வெண்மை என்று இரு முக்கிய பிரிவுகள் இருந்தன. கருமை பிரிவில் (உடல் உழைப்பு) வயலில் வேலை செய்கின்ற விவசாயிகள் (குடியானவர்) மற்றும் வெண்மை பிரிவில் (துணியில் அழுக்கு படாத வேலை செய்கின்றவர்)- மேல் நிலை மக்கள் என்ற பிரிவுகள் இருந்தன. கிராமத்தின் எல்லா காரியங்களும் பரஸ்பர புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் நடைபெறுவது முக்கியமாய் கருதப்பட்டது. கூட்டுக் குடும்ப முறை மிகுதியாய் காணப்பட்டது.



**உங்களுக்குத் தெரியுமா?**

கிராமத்தில் இரும்பு கொல்லர், தச்சர், குயவர், பொற்கொல்லர் முதலிய பன்னிரெண்டு கிராம பணியாளர்கள் இருந்தனர். இந்த கிராம பணியாளர்கள் (பலுதேதார்கள்) கிராமத்தின் மக்களுக்கு பணிகள் செய்தனர்.

**பரம்பரை வழக்கங்கள்:** அக்காலத்தில் குழந்தை திருமண முறை காணப்பட்டது. பல மனைவிகளை வைத்திருக்கும் வழக்கம் இருந்தது. விதவைகளின் மறுமணத்திற்கான எடுத்துக்காட்டுகள் காணப்பட்டன. மனித உடல்களின் மீது இறுதிச் சடங்குகள் செய்வதற்கு எரித்தல், புதைத்தல் மற்றும் மூழ்கடித்தல் ஆகிய முறைகள் கடைபிடிக்கப்பட்டன. சிறிய - பெரிய காரியங்களுக்காக அல்லது போரிடுவதற்காக நல்ல நேரம் (முகூர்த்தம்) பார்க்கும் வழக்கம் இருந்தது. கனவுகள், சகுனங்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். தேவர்கள் மற்றும் கிரகங்கள் கோபமடைந்து விடக்கூடாது என்பதற்காக சமயச் சடங்குகள் செய்யப்பட்டன. அதனோடு கூட தான தர்மங்களும் செய்யப்பட்டன. சோதிடத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இருந்தது. அறிவியல் கண்ணோட்ட குறைபாடு காணப்பட்டது. மேலும் மருத்துவ சிகிச்சையை விட தெய்வத்திற்கு காணிக்கை படைப்பது முக்கியத்துவம் பெற்றிருந்தது.

**வாழ்க்கைத்தரம்:** பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் வாழ்ந்தனர். கிராமங்கள் தன்னிறைவு பெற்றனவாய் காணப்பட்டன. உப்பு மட்டுமே பிற இடங்களிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியதிருந்தது. விவசாயிகளின் தேவை ஒரு எல்லைக்குள் இருந்தது. விவசாயிகள் - சோளம், கம்பு, கோதுமை, கேழ்வரகு, மக்காச்சோளம், நெல் முதலிய தானியங்களை பயிர் செய்தனர். அன்றாட உணவில் பாகரி, வெங்காயம், சட்னி மற்றும் குழம்பு ஆகியன அடங்கியிருந்தன. அவர்களுக்கிடையே அன்றாட வியாபார நடைமுறை பண்டமாற்று முறையில் நடைபெற்றது. கிராமத்திலுள்ள வீடுகள் சாதாரண களிமண் செங்கல்களினால் கட்டப்பட்டிருந்தன. நகரங்களில் ஓரடுக்கு மற்றும் ஈரடுக்கு மாளிகைகள் காணப்பட்டன. செல்வந்தர்களின் உணவில் சோறு, பருப்பு, குழம்பு, தேன், காய்கறிகள், பச்சடி, தயிர்-பால்சார் பொருள்கள் ஆகியவை முக்கியமாய் சேர்த்துக் கொள்ளப்பட்டன. வேட்டி, குர்தா, தலைப்பாகை என்பவை ஆண்களின் ஆடை எனில் ஒன்பது கஜ சேலை, இரவிக்கை என்பவை பெண்களின் ஆடை ஆக இருந்தன.

**திருவிழாக்கள் - பண்டிகைகள்:** மக்கள் குடிபாட்வா, நாகபஞ்சமி, பைல்போலா, தசரா, தீபாவளி, மகரசங்கராந்த், ஹோலி, ஈத் முதலிய பண்டிகை-விழாக்களை கொண்டாடி மகிழ்ந்தனர். பேஷ்வாக்களின் காலத்தில் கணேஷோத்சவ் மிகப் பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. அது ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடப்பட்டது. பேஷ்வாவே ஒரு கணேஷ்பக்தராக இருந்ததால் அவ்விழாவிற்கு முக்கியத்துவம் கிடைத்தது. ஒவ்வொரு ஆண்டும் பாத்ரபத் சதுர்த்தி நாளிலிருந்து ஆனந்த சதுர்தஷி வரை இவ்விழா நடைபெற்றது.

தசரா ஆனது மூன்றரை முக்கிய நல்ல நேரங்களில் ஒன்றாக இருப்பதனால் அந்நாளிலிருந்து நல்ல காரியங்களை செய்ய மக்கள் தொடங்கினர். அந்நாளில் ஆயுதங்கள்/ கருவிகளுக்கு பூஜைகள் செய்யப்பட்டன. சீமோல்லங்கன் (எல்லையை கடந்து செல்லும் வழக்கம்) செய்தனர். ஒருவருக்கொருவர்

ஆத்தி இலைகளை பகிர்ந்து கொண்டனர். தசராவிற்கு பின்பு மராத்தியர்கள் போர்காரியங்களில் ஈடுபட்டனர். தீபாவளியின் போது பலிப்ரதிபதா (காளைகளுக்கு வண்ணமிட்டு அலங்கரித்தல்) மற்றும் பாவூபீஜ் (சகோதரர்கள் சகோதரிகளின் வீடுகளுக்கு செல்லுதல்) என்பன முக்கியத்துவத்துடன் கொண்டாடப்பட்டன. பெரும்பான்மையான கிராமங்களில் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. திருவிழாக்களில் குஸ்திச் சண்டை அரங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கும். குடிபாட்வா நாளில் குடி (துணி சுற்றப்பட்ட கம்பில் ஏற்றபட்ட கொடி) உயர்த்தப்பட்டு அப்பண்டிகை கொண்டாடப்பட்டது. திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல், இசைக்கருவிகளை இசைத்து பாடுதல், நாடகம் முதலிய மகிழ்ச்சியளிக்கும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. நாடகம் என்ற பொழுதுபோக்குக்கலை மக்களின் நன்மதிப்பை பெற்று இருந்தது.



காளை விழா

**கல்வி:** அக்காலத்தின் கல்விமுறையில் பாடசாலைகள் மற்றும் மதரசாக்கள் ஆகிய கல்வி நிறுவனங்கள் இடம்பெற்று இருந்தன. வாசித்தல், எழுதுதல் மற்றும் கணித கல்வி வீட்டிலேயே கற்பிக்கப்பட்டது. மோடி என்ற பழைய எழுத்து வடிவம் பெரும்பாலான நடைமுறைகளில் பயன்பாட்டில் இருந்தது.

**தகவல் தொடர்பு - பயணம் செய்தல்:** கணவாய் வழி, சாலைகள், ஆற்றுப்பாலங்கள் மூலமாக போக்குவரத்து நடைபெற்றது. உணவு தானியங்கள், துணிகள், பலசரக்குகள் போன்றவை எருதுகளின் முதுகுகளில ஏற்றி செல்லப்பட்டது. ஆறுகளின் வழியாக செல்வதற்கு சிறிய படகுகள் பயன்படுத்தப்பட்டன. கடித போக்குவரத்து, தூதுவர்கள் மற்றும் ஒட்டக சவாரிகள் மூலமாக கொண்டு செல்லப்பட்டது.

**விளையாட்டு:** அக்காலத்தில் பல்வேறு விளையாட்டுகள் விளையாடப்பட்டன. விளையாட்டானது பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வளிக்கும் கருவியாக இருந்தது. குஸ்தி மற்றும் போர்க்கலைகள் மக்கள் மத்தியில் நன்மதிப்பு பெற்றிருந்தது. மல்லக்காம்ப், தண்ட், குஸ்தி, லாட்டி, தண்டபட்டா, போத்தாடி விளையாட்டுகள் விளையாடப்பட்டன. கபடி, கோகோ, அட்யாபட்யா முதலிய வெளி அரங்க விளையாட்டுகளும், தாயக்கட்டம், கன்ஜிபா, சதுரங்கம் முதலிய உள்ளரங்க விளையாட்டுகளும் புகழ்பெற்றிருந்தன.



மல்லக்காம்ப்

**மதம் மற்றும் ஒழுக்கம்:** இந்து மற்றும் முஸ்லீம் என்கிற இரு முக்கிய மதங்கள் அக்காலத்தில் காணப்பட்டன. சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் மதக்கொள்கைகள் தாராளமானவை. ஒவ்வொருவரும் அவர்கள் மதத்தை பின்பற்ற வேண்டும், மற்றவர்மீது தங்களது மதத்தை திணிக்கக் கூடாது, என்கிற பொது புரிந்துகொள்ளுதல் அக்காலத்தில் காணப்பட்டது. பாடசாலைகள், கோயில்கள், மதரசாக்கள் மற்றும் மசூதிகளுக்கு அரசாங்கத்தில் இருந்து மானியம் தரப்பட்டது. இரு மதத்தினரும் முறையே ஒருவர் மற்றவர்களின் பண்டிகைகளில் பங்கெடுத்தனர். வார்கரி, மஹானுபாவ், தத்தா, நாத், ராம்தாஸி முதலிய மதக்கொள்கைகள் புகழ்பெற்றிருந்தன.

**பெண்களின் வாழ்க்கை:** அக்காலத்தில் பெண்களின் வாழ்க்கை மிகவும் இன்னல் நிறைந்ததாய் இருந்தது. அவர்களின் உலகம் முதலில் தாய்வீடு பின்பு மாமனார் வீடு என்ற எல்லைக்குட்பட்டிருந்தது. அவர்களின் கல்வி பற்றி ஒருவரும் அக்கறை படவில்லை. ஒரு சில தனிச் சிறப்பு வாய்ந்த பெண்கள் மட்டும் எழுத்தறிவு, நிர்வாகம் மற்றும் போர்த்திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் அடைந்திருந்தனர். அவர்களில் வீரமாதா ஜீஜாபாய், யேசூபாய், மகாராணி தாராபாய், உமாபாய் தாபாடே, கோபிகாபாய், புண்யஷ்லோக் அஹில்யாபாய் ஆகியோர் அடங்குவர். குழந்தை திருமணம், அதிக வயது வித்தியாசத்தில் திருமணம், விதவைக்கோலம், மொட்டையடித்தல், உடன்கட்டை ஏறுதல், ஒரே காலத்தில் மனைவியர் பலரை மணந்து கொள்ளும் முறை போன்ற வழக்கங்கள் பெண்களின் வாழ்வை கடினமாக்கியது. மொத்தத்தில் அவர்களின் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாய் இருந்தது.

கி.பி. 1630 இலிருந்து 1810 வரையான காலக்கட்டம் பொதுவாக மராத்தியர்களின் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது. அக்காலக்கட்டத்தின் கலை - கட்டடக்கலை பற்றி நாம் சிறிது விரிவாக கற்போம்.

**சிற்பக்கலை:** சிவாஜி காலத்து கஸ்பா கணபதி ஆலய புதுப்பித்தல், லால் மஹால் கட்டுதல், ராய்கட் மற்றும் ராய்கட்டின் மீது கட்டுமான வேலைகள், துறைமுகங்கள் அமைத்தல் போன்ற பலவகையான கட்டடக்கலை சம்பந்தமான குறிப்புகள் கிடைத்துள்ளன. ஹிரோஜி இன்துல்கர் என்பவர் அக்காலத்தின் பிரசித்திபெற்ற கட்டடக் கலை வல்லுனர் ஆவார்.

ஒரு கிராமத்தை அமைக்கும்போது முடிந்த வரையில் செங்கோணத்தில் அமைந்த சாலைகள், ஓரங்களில் கல் கட்டுமானம், ஆற்றங்கரையோரங்களில் படிக்கட்டுகள் போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. பேஷ்வா காலத்தில் அகமத்நகர், பீஜப்பூர் நகர்களில் உள்ளது போன்ற குடிநீர் விநியோக அமைப்பு புனே நகரிலும் அமைக்கப்பட்டது. பேஷ்வாக்கள் நிலத்தடி குழாய்கள், சிறிய அணைக்கட்டுகள், பூங்காக்கள் - தோட்டங்கள், நீர்த்தொட்டிகள், செயற்கை நீரூற்றுகள் ஆகியவற்றை கட்டினர். புனே நகரின் அருகிலுள்ள ஹடப்சர் பகுதியில் திவே மலைத்தொடரிலுள்ள மஸ்தானி ஏரி கட்டடக்கலை கண்ணோட்டத்தில் முக்கியமானது ஆகும்.

புனேயிலுள்ள ஷனிவார்மாளிகை - விஷ்ராம்பாக் மாளிகை, நாசிக்கின் சர்க்கார் மாளிகை, கோப்பர்காவின் ரகுநாத் பேஷ்வாவின் அரண்மனை, சாத்தாரா பகுதியை சேர்ந்த சத்ரபதிகளின் அரண்மனைகள், இவை தவிர வாயீ, மேன்வலி, டோக்கே, ஸ்ரீகோன்தே, பண்டர்பூர் ஆகிய இடங்களில் உள்ள பழைய மாளிகைகள் இடைக்கால மாளிகை பண்பாட்டின் அடையாளங்கள் ஆகும்.

மாளிகைகளின் கட்டுமான பணியில் சுடாத மற்றும் சுட்ட செங்கல்கள் பயன்படுத்தப்பட்டன. மரத்தூண்கள், விட்டம், மரப்பலகைகள், வடிவமைக்கப்பட்ட கற்கள், மேல்வளைவுகள், நன்கு தயார் செய்யப்பட்ட சுண்ணாம்பு, உட்குழிவுள்ள ஓடுகளால் ஆன கூரைகள், களிமண், மூங்கில் ஆகியவை கட்டுமான பணிக்காக பயன்படுத்தப் பட்டன. மாளிகைகளை அழகுபடுத்துவதற்காக சித்திர வேலைப்பாடுகள், வண்ண வேலைப்பாடுகள், மரச்சிற்பவேலைப்பாடுகள், கண்ணாடி ஆகியவற்றை பயன்படுத்தினர்.

**கோயில்கள்:** சிவாஜி காலத்து கோயில்கள் யாதவர் காலத்து ஹேமாட்பன்தி முறையில் காணப்பட்டன. கோலாப்பூரின் அம்பாபாய் கோயிலின் சிகரம், ஜோதிபாவின் மலைமீதுள்ள கோயில்கள், ஷகர்ஷின்கனாபூரின் ஷம்பூ மஹாதேவ், வெருலின் கிருஷ்ணேஷ்வரின் கோயில் ஆகியன சிற்பக் கலைக்கான சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். பிரதாப்கட் மீதுள்ள பவானி தேவியின் கோயில் மற்றும் கோவாவிலுள்ள சப்தகோட்டேஷ்வரின் கோயில், சிவாஜி மகாராஜாவால் கட்டப்பட்டன. பேஷ்வாக்களின் காலத்தில் நாசிக்கின் காலாராம் கோயில், த்ரியம்ப்கேஷ்வரின் சிவன்கோயில், கோதாவரி - பிரவரா ஆகிய ஆறுகளின் சங்கமத்தின் மீதுள்ள காய்காவ் மற்றும் டோகே என்ற இடத்திலுள்ள சிவன்கோயில்கள், நேவாசே என்ற இடத்திலுள்ள மோஹினிராஜ் கோயில் முதலிய கோயில்கள் அக்காலத்தில் கட்டப்பட்டன.



கிருஷ்ணேஷ்வர் கோயில்

**ஆற்றுப் படித்துறை:** ஆறு அல்லது ஆறுகள் இணையும் இடத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள கற்களாலான படித்துறை அமைப்பு மராத்திய ஆட்சியின் சிறப்பியல்பு ஆகும். அக்காலத்தின் மிகவும் புகழ்பெற்ற படித்துறை என்பது கோதாவரி மற்றும் பிரவரா ஆறுகளின் சங்கமத்தின் மீதுள்ள பிரவரா சங்கமம், டோகே என்ற இடத்தில் உள்ளதாகும். முறையாய் கட்டப்பட்ட படிக்கட்டுகளின் வரிசையில் ஒரு குறிப்பிட்ட தொலைவில் ஒரு படிக்கட்டு முன்னோக்கிய வண்ணம் இருக்கும். இதனால் மொத்த படிக்கட்டுகளின் அழகு அதிகரிக்கிறது. நீரினுடைய நீரோட்டத்தினால் படித்துறை அடித்து செல்லப் படாமல் இருப்பதற்காக குறிப்பிட்ட தொலைவுகளில் அரணுக்கு வெளியே நீண்டு கொண்டிருக்கும் வலுவான புற அரண் அமைக்கப்பட்டு உள்ளது.

**சித்திரக் கலை:** பேஷ்வாவின் ஆட்சிக்காலத்தில் ஷனிவார் மாளிகை சுவர்களின் மீதுள்ள சித்திரங்கள் சிறப்பு மிக்கவையாகும். அக்காலத்தில் ராகோ, தானாஜி, அனப்ராவ், சிவராம், மாண்கோஜி போன்ற சிறந்த வர்ணச்சித்திர கலைஞர்கள் வாழ்ந்தனர். சவாயி மாதவ்ராவ் பேஷ்வாவின் காலத்தில் கங்காராம் தாம்பட் என்ற புகழ்பெற்ற வர்ண சித்திரக் கலைஞர் வாழ்ந்தார். பேஷ்வாக்கள்

சித்திரக்கலையை ஊக்குவித்தனர். பேஷ்வா காலத்து புனே - சத்தாரா, மேண்வலி, நாசிக், சன்ந்வட் மற்றும் நிமாணி ஆகிய பகுதிகளிலுள்ள மாளிகைகளின் சுவர்களில் சித்திரங்கள் காணப்பட்டன. பாண்டேஷ்வர், மோர்காவ், பால், பேன்வடி, புனே அருகிலுள்ள பாஷாண் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களின் சுவர்களின் மீது சித்திரங்கள் உள்ளன. அக்காலத்தின் சித்திரங்களின் கருப்பொருள் என்பது தசாவதாரம், கணபதி, ஷங்கர், ராம்பஞ்சாயதன் ஆகியவற்றை பற்றியதாய் இருந்தது. விதர்பாவில் ஜாமோத் என்ற இடத்திலுள்ள ஜைன கோயிலில் ஜைன மதத்தலைவர்களின் கதைகள், புராணக் கதைகள் ஆகியன காணப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதம், விழாக்கள், பண்டிகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சித்திரங்கள் வரையப்பட்டன. எழுதுத்தாளின் மீது சித்திரங்கள், குறுஞ் சித்திரங்கள், மனித ஓவியங்கள், இயற்கை காட்சிகள் கூட வரையப்பட்டன.

**சிற்ப வேலை:** சிவாஜி காலத்தில் சிவாஜி மகாராஜாவின் கர்நாடக படையெடுப்பின் போது மல்லம்மா தேசாய் உடனான சந்திப்பின் சிற்ப வேலை, புலேஷ்வர் கோயில்கள் மீதுள்ள சிற்பங்கள், மனித சிற்பங்கள், மிருகங்களின் சிற்பங்கள், (எடுத்துக்காட்டு., யானை, மயில், குரங்குகள்) டோகே என்ற இடத்தின் கோயிலின் உட்புறச் சிற்பங்கள் மற்றும் வெளிப்புறத்திலுள்ள சிற்ப வேலைகள், புனேவிலுள்ள த்ரிஷுன்ட்கணபதி கோயில், மத்திய பிரதேசத்திலுள்ள அஹில்யாபாய் ஹோல்கரின் நினைவிடம், நேவாசே என்ற இடத்தில் உள்ள மோஹினிராஜ் கோயிலிலுள்ள சிற்பங்கள் முக்கியமான விளக்க மாதிரிகள் ஆகும்.

**உலோகச் சிலைகள்:** பேஷ்வாக்கள் புனேயில் உள்ள பர்வதி என்ற இடத்திலுள்ள கோயிலில் பார்வதி மற்றும் கணபதி சிலைகளை பூஜை செய்வதற்காக தயார் செய்து பெற்றனர். அதனோடு கூட மரச்சிலைகளும் தயார் செய்யப்பட்டன.

**இலக்கியம்:** அருட் தொண்டர் இலக்கியம், புராணக் கதைகள், வர்ணனை இலக்கியம், தெய்வத் திருப்புகழ்ப் பாடல், கிரந்தம், கதைச் செய்யுள், வரலாற்றுக் கதைகள், திருத் தொண்டர்களின் சுயசரிதை, விவரிக்கப்பட்ட செய்யுள்கள், தேவர் - தேவியர் துதிப்பாடல்கள், நாட்டுப் பாடல்கள், நினைவுக் குறிப்புகள், வரலாற்று மடல்கள் என்பன இலக்கியத்தின் முக்கிய பகுதிகளாக காணப்பட்டன.

**நாடகக் கலை:** தெற்கிலுள்ள தஞ்சாவூர் என்ற இடத்தில் மராத்திய நாடகங்கள் பதினேழாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் நுழைந்தன. சர்போஜி ராஜா இக்கலையை ஊக்குவித்தார். இந்த நாடகங்களில் பாடல்கள், ஆடல் மற்றும் பாத்திரமாக மாறுதல் என்பன முக்கிய பகுதிகளாக இருந்தன.

இதுவரை நாம் வரலாற்றின் இடைக்காலத்தில் குறிப்பிட்ட காலங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் திரும்ப ஞாபகப்படுத்திப் பார்த்தோம். மராத்திய பேரரசின் தோற்றம் மற்றும் விரிவாக்கம் பற்றி கற்றறிந்தோம். அடுத்த வருடம் நவீனக் காலம் பற்றி கற்றிய உள்ளோம்.



## பயிற்சி

1. அட்டவணையை நிறைவு செய்யவும்




2. தற்கால சமுதாயத்தில் எந்தெந்த விரும்பத் தகாத வழக்கங்கள் எல்லாம் புழக்கத்தில் உள்ளன? அதனை நீக்குவதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்கவும்.

3. உங்களுடைய சுற்றுபுறத்தில் எந்தெந்த விழாக்கள் மற்றும் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன, என்பது பற்றிய ஒரு சிறு குறிப்பு எழுதவும்.

4. பின்வரும் குறிப்புகளின் உதவியுடன் சிவாஜி காலத்தின் சமுதாய வாழ்வை தற்போதைய சமுதாய வாழ்வுடன் ஒப்பிடல் செய்யவும்.

| வரிசை எண் | குறிப்புகள் | சிவாஜிக் கால சமுதாய வாழ்வு | தற்கால சமுதாய வாழ்வு |
|---|---|---|---|
| 1 | அன்றாட வியாபார நடைமுறை | ........... | ............... |
| 2. | வீடுகள் | ........... | நிரந்தரமாய் கட்டப்பட்ட சிமெண்ட் வீடுகள், கான்கிரீட்டால் ஆன அடுக்குமாடிக் கட்டடங்கள் |
| 3. | போக்குவரத்து | ........... | பேருந்து, தொடர்வண்டி, விமானம் |
| 4. | பொழுதுபோக்கு | ........... | ........... |
| 5. | எழுத்து வடிவம் | ........... | ........... |

**செயல்:** நமது தேசத்தின் திறமைசாலியான பெண்களைப் பற்றிய தகவல்களை சேகரிக்கவும். அதனை வகுப்பறையில் வாசித்துக் காட்டவும். எடுத்துக்காட்டு. பி.வி. சிந்து, சாக்ஷி மாலிக்.

# குடிமையியல்

## பொருளடக்கம்

### நமது அரசியலமைப்புச் சட்டம்


| எண் | பாடம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | நமது அரசியலமைப்புச் சட்டம் - அறிமுகம்.......... | 63 |
| 2. | அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை ............... | 68 |
| 3. | அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகள்........ | 72 |
| 4. | அடிப்படை உரிமைகள் - பகுதி 1......................... | 76 |
| 5. | அடிப்படை உரிமைகள் - பகுதி 2......................... | 80 |
| 6. | அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் ..................................... | 83 |




# கற்றல் விளைவுகள்

### பரிந்துரைக்கப்பட்ட கற்பித்தல் செயல்முறைகள்:

கற்பவர்களுக்கு ஜோடிகளாக / குழுக்களாக / தனியாக வாய்ப்புகள் வழங்கி பின்வருவனவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

- ஜனநாயகம், சமத்துவம், மாநில அரசு, பாலின வேறுபாடு, ஊடகங்கள், விளம்பரங்கள் போன்ற கருத்துகள் மீதான விவாதங்களில் பங்கேற்றல்.
- அரசியலமைப்பின் முக்கியத்துவம், நோக்கங்கள், சமத்துவத்தின் உரிமைகள், சமத்துவத்திற்கான போராட்டம் பற்றிய படங்கள், பட கத்தரிப்புகள், துணை கொண்டு சுவரொட்டிகளை உருவாக்குதல்.
- அரசியலமைப்பின் சிறப்பியல்புகளின் தகவல்களை பெறுதல்.
- அடிப்படை உரிமை பற்றிய விவாதம்.
- ஜனநாயகத்தில் சமத்துவம், பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் போன்ற கருத்துகள் மீதான பாடல்கள், கவிதைகளுடன் பாத்திரமேற்று நடித்தல்.
- வழிகாட்டல் நெறிமுறைகள் மற்றும் அடிப்படை கடமைகள், ஒற்றுமை மற்றும் வேற்றுமை ஆகியவை பற்றிய கலந்துரையாடல்.

### கற்பவர்

07.73H.13. ஜனநாயகத்திலுள்ள சமந்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்குதல்.

07.73H.14. அரசியல் சமத்துவம் பொருளாதார சமத்துவம் மற்றும் சமூக சமத்துவம் ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளை புரிந்து கொள்ள முடிதல்.

07.73H.15. சமத்துவ உரிமை தொடர்பான நமது துறையில் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளை விளக்குதல்.

07.73H.16. உள்ளூர் அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை புரிந்து கொள்ளல்.

07.73H.17. ஜனநாயக அரசு நிர்வாகத்தின் சிறப்பியல்புகளை விளக்குதல்.

07.73H.18. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளுக்கு நீதிமன்றத்தின் சிறப்பு பாதுகாப்பு உள்ளது என்பதை அறிந்து கொள்ளல்.

07.73H.19. சட்டத்தின்முன் அனைத்து நபர்களும் சமம் என்பதை புரிந்து கொள்ளல்.

07.73H.20. வழிகாட்டும் நெறிமுறைகளுக்கு நீதித்துறையின் பாதுகாப்பு இல்லை. ஆயினும் அவை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன என்பதை புரிந்து கொள்ளல்.

07.73H.21. அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படைக் கடமைகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகளின் துணையோடு கூறுதல்.

07.73H.22. அடிப்படை உரிமைகள் தொடர்பான அறிவை நேரடியாக நடைமுறைப்படுத்தி ஏதேனுமொரு நிகழ்வில் உரிமை மீறல், உரிமை பாதுகாப்பு மற்றும் உரிமைகளின் கவனிப்பை எவ்வாறு செய்ய முடியும் என்பதை புரிந்து கொள்ளல்.

# 1. நமது அரசியலமைப்புச் சட்டம்

### சிலவற்றை மறு ஆய்வு செய்வோம் !

சென்ற வகுப்பு குடிமையியல் பாடநூலில் நமது வாழ்க்கைக்கு விதிமுறைகள் ஏன் அவசியம் என்பதற்கான பல காரணங்களைப் பார்த்தோம். குடும்பம், பள்ளி, நமது கிராமம் அல்லது நகரம் ஆகியவற்றின் செயல்பாடுகள் சுமூகமாக நடைபெறுவதற்காக நாம் மரபுகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுகிறோம். குடும்பத்தில் விதிமுறைகள் கிடையாது. இருப்பினும் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய சில மரபுகள் உள்ளன. பள்ளியில் சேர்க்கை, சீருடை மற்றும் படிப்பு தொடர்பான காரியங்களில் விதிமுறைகள் உள்ளன. பல்வேறு போட்டிகளிலும்கூட விதிமுறைகள் உள்ளன. நமது கிராம மற்றும் நகர நிர்வாகமும் விதிமுறைகளின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றன. இதைப்போலவே, நமது நாட்டின் நிர்வாகமும் விதிமுறைகளின்படி நடைபெறுகிறது. குடும்பம், பள்ளி, கிராமம் அல்லது நகரம் தொடர்பான விதிமுறைகள் இயற்கையில் வரையறைக்குட்பட்டவை. ஆனால் நாட்டின் நிர்வாகம் தொடர்பான விதிமுறைகள் அல்லது முன்னேற்பாடுகள் பரந்த அளவிலானவை.

சமீர் மற்றும் வந்தனாவிற்கு எழுந்த கேள்விகளை நீங்களும் கேட்க விரும்புகிறீர்களா?

- நாட்டின் நிர்வாகம் எந்த விதிமுறைகளின் அல்லது முன்னேற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறதோ அந்த விதிமுறைகள் எங்கு உள்ளன?
- இவ்விதிமுறைகளை யார் உருவாக்குகிறார்? இவற்றை பின்பற்றுவது கட்டாயமானதாக உள்ளதா என்ன?

கீழுள்ள உரையில் உங்களால் அவற்றின் விடைகளைக் காண முடிகிறதா என்று பார்க்க.

### அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள்:

நாட்டின் நிர்வாகம் தொடர்பான முன்னேற்பாடுகள் கூட்டாக முறையான வழியில் எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதோ அதை அரசியலைப்புச் சட்டம் என்று அழைக்கிறோம். இதன் பொருள் அரசியலமைப்புச் சட்டம் என்பது நாட்டின் அரசியல் நிர்வாகம் தொடர்பான முன்னேற்பாடாக எழுதப்பட்ட ஆவணமாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அரசு அல்லது சர்க்கார் நிறுவப்படுகிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னேற்பாடுகளின் அடிப்படையில் அரசியல் நிர்வாகம் செய்ய அரசு கட்டுப்பட்டதாகும். அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முன்னேற்பாடுகள் அல்லது அதில் குறிப்பிடப்பட்டவை அடிப்படைச் சட்டமாகும். அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பொருந்தாததை முடிவு செய்து அத்தகைய சட்டத்தை அரசு கொண்டுவர முடியாது. அவ்வாறு செய்தால் நீதித்துறை அச்சட்டத்தை இரத்து செய்து தீர்ப்பளிக்க முடியும்.

### அரசியலமைப்பிலுள்ள அல்லது அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முன்னேற்பாடுகள்:

அரசியலமைப்பிலுள்ள முன்னேற்பாடுகள் பல்வேறு விஷயங்களைப் பற்றியனவாகும். எ.கா. குடியுரிமை, குடிமக்களின் உரிமை, குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு, அரசால் இயற்றப்படப்போகும் சட்ட விஷயங்கள், தேர்தல்கள், அரசின் மீதான கட்டுப்பாடுகள், மாநிலத்தின் அதிகார எல்லை போன்றவை.

அரசியலமைப்பின் அடிப்படையில் அரசியல் நிர்வாகம் செய்ய வேண்டிய நெறிமுறையை கிட்டத்தட்ட அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இருப்பினும், பல்வேறு நாடுகளில் அரசியலமைப்பின் இயல்புகள் வெவ்வேறாக உள்ளன. வரலாறு, சமூக அமைப்புகள், கலாச்சாரம், மரபுகள் போன்றவற்றில் நாடுகளுக்கிடையில் மாறுபாடுகள் அல்லது வேறுபாடுகள் உள்ளன. அதுபோலவே, அவற்றின் தேவைகள் மற்றும் நோக்கங்களும் மாறுபட்டு இருக்கும்; மட்டுமன்று, ஒவ்வொரு நாடும் அதன் தனித்துவ இயல்புடன் பொருந்தக்கூடிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சிக்கிறது.



**உங்களுக்குத் தெரியுமா?**

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் அரசியல் நிர்வாகம் அரசியலமைப்பின் அடிப்படையில் நடைபெறுகிறது. இருப்பினும், இரு அரசியலைப்புக்குமிடையில் வேறுபாடு உள்ளது. எ.கா. அமெரிக்காவின் அரசியலமைப்பு கி.பி 1789 இல் அமலுக்கு வந்தது. இந்த எழுதப்பட்ட அரசியலமைப்பினுள் வெறும் 7 ஷரத்துகள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. 225 வருடங்களுக்கும் அதிகமான காலம் ஆன போதிலும் அதே அரசியலமைப்பின் அடிப்படையிலேயே இன்றும் அமெரிக்காவின் அரசியல் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இங்கிலாந்து நாட்டிற்கு பல நூற்றாண்டுகளுக்கான வரலாறு உள்ளது. இந்நாட்டின் அரசியல், நிர்வாகம் குறித்த விதிமுறைகள் மரபுகள், வழக்கங்கள் பாரம்பரிய வடிவில் காணப்படுகின்றன. இருப்பினும், அவை கவனத்துடன் பின்பற்றப்படுகின்றன. கி.பி. 1215 ஆம் ஆண்டு உருவான மக்னாகாடா உடன்படிக்கையிலிருந்து அரசியலமைப்பு வளர்ச்சி அடைந்துள்ளது. சில எழுதப்பட்ட விதிமுறைகளை உள்ளடக்கி இருந்தாலும் இங்கிலாந்து அரசியலமைப்பு முழுமையாக எழுதப்படாததாகவே கருதப்படுகிறது.



**இதை கண்டுபிடிப்போம்!**

உங்களுக்கு விருப்பமான ஏதேனும் ஒரு நாட்டின் அரசியலமைப்பு குறித்த சில தகவல்களை கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் பெறுக.

நாட்டின் பெயர், அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட வருடம்,அரசியலமைப்பின் இரு அம்சங்கள்.

**அரசியலமைப்பின் அவசியம்:** அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் அல்லது விதிமுறைகளின் அடிப்படையில் அரசியல் நிர்வாகம் செய்வதில் பல நன்மைகள் உள்ளன.

- விதிமுறைகளின் அமைப்பினுள் உள்ளபடி அரசு அரசியல் நிர்வாகம் செய்திட வேண்டும். அதனால் அதற்கு கிடைக்கப்பெற்ற அதிகாரம் அல்லது வலிமையின் தவறான பயன்பாடு ஆவது குறைய வாய்ப்புள்ளது.
- அரசியலமைப்பில் குடிமக்களின் உரிமைகள் மற்றும் அவர்களது சுதந்திரம் குறிப்பிடப்பட்டு உள்ளது. அரசு இவ்வுரிமைகளைப் பறிக்க முடியாது. ஆகவே, குடிமக்களின் உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்படுகின்றன.
- அரசியலமைப்பிலுள்ள முன்னேற்பாடுகளின் அடிப்படையில் அரசியல் நிர்வாகம் செய்வது சட்டத்தின் ஆட்சியை நிறுவுவதற்கு ஒப்பானதாகும். அப்போது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தவோ அல்லது ஒருவரது சுய விருப்ப அரசியல் நிர்வாகத்திற்கோ வாய்ப்பு இல்லை.
- அரசியலமைப்பின் அடிப்படையில் அரசியல் நிர்வாகம் நடைபெற்றால் அரசின்மேல் பொதுமக்களின் விசுவாசம் பெருகுகிறது. இதன்மூலம் அவர்கள் அரசின் செயல்பாடுகளில் பங்கேற்பதில் ஆர்வமிக்க-வர்களாகின்றனர். பொதுமக்களின் அதிகமான பங்கேற்பினால் ஜனநாயகம் அதிக வலிமை அடைகிறது.
- அரசியலமைப்பு சில அரசியல் நோக்கங்களை நாட்டின் முன் வைக்கிறது. அவ்வளர்ச்சித் திசையில் செயல்பட நாடு கட்டுப்பட்டுள்ளது. இதிலிருந்து உலக அமைதி, மற்றும் பாதுகாப்பு மனித உரிமைகளின் முன்னேற்றம் அடைவதற்கு உகந்த சூழ்நிலை உருவாகிறது.
- அரசியலமைப்பில் குடிமக்களின் கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளதால் குடிமக்களின் பொறுப்புணர்வும் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

### அரசியல் நிர்வாகம் என்றால் என்ன?

நாட்டின் அரசியல் நிர்வாகத்தில் என்னென்ன விஷயங்கள் உள்ளடங்கியுள்ளன?

நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்தல், அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து மக்களைப் பாதுகாத்தல், வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பை உருவாக்குதல், கல்வி மற்றும் உடல்நல சேவை, வணிகம் மற்றும் தொழிற்சாலைகளை ஊக்குவித்தல், நலிந்த பிரிவினர்களுக்கான பாதுகாப்பு, பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்காக தீர்வுகள் போன்ற பல விஷயங்கள் பற்றிய சட்டங்களை அரசு உருவாக்க வேண்டும். சட்டங்களை அமலாக்கி சமூகத்தில் விரும்பத்தக்க மாற்றங்களை அரசு கொணர வேண்டும். சுருக்கமாக கூறினால், இன்றைய நவீன காலத்தில் விண்வெளி ஆராய்ச்சி முதல், பொதுவான தூய்மை வரையுள்ள அனைத்து விஷயங்கள் தொடர்பான முடிவுகளை அரசே எடுக்க வேண்டும். இதுவே அரசியல் நிர்வாகம் என்று அழைக்கப்படுகிறது.

அரசியல் நிர்வாகத்தின் பொருள் மற்றும் அதன் அவசியத்தை புரிந்து கொண்டோம். இப்போது நாம் இந்திய அரசியலமைப்பு எவ்வாறு உருவானது என்பதை அறிந்துகொள்வோம்.

**அரசியலமைப்பு உருவாக்கத்தின் பின்னணி:** இந்திய அரசியலமைப்பு உருவாக்கப் பணி கி.பி. 1946 இல் தொடங்கியது. சுதந்திர இந்தியாவின் அரசியல் நிர்வாகம் ஆங்கிலேயர் உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் நடைபெறாது, மாறாக, அது இந்தியர்கள் சொந்தமாக உருவாக்கிய சட்டத்தினடிப்படையில் இயங்கும் என்று சுதந்திர இயக்கத்திலுள்ள தலைவர்கள் உறுதியாக இருந்தனர். அதனடிப்படையில் இந்திய அரசியலமைப்பை உருவாக்க ஒரு குழு

நிறுவப்பட்டது. இக்குழு அரசியலமைப்பு சபை என்று அழைக்கப்பட்டது.

**அரசியல் நிர்ணய சபை:** நமது நாடு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் சுதந்திரம் அடைந்தது. அதற்கு முன் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி இருந்தது. ஆங்கிலேய அரசின் நிர்வாக வசதிக்காக மும்பை மாகாணம், வங்காள மாகாணம் மற்றும் மதராஸ் மாகாணம் போன்ற பிரிவுகளாகப் பிரித்திருந்தது. இம்மாகணங்களில் நிர்வாகம் அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்டது அதுபோலவே, நாட்டின் சில பகுதிகளில் நிர்வாகத்தை அங்குள்ள உள்ளூர் இராஜாக்களே பார்த்துக் கொண்டனர். அத்தகைய பகுதிகள் சிற்றரசுகள் எனவும் அவற்றின் தலைவர்கள் சிற்றரசர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். அரசியல் நிர்ணய சபையில் மாகாண மற்றும் சிற்றரசர்களின் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டிருந்தனர்.



டாக்டர் இராஜேந்திர பிரசாத்

அரசியல் நிர்ணய சபையில் மொத்தம் 299 உறுப்பினர்கள் இருந்தனர். டாக்டர் இராஜேந்திர பிரசாத் இவ்வரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்தார்.

**டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் பங்களிப்பு:**

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். அவரிடம் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பு பற்றிய ஆழ்ந்த கல்வி அறிவு இருந்தது. அவர் இரவும் பகலும் படித்து சிந்தித்து அரசியலமைப்பு வரைவை உருவாக்கினார். டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் உருவாக்கிய அரசியலமைப்புச் சட்ட வரைவு அரசியல் நிர்ணய சபையிடம் வழங்கப்பட்டது. அதிலுள்ள விஷயங்கள் ஒவ்வொன்றாக விவாதிக்கப்பட்டன. பல திருத்தங்கள் பல்வேறு உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டன. சட்ட வரைவை வழங்குதல், அதன்மீது சேர்க்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல், அரசியல் நிர்ணய சபையின் பரிந்துரைகளின்படி மூல வரைவில் மாற்றங்களை உருவாக்குதல் மற்றும் அரசமைப்பின் ஒவ்வொரு முன்னேற்பாட்டையும் குறைபாடின்றி செய்யும் பணியை டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் செய்தார். இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் இந்த பங்களிப்பின் காரணமாக அவர் ‘இந்திய அரசியலமைப்பின் சிற்பி’ என்று அழைக்கப்படுகிறார்.



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

முழு அரசியலமைப்பை எழுதி முடித்தபின் சபை அதற்கு அங்கீகாரம் அளித்தது. மேலும் அதை 1949 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் ஏற்றுக் கொண்டது. ஆகவே நவம்பர் 26ஆம் நாள் அரசியலமைப்பு தினம் என்று கொண்டாடப் படுகிறது. 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம்

**இது எவ்வளவு பெருமைக்குரிய விஷயம்!**

- அரசியல் நிர்ணய சபையின் விவாதம் மற்றும் கலந்துரையாடலின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. எதிர் நோக்கு நிலைகளுக்கு மரியாதை மற்றும் பொருத்தமான அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்வதே அரசியல் நிர்ணய சபைப் பணியின் தனிச்சிறப்பு பண்பாகும்.
- அரசியலமைப்பை எழுதி முடிக்க 2 வருடங்கள் 11 மாதங்கள் மற்றும் 17 நாட்கள் ஆயின.
- மூல அரசியலமைப்பில் 22 பகுதிகள் 395 விஷயங்கள் மற்றும் 8 பின் இணைப்புகள் உள்ளடங்கியுள்ளன.



**உங்களுக்குத் தெரியுமா?**

அரசியல் நிர்ணய சபையில் டாக்டர் இராஜேந்திர பிரசாத், பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர், சர்தார் வல்லபபாய் பட்டேல், மௌலானா அபுல் கலாம் ஆஜாத், சரோஜினி நாயிடு J.B. கிருபளானி, இராஜ்குமாரி அம்ரித்கௌர், துர்க்காபாய் தேஷ்முக், ஹன்சாபென் மேத்தா போன்ற பல மேம்பட்ட நபர்கள் இருந்தனர். B.N. இராவ் இம்மரியாதைக்குரிய அரசியல் அமைப்பு சபையின் சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

நாளிலிருந்து அரசியலமைப்பிலுள்ள முன்னேற் பாடுகளின் அடிப்படையில் நாட்டின் அரசியல் நிர்வாகம் தொடங்கியது. இந்நாளிலிருந்து இந்தியாவின் குடியரசு ஆட்சி உதயமானது. நாம் இந்நாளை 'குடியரசு தினம்' என்று கொண்டாடுகிறோம்.



பண்டித ஜவஹர்லால் நேரு



சர்தார் வல்லபபாய் பட்டேல்



மௌலானா ஆசாத்



சரோஜினி நாயுடு



**செய்து பார்க்க.**

உங்களது வகுப்பின் நிர்வாகம் விதிகளின்படி நடைபெற வேண்டும் என்று நீங்கள் நினைப்பதில்லையா? அதில் எந்தெந்த விதிகளை நீங்கள் உள்ளடக்குவீர்கள்? அப்படியாயின் உங்களது வகுப்புக்கு ஒரு விதிமுறைத் தொகுப்பை உருவாக்குக.



**உங்களுக்குத் தெரியுமா?**

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் பங்களிப்பு, நீர் பாதுகாப்பு, வெளிநாட்டுத்தொடர்பு, தேசப் பாதுகாப்பு, பத்திரிகை, பொருளாதாரம், சமூக நீதி போன்ற பல்வேறு துறைகளில் பரந்து இருந்தது.



இந்திய அரசியலமைப்பு வரைவினை அரசியல் நிர்ணய சபையின் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத்திடம் வழங்குதல்

## பயிற்சி

**1. பின்வரும் கருத்துகளை விளக்குக.**

(1) அரசியலமைப்பிலுள்ள முன்னேற்பாடுகள்

(2) அரசியலமைப்பு தினம்

**2. கலந்துரையாடுக.**

(1) அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது.

(2) டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பின் சிற்பி என்று அழைக்கப்படுகிறார்.

(3) நாட்டின் அரசியல் நிர்வாகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்.

**3. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

(1) எந்த நாட்டின் அரசியலமைப்பு முழுமையாக எழுதப்பட்டது இல்லை?

(அ) அமெரிக்கா (ஆ) இந்தியா

(கு) இங்கிலாந்து (ஈ) இவற்றுள் எதுவும் இல்லை.

(2) அரசியல் நிர்ணய சபையின் தலைவர் யார்?

(அ) டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

(ஆ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்

(இ) துர்க்காபாய் தேஷ்முக்

(ஈ) B.N. இராவ்

(3) கீழுள்ளவர்களுள் யார் அரசியல் நிர்ணய சபையின் நபராக இல்லை.

(அ) மகாத்மாகாந்தி

(ஆ) மௌலானா ஆஜாத்

(இ) இராஜ்குமாரி அம்ரித் கௌர்

(ஈ) ஹன்சா பென்மேத்தா

(4) வரைவு குழுவின் தலைவராக யார் இருந்தார்?

(அ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்

(ஆ) சர்தார் வல்லபபாய் பட்டேல்

(இ) டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

(ஈ) J.B. கிருபளானி

**4. உங்கள் கருத்தை சொற்றொடர்களில் எழுதுக.**

(1) அரசுக்கு எந்தெந்த விஷயங்களின்மேல் சட்டங்கள் இயற்ற வேண்டியுள்ளது?

(2) ஜனவரி 26 ஆம் நாளை நாம் குடியரசு தினம் என்று ஏன் கொண்டாடுகிறோம்?

(3) அரசியலமைப்பிலுள்ள முன்னேற்பாடுகளின் அடிப்படையில் அரசியல் நிர்வாகம் செய்வதன் பயன்கள் யாவை?

### செயல்பாடுகள்

(1) அரசியல் நிர்ணய சபைக்காக பல்வேறு குழுக்கள் நிறுவப்பட்டன. அவை குறித்த தகவலைப் பெறுக. மேலும் குழுக்களின் பெயர்களின் அட்டவணை தயார் செய்து பெயர்களுடனான படங்களை சேகரிக்க.

(2) ‘அரசியலமைப்பு தினம்’ பள்ளியில் எப்போது கொண்டாடப்பட்டது என்பது பற்றிய அறிக்கை தயார் செய்க.

(3) அரசியல் நிர்ணய சபையிலுள்ள உறுப்பினர்களின் நிழற்படங்களை சேகரிக்க.

# 2. அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை

**சென்ற பாடத்தில் நாம் என்ன படித்தோம்!**

- அரசியலமைப்புச் சட்டம் என்பது அரசியல் நிர்வாகத்தின் விதிமுறைகளை விளக்கும் ஒரு முக்கிய ஆவணம் ஆகும்.
- அரசியல் நிர்ணய சபை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியது.
- நமது பிரதிநிதிகள் அரசியலமைப்பிலான சட்டங்களின் அடிப்படையில் நாட்டை நிர்வகிக்க வேண்டும்.

நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அடிப்படையான மற்றும் உலகிலேயே மிக உயர்ந்த சட்டமாகும். எந்தவொரு சட்டத்திற்குப் பின்னும் சில திட்டவட்டமான நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் உள்ளன. இந் நோக்கங்களை அல்லது குறிக்கோள்களை தெளிவாக்கியபின் விளக்கமாக சட்டத்திலுள்ள பிற முன்னேற்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. அவை எல்லாம் சேர்ந்த சுருக்கமான மற்றும் ஒத்திசைவான முறையிலான சீரமைப்பே முகப்புரையாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை 'முகவுரை' என்றும் அழைக்கப்படுகிறது. முகவுரை நமது அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கங்களை விளக்குகிறது.



**செய்து பார்க்க**

அரசியலமைப்புச் சட்டத்தின் முக உரையை வாசிக்க. அதிலுள்ள முக்கிய சொற்களின் பட்டியல் தயார் செய்க. இச் சொற்களை நீங்கள் வேறு எங்காவது வாசித்துள்ளீர்களா?

நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். நம் அனைவருக்கும் ஒரு நாடு. ஆகவே, மக்களாகிய நாம் என்ன சாதிக்க வேண்டும் என்பதை முகவுரை கூறுகிறது. இதிலுள்ள கோட்பாடுகள், எண்ணங்கள் மற்றும் குறிக்கோள்கள் உன்னதமானவை. அவற்றை எவ்வாறு பெற வேண்டும் என்பது பற்றிய முன்னேற்பாடுகள் முழுவதும் அரசியலமைப்புச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையின் தொடக்கத்தில் 'இந்திய மக்களாகிய நாங்கள்' என்ற சொற்கள் உள்ளன. இந்தியாவை ஓர் இறையாண்மையுடைய சமதர்ம, மதச்சாற்பற்ற, ஜனநாயக குடியரசாக உருவாக்க இந்தியர்களின் தீர்மானம் அதில் கூறப்பட்டுள்ளது. இக்கலைச் சொற்களின் பொருளை நாம் இப்போது புரிந்து கொள்வோம்.

**(1) இறையாண்மையுடைய நாடு:** இந்தியாவை நீண்ட காலமாக ஆங்கிலேயர் ஆட்சி செய்தனர். ஆங்கிலேய ஆட்சி 1947 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் முடிவடைந்தது. நம் நாடு சுதந்திரம் அடைந்தது. இந்தியா இறையாண்மையுடைய நாடானது. நாம் நமது நாட்டிற்குப் பொருத்தமானவற்றை எண்ணி அப்படியே முடிவெடுக்க சுதந்திரமாக உள்ளோம். இறையாண்மை என்ற சொல்லின் பொருள் ஒரு நாடு அந்நிய சக்தியின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை என்பதாகும்.

நமது சுதந்திரப் போராட்டத்தின் மிக முக்கிய நோக்கம் இறையாண்மையைப் பெறுவதேயாகும். இறையாண்மை என்பது அரசியல் நிர்வாகம் செய்வதற்கான உச்ச அதிகாரத்தைப் பெற்றிருப்பதாகும். ஜனநாயகத்தில் இறையாண்மை மக்களின் கைகளில் உள்ளது. மக்கள் தம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து தமது சார்பாக இறையாண்மை அதிகாரத்தை பயன்பாட்டுக்குக் கொண்டுவர அனுமதி அளிக்கின்றனர். நமது நாட்டினுள் எந்த சட்டத்தையும் உருவாக்கத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்களுக்கு அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைப்புகளுக்கு உள்ளது.

**(2) சமதர்ம நாடு:** சமதர்ம நாடு என்பது ஏழை-பணக்காரர்களுக்கு இடையில் பெரிய இடைவெளி இல்லாத நாடாகும். நாட்டிலுள்ள செல்வங்களின்மேல் அனைவருக்கும் உரிமை உள்ளது. செல்வக் குவியல் சில மக்களின் கைகளில் மட்டுமே இருக்கக் கூடாது என்பதில் அக்கறை காட்டப்படுகின்றன.

**(3) மதசார்பற்ற நாடு:** மதசார்பின்மையை நமது நோக்கங்களில் ஒன்றாக முகவுரைப்பகுதி கூறுகிறது. மதசார்பற்ற நாட்டில் அனைத்து மதங்களும் சமமாகக் கருதப்படுகின்றன.

எந்தவொரு மதமும் நாட்டின் மதமாகக் கருதப்படுகிறதில்லை. குடிமக்கள் தமது சொந்த மதங்களைப் பின்பற்ற சுதந்திரம் உள்ளது. குடிமக்களிடையே மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்ட முடியாது.



### உங்களுக்குத் தெரியுமா?

மதசார்பற்ற வழியில் நாம் நமது சமூகத்தின் பன்மத இயல்பை பாதுகாக்க முயற்சி செய்துள்ளோம். நமது அரசியலமைப்புச் சட்டத்தில் பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் கட்டுப்பாடற்ற முறையில் பயன்படுத்த முடியாது. மத சுதந்திரமும் அதே போன்றதாகும். நாம் திருவிழாக்களைக் கொண்டாடும் பொழுதுகளில் நமது பொதுத் தூய்மை, உடல்நலம் மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

**(4) ஜனநாயக நாடு:** ஜனநாயகத்தில் அரசியல் நிர்வாக அதிகாரம் மக்கள் கைகளில் உள்ளது. அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் அரசு முடிவெடுத்துக் கொள்கையை வடிவமைக்கிறது. பொது நலனுக்காக முக்கிய பொருளாதார, சமூக மற்றும் பிற முடிவுகளை அரசு எடுக்க வேண்டும். அத்தகைய முடிவுகளை ஒவ்வொரு நாளும் அனைத்து மக்களும் ஒன்றுசேர வந்து எடுக்க முடியாது. ஆகவே, நிலையான காலத்துக்குப்பின் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இத்தேர்தல்களில் வாக்காளர்கள் வாக்களித்து தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பாராளுமன்றம், நிர்வாகக் குழு போன்ற அமைப்புகளுக்கு செல்கின்றனர். அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அல்லது கூறப்பட்டுள்ள செயல்முறையின்படி மொத்த மக்களுக்காக முடிவுகளை எடுக்கின்றனர்.

**(5) குடியரசு நாடு:** நம் நாட்டில் ஜனநாயகத்துடன் கூடிய குடியரசு நடைமுறைகள் உள்ளன. குடியரசு நாட்டில் அனைத்து பொதுப் பதவிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. எந்தவொரு பொதுப்பதவியும் மரபுரிமையின்படி வருவதில்லை.

ஜனாதிபதி, பிரதமர், ஆளுநர், முதல்வர், மேயர், ஊராட்சி மன்றத் தலைவர் போன்ற பதவிகள் பொதுப் பதவிகளாகும். இப்பதவிகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயதுநிலை பூர்த்தியான எந்தவொரு இந்தியக் குடிமகனும் தேர்தலில் போட்டியிட முடியும். முடியாட்சி முறையில் இப்பதவிகள் மரபுரிமையின்படி ஒரே குடும்பத்திலுள்ள நபர்களிடம் சென்றன.

### கலந்துரையாடுக

'எனது குடும்பம்' என்ற தலைப்பில் தீபா என்ன எழுதியுள்ளார் என்பதை வாசிக்க.

ஜனநாயகம் என்பது தேர்தல்களை மட்டும் குறிப்பாக உணர்த்துவதில்லை. எனது அம்மா - அப்பா வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் ஒருங்கே செய்கின்றனர். அதில் நாங்களும் பங்கு கொள்கிறோம். பரஸ்பரத்துடன் பேசும்போது நாங்கள் முடிந்த அளவு சண்டையிடுவதில்லை. அப்படி சண்டையிட்டாலும் வெகு விரைவில் அதை தள்ளி வைத்து பரஸ்பரத்துடன் சொல்வதை கேட்கிறோம். பாட்டி - தாத்தாவிடம் கூட ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமெனில் ஆலோசிக்கிறோம். அனுஜாவிற்கு விவசாயக் கல்வியில் ஆய்வு செய்ய வேண்டும். அவளது முடிவு அனைவருக்கும் பிடித்திருந்தது.

தீபாவின் வீட்டில் ஜனநாயக முறை உள்ளதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஜனநாயகத்தின் எப்பண்புகள் இச்சூழலில் காணப்படுகின்றன?

முகவுரையில் அனைத்து இந்திய குடிமக்களின் நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகிய மூன்று கோட்பாடுகள் மற்றும் அதன் அடிப்படையிலான செயல்களைச் செய்ய சட்டங்கள் உருவாக்கி அக்குறிக்கோள்களை நடைமுறையில் கொண்டுவர உத்திரவாதம் தரப்பட்டுள்ளது. இக்கோட்பாடுகளின் பொருளை நாம் புரிந்து கொள்வோம்.

**(1) நீதி:** அநீதியை நீக்கி அனைவருக்கும் தமது முன்னேற்றத்திற்கான வாய்ப்பை பெற்றுத்தருவதே நீதி என்பதாகும். அனைத்து மக்களின் பொதுநலனை ஊக்குவிக்கும்விதமான கொள்கைகளை ஏற்றுக் கொள்வதே நீதியை நிலைநாட்டுவதாகும். முகவுரையில் மூன்று வகை நீதிகள் கூறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

**(அ) சமூக நீதி:** தனிநபர்களிடையே ஜாதி மதம், இனம், மொழி, பிரதேசம், பிறந்த இடம் அல்லது பால் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவொரு வேறுபாடும் காட்டக் கூடாது. மனித இனத்தில் அனைவரும் சம சமூக தகுதிநிலை உடையவர்கள் ஆவர்.

**(ஆ) பொருளாதார நீதி:** பசி, பட்டினிச் சாவுகள், ஊட்டச்சத்துக் குறைபாடு, போன்றவை ஏழ்மை மற்றும் வறுமையின் காரணமாக ஏற்படுகின்றன. ஏழ்மை முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டுமெனில் ஒவ்வொருவரும் தமது மற்றும் தமது குடும்பத்தைப் பராமரிக்க

வாழ்வாதாரத்திற்கான வழியை பெற்றிருக்க வேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு குடிமக்களுக்கும் இவ்வுரிமையை எவ்வித வேறுபாடின்றி வழங்கியுள்ளது.

**(இ) அரசியல் நீதி:** அரசியல் நிர்வாகத்தில் பங்கு பெறும் அனைவருக்கும் சமமான உரிமை இருக்க வேண்டும் என்பதற்காக நாம் வயது வந்தோர் வாக்களிக்கும் செயல்முறையை ஏற்றுக் கொண்டுள்ளோம். அதன் மூலம் 18 வயது நிறைவடைந்த அனைத்து குடிமக்களும் வாக்களிக்க உரிமை உள்ளது.

**(2) சுதந்திரம்:** சுதந்திரம் என்பது நம்மீது நிர்பந்தங்கள், நியாயமற்ற கட்டுப்பாடுகள் இல்லாமல் இருக்க வேண்டும்; மேலும் நம்மிடம் இயற்கையில் அமைந்த திறன்கள் வளர்க்க வளமான சூழ்நிலை இருக்க வேண்டும் என்பதை குறிக்கிறது. ஜனநாயகத்தில் குடிமக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். சுதந்திரம் இருந்தால் மட்டுமே ஜனநாயகம் முழு வளர்ச்சியடைகிறது.

தனிநபர் ஒருவர்க்கு சிந்திக்கும் மற்றும் வெளிப்படுத்தும் சுதந்திரம் மிக அடிப்படையான சுதந்திரமாகும். ஒவ்வொருவரும் தமது கருத்துகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்த முடிகிறது. கருத்துப் பரிமாற்றம் நம்மிடத்தில் ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமையை பெருக்குகிறது. மேலும் அது ஒரு பிரச்சினையின் பல்வேறு பக்கங்களை நாம் புரிந்துகொள்ள உதவுகிறது.

நம்பிக்கை, புரிந்து கொள்ளல் மற்றும் வழிபாட்டு சுதந்திரம் முக்கியமாக மத சுதந்திரம் என்று கூறப்படுகிறது. தனது மதத்தின்படி அல்லது தனக்குப் பிடித்த மதத்தின் போதனைகளின்படி, செயல்படும் சுதந்திரம் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உண்டு. நமது திருவிழாக்கள் கொண்டாட்டங்களைக் கொண்டாடும் சுதந்திரம், நம்பிக்கை சுதந்திரம் மற்றும் வழிபாட்டு சுதந்திரம் இதிலுள்ள நோக்கமாகும்.

**(3) சமத்துவம்:** முகவுரை இந்திய குடிமக்களுக்கு சமூக தகுதிநிலை மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றில் சமத்துவத்திற்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

மனிதர் அனைவரும் சம தகுதி உடையவர். இதன் பொருள் ஜாதி, மதம், இனம், பால், பிறந்த இடம் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருக்கக் கூடாது என்பதாகும். உயர்வு - தாழ்வு, உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற பேதம் மக்களிடையே கூடாது என்பதே சம தகுதி உத்திரவாதம் ஆகும். முகவுரை வாய்ப்புகளின் சமத்துவத்திற்கு பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளது. நமது வளர்ச்சிக்கான வாய்ப்பு அனைவருக்கும் எந்தவொரு பாகுபாடின்றி கிடைக்கும்.

**கலந்துரையாடுக**

சுதந்திரம் தொடர்பான கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை குறித்து கலந்துரையாடுக.

- ☐ திருவிழாக்கள் - கொண்டாட்டங்களை வெளிப்படையாக நாம் கொண்டாடும்போது சில விதிகளை பின்பற்ற வேண்டியுள்ளது. அது நமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாது.
- ☐ சுதந்திரம் என்பதன் பொருள் மனதுக்கு வந்தவாறு நடப்பதல்ல; மாறாக, பொறுப்புள்ள வழியில் நடப்பதாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் ஒரு முழுமையான தனித்துவமான மிகச் சிறந்த நோக்கம் அல்லது நெறிமுறை உள்ளடங்கியுள்ளது. அந்நோக்கம் அல்லது நெறிமுறையின் பொருள் சகோதரத்துவத்தை உருவாக்கும் இலக்கு மற்றும் தனிநபர் மரியாதையை பாதுகாப்பதற்கான உத்திரவாதமாகும்.

**சகோதரத்துவம்:** நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவத்திற்கு உத்திரவாதம் கொடுப்பதால் மட்டும் இந்திய சமூகத்தில் சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது என்று அரசியலமைப்பை உருவாக்கியோர் நம்பினர். இதற்காக எத்தனை சட்டங்கள் உருவாக்கினாலும் கூட இந்தியாவில் சகோதரத்துவம் வராதவரை இச்சட்டங்களினால் பயன் ஏற்படப்போவதில்லை. ஆகவே, சகோதரத்துவத்தை ஊக்குவித்தல் முகவுரையில் ஓர் இலக்காக சேர்க்கப்பட்டுள்ளது. சகோதரத்துவம் என்பதன் பொருள் நமது நாட்டிலுள்ள அனைத்து குடிமக்கள் பற்றிய மற்றும் பரஸ்பரம் பற்றிய அன்புணர்வு கொண்டிருத்தலாகும். அது பரஸ்பரம் தொடர்பான உணர்வை உருவாக்குகிறது. மக்கள் ஒருவருக்கொருவரது சிக்கல்களைப் பற்றி புரிந்துகொள்ளும் திறத்துடன் சிந்திக்கின்றனர்.

சகோதரத்துவம் மற்றும் தனிநபர் மதிப்பு ஆகியவை நெருங்கியத் தொடர்புடையது ஆகும். தனிநபர் மதிப்பு என்பது ஒவ்வொரு தனிநபரும் மனிதன் என்ற சுய மரியாதையை பெற்றிருத்தலாகும். அது ஜாதி, மதம், இனம், பால், மொழி போன்றவற்றால் தீர்மானிக்கப்படுகிறதில்லை. நாம் மற்றவர்களால் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்பட விரும்புவதுபோலவே, நாமும் மற்றவர்களை அதே மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்திட வேண்டும்.

ஒவ்வொரு தனிநபரும் பிறநபர்களுக்கு மரியாதை செய்து அவர்களது சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்கு மரியாதை அளிக்கும் போதுதான் தனிநபர் மதிப்பை உருவாக்கிட முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் சகோதரத்துவம் இயற்கையிலேயே பெருகும். நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான புதிய சமூகத்தை உருவாக்கும் பணி மிக எளிதாக அமையும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையிலிருந்து இதற்கான வழிகாட்டுதலைப் பெறுகிறோம்.

'இந்திய மக்களாகிய நாங்கள் இந்த அரசியலமைப்பை நமக்கு நாமே அளிக்கிறோம்' என்ற சொற்களுடன் முகவுரை முடிவடைகிறது.



## பயிற்சி

1. **கட்டங்களிலுள்ள சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மை | அ | நீ | ஹை | வே | ஜ | மு | சி |
| உ | ன் | ல | ப் | ன | ம் | க | ன |
| ச | ம் | பி | நா | இ | னா | ப் | நா |
| க | தோ | ய | ர் | ம் | ட் | பு | க் |
| சா | க | ரா | க் | சா | ல் | ரை | ர் |
| ம் | வ | து | த் | ர | த | கோ | ச |
| பு | ஆ | வு | க | சா | க் | ம | ம |

(1) நாட்டிலுள்ள அனைத்து குடிமக்கள் பற்றிய மற்றும் பரஸ்பரம் பற்றிய அன்புணர்வு கொண்டிருத்தல்.

(2) அரசியல் நிர்வாக அதிகாரம் மக்களின் கைகளில் இருத்தல்.

(3) அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை.

(4) அனைத்து மதங்களும் சமமாகக் கருதப்படுதல்.

2. **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(1) மதசார்பற்ற அரசியலமைப்புச் சட்டத்தில் என்னென்ன முன்னேற்பாடுகள் உள்ளன?

(2) வயது வந்தோர் வாக்குரிமை முறை என்றால் என்ன?

(3) பொருளாதார ரீதியால் குடிமக்களுக்கு என்ன உரிமை கிடைக்கிறது?

(4) சமுதாயத்தில் தனிநபர் மதிப்பை எவ்வாறு உருவாக்கிட முடியும்?

3. நமக்குக் கிடைத்த சுதந்திரத்தை நாம் எம்முறையில் பயன்படுத்த வேண்டும்? உங்களது கருத்துகளை எழுதுக.

4. **பின்வரும் கருத்துகளை விளக்குக.**

(1) சமதர்ம நாடு ---

(2) சமத்துவம் ---

(3) இறையாண்மையுடைய நாடு ---

(4) வாய்ப்புகளின் சமத்துவம் ---

5. இந்திய அரசியலமைப்பு முகவுரையில் என்னென்ன முக்கிய விஷயங்கள் அடங்கியுள்ளன?

### செயல்பாடுகள்

(1) ஆசிரியரின் துணையுடன் வாக்களிப்பு நடைபெறும் விதம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) செயல்படும் விதம் பற்றி புரிந்து கொள்ள வட்டாட்சி அலுவலகத்துக்கு சுற்றுலா செல்க.

(2) உங்களது சுற்றுப்புறத்திலுள்ள செய்தித்தாள்களின் பெயர்களின் பட்டியல் தயாரிக்க.

# 3. அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகள்

கடந்த இரு பாடங்களில் நாம் இந்திய அரசியலமைப்பின் உருவாக்கம் எவ்வாறானது என்பதையும் அரசியலமைப்பின் முகவுரையையும் கற்றுள்ளோம். இறையாண்மை, சமதர்மம், மதசார்பின்மை, ஜனநாயகம், குடியரசு போன்ற சொற்களை புரிந்துள்ளோம். முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்நோக்கங்கள் நமது அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் ஆகும். இவை தவிரவும் அரசியலமைப்பில் இன்னும் என்னென்ன சிறப்பியல்புகள் உள்ளன என்பதை நாம் இப்பாடத்தில் புரிந்துகொள்ள போகிறோம்.

**கூட்டாட்சி முறை:** கூட்டாட்சி அமைப்பு என்பது அரசியலமைப்பில் ஒரு முக்கிய சிறப்பியல்பு ஆகும். பரந்த பிரதேசங்களையும் பெரும் மக்கள் தொகையையுமுடைய நாடுகளில் ஆட்சி செய்ய கூட்டாட்சி ஒரு முறையாகும். பரந்த பிரதேசங்களை ஒரேயொரு இடத்திலிருந்து அரசியல் நிர்வாகம் செய்வது கடினமானதாகும். தூரத்திலுள்ள பிரதேசங்கள் கவனிக்கப்படாமல் போகின்றன. இங்குள்ள மக்கள் அரசியல் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஆகவே, கூட்டாட்சியில் இரு மட்டங்களில் அரசு அமைப்புகள் உள்ளன. முழு தேசத்தையும் பாதுகாத்தல், வெளிநாட்டு விவகாரங்கள், அமைதியை ஏற்படுத்துதல் போன்ற வேலைகளை மத்தியிலுள்ள அரசு நிறைவேற்றுகிறது. இது மத்திய அரசு அல்லது கூட்டாட்சி அரசு என்று அழைக்கப்படுகிறது. கூட்டாட்சி அரசு ஒட்டுமொத்த தேசத்தின் அரசியல் நிர்வாகத்தை செய்கிறது.

நாம் வாழும் பிரதேசத்தின் நிர்வாகத்தை கவனிக்கும் அரசு 'மாநில அரசு' என்று அழைக்கப்படுகிறது. மாநில அரசு என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் நிர்வாகத்தைக் கவனிக்கிறது. எ.கா. மகாராஷ்டிர மாநில அரசு.

இரு மட்டங்களில் வெவ்வேறு விஷயங்களின்மேல் சட்டங்கள் உருவாக்கி பரஸ்பர ஒத்துழைப்புடன் அரசியல் நிர்வாகம் செய்யும் இம்முறை கூட்டாட்சி முறை என்று அழைக்கப்படுகிறது.

**அதிகாரப் பங்கீடு:** கூட்டாட்சி அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையில் அரசியலமைப்பு அதிகாரங்களை பிரித்துக் கொடுத்துள்ளது. அதனடிப்படையில் எந்த விஷயங்களின் அதிகாரம் எந்த அரசிடம் உள்ளது என்பதைப் பார்க்க. நமது அரசியலமைப்பு பல்வேறு விஷயங்களடங்கிய மூன்று பட்டியல்களை வழங்கியுள்ளது.

முதலாவது பட்டியல் மத்திய பட்டியல் என்று அழைக்கப்படுகிறது. அதிலுள்ள 97 விஷயங்களின்மேல் மத்திய அரசு சட்டங்களை இயற்றுகிறது. மாநில அரசுகளுக்கான மாநில பட்டியலில் 66 விஷயங்கள் அடங்கியுள்ளன. இவ்விஷயங்களின்மேல் மாநில அரசு சட்டங்களை இயற்றுகிறது. இவ்விரு பட்டியல்களைத் தவிர 47 விஷயங்களைக் கொண்ட மூன்றாவது ஒரு பொது பட்டியல் உள்ளது. இரு அரசுகளும் இப்பட்டியலிலுள்ள விஷயங்களின்மேல் சட்டங்கள் இயற்ற முடியும். இம்மூன்று பட்டியல்களிலும் சேர்க்கப்படாத ஏதேனும் புது விஷயம் உருவானால் அதன்மேல் சட்டமியற்றும் அதிகாரம், மத்திய அரசுக்கு உள்ளது. இவ்வதிகாரம் எஞ்சிய அதிகாரம் என்று கூறப்படுகிறது.



**உங்களுக்குத் தெரியுமா?**

இந்திய அரசியலமைப்பிலுள்ள அதிகாரங்களின் பங்கீடு இணையற்றதாகும். மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்புக் கொடுத்து நாட்டு வளர்ச்சியை நிறைவேற்ற இதன் மூலம் முடியும். அரசியல் நிர்வாகத்தில் குடிமக்களின் பங்களிப்புக்கு இம் முறையில் ஊக்கம் கிடைக்கிறது.

**எந்தெந்த விஷயங்கள் எவற்றிடம் உள்ளன -**

**(1) மத்திய அரசிடமுள்ள விஷயங்கள்:** பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்புகள், போர் மற்றும் அமைதி, நீதி, சர்வதேச வணிகம் போன்றவை.

**(2) மாநில அரசிடமுள்ள விஷயங்கள்:** விவசாயம், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளாட்சி, ஆரோக்கியம், சிறை நிர்வாகம் போன்றவை.

**(3) இரு அரசுகளுக்கான விஷயங்கள்:** வேலை வாய்ப்பு, சுற்றுப்புறம், பொருளாதார மற்றும் சமூகத் திட்டங்கள், தனிநபர் சட்டம், கல்வி போன்றவை.

**யூனியன் பிரதேசங்கள்:** இந்தியாவில் ஒரு கூட்டாட்சி அரசு, 28 மாநில அரசுகள் மற்றும் 9

யூனியன் பிரதேசங்கள் உள்ளன. கூட்டாட்சி அரசு யூனியன் பிரதேசங்களை மேற்பார்வை செய்கிறது. புது டெல்லி, டாமன் மற்றும் டியூ, புதுச்சேரி, சண்டிகார், தாத்ரா-நகர்ஹவேலி, அந்தமான் - நிகோபார், இலட்சத்தீவுகள், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய யூனியன் பிரசேதங்கள் உள்ளன.

**செய்து பார்க்க?**

வடகிழக்கிலுள்ள மாநிலங்களின் பட்டியல் தயாரிக்கவும். அங்குள்ள மாநிலங்களின் தலைநகர்கள் யாவை?

**பாராளுமன்ற அரசு அமைப்பு:** இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாராளுமன்ற அரசு அமைப்பிற்கான முன்னேற்பாடுகளை செய்துள்ளது. பாராளுமன்ற அரசு அமைப்பு என்பது அரசியல் நிர்வாகத்தின் அப்படிப்பட்ட ஒரு முறையாகும். அங்கே பாராளுமன்றத்திற்கு அதாவது பாராளுமன்ற சட்டசபைக்கு முடிவுகளை எடுக்கும் உச்ச அதிகாரம் உள்ளது. இந்திய பாராளுமன்றம் ஜனாதிபதி, லோக்சபா மற்றும் இராஜ்ய சபா ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. நடைமுறையில் அரசியல் நிர்வாகம் செய்யும் மந்திரிசபை லோக்சபாவிலிருந்து வருகிறது. மேலும் அது தனது செயல்களுக்காக லோக்சபைக்கு பதிலளிக்கக் கூடியது ஆகும். பாராளுமன்ற அரசு அமைப்பில் பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள், கலந்துரையாடல்கள் கருத்துப் பரிமாற்றங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**




**காகித நாணயம்**

நீங்கள் காகித நாணயத்தைப் பார்த்துள்ளீர்கள் இல்லையா? அதில் 'மத்திய அரசால் உத்திரவாதம் அளிக்கப்பட்ட' என்று அச்சடிக்கப்பட்டுள்ளது.

காவலர் சீருடையின் தோள் பகுதிகளில் உள்ள உத்தியோக அணியை நீங்கள் பார்த்தால் அதில் 'மகாராஷ்டிரா போலீஸ்' என்று எழுதியிருப்பது தெரிகிறது.

'இந்திய இரெயில்' மற்றும் 'மகாராஷ்டிர அரசு போக்குவரத்துக் கழகம்' என்றும்கூட நீங்கள் வாசிப்பீர்கள்.

இதன் பொருள் நமது நாட்டில் இரு மட்டங்களில் அரசுகள் உள்ளன. ஒன்று இந்திய அரசு; இரண்டாவது மாநில அரசு ஆகும். எ.கா. மகாராஷ்டிரா அரசு, கர்நாடக அரசு போன்றவை.

மகாராஷ்டிர காவல்த் துறை

இந்திய இரயில்வே

மகாராஷ்டிர அரசு போக்குவரத்துக் கழகம்

**சுதந்திர நீதித்துறை:** இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒரு சுதந்திரமான நீதித்துறையை உருவாக்கியுள்ளது. பரஸ்பரமாக தீர்க்க முடியாத சர்ச்சைகள் நீதித்துறையிடம் ஒப்படைக்கப் படுகின்றன. நீதிமன்றம் இருபக்கம் கூறுவதைக் கேட்டு அதற்கு அநீதியாகத் தோன்றுவதை அகற்றி தீர்ப்பளிக்கிறது. இப்பணி பாரபட்சமின்றி செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

நீதிமன்றத்திற்கு எந்தவொரு அழுத்தமும் வரக்கூடாது என்பதற்காக அரசியலமைப்புச் சட்டம் நீதித்துறைக்கு மென்மேலும் சுதந்திரம் வைத்திருக்க பல முன்னேற்பாடுகளை செய்துள்ளது. எ.கா. நீதிபதிகள் அரசால் நியமிக்கப்படுகிறதில்லை. மாறாக, அவர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள். நீதிபதிகளை அவர்களது அலுவலிலிருந்து நீக்குவது எளிதானதல்ல.

**ஒற்றைக் குடியுரிமை:** இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும் ஒற்றைக் குடியுரிமையை வழங்கியுள்ளது. அதுவே ‘இந்தியக் குடியுரிமை’ ஆகும்.

**அரசியலமைப்பில் திருத்தங்களுக்கான செயல்முறை:** அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்பாடுகளில் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றம் அல்லது திருத்தம் செய்ய வேண்டியது தேவையானதாகும். இருப்பினும் அரசியலமைப்புச் சட்டத்தில் அடிக்கடி திருத்தங்கள் செய்தால் நிலையற்ற தன்மை உருவாகலாம். ஆகவே ஏதேனும் மாற்றம் செய்யும்போது அது சீரிய முழு யோசனைக்கு உட்பட வேண்டும். இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசியலமைப்புச்



சட்டத்தின் மாற்றத்திற்கான முழு செயல்முறை விளக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமெனில் இந்த செயல்முறையில் செய்ய வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள மாற்றத்திற்கான இச்செயல்முறை ஒப்பற்றதாகும். இது மிகவும் கடினமானதும் அல்ல; எளிதானதும் அல்ல. முக்கிய திருத்தங்களுக்கான கருத்துகள் மற்றும் கருத்து பரிமாற்றத்திற்கு இதனுள் போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பொதுவாக திருத்தங்கள் எளிதாக ஆக வேண்டும் என்பதற்காக இவ்வளவு நெகிழ்வானதாக இச்செயல்முறை உள்ளது.

**கண்டுபிடிக்க**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எத்தனை முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன?

**தேர்தல் ஆணையம்:** தேர்தல் ஆணையம் பற்றிய தகவல்களை செய்தித்தாள்களில் நீங்கள் எப்போதும் வாசிப்பீர்கள். இந்தியா ஜனநாயக அரசு அமைப்பை ஏற்றுக் கொண்டதில் இருந்து மக்கள் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப் பின்னர் தமது பிரதிநிதிகளை திரும்பவும் புதிதாகத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்காக தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இத்தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமான சூழலிலும் நடைபெற வேண்டியது அவசியமானதாகும். அப்போதுதான் குடிமக்கள் எந்தவொரு அழுத்தமின்றி தமக்கு உகந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க முடியும். அரசே தேர்தல்களை நடத்தினால் அங்கே சுதந்திர, நியாயமான சூழ்நிலை கிடைப்பதற்கு உத்திரவாதம் இருக்காது. எனவே, நமது அரசியலமைப்புச் சட்டம் தேர்தல் நடத்தும் பொறுப்பினை ஒரு சுதந்திரமான அமைப்பிடம் கொடுத்துள்ளது. இவ்வமைப்பே ‘தேர்தல் ஆணையம்’ என்பதாகும். இந்தியாவிலுள்ள அனைத்து முக்கிய தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணையத்திடம் உள்ளது.



**உங்களால் கூற இயலுமா?**

தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?

தேர்தல் நடத்தை விதித் தொகுப்பு என்றால் என்ன?

வாக்காளர் தொகுதி என்றால் என்ன?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பல சிறப்பியல்புகள் உள்ளன. இப்பாடத்தில் நாம் அவற்றுள் சில முக்கிய சிறப்பியல்புகளை மட்டுமே கற்றுள்ளோம். அடிப்படை உரிமைகள் பற்றிய முழுமையான விவரங்களடங்கிய முன்னேற்பாடுகள் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியமான சிறப்பியல்பு ஆகும். அதைப் பற்றிய கல்வியை நாம் அடுத்தப் பாடத்தில் கற்போம்.



## பயிற்சி

1. **கூட்டாட்சி அரசு முறையில் அதிகாரங்களின் பங்கீடு எவ்வகையில் செய்யப்படுகிறது என்பதன் பட்டியலை கீழுள்ள அட்டவணையில் தயார் செய்.**

| மத்திய அரசு | மாநில அரசு | இரு அரசுகளிடம் உள்ள விஷயங்கள் |
|---|---|---|
| (1) ______ | (1) ______ | (1) ______ |
| (2) ______ | (2) ______ | (2) ______ |
| (3) ______ | (3) ______ | (3) ______ |

2. **பொருத்தமான சொல்லை எழுதுக.**
   (1) ஒட்டுமொத்த தேசத்தின் அரசியல் நிர்வாக அமைப்பு ---
   (2) தேர்தலை நடத்தும் அமைப்பு ---
   (3) இரு பட்டியல்களை விடவும், கூடுதலாக உள்ள பட்டியல் ---

3. **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**
   (1) கூட்டாட்சி முறையில் இரு மட்டங்களில் அரசு அமைப்புகள் உள்ளன ஏன்?
   (2) எஞ்சிய அதிகாரம் என்றால் என்ன?
   (3) அரசியலமைப்புச் சட்டத்தில் நீதித்துறை சுதந்திரமாக வைக்கப்பட்டுள்ளது ஏன்?

4. **சுதந்திரமான நீதித்துறையின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி வகுப்பில் முழு விவாதத்திற்கு ஏற்பாடு செய்க.**

5. **மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் என்னென்ன பயன்கள் ஏற்படுகின்றன என்பது பற்றிய தகவலைப் பெறுக.**

**செயல்பாடு**

வகுப்பில் தேர்தல் ஆணையத்தை நிறுவுக. அத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் கீழ் வகுப்பில் தேர்தலை நடத்துக.

# 4. அடிப்படை உரிமைகள் - பகுதி 1




**வாருங்கள்! கண்டுபிடிப்போம்?**

* குழந்தைகளின் உரிமைகள் உங்களுக்கு தெரிந்திருக்கும். அவற்றில் முக்கியமான இரு உரிமைகளை உங்களால் கூற முடியுமா?
* பெண்களின் உரிமைகள், ஆதிவாசிகளின் உரிமைகள், விவசாயிகளின் உரிமைகள் போன்ற பதங்கள் கூட நமக்கு நன்கு தெரியும். இந்த உரிமைகள் தொடர்பாய் நம் அனைவருக்கும் சில கேள்விகள் எழுகின்றன.
* உரிமைகளினால் ஏற்படும் பயன்கள் யாவை? அவற்றை யார் தர வேண்டியுள்ளது?
* உரிமைகளை பறித்து மறுக்க முடியுமா?
* அவ்வாறு உரிமைகள் பறிக்கப்பட்டால் அதனை எதிர்த்து எங்கு சென்று முறையிட்டு தீர்வு பெற வேண்டும்?

செய்தித்தாள்களில் அல்லது வேறு எங்கேனும் நீங்கள் இதுபோன்ற சுலோக அட்டைகளிலுள்ள விளம்பரங்களை கண்டிருக்கக் கூடும். ஏதேனும் பேரணியில் அல்லது ஊர்வலத்தில் இதுபோன்ற சில கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. மேலும் அவை அவர்களின் உரிமைகளாக கோரப்படுகின்றன.

நாம் பிறப்பிலேயே உரிமைகள் பெற்று விடுகிறோம். பிறந்த ஒவ்வொரு குழந்தையும் உயிர்வாழ்வதற்கு உரிமை உள்ளது. அதற்கு சிறந்த ஆரோக்கியம் தர வேண்டுமென முழு சமுதாயமும் அரசும் முயற்சிகளை எடுக்கின்றன. அநியாயம், சுரண்டுதல், பாகுபாடு, வஞ்சிக்கப்படுதல் ஆகியவற்றிலிருந்து எப்போது எல்லா மனிதர்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கிறதோ அப்போதுதான் மனிதன் தன்னிடமுள்ள பண்புகள் மற்றும் திறமைகளை வளர்த்து கொள்ள முடியும். தனிப்பட்ட மற்றும் முழு மக்கள் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக ஆரோக்கியமான சூழ்நிலையை உரிமையுடன் கேட்பது, அதற்காக வற்புறுத்துதல் என்பதுவே உரிமை கோருதல் ஆகும்.

அரசியல் அமைப்புச் சட்டம் இவ்வாறான ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்குவதற்காக இந்தியாவிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகளை அளித்துள்ளது. இந்த உரிமைகள்

அடிப்படை உரிமைகள் எனப்படுகின்றன. இவை அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவற்றிற்கு சட்டத்தின் அந்தஸ்து உள்ளது. அந்த உரிமைகளை பின்பற்றி நடப்பது அனைவருக்கும் கட்டாயமான கடமை ஆகும்.

**கற்பனை செய்து பின்பு எழுதவும்.**

நாய், பூனை, பசு, எருமை, ஆடு போன்ற வீட்டு விலங்குகளை நீங்கள் வளர்க்கக் கூடும். நீங்கள் அவற்றை கண்டிப்பாக நன்றாக கவனித்துக் கொள்வீர்கள் மற்றும் அவற்றின் மீது மிகுந்த அன்பு செலுத்துவீர்கள்.

அந்த விலங்குகளால் பேச முடிகிறது எனில் அவை உங்களிடமிருந்து என்னென்ன உரிமைகளை கேட்கக் கூடும்?

**அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நமது உரிமைகள்:** அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்திய குடிமக்களினுடைய உரிமைகளின் பட்டியல் தரப்பட்டுள்ளது. அந்த உரிமைகள் யாவை என்பதை பார்ப்போம்.

**சமத்துவ உரிமை:** சமத்துவ உரிமையின் அடிப்படையில் சட்டத்தின் முன் அனைவரும் சமம். நாட்டிலுள்ள இந்திய குடிமக்களில் உயர்வு-தாழ்வு, ஏழை-பணக்காரர், ஆண்-பெண், என்று வேறுபாடு செய்து யாரையும் மாறுபட்ட முறையில் நடத்தவோ அல்லது சலுகைகள் அளிக்கவோ முடியாது. சட்டம் அனைவருக்கும் ஒன்றே ஆகும். பல சட்டங்கள் நமக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு: விசாரணையின்றி கைது செய்வதிலிருந்து நமக்கு பாதுகாப்பு அளிக்கிறது. அவ்வாறு பாதுகாப்பு அளிப்பதில் கூட அரசால் பாகுபாடு பார்க்க முடியாது.



**வாருங்கள் கலந்துரையாடுவோம்!**

அனைவரும் சட்டத்திற்கு முன் சமமாகவே கருதுதல் மற்றும் அனைவரும் சட்டத்தால் சமமாகவே பாதுகாக்கப்படுதல் - ஆகியவற்றினால் ஏற்படும் பயன்கள் யாவை?

சமத்துவ உரிமையில் வேறு என்னென்ன காரியங்கள் அடங்கியுள்ளன? அரசாங்க வேலை தரும்போது ஜாதி, மதம், பால் இனம், நிறம், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசு வேறுபாடு பார்க்கக் கூடாது. நமது தேசத்திலிருந்த தீண்டாமையை கடைபிடிக்கும் மனித நேயமற்ற பழைய பழக்கம் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. தீண்டாமையை கடைபிடித்தல் என்பது சட்ட நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றம் என்று கருதப்படுகிறது. இந்திய சமுதாயத்தில் சமத்துவத்தை நிலை நிறுத்துவதற்காக இந்த பழைய பழக்க வழக்கம் வேருடன் களையப்பட்டுள்ளது. மக்களில் உயர்ந்தோர் மற்றும் நலிந்தோர் வேறுபாட்டை காட்டக் கூடிய பட்டங்கள் தருவதை அரசியலமைப்புச் சட்டம் தடை செய்துள்ளது. எடுத்துக்காட்டு: இராஜா, மகாராஜா, இராவ்பகதூர் முதலியன.



**உங்களுக்குத் தெரியுமா?**

சமத்துவமின்மையை வளர்க்கக்கூடிய, சமுதாயத்தில் பிளவு ஏற்படுத்தக்கூடிய மற்றும் குடிமக்களில் பாகுபாடு ஏற்படுத்தக்கூடிய பட்டங்களை அரசு தரக்கூடாது, ஆனால் சமுதாயத்தில் பல்வேறு துறைகளில் சிறப்பு பங்களிப்பு ஆற்றியோருக்கு மட்டும் அரசு பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷண் போன்ற விருதுகளை அளிக்கிறது. 'பாரத ரத்னா' என்பது நமது தேசத்தின் மிக உயர்ந்த பொதுத் துறை சார்ந்த நற்பெயர் அல்லது உயர் விருது ஆகும்.

பாதுகாப்புத் துறையில் குறிப்பிடத்தக்க பணியாற்றியதற்காக பரமவீர் சக்கரம், அசோக சக்கரம், சௌர்ய சக்கரம் போன்ற மதிப்புமிக்க பதக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட பதக்கங்களின் மூலம் பிற குடிமக்களுக்கு இல்லாத எந்தவித சிறப்பு அதிகாரம் அல்லது உரிமைகள் விருது பெற்றவர்களுக்கு கிடைப்பதில்லை. ஆனால் அவர்களுடைய பணியை சிறப்பிக்க வேண்டும் என்பதற்காக பதக்கங்கள் தரப்படுகின்றன.

**சுதந்திர உரிமை:** அரசியலமைப்புச் சட்டம் அளித்துள்ள இந்த உரிமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருப்பதனால் அதில் தனிமனித கண்ணோட்டத்தில் அவசியமான அனைத்து வகை சுதந்திரத்திற்கும் உத்திரவாதம் தரப்பட்டுள்ளது.

இந்திய குடிமகன் என்பதனால் நமக்கு -

* பேச்சு மற்றும் கருத்துகளை வெளிவிடும் சுதந்திரம் உள்ளது.
* அமைதியாக ஒன்று கூடும் மற்றும் கூட்டங்களை நடத்தும் சுதந்திரம் உள்ளது.
* சங்கங்கள் மற்றும் கழகங்கள் ஏற்படுத்தும் சுதந்திரம் உள்ளது.
* இந்தியாவின் எந்த பகுதிக்கும் சென்றுவரும் சுதந்திரம் உள்ளது.
* இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் சுதந்திரம் உள்ளது.
* நமக்கு விருப்பமான வேலை, தொழில் செய்வதற்கான சுதந்திரம் உள்ளது.

## செய்து பார்

'அ', 'ஆ', மற்றும் 'இ' ஆகியோர் செய்த செயல்கள் இங்கே தரப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுதந்திரங்களின் எந்த வகையில் நீங்கள் அவற்றை இணைப்பீர்கள்?

'அ' என்பவர் ஆதிவாசிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக 'ஆதிவாசி கூட்டுறவு மன்றம்' அமைத்துள்ளார்.

'ஆ' என்பவர் தனது தகப்பனாரின் பேக்கரி தொழிலை கோவாவிலிருந்து மகாராஷ்டிராவிற்கு கொண்டுவர தீர்மானித்துள்ளார்.

'இ' என்பவர் அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையில் சில குறைபாடுகள் இருப்பதை கண்டுபிடிக்கிறார். அது தொடர்பாய் அவர் ஒரு கட்டுரை எழுதி செய்தித்தாளில் வெளியீட்டுக்காக அனுப்புகிறார்.

## உங்களுக்குத் தெரியுமா?

அரசியலமைப்புச் சட்டம் நமக்கு பல உரிமைகளை அளித்துள்ளது. ஆனால் அவற்றை பொறுப்பற்றதனமாய் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறான நடத்தையினால் பிறருக்கு இன்னல் ஏற்படக் கூடாது என்பதனை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நமக்கு பேச்சு உரிமை உள்ளது. ஆனால் மற்றவரை வன்முறைக்குத் தூண்டக்கூடிய எதைப் பற்றியும் எழுதவோ பேசவோக் கூடாது.

அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள சுதந்திர உரிமைகள் நமக்கு இந்தியாவில் எங்கும் செல்லுகிற - சுற்றுகிற அல்லது பேச்சு சுதந்திரத்தை மட்டும் தரவில்லை, அதனோடு நாம் பாதுகாப்பாய் வாழ்வதற்காக நமக்கு பாதுகாப்பு அளிக்கும் உத்திரவாதத்தையும் அளிக்கிறது. சட்டமானது இந்த பாதுகாப்பை அனைவருக்கும் சமமான முறையில் அளிக்கிறது. அது யாருக்கும் மறுக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக நம் அனைவருக்கும் தனிமனித வாழ்வு உரிமை உள்ளது. பொதுவாக இந்த உரிமை எளிதாக தோன்றுகிறது. ஆனால் அதில் ஆழமான பல அர்த்தங்கள் புதைந்துள்ளன. வாழ்வதற்கான உத்திரவாதம் கிடைத்தல், வாழ்வதற்கான ஆரோக்கியமான சூழ்நிலை இருத்தல் என்பது அதன் பொருள் ஆகும். எந்தவொரு நபரின் உயிரையும் யாரும் பறிக்க முடியாது. காரணமில்லாமல் யாரையும் கைது செய்து சிறையில் அடைக்க முடியாது. சுதந்திர உரிமையில் தற்போது கல்வி கற்பதற்கான உரிமையும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆறிலிருந்து பதினான்கு வயது வரையிலான அனைத்து சிறுவர் சிறுமிகள் கல்வி பெறுவது என்பது அவர்களின் அடிப்படை உரிமை ஆகும். இந்த உரிமை மூலம் கல்வியை எந்த குழந்தைக்கும் யாரும் மறுக்க முடியாது.

## சிந்தனை செய்யவும்

தனிமனித வாழ்வை பறிக்கக் கூடாது என்கிற உரிமையுடன் இன்னும் சில கூடுதலான உரிமைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஒரே குற்றத்திற்காக இரண்டு நேரம் தண்டனை தர முடியாது. எந்த ஒரு நபருக்கும் தண்டனை தருவதற்கு முன் அவர் மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும். இப்பணியை நீதிமன்றம் செய்கின்றது. குற்றம் சுமத்தப்பட்டவர் தொடர்பான ஆதாரங்களை திரட்டுதல் மற்றும் வழக்கை நீதிமன்றத்தில் நிறுத்துதல் ஆகியவற்றை காவலர் செய்கின்றனர். 'நான் குற்றம் புரிந்துவிட்டேன்' என்று கூறும் நபருக்கும் கூட உடனடியாக தண்டனை தர முடியாது. அந்த நபரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் சட்டத்தின் மூலமாக நிரூபிக்கப்பட வேண்டும். இந்த அனைத்து நீதிமன்ற செயல்பாடுகளுக்கு கால அவகாசம் ஆகிறது, ஆனால் எந்தவொரு நிரபராதியும் அல்லது குற்றம் செய்யாதவர் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காக இது அவசியமாக காணப்படுகிறது.

**சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை:** சுரண்டலை தடுப்பதற்காக சுரண்டலுக்கு பலி ஆகாமல் இருத்தல், நாம் பிறரால் அடக்கி வைக்கப்படுதல் அல்லது சுயநலத்திற்கு உபயோகிக்கப்படுதலை தடை செய்யும் உரிமை என்பதே சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை ஆகும்.

அரசியல் அமைப்புச் சட்டமானது ஒருபக்கம் சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை மூலம் அடக்கி வைக்கப்படுதலின் அனைத்து வகைகளின் மீது தடை வைக்கிறது எனில் இன்னொரு பக்கம் குழந்தைகளை சுயநலத்திற்கு உபயோகித்தலை தடுப்பதற்காக சிறப்பு நிபந்தனை அளித்துள்ளது. அதன்படி 14 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகள் ஆபத்தான இடங்களில் பணிகளில் ஈடுபடுத்துவதை தடை செய்ய வழி செய்கிறது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள் போன்ற இடங்களில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தி அவர்களை வேலை செய்ய வைக்கக் கூடாது.

கட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளி அல்லது கட்டாயப்படுத்தி ஒருவரை அவரது விருப்பமின்றி வேலை செய்ய வைத்தல், சில நபரை ஏதோ அடிமை போன்று நடத்துதல், அவர்களின் வேலைக்கு ஏற்ற ஊதியம் தராமல் இருத்தல், அவர்களை அதிக கஷ்டபடுத்தி வேலை வாங்குதல், அவர்களை பட்டினி போடுதல், அல்லது அவர்கள் மீது அடக்குமுறையை கையாளுதல் என்பன சுரண்டலின் பல்வேறு வகைகள் ஆகும். பொதுவாக பெண்கள், குழந்தைகள், நலிந்த சமுதாய பிரிவினர் மற்றும் அதிகாரமில்லாத மக்கள் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். எந்த வகையான சுரண்டலாக இருப்பினும், அதற்கு எதிராக எழுந்து நிற்பதற்கு இந்த உரிமை வழி செய்கிறது.



### வாருங்கள்! கலந்துரையாடுவோம்!

- இங்கே குழந்தை தொழிலாளிகள் வேலை செய்யவில்லை.
- இங்கே தொழிலாளர்களுக்கு தினகூலி அன்றே வழங்கப்படுகிறது.

இதுபோன்ற அறிவிப்புகள் பல கடைகளில் மற்றும் உணவகங்களில் நீங்கள் பார்க்கிறீர்கள். அவற்றிற்கும் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள இந்த உரிமைக்கும் என்ன தொடர்பு இருக்கிறது எனக் கூறவும்.



### வாருங்கள்! கலந்துரையாடுவோம்!

சுரண்டல் ஏற்படக்கூடாது மற்றும் ஒவ்வொரு நபரும் தங்களது சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கமானது பல சட்டங்களை அளித்துள்ளது. சில சட்டங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறு இன்னும் வேறு எந்தெந்த சட்டங்கள் உள்ளன என கண்டுபிடியுங்கள், மேலும் அவை குறித்து கலந்துரையாடவும்.

- குறைந்தபட்ச ஊதியச் சட்டம் - தொழிற் சாலைகளில் வேலை செய்யும் நேரம், ஓய்வு எடுத்தலின் நேரம் ஆகியவை தொடர்பான நிபந்தனைகள்.
- பெண்களுக்கு வீட்டுக் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்டம் – ........ ........... ..........

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை மற்றும் சுரண்டலக்கெதிரான உரிமை ஆகியவற்றைப் பற்றி இங்கே படித்தோம். அடுத்த பாடத்தில் நாம் வேறு சில அடிப்படை உரிமைகள் பற்றி கற்றறிய உள்ளோம்.



## பயிற்சி

1. **பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.**
   (1) அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
   (2) வெவ்வேறு துறைகளில் புகழ்பெற்ற பணி செய்தவர்களுக்கு அரசு சார்பாக என்னென்ன பதக்கங்கள்/ பட்டங்கள் வழங்கப்படுகின்றன?
   (3) பதினான்கு வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை ஆபத்தான இடங்களில் பணியில் ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது ஏன்?
   (4) அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமையை ஏன் அளித்துள்ளது?
2. 'சுதந்திர உரிமை' என்ற தலைப்பில் விளக்கப் படத்துண்டு தயார் செய்யவும்.
3. **பின்வரும் கூற்றுகளை சரி செய்து மீண்டும் எழுதவும்.**
   (1) எந்தவொரு நபருக்கு உரிமை பிறக்கும்போதே கிடைத்துவிடுவதில்லை.
   (2) அரசாங்க வேலையை தரும்போது அரசாங்கம் மதம், பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்து உங்களுக்கு பணி தராமல் பிடுங்கிக் கொள்ள முடியும்.
4. பின்வரும் விளக்கப்படத்தை நிறைவு செய்யவும்.

சுதந்திர உரிமை
↓
பேச்சுரிமை | ☐ | ☐ | எந்த பகுதிக்கும் செல்லும் உரிமை | ☐ | எந்த தொழிலையும் செய்யும் உரிமை

**செயல்கள்:**

(1) தகவல் பெறும் உரிமை, கல்வி உரிமை இதுபோன்ற சில முக்கியமான உரிமைகள் தொடர்பாய் செய்தித்தாள்களில் வந்துள்ள செய்திகளை சேகரிக்கவும்.

(2) உங்களுடைய சுற்றுப்புறத்தில் உள்ள கட்டிடத்தின் கட்டுமான வேலை நடந்து கொண்டிருக்கும்போது சிறிய குழந்தைகள் வேலை செய்வதைக் கண்டால் அவர்களுடன் மற்றும் அவர்களின் பெற்றோருடன் கலந்து பேசி அவர்களின் பிரச்னைகளை அறிந்து கொள்ளவும். மேலும் அவர்களின் பிரச்னைகளை வகுப்பில் தகவல் அறிக்கை செய்யவும்.

# 5. அடிப்படை உரிமைகள் - பகுதி 2

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளித்துள்ள சில அடிப்படை உரிமைகள் பற்றி சென்ற பாடத்தில் கற்றோம். சமத்துவ உரிமை, சுதந்திர உரிமையோடு கூட சுரண்டலுக்கெதிரான உரிமை பற்றியும் கற்றறிந்தோம். இப்பாடத்தில் நாம் சமய சுதந்திர உரிமை, பண்பாடு மற்றும் கல்வி உரிமை பற்றி கற்றறிந்து கொள்ள இருக்கிறோம். அதேபோன்று அடிப்படை உரிமைகளுக்கு கிடைக்கக்கூடிய சட்ட சம்பந்தமான பாதுகாப்பு பற்றியும் நாம் தகவல்களை கற்றறிய உள்ளோம்.

**சமய சுதந்திர உரிமை:** இந்தியா உலகின் முக்கியமான ஒரு சமய சார்பற்ற நாடு ஆகும், என்பது நமக்கு தெரியும். கடந்த வருட வகுப்பில் கூட இதனை நாம் படித்தோம். ஆனால் அது தொடர்பாய் அரசியல் அமைப்புச் சட்டத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு உங்களுக்கு ஆர்வமாக உள்ளதல்லவா? அப்படியெனில் அதன் குறிப்பு சமய சுதந்திர உரிமையில் உள்ளது. அதன்படி இந்தியாவிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் எந்த சமயத்தையும் பின்பற்றவும் மேலும் சமய காரணங்களுக்காக நிறுவனங்களை நிறுவவும் உரிமை உள்ளது.

சமய சுதந்திர உரிமையை மேலும் விரிவாக விவரிக்க அரசியலமைப்புச் சட்டமானது சமய விவகாரங்களில் இரண்டு காரியங்களுக்கு அனுமதி அளிக்கவில்லை. (1) ஒரு குறிப்பிட்ட சமயத்தை ஊக்குவிக்கும் வகையிலான எந்தவொரு வரியையும் அரசு சுமத்தக் கூடாது. சுருக்கமாக, சமய வரி சுமத்துவதை அரசியலமைப்புச் சட்டம் தடை செய்கிறது.

**பண்பாடு மற்றும் கல்வி உரிமை:** விழாக்கள், பண்டிகைகள், உணவு மற்றும் வாழ்க்கை முறை போன்றவற்றின் அடிப்படையில் நமது தேசத்தில் மிகப் பெரிய அளவில் பல்தன்மை காணப்படுகிறது என்பது நாம் பார்க்கிறோம். நீங்கள் திருமண விழாச்சடங்குகளை பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கு அவற்றிலுள்ள வேறுபாடுகள் புரியும். இவை அனைத்து காரியங்களும் அந்தந்த மக்கள் சமூகத்தின் பண்பாட்டின் ஒரு பகுதியாக காணப்படுகிறது. நமது அரசியலமைப்புச் சட்டமானது பல்வேறு மக்கள் சமூகத்திற்கு தங்களது பண்பாடு தனித்தன்மையை பாதுகாக்க உரிமை அளித்துள்ளது. அதன்படி தங்களது மொழி, எழுத்து, இலக்கியம் ஆகியவற்றை பாதுகாப்பது மட்டுமின்றி அவற்றை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் உரிமை அளிக்கிறது. மொழியை வளர்ப்பதற்காக நிறுவனங்களை நிறுவவும் முடியும்.

**கண்டுபிடித்து பின்பு கலந்துரையாடவும்.**

- அரசியலமைப்புச் சட்டம் எத்தனை மொழிகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது?
- மராத்தி மொழியின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மகாராஷ்டிர அரசு எந்தெந்த நிறுவனங்களை நிறுவியுள்ளது?



**வாருங்கள்! கலந்துரையாடுவோம்!**

மகாராஷ்டிராவில் அரசாங்க மற்றும் நீதிமன்றங்களின் அனைத்து வேலை விவகாரங்களும் மராத்தி மூலமாக செய்யப்பட வேண்டும் என்று உங்களுக்கு தோன்றுகிறதா? அதற்காக என்ன செய்ய வேண்டும்?

**அரசியலமைப்பின்படி தீர்வு காணும் உரிமை:** அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது நேரிடையாக மக்கள் உச்ச நீதிமன்றத்திடம் நீதி கேட்பது என்பது கூட ஒரு அடிப்படை உரிமை ஆகும். இது அரசியலமைப்பின்படி தீர்வு காணும் உரிமை என்றழைக்கப்படுகிறது. அதனுடைய பொருள் யாதெனில் உரிமைகள் மீறப்படும்போது அதனை எதிர்த்து நீதிமன்றத்திடம் நீதி கேட்பது தொடர்பான நிபந்தனைகளை அரசியலமைப்புச் சட்டம் அளிக்கிறது. அதன் அடிப்படையில் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது நீதிமன்றத்தின் கடமை ஆகும்.

அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளித்துள்ள உரிமைகள் மீது சில வேளைகளில் அத்துமீறல் ஏற்படக் கூடும். மேலும் நம்மால் உரிமைகளை பயன்படுத்த முடிவதில்லை. இதனையே நாம் நம் உரிமைகள் மீறப்படுதல் என்கிறோம். உரிமை மீறல் தொடர்பான நமது வழக்கு நீதிமன்றங்களில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது, அதனைப்பற்றி துப்பறிகிறது. உண்மையில் உரிமைமீறல் நடை பெற்றிருக்கிறது அல்லது தொடர்புடைய நபர்மீது அநியாயம் நடைபெற்றுள்ளது என்று நீதிமன்றத்திற்கு தோன்றினால் நீதிமன்றம் சரியான தீர்ப்பை முடிவு செய்கிறது.

**உரிமை மீறலின் சில வகைகள்:**

- காரணமில்லாமல் ஏதேனும் நபரை கைது செய்தல்.
- சரியான காரணமின்றி ஒரு நபரை நகரத்தை/ கிராமத்தை விட்டு செல்வதை தடுத்தல்.
- சிறையிலுள்ள கைதிகளுக்கு உணவு, நீர் மற்றும் மருத்துவ உதவிகளை தர மறுத்தல்.

**உரிமை மீறலை போக்குவதற்கான நீதிமன்ற ஆணைகள்:**

குடிமக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக நீதிமன்றத்திற்கு பல்வேறு ஆணைகளை தருவதற்கு அதிகாரம் உள்ளது.

(1) **ஆட்கொணர் நீதிப் பேராணை** (Habeas Corpus): சட்டத்திற்கு புறம்பாக கைது மற்றும் தடுப்புக்காவல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு.

(2) **கீழ் மன்றத்திற்கு வரும் கட்டளை நீதிப் பேராணை** (Mandamus): குடிமக்களின் நலனுக்காக அரசுக்கு ஒரு செயலை செய்வதற்காக அளிக்கப்படும் நீதிமன்றங்களின் (உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்றம்) ஆணை.

(3) **வழக்கு விசாரணை தடை ஆணை** (Prohibition): கீழ் நீதிமன்றமானது தனது அதிகார பகுதிக்கு அப்பால் செல்லாமலிருப்பது பற்றிய ஆணை.

(4) **உரிமை வினா நீதிப் பேராணை** (Quo Warranto): எந்த அதிகாரத்தில் இச்செயல் நடைபெறுகிறது என்று அரசாங்க அதிகாரிகளிடம் பதில் கேட்கும் நீதிமன்றத்தின் ஆணை.

(5) **பத்திரத்தைக் கொண்டு வந்து முன்னிலைப்படுத்த கீழ்மன்றங்களுக்கு இடப்படும் கட்டளை** (Certiorari): கீழ்மன்றமானது அளித்துள்ள நீதிமன்ற வழக்கை ரத்து செய்து மேல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்வதற்கான ஆணை.

**அரசாங்க அதிகாரிகளின் இந்த எதிர்வினைகள் சரியானதா அல்லது தவறானதா?**

ஆதரவற்றவர்களுக்காக காணப்படும் ஒரு திட்டத்தினால் தனக்கு பலன் கிடைக்க வேண்டும் என்று தேவையான அனைத்து ஆவணங்களையும் தருகின்ற ஒரு பெண்மணியிடம், 'நீங்கள் ஆதரவற்றவர் என்று தோன்றவில்லை' என்று கூறி சலுகையை மறுக்கின்ற அரசாங்க அதிகாரியின் இந்த எதிர்வினை சரியானதா அல்லது தவறானதா? மேற்கூறிய நிகழ்வில் பெண்மணியின் உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்று உங்களுக்கு தோன்றுகிறதா? அவர் நீதி கேட்பதாக இருந்தால் எங்கே செல்ல வேண்டும்?



**நீதிமன்ற செயல்பாடுகள்**

அடிப்படை உரிமைகள் இவ்வாறு நீதிமன்றங்களால் பாதுகாக்கப்படுவதால் குடிமக்களால் தங்களது உரிமைகளை சரியான வகையில் பயன்படுத்த முடிகிறது. அவர்கள் அதிக விழிப்புணர்வுள்ள, பொறுப்பான மற்றும் செயலாற்றலுள்ள குடிமக்களாக தங்களது பங்கை சிறப்பாய் செய்ய முடிகிறது. அடிப்படை உரிமைகளை கவனத்தில் கொள்ளும்போது நமது கடமைகளையும் கூட நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதனை பற்றி நாம் அடுத்த பாடத்தில் கற்றறிய இருக்கிறோம்.



## பயிற்சி

1. **பின்வருவனவற்றை பற்றி எழுதவும்.**
   (1) சமய வரி விதித்தலை அரசியலமைப்புச் சட்டம் தடை செய்கிறது.
   (2) அரசியலமைப்பின்படி தீர்வு காணும் உரிமை என்றால் என்ன?

2. **சரியான ஆணையை கண்டுபிடி.**
   (1) சட்டத்திற்கு புறம்பாக கைது மற்றும் தடுப்புக் காவல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு.
   (2) எந்த அதிகாரத்தில் இச்செயல் நடைபெற்றது என்று அரசியல் அதிகாரிகளிடம் பதில் கேட்கும் நீதிமன்றத்தின் ஆணை.
   (3) குடிமக்களின் நலனுக்காக அரசுக்கு ஒரு செயலை செய்வதற்காக அளிக்கப்படும் நீதி மன்றங்களின் ஆணை.
   (4) கீழ் மன்றமானது தனது அதிகார எல்லைக்கு அப்பால் செல்லாமலிருப்பது பற்றிய ஆணை.

3. **நாம் பின்வரும் இவற்றை செய்ய முடிகிறது, என்பதற்கான காரணத்தை எழுதுக.**
   (1) அனைத்து இந்திய குடிமக்களும் எல்லா விழாக்களையும் சந்தோசமாக கொண்டாட முடிகிறது. காரணம்................... .
   (2) நாம் நமது எழுத்து, இலக்கியம் மொழியை பாதுகாக்கவும் மற்றும் வளர்க்கவும் முயற்சி எடுக்க முடிகிறது. காரணம் .....

4. **கோடிட்ட இடங்களை சரியான சொல்லால் நிரப்புக.**
   (1) உரிமை மீறல் தொடர்பான நமது வழக்கை ................ கருத்தில் எடுத்துக்கொள்கிறது.
   (2) அரசாங்க பொருளாதார உதவி பெறும் பள்ளிகளில் ............... கல்வி கட்டாயப் படுத்த முடியாது.

**செயல்:**

உங்களது பள்ளியில் நீதிபதி, வக்கீல், காவல்த்துறை அதிகாரி ஆகியோரை அழைத்து அவர்களின் நேர்காணலுக்கு ஒழுங்கு செய்யவும்.

# 6. அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள்

சென்ற பாடங்களில் அரசியலமைப்பில் தரப்பட்டுள்ள உரிமைகளை நாம் பயின்றோம். அதில் இந்தியக் குடிமக்களுக்கு என்னென்ன உரிமைகள் உள்ளன என்பதை புரிந்து கொண்டோம். நமது உரிமைகள் நீதிமன்றம் சார்ந்த பாதுகாப்பைக் கொண்டுள்ளது என்பதையும் கற்றோம். நமது தனி மற்றும் பொது வாழ்க்கையில் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொண்டோம். இப்பின்னணியில் நாம் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் என்றால் என்ன என்பதைப் பற்றி புரிந்து கொள்வோம்.

அடிப்படை உரிமைகள் அரசின் அதிகாரத்தில் கட்டுப்பாடுகளை வைக்கின்றன. கீழுள்ள பட்டியலை வாசிக்கும்போது அரசின்மீது என்னென்ன கட்டுப்பாடுகள் உள்ளன என்பது கவனத்திற்கு வரும். எ.கா.

- அரசு குடிமக்களிடையே ஜாதி, மதம், இனம், மொழி மற்றும் பால் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது.
- சட்டத்தின் முன் யாருக்கும் சமத்துவம் மற்றும் சம பாதுகாப்பை மறுக்கக் கூடாது.
- எந்தவொரு நபரின் வாழ்வும் இழக்கப்படக் கூடாது.
- எந்தவொரு மதவரிகளையும் சுமத்தக் கூடாது.

அரசு என்ன செய்ய வேண்டும் என்ற விஷயம் குறித்த சில அறிவுறுத்தல்களை அரசியலமைப்பு விளக்கியுள்ளது. இந்த அறிவுறுத்தல்களின் உள்நோக்கமானது அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் எந்த நோக்கங்கள் விளக்கப்பட்டுள்ளனவோ அவற்றை அடைவதற்கான வழிகாட்டுதல் ஆகும். ஆகவேதான் இவ்வறிவுறுத்தல்கள் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

**அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் ஏன் சேர்க்கப்பட்டன?** இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தபோது இந்நாட்டில் ஒழுங்குமுறையை உருவாக்கவும் சுமூகமான அரசியல் நிர்வாகம் செய்வதற்கும் பெரும் சவால் நம் எதிரே இருந்தது. வறுமை, பின்தங்கிய தன்மை, எழுத்தறிவின்மை ஆகியவற்றை ஒழிப்பது முறையாகப் பின்பற்ற வேண்டியதாய் இருந்தது. தேசக் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இதற்காக புதுப்புது கொள்கைகளை எடுத்து அவற்றை செயற்படுத்துவது அவசியமாக இருந்தது. மக்கள் நலனின் நோக்கத்தை அடைய வேண்டியிருந்தது. சுருக்கமாகக் கூறின் இந்தியா ஒரு புதிதாக வளர்ந்த மற்றும் முன்னேறுகிற நாடாக மாற வேண்டியிருந்தது. அதற்காக மத்திய அரசு மற்றும் மாநில அரசு எந்தெந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்கள் நலனுக்காக அந்நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை அரசியலமைப்புச் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாடுகள் வழியே விளக்கியுள்ளது. மாநிலக் கொள்கையின் அடிப்படையில் அவை உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு நெறிமுறைக் கோட்பாட்டிலும் மாநிலத்தின் கொள்கைக்காக ஒரு விஷயம் அடங்கியுள்ளது. இவ்வனைத்துக் கொள்கைகளும் ஒரே நேரத்தில் செயற்படுத்தப் படுமானால் அதற்கு பெரும் நிதியுதவி தேவைப்படும் என்பதை அரசியலமைப்பை உருவாக்கியோர் புரிந்திருந்தனர். ஆகவேதான் அவர்கள் நெறிமுறைக் கோட்பாடுகளை அரசின் அடிப்படை உரிமைகளில் உள்ளவாறு கட்டாயப் படுத்தவில்லை. அரசு அவற்றை மெதுவாகவும் உறுதியாகவும் செயல்படுத்த வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

**அரசின் சில முக்கிய நெறிமுறைக் கோட்பாடுகள்**

- அரசானது அனைத்து குடிமக்களுக்கும் போதுமான வாழ்வாதார தேவைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் பெண் மற்றும் ஆண் என்று பாகுபாடு காட்டக் கூடாது.
- பெண்கள் மற்றும் ஆண்களின் சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும்.
- மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- சுற்றுப்புறங்களை பாதுகாக்க வேண்டும்.
- தேச நோக்கில் முக்கியமான இடங்களின் அதாவது நினைவுச் சின்னங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும்.
- சமூகத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு சிறப்பு கவனம் கொடுத்து அவர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு கிடைக்கச் செய்ய வேண்டும்.
- வயோதிகக் காலம், நோய்வாய்ப்படுதல், வேலையில்லாமை ஆகியவற்றிலிருந்து குடிமக்களை பாதுகாக்க வேண்டும்.
- இந்தியாவிலுள்ள அனைத்து குடிமக்களுக்காக ஒரே மாதிரியான சிவில் சட்டங்களைச் செய்ய வேண்டும்.



### உங்களால் கூற இயலுமா?

ஊதியம் தொடர்பாக சம வேலைகளுக்கு சம ஊதியம் என்ற அரசின் நெறிமுறைக் கோட்பாடு உள்ளது. இதிலிருந்து அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த நோக்கம் சாத்தியமாகும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பெண்ணும் ஆணும் ஒரே மாதிரியான வேலை செய்தும் ஆணைவிட பெண்ணுக்கு குறைந்த ஊதியம் கொடுக்கும் முறை ஏன் காணப்படுகிறது?



### செய்து பார்க்க

மேலுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளை தவிரவும் பிற நெறிமுறைக் கோட்பாடுகள் மக்கள் நலனிற்காக அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கியுள்ளன. கீழே சில விஷயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன இவை தொடர்பாக அரசின் எந்த நெறிமுறைக் கோட்பாடு உள்ளது என்பதை ஆசிரியரின் உதவியுடன் கண்டுபிடிக்க.

எ.கா., வெளிநாட்டுக் கொள்கை: உலக அமைதி மற்றும் ஒற்றுமை.

(அ) பெண் கல்வி ...............

(ஆ) ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான சூழ்நிலையில் குழந்தைகளை வளர்க்கும் முறை : ...............

(இ) விவசாய முன்னேற்றம்: ...............

நெறிமுறைக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும். அடிப்படை உரிமைகளால் குடிமக்களுக்கு அத்தியாவசியமான சுதந்திரம் கிடைக்கிறது. அதே வேளை நெறிமுறைக் கோட்பாடுகள் ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குகிறது. அதுதான் ஏதேனும் நெறிமுறைக் கோட்பாடு அரசால் செயல்படுத்தப்படவில்லையெனில் அதற்கு எதிராக நாம் நீதிமன்றம் செல்ல முடியாது. ஆயினும் பல்வேறு வழிகளில் அரசுக்கு அழுத்தம் தந்து கொள்கைகளை வடிவமைக்க வற்புறுத்தலை வைக்க முடியும்.

அரசு மாணவர்களுக்காக இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்களது தேவைகளின் ஒரு பட்டியல் தயார் செய்க. உங்களது தேவைகள் நியாயமானவை என்பதை எவ்வாறு நம்பச் செய்வீர்கள்?

அரசின் இந்த வசதிகளால் எந்த முன்னேற்றம் சாத்தியமாகும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

(அ) பொதுக் குளியல் அறை மற்றும் கழிப்பிட அறை

(ஆ) தூய நீர் வழங்கல்

(இ) குழந்தைகளுக்கு தடுப்பூசி.

### அடிப்படைக் கடமைகள்:

ஜனநாயகத்தில் குடிமக்கள் இரு பொறுப்புகளைக் கொண்டுள்ளனர். ஒன்றில் அவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகள் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். உரிமைகள் மீது அநியாயமான கட்டுப்பாடுகள் வரக்கூடாது என்ற விஷயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும். இரண்டாவதில் சில கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். அனைத்து இந்தியர்களின் நலனுக்காக அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகள் ஆகியவற்றிலிருந்து பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இருப்பினும் குடிமக்கள் தங்கள் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றாதவரைக்கும் அரசு செய்துள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் பயன் அனைவருக்கும் கிடைக்காது. எ.கா., 'தூய்மை இந்தியா' திட்டத்தின் கீழ் அரசு தூய்மையின் பல செயற்பாடுகளை செயற் படுத்தியுள்ளது. இருப்பினும் பொது இடங்களை அசுத்தமானதாக மாற்றும் மக்களின் பழக்கவழக்கம் மாற வேண்டும். இந்தியக் குடிமக்கள் தங்களது பொறுப்பை உணர்ந்திருக்க வேண்டும் என்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் பின்வருமாறு:

- ஒவ்வொரு குடிமகனும் அரசியலமைப்புச் சட்டத்தை அனுசரிக்க வேண்டும். அரசியலமைப்பிலுள்ள உன்னத இலட்சியங்கள், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்திற்கு மரியாதை அளிக்க வேண்டும்.
- சுதந்திர போராட்டத்திற்கு உத்வேகம் அளித்தவர்களின் உன்னத இலட்சியங்களை நினைத்துப் போற்ற வேண்டும்.

- நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முயல வேண்டும்.
- நமது நாட்டைக் காப்பாற்ற வேண்டும். தேசிய சேவை ஆற்ற வேண்டும்.
- அனைத்து வகையிலும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையை வளர்த்தல் மற்றும் சகோதரத்துவ உணர்வை வளர்த்தல், பெண்களின் மதிப்பை இழிவுபடுத்தும் வழக்கங்களை துறக்க வேண்டும்.
- நமது பல்வகை கலந்த கலாச்சாரத்தின் செழிப்பான மேன்மையை பாதுகாக்க வேண்டும்.
- இயற்கை சுற்றுப்புறத்தை பாதுகாக்க வேண்டும். உயிரினங்களிடம் இரக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.
- அறிவியல் பார்வை, மனிதாபிமானம், விசாரணை செய்யும் சீர்ப்படுத்தும் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.
- பொதுச் சொத்துகளை பாதுகாக்க வேண்டும். வன்முறையை கைவிட வேண்டும்.
- தேசம் படிப்படியாக அனைத்து துறைகளிலும் வளர்ச்சி அடைவதற்காக தனிநபர் மற்றும் சமூக செயல்பாடுகளில் உயர்ந்த மட்டத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும்.
- 6 முதல் 14 வயது பிரிவிலுள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அக்குழந்தைகட்கு கல்வி வாய்ப்பை வழங்க வேண்டும்.

**பட்டியல் தயார் செய்க**

- வீட்டில் நீங்கள் எந்த உரிமைகளைக் கேட்கிறீர்கள்? எந்த கடமையை நிறைவேற்றுகிறீர்கள்?
- பள்ளியில் நீங்கள் எந்தெந்த பொறுப்புகளை நிறைவேற்றுகிறீர்கள்? அங்கு எந்த பொறுப்பு உங்களுக்கு இல்லை என்று நினைக்கிறீர்கள்?



வரலாற்றுக் கட்டடத்தின் மீது பெயர் பதிக்கும் சிறுவன்



எலுமிச்சைப் பழம், மிளகாயைத் தொங்கவிடுதல்



அரசு பேருந்தை சேதப்படுத்துதல்



பாதையில் குப்பை கொட்டும் பெண்

மேலுள்ள படங்களிலிருந்து எந்தெந்தக் கடமைகள் பின்பற்றப்படவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?




**மேலுள்ள உரையாடல் மூலம் நமக்கு எந்த கடமைகளுள்ளன, அறிவுறுத்தல்கள் உள்ளன? உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா? நாம் கடமைகளைப் பின்பற்றினால் என்னவாகும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

**நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

6 முதல் 14 வயது பிரிவிலுள்ள சிறுவர் - சிறுமியர்க்கு தொடக்கக் கல்விக்கான உரிமை கிடைத்துள்ளது. இவ்வயது பிரிவிலுள்ள அனைத்து சிறுவர் - சிறுமியர் பள்ளியில் இருப்பது அவசியமானதாகும். இருப்பினும், பல காரணங்களால் சிறுவர் சிறுமியர் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. அம்மா - அப்பாவிற்கு பொருளாதார உதவி செய்வதற்காக அவர்கள் வேலை செய்ய வேண்டியுள்ளது. அத்தகைய குழந்தைகளை பள்ளிக்குக் கொண்டுவர வற்புறுத்தி பிடிப்பது அக்குழந்தைகளுக்கு அநியாயம் செய்வது ஆகும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம் மற்றும் சிறப்பியல்புகளின் அறிமுகம் நமக்கு இப்பாடநூலின் தொடக்கப் பாடத்தில் இருந்தது. இந்திய குடிமக்களின் உரிமை, அவ்வுரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றையும் கூட நாம் சிந்தித்தோம். அடுத்த ஆண்டு நாம் நமது நாட்டில் அரசியல் நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை கற்போம்.



## பயிற்சி

1. **அரசுமீது எந்தெந்தக் கட்டுப்பாடுகள் உள்ளன என்பதை கீழுள்ள கட்டத்தில் பட்டியலிடுக.**
   - ............................................
   - ............................................
   - ............................................
2. **கீழுள்ள கூற்றுகளை வாசித்து அவற்றிற்கு ஆம்/ இல்லை என விடை எழுதுக.**
   (1) செய்தித்தாளில் கொடுக்கப்பட்ட வேலைகளுக்கான பெண், ஆண் ஆகிய அனைவருக்கும் இடம் உள்ளது ............
   (2) ஒரே தொழிற்சாலையில் ஒரே மாதிரியான தொழில் செய்யும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வெவ்வேறு ஊதியம் கிடைக்கிறது. ............
   (3) அரசின் வழி ஆரோக்கிய முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன ............
3. **ஏன் எனக் கூறுக.**
   (1) வரலாற்று வீடுகள், கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும்.
   (2) வயோதிகர்களுக்காக ஓய்வூதியத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.
   (3) 6 முதல் 14 வயது பிரிவிலுள்ள குழந்தைகட்கு கல்விக்கான வாய்ப்பு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது.
4. **சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறானவற்றைத் திருத்தி எழுதுக.**
   (1) தேசியக்கொடி நிலத்தின் மீது விழ விடக்கூடாது.
   (2) தேசிய கீதம் பாடிக்கொண்டிருக்கும்போது நேர் நிலையில் நிற்க வேண்டும்.
   (3) நமது வரலாற்றுக் கட்டங்களின் மீது நமது பெயரை எழுதுதல் / செதுக்குதல்.
   (4) ஒரே மாதிரியான வேலைக்கு ஆண்களை விட பெண்களுக்கு ஊதியம் குறைவாகக் கொடுத்தல்.
   (5)பொது இடங்களைத் தூய்மையாக வைத்திருத்தல்.
5. **பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக.**
   (1) அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள சில நெறிமுறைக் கோட்பாடுகள் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை யாவை?
   (2) இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளில் அனைத்து குடிமக்களுக்காக ஒரே மாதிரியான சிவில் சட்ட முன்னேற்பாட்டை ஏன் செய்ய வேண்டும்?
   (3) நெறிமுறைக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும் என்று ஏன் கூறப்படுகிறது?
6. **சுற்றுப்புறத்தின் முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை எவ்வழிகளில் செய்ய முடியும் என்பதை உதாரணங்களுடன் எழுதுக.**

**செயற்பாடுகள்.**

(1) கல்வி என்பது நமது உரிமையாகும். ஆனால் இது தொடர்பாக நமது கடமைகள் எவை என்பது குறித்து முழு விவாதம் செய்க.

(2) தேசியப் பார்வையில் முக்கியமான கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக அரசு நடவடிக்கைள் எடுக்க வேண்டும் என்பது அரசின் நெறிமுறைக் கோட்பாடு ஆகும். கோட்டைகளைப் பாதுகாப்பதற்காக அரசு என்ன செய்துள்ளது என்பதைக் கண்டுபிடித்து பட்டியல் தயாரிக்க.

## கால வரிசை - 8 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு - முக்கிய நிகழ்வுகளின் மறு ஆய்வு

நிகழ்வுகளின் தொடர் வரிசை கீழிருந்து மேல் வாசிக்க

**8 ஆம் நூற்றாண்டு**
- முகமது-பின்-காசிமின் சிந்து மீதான படையெடுப்பு
- இராஜபுத்திரர், காஹடவால், பர்மார் வம்சங்கள்
- குர்ஜர்-பிரதிஹார் ஆட்சி
- பால் வம்சம்
- இராஷ்டிர கூட வம்சம் பாண்டிய வம்சம்

**9 ஆம் நூற்றாண்டு**
- சிலாஹார் வம்சம்
- சோழ வம்சம்

**10 ஆம் நூற்றாண்டு**
- இராஜா ஜய்பால்-சபக்தகின் மோதல்

**11 ஆம் நூற்றாண்டு**
- கஜனியின் முகமதுவின் இந்தியா மீதான படையெடுப்பு
- துருக்கியர்களின் இந்தியா மீதான படையெடுப்பு
- கோய்சல வம்சம்

**12 ஆம் நூற்றாண்டு**
- முகமது கோரியின் இந்தியா மீதான படையெடுப்பு மற்றும் பிருத்விராஜ் சௌகானின் ஆட்சி முடிவு
- யாதவ வம்சம்

**13 ஆம் நூற்றாண்டு**
- வார்கரி பிரிவு
- மகானுபவ பிரிவு
- கல்ஜி வம்சத்தாரின் ஆட்சி
- பல்பன், சுல்தான் இரஜியா, இல்டூட்மிஷ் ஆகியோரின் ஆட்சி, குத்புத்தீன் ஐபக் தில்லியின் சுல்தான் ஆதல்

**14 ஆம் நூற்றாண்டு**
- பாமினி ஆட்சி நிறுவப்படல்
- விஜயநகர ஆட்சி நிறுவப்படல்
- தில்லியில் துக்ளக் ஆட்சி தலைநகரம் தில்லியிலிருந்து தேவகிரிக்கும் அதன்பின் திரும்பவும் தில்லிக்கு மாற்றப்படுதல். தைமூர்லங் இந்தியா மீது படையெடுத்தல்

**15 ஆம் நூற்றாண்டு**
- அடில்ஷா, நிஜாம்ஷா, குதுப்ஷா, பரித்ஷா, இமாத்ஷா, ஆகியோரது ஆட்சிக் காலம்.

**16 ஆம் நூற்றாண்டு**
- பேரரசர் அக்பரின் மகாராணா பிரதாப், சாந்த்பீபி, மற்றும் இராணி துர்கா வதியுடனான மோதல்
- மொகலாயர் ஆட்சி தொடக்கம் பாபர், ஹீமாயூன் ஆகியோரது ஆட்சி
- தில்லியில் சுல்தான்களின் ஆட்சி முடிவு

**17 ஆம் நூற்றாண்டு**
- மகாராணி தாராபாயின் ஆட்சிக் காலம்
- சத்ரபதி இராஜாராம் மகாராஜா
- சத்ரபதி சம்பாஜி மகாராஜா
- சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் முடிசூட்டு விழா
- சுய ராஜ்ஜியத்தை நிறுவுதல்
- சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் ஆட்சிக் காலம்
- மகாராஷ்டிரா-வில் பஞ்சம்
- மொகலாயர்-சீக்கியர் மோதல்
- ஔரங்கசீப்
- ஷாஜகான்
- ஜஹாங்கீர்

**18 ஆம் நூற்றாண்டு**
- இரண்டாம் பாஜிராவ் ஆட்சி
- சுய ராஜ்ஜி-யத்திலிருந்து பேரரசு
- சவாய் மாதவ்ராவ் பேஷ்வா
- நாராயண்ராவ் பேஷ்வா
- மாதவ்ராவ் பேஷ்வா
- பானிபட் போர்
- நானாசாஹேப் பேஷ்வா
- மராத்தியர்கள் போர்த்துக் கீசியர்களைத் தோற்கடித்தல்
- முதலாம் பாஜிராவ் பேஷ்வாவின் ஆட்சிக் காலம்
- சத்ரபதி ஷாகு மகாராஜாவின் ஆட்சிக் காலம்

**19 ஆம் நூற்றாண்டு**
- ஆங்கி-லேயர்கள் மராத்தியர்-களைத் தோற்கடித்தல்

# छत्रपती शिवाजी महाराज स्मृतिग्रंथ

- सामान्य रयतेच्या कल्याणासाठी स्थापन केलेल्या स्वराज्य स्थापनेची कथा उलगडणारे पुस्तक.
- छत्रपती शिवाजी महाराजांच्या उत्तुंग कार्य व त्यामागची तेवढीच उत्तुंग व उदात्त भूमिका वाचकांसमोर आणणारे प्रेरणादायी वाचन साहित्य.
- इतिहास वाचनासाठी पूरक असे संदर्भ पुस्तक.













- इतिहास वाचनासाठी पूरक अशी संदर्भ पुस्तके.
- निवडक लेखक, इतिहासकारांचे प्रेरणादायी लेख.

**पुस्तक मागणीसाठी www.ebalbharati.in, www.balbharati.in संकेतस्थळावर भेट द्या.**

**साहित्य पाठ्यपुस्तक मंडळाच्या विभागीय भांडारांमध्ये विक्रीसाठी उपलब्ध आहे.**

ebalbharati

विभागीय भांडारे संपर्क क्रमांक : पुणे - ☎ २५६५९४६५, कोल्हापूर- ☎ २४६८५७६, मुंबई (गोरेगाव) - ☎ २८७७१८४२, पनवेल - ☎ २७४६२६४६५, नाशिक - ☎ २३९१५११, औरंगाबाद - ☎ २३३२१७१, नागपूर - ☎ २५४७७१६/२५२३०७८, लातूर - ☎ २२०९३०, अमरावती - ☎ २५३०९६५






மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே.

इतिहास व नागरिकशास्त्र इ. ७ वी (तमिळ माध्यम)

₹ 40.00